தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1979 ஏப்ரல் 2

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1: வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

குமரி மாவட்டத்தில் பனை ஏறும் தொழிலாளர் குடும்பத்தினருக்கு உதவிப் பணம் வழங்கல்

*குறுகிய கால வினா எண். 35—திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனை ஏறுகின்ற தொழிலாளிகள் பணியின் போது விழுந்து இறந்துவிட்டால் அவர்களது குடும்பத்தினருக்கு ரூபாய் 5,000 உதவிப்பணம் வழங்கப்படும் என்று அரசு உத்தரவிற்குப் பிறகு, குமரி மாவட்டத்தில் அப்படி இறந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுள் எத்தனை பேருடைய குடும்பங்களுக்கு அரசு இதுவரை உதவிப்பணம் வழங்கியிருக்கின்றது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் 8 நேர்வுகளில் உதவித் தொகை அளிக்க பரிந்துரை செய்துள்ளார். அவர்களுள், 3 பேர்களுடைய குடும்பங்களுக்கு அரசு இதுவரை உதவிப்பணம் வழங்கியுள்ளது.

திரு. பொ. விஜயராகவன்: பேரவைத் தலைவர் அவர்களே, 8 பேருக்கு சிபார்சு செய்யப்பட்டு, 3 பேருக்கு வழங்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். மற்ற 5 பேருக்கு வழங்குவதிலே ஏன் இந்தக் காலதாமதம்? உடனடியாக வழங்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, காலதாமதம் ஆகவில்லை. இப்போதுதான் வந்து இருக்கிறது. விரைவில் கொடுக்கப்படும்.

திரு. ஏ. வீ. சவுந்திரராஜன்: தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் தென்னை மரம் அதிகமாக இருக்கிறது. தென்னை மரத்தில் இருந்து விழுந்து இறந்து விட்டால் உதவித் தொகை அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தென்னை மரத்தில் இருந்து கீழே விழுந்தாலும் சரி, அல்லது பனை மரத்தில் இருந்து விழுந்தாலும் சரி, அல்லது பஞ்சாயத்து யூனியன் நகராட்சிகளில் கழிவு பொருள்களை வெளியே எடுக்கிறபோது அவர்கள் இறந்து போனாலும் சரி, அல்லது பொதுவாக, அரசு பொதுப் பணித்துறை அமைக்கப்படும் கிணறுகளை வெட்டுகின்றபோது அவற்றில் இறந்தாலும் சரி, இப்போதுதான், இந்த அரசு வந்ததற்குப் பின்னால் தான் ரூ. 5,000 வழங்கப்படுகிறது. இதற்கு முன்னால் ரூ. 750 லிருந்து ரூ. 1,000 வரை கொடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, பனை மரத் தொழிலாளி அதில் இருந்து விழுந்து இறந்து போனால், அந்த ஊர் கிராம முறைப்படி அடக்கம் செய்ய உறவினர்கள் ஏற்பாடு செய்கிறார்கள். அந்த உறவினர்களுக்கு உதவித் தொகை கொடுப்பதில் தாமதம் ஆகிறது. ஏனெனில் ஆஸ்பிடல் சர்ட்டிபிகேட் இல்லை. அது கொடுத்தால் தான் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். சில இடங்களில் ஆஸ்பிடல் அதிகாரிகள் சர்ட்டிபிகேட் கொடுக்க மறுக்கிறார்கள். இந்தக் குறை பாட்டைப் போக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இதிலே இரண்டு வகையான குறைபாடுகள் இருக்கின்றன என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒன்று, மருத்துவர்கள் சர்ட்டிபிகேட் கொடுப்பது. மருத்துவர்கள் கொடுக்கிற சர்ட்டிபிகேட் வேண்டாம் என்று சொல்ல முடியாது. ஆனால் பலர் குடித்து விட்டு மரத்தில் இருந்து ஏறி விழுந்து விடுவது, என்று சொல்லப் படுகிறது. ஆனால் இதற்கு முன்பு உதவித் தொகை கொடுக்க வேண்டுமானால் வட்டாட்சித் தலைவர் சிபார்சு செய்து, கோட்டாட்சித் தலைவர் சிபார்சு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் சிபார்சு செய்து, வருவாய்த்துறை வாரியம் சிபார்சு செய்து, அதற்குப் பிறகு அரசுக்கு வரவேண்டி இருந்தது. அந்தச் சங்கடங்களைப் போக்கத்தான், வட்டாட்சித் தலைவர், கோட்டாச்சித் தலைவர் சிபாரிசு செய்தால் போதும் என்று சொல்லியிருக்கிறோம். வருவாய் வாரியத்திற்குப் போகாமல் நேரடியாக அரசுக்கு வரவேண்டும் என்று உத்தரவிட இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, பப்பாளி மரத்தில் இருந்து அம்மாதிரி கீழே விழுந்து இறந்துபோனால் அதற்கு உதவித்தொகை கொடுக்கப்படுமா?

1979 ஏப்ரல் 27

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இதுவரையிலும் பப்பாளி மரத்தில் இருந்து கீழே விழுந்ததாகத் தகவல் இல்லை. பப்பாளி மரத்தை கீழே இருந்து ஒடித்துப் போட்டதாகத்தான் தகவல் இருக்கிறது.

திரு. கா. வே. கந்தசாமி: தலைவர் அவர்களே, விவசாயிகள் மருந்து அடிக்கும்போது, பவர் ஸ்பேரயரால் அடிக்கும்போது, ஏழைகள், விவசாயக் கூலிகள், அந்த மருந்தால் பாதிக்கப்பட்டால் அல்லது இரத்தச் சேதம் அடைந்தால்..அவர்களுக்கும் ரூ. 5,000 கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இதுவும் அந்த நிவாரணத்தில் வருகிறது. பூச்சி மருந்து அடிக்கிற போது அதனால் பாதிக்கப்பட்டு இறந்தாலும் அதற்குப் பணம் ரூ. 5,000 கொடுக்கப்படுகிறது.

திரு. மு. ஜான் வின்சென்ட்: தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் அநேக பனை ஏறும் தொழிலாளர்கள் கீழே விழுந்து மரணம் அடைந்த நேரத்தில் அவர்களுடைய மனைவி வின்னப்பித்து கேட்டால், சொத்து எவ்வளவு இருக்கிறது என்று கேட்கிறபோது கிராம கர்ணம், வில்லேஜ் முன்சீப், அதிகமாக தருகிறார்கள், சொத்து இருந்தால் மரணம் அடைந்த தொழிலாளர் குடும்பத்திற்குக் கொடுக்கிற பணம் மறுக்கப்படுமா? அல்லது, கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சங்கடங்கள் நித்து மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதைப்போன்று என்னென்ன சங்கடங்கள் இருந்தாலும் அவைகளை இங்கே சொன்னாலும் சரி, தனியாகச் சொன்னாலும் சரி, அதையெல்லாம் போக்க அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள மதுமரத் தொழிலாளர்களுக்கு ஐந்தாயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவிக்கார்கள். அதை 10,000 ரூபாய் என்று அறிவிக்க இயலுமா? ஒன்று, இரண்டு, கள்ளுக்கு விலக்கு அளித்து, மதுமரத் தொழிலாளர்கள் நிரந்தரமாக வேலை பெற வழி வகுக்கும் வகையில், கள்ளுக்கு விதிவிலக்கு அளிக்க அரசு பரிசீலிக்குமா?

[1979 ஏப்ரல் 2

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் முதலமுதலில் சொன்னேன். இதற்கு முன்பு அவர்களுக்கு எல்லாம் ரூ. 750லிருந்து ரூ. 1,000 வரை தான் கொடுக்கப்பட்டது. 1977–78 வரவு செலவுத் திட்டத்தின்போது தான் இந்த அரசு ரூ. 5,000 என்று அதை உயர்த்தி இருக்கிறது. ரூ. 750 என்று இருந்ததில் இருந்து எவ்வளவு தாண்டி வந்து இருக்கிறது. ரூ. 1,000 என்று இருந்தது ரூ. 5,000 என்ற அளவில் 5 மடங்காக உயர்ந்து இருக்கிறது. அதற்கு மேல் கொடுப்பதற்கு யோசிக்கப்படும்.

மேட்டுப்பாளையம், குன்னூர் சர்வீஸ் நிர்வாகத் தொழிலாளர்கள்.

*ருறுயெ கால வினா எண். 36—திரு. சு. பழனிசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் குன்னூர் சர்வீஸ் (M. C. S. Bus) நிர்வாகம் தம் தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய பாக்கித் தொகையினை திருப்பித்தர என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் தற்போதைய நிலை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) மற்றும் (ஆ) தொழிலாளிகளுக்குச் சேரவேண்டிய தொகையினை நிர்வாகத்தினரிமிருந்து வசூலித்து தொழிலாளர்களுக்கு திருப்பியளிக்க கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 1976ஆம் ஆண்டிலேயே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இந்த ஆணைகளின் மீது கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அரசிடம் சட்ட சம்பந்தப்பட்ட சில விளக்கங்கள் கேட்டுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசு விளக்கங்களை அளித்தவுடன் ஆட்சித் தலைவர் தொழிலாளர்களுக்குத் தொகைகளை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

திரு. க. மருதாசலம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மேட்டுப்பாளையம் குன்னூர் சர்வீஸ் (எம். சி. எஸ். பஸ்) நிர்வாகம் பற்றிக் குறிப்பிடுகிறபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் இடம் ஒப்படைக்கப்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அந்தத் தொழிலாளர்களையும், அந்த சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினரையும் மாவட்ட ஆட்சித் தலைவர் இதுவரை சந்தித்துப்பேசி, இந்தப் பிரச்னைக்கு முடிவு கண்டதாகத் தெரியவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு அந்தத் தொழிலாளர்களுக்கு உடனடியாக நிவாரணம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

1979 ஏப்ரல் 21

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என்பது சட்டமுறை. தொழிலாளர்கள் கோர்ட்டிலே தொழிலாளர்களுக்கு இவ்வளவு தொகை தரவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டு, அதன்படி முதலாளி தொழிலாளர்களுக்கு தரவில்லை என்று சொன்னால், செக்ஷன் 33 (சி) பிரகாரம் அரசு கலெக்டருக்கு எழுதி, கலெக்டர் அவர்களுக்கு ஆணையிடுவார். ரெவின்யூ ரெகவரி ஆக்டின் கீழ் அர்ரியர்ஸ் ஆப் லேன்ட் ரேவின்யூ என்ற முறையில் பணத்தை முதலாளியிடத்தில் வசூல் செய்து தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறோம். அந்த உத்தரவுகள் செயல்படுத்துவதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. பேரவைத் தலைவர் அனுமதி கொடுத்தால், இரண்டு பாரா இருக்கிறது, அதைச் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்த எம். சி எஸ். பஸ் நிறுவனம் ஏராளமாக மத்திய சர்க்காருக்கு கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமல் இருப்பதாகவும், ரூ. 35 லட்சத்திற்கு மேல் கொடுக்காமல் இருப்பதாகவும் ஜவங்களிடத்தில் பேச்சு அடிபடுகிறது. அந்த முதலாளி அங்குள்ள ஸ்டாப்களுக்கு ஒரு காசு கூட கொடுக்காமல், அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கிராசுயுடி கூட கொடுக்காமல் இருக்கிறதால், அவர்கள் திண்டாடுகிறார்கள். அதைத்தான் இன்றைக்கு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். மத்திய சர்க்காருக்கு கொடுக்க வேண்டிய பணத்திற்காக அவர்கள் சொத்துப் பூராவும் மொத்தமாகக் கொண்டு போய்விட்டால் நம்முடைய தமிழ்நாட்டுத் தொழிலாளர்கள் என்ன செய்வது? அதைத் தீவிரமாக விசாரணை செய்து, அதிலே சட்ட சிக்கல் இருந்தால் அதைத் தீர்த்துவைத்து, தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டியதை முதல் பட்டியல் போட்டுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, சற்று நீளமாகப் படிப்பதற்கு அனுமதி தர வேண்டும். பரவலாகப் பேசுவதைப் பற்றி அரசு அக்கறை கொள்ள முடியாது, நடவடிக்கை எடுக்க முடியாது. நான் நிலைமையைப் படித்து விடுகிறேன்.

1. கோவையில் உள்ள மத்திய அரசின் வரிவசூலிக்கும் அலுவலர் நிர்வாகத்தினர் ஏற்கனவே செலுத்த வேண்டிய வரி பாக்கியான ரூ. 7,69,886.99க்காக நிர்வாகத்தினரின் உடைமைகள் 8.9.69 முதலே கைப்பற்றப்பட்டிருக்கின்றன எனத் தெரிவித்துள்ளார். ஆனால், இந்த அலுவலர் தனது கூற்றை தஸ்தாவேஜுகளைக் கொண்டு நிரூபிக்கவும் இல்லை.

2.8.1977-க்குப் பின்னால் இது விஷயம் குறித்து யாதொரு கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளவில்லை. ஆகவே இந்த அலுவலரின் கூற்றை ஒதுக்கி விடலாமா?

There are two more aspects. The hon. Members may please bear with me. . . .

2. நிர்வாகத்தின் சொத்துக்கள் மொத்தம் ரூ. 43,983-க்கு பொது ஏலத்தில் விற்கப்பட்டன. ஆனால், நிர்வாகத்திடமிருந்து தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய தொகையோ ரூ. 1,75,800.29. நிர்வாகத்திடம் இடம் பெயரக்கூடிய அல்லது இடம் பெயர முடியாத சொத்துக்கள் யாதும் இல்லையாதலால், நிர்வாகத்தின் சொத்துக்களை பொது ஏலத்தில் விடப்பட்டதினால் கிடைத்த ரூ. 43,983.00 ஐ தொழிலாளிகளுக்கு விகிதாசார முறைப்படி பிரித்துக் கொடுத்து விடலாமா?

[முற்பகல் 9-10]

நிர்வாகத்தின் நிர்வாக இயக்குநர் இறந்துவிட்டதால் நிர்வாகத்திற்குச் சொந்தமான இடம் பெயரக்கூடிய அல்லது இடம் பெயரா சொத்துக்கள் பொது ஏலத்தில் விடப்பட்டன. தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே எற்பட்ட தொழில் தகராறு காரணமாக தொழிலாளர்களுக்கு தொகை சேரவேண்டியிருக்கிறது. ஆகவே, நிர்வாகத்தின் மற்ற இயக்குநர்களுக்குச் சொந்தமான சொத்துக்கள்மீது நடவடிக்கை ஏதும் எடுக்க இயலாது. அந்தக் கம்பெனி பணம் இல்லை என்றாலும் பிற சொத்துக்களை அட்டாச் பண்ண முடியுமா என்று கேட்கப்பட்டிருக்கிறது.

Government is not sleeping. It is very active.

இயக்குநர் சொத்துக்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியுமா என்றும் கேட்டிருக்கிறோம். நிர்வாகம் தரவேண்டிய பாக்கித் தொகைக்காக மற்றவர்களின் சொத்துக்கள் மீது நடவடிக்கை ஏதும் எடுக்க முடியாது என்று கோவை வழக்குரைஞர் கூறியிருக்கிறார். அது சரிதானா? That is also being examined.

மேற்கொண்டு என்ன செய்யலாம் என்பதற்கு சட்டத் துறையை அறிவுரை வழங்க கோரப்பட்டிருக்கிறது. அறிவுரை கிடைத்தவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

Hon. Member will appreciate this, I suppose.

1979 ஏப்ரல் 2]

அச்சகத் துறையில் பணிபுரியும் பெண் தொழிலாளர்கள்.

குறுகிய கால வினா எண். 37—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1—7—1977-க்குப் பின் சென்னை தலைமை அச்சகத் துறையில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கு அளித்த சலுகை என்ன?

(ஆ) பெண் தொழிலாளர்கள் அரசுக்குக் கோரிக்கை காடுத்துள்ளனரா?

(இ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

(அ) அளிக்கப்பட்ட சலுகைகள்:—

1. பெண் தொழிலாளர்களுடைய வேலை நேரம் காலை 6 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை இருந்தது. 4—8—77 தேதி முதல் காலை 9 மணி முதல், மாலை 5—30 மணி வரை என்று மாற்றியமைக்கப்பட்டது.

2. சிற்றுண்டி சாலையில் பெண்களுக்கு தனியிடம் ஒதுக்கப்பட்டது.

3. எழுது பொருள், அச்சுத்துறை பெண் தொழிலாளர் சங்கத்துக்கு அங்கீகாரம் வழங்க இயக்குநருக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(ஆ) ஆம்.

(இ) சில கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்கூறிய சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. மற்ற கோரிக்கைகளுக்குத் தகுந்த பதில் சங்கத்துக்கு அனுப்பப்பட்டுவிட்டது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, சென்னை தலைமை அச்சகத்தில் உள்ள பெண் தொழிலாளர்கள் இன்னும் சில கோரிக்கைகளை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது. பெண் என்றால் பேயும் மனம் இரங்கும் என்பார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் அவர்கள் மீது இரக்கம் காண்பித்து, அந்தக் கோரிக்கைகளை பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1979 ஏப்ரல் 2

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, பெண்களை பேய் பிடிப்பதாகத்தான் வரலாறு இருக்கிறது. இருந்தாலும் இந்த அரசு இரக்கம் கொண்டு, விரைவில் தகுந்த பரிகாரம் காண இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்தில் 'கொத்தடிமை விடுவிப்பு' திட்டம்.

*வினா எண். 590—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் 'கொத்தடிமை விடுவிப்பு' திட்டத்தின் கீழ் பலன் பெற்றவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

தருமபுரி மாவட்டத்தில் ''கொத்தடிமை ஒழிப்புச் சட்டத்தின்'' கீழ் விடுவிக்கப்பட்டு பலன் அடைந்தோர் 34 பேராவர்.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, இந்த கொத்தடிமை விடுவிக்கும் முறை யாரால் எப்போது கொண்டுவரப்பட்டது? அப்படி கொத்தடிமை விடுப்பு முறையினால் விடுவிக்கப்பட்டவர்களுக்கு அரசு எந்தெந்த வகையில் சலுகை அளிக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, 1975—76ல் மத்திய அரசாங்கத்தில் அப்போது பிரதம அமைச்சராக இருந்த இந்திராகாந்தி அம்மையாரால் கொண்டு வரப்பட்டது. கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு விவசாயத்திற்கு நிலம் வழங்குதல், வீடு கட்ட உதவி அளித்தல், விவசாய நிலங்களை மேம்பாடு செய்வதற்கு மற்றும் உழவுத் தொழில் செய்வதற்கு கடன் வழங்குதல், இடைக்கால நிவாரணம் வழங்குதல் இப்படிப்பட்ட உதவிகளை அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, இந்த கொத்தடிமை விடுப்பு தர்மபுரி மாவட்டத்தில் எந்தெந்த பகுதிகளில் இருப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டது? சித்தேரி மலை, கொத்தளம் பகுதிகளில் இருக்கிறதா? அங்கிருந்து விடுவிக்கப்பட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த பகுதிகளும் இடம் பெற்றிருக்கின்றன.

1979 ஏப்ரல் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த வினா 591 மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, 591, 592 இரண்டும் தொடர்புடையதாக இருப்பதால் இந்த இரண்டு வினாக்களையும் சேர்த்து எடுத்துக்கொள்கிறேன்.

வீராணம் ஏரி கால்வாய்கள்.

*வினா எண். 591—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீராணம் ஏரி பாசனத்தில் மாதிரி சிமிண்ட் வாய்க்கால் கட்டி தண்ணீர் வீண்விரயம் இல்லாமல் பாசனம் செய்ய அரசு திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம். வீராணம் ஏரி வாய்க்காலகளான லால்பேட்டை வாய்க்கால், வெள்ளியக்குடி வாய்க்கால் ஆகிய இரண்டையும் சீர்ப்படுத்தும் முன்னோடி திட்டத்திற்கு (Pilot Scheme) ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடந்தேறி வருகின்றன.

*வினா எண். 592—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் பெறும் லால்பேட்டை வாய்க்காலை நவீனப்படுத்தி எவ்வளவு ரூபாய்க்கு திட்டம் போடப்பட்டது?

(ஆ) எப்போது இத் திட்டம் முடிவு பெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் பெறும் லால்பேட்டை வாய்க்காலை நவீனப்படுத்தும் திட்டத்தின் மதிப்பீடு ரூ 8.10 இலட்சம் ஆகும்.

(ஆ) 1979 ஆம் ஆண்டு கோடை மூடு காலத்தில் பெரும் பகுதி வேலைகள் முடிந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நந்தன் கால்வாய் திட்டம்.

*வினா எண். 593—திரு கோ. ரகோத்தமன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், முகையூர் தொகுதியில் நந்தன் கால்வாய் திட்டத்தில் பனைமலை ஏரிவரை கால்வாய் வெட்டித்தர அரசு உத்தேசித்துள்ளதா?

[1979 ஏப்ரல் 2

(ஆ) நந்தன் கால்வாய் திட்டத்தின் மூலம் எத்தனை ஏக்கர் பாசனம் பெறுகிறது?

(இ) அத்திட்டத்திற்கு அரசு எவ்வளவு செலவழித்துள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) தென்னார்க்காடு மாவட்ட முகையூர் தொகுதியில் நந்தன கால்வாய்த் திட்டத்தில் பனைமலை ஏரி ஏற்கனவே சேர்க்கப்பட்டு வேலைகள் முடிவடைந்து விட்டன.

(ஆ) நந்தன் கால்வாய் திட்டத்தின் மூலம் 6,654 ஏக்கர் பாசனம் பெறுகிறது.

(இ) இத்திட்டத்திற்காக டிசம்பர் 1978 முடிய செலவழிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 1,11,02,079 ஆகும்.

துறையூருக்கு அருகே புதிய அணைக்கட்டு.

*வினா எண், 594—திரு. கே. சௌந்தரராசன் & திரு. எஸ். வி. இராமசாமி: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் துறையூருக்கு அருகில் கொல்லி மலையில் இருந்து வரும் அருவியின் குறுக்கே அணை கட்டி நீர்த்தேக்கம் அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு காலத்திற்குள் இத்திட்டம் செயல்பட துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் ஆய்வில் உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழில்.

*வினா எண். 595—திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதற்கான பிரேரணைகள் அரசினைக் கிடைத்துள்ளதா?

1979 ஏப்ரல் 2]

(ஆ) ஆம் எனில், எத்தனை கூட்டுறவுச் சங்கங்கள் இது வரை அமைக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பது பற்றிய சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு தொழில் வணிக இயக்குநர் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்.

திரு. பொ. விஜயராகவன் : பேரவைத்தலைவரவர்களே, எத்தனை கூட்டுறவுச் சங்கங்கள் இதுவரையில் அமைக்கப் பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, கூட்டுறவுப் பணிச் சங்கம் என்பது ஒவ்வொரு சிறு சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கும் மூலப் பொருள்களை வாங்கிக் கொடுப்பதற்கும் அதன் பிறகு ஒவ்வொரு சிறு சிறு தொழிற்சாலைகளும் உற்பத்தி செய்கின்ற தீப்பெட்டிகளை வாங்கி விற்பனை செய்து கொடுப்பதற்குமாக அமைக்கப் பட்டது. எனவே ஒரு கூட்டுறவுப் பணி சங்கம் அமைத்து விட்டாலே சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அந்தப் பகுதியில் பரவலாக வரும். ஹோம் யூனிட் என்று சொல் வார்களே அதுபோல ஒரு பணிச் சங்கத்திற்கு நூறு சிறிய தொழிற்சாலைகள் வீதம் 300, 400 சிறிய தொழிற் சாலைகள் அங்கங்கே ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, இதனை ஆராயும்படி நாங்கள் கேட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு அமைப்பது போன்று அங்கே ரப்பர் அதிகமாகக் கிடைக்கின்ற காரணத்தால் அதற்கும் இப்படி கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து கிடைக் கின்ற ரப்பரை வைத்து ஒரு தொழிற்சாலை அமைத்து தொழி லாளர்களுக்கு வேலை வாய்ப்பு திட்டத்தை இந்த அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1979 ஏப்ரல் 2

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, ஏற்கனவே டான்சி நிறுவனம் மூலமாக அங்கே ஒரு ரப்பர் தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆகவே மற்ற சாத்தியக்கூறுகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் விளக்கமாகப் பதில் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கன்னியாகுமரி மாவட்டம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. இருந்தாலும் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்களுக்கு ஒரு வாய்ப்புத்தருகிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் ; தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் ஏராளமாக இப்போது ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. இந்த கூட்டுறவு முறையில் இருக்கின்ற சங்கங்களுக்கு 500 ரூபாய் பணம் கட்ட வேண்டி இருக்கிறது. ஆனால் கதர் கிராமத்தொழில் நிறுவனத் திடமிருந்து வாங்குவதாக இருந்தால் 25 ரூபாய் பங்குத் தொகையாக கட்டினால் போதும் என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த கூட்டுறவுச் சங்கங்களிலே கட்டவேண்டியது 500 ரூபாய் என்று இருப்பதையும் 25 ரூபாய் என்ற அளவில் குறைப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் 15 பேர்களிலிருந்து 20 பேர்கள் வரையில் வேலை செய்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 500 ரூபாய் கட்டினால்தான் கச்சாப் பொருட்களை வழங்குகிறார்கள் என்று சொல்வது தனிப்பட்டவர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக வாங்க முயற்சிப்பது பற்றியது. ஆனால், நான் சொல்வது 100 பேர் என்ற அளவிலே சேர்ந்து கொண்டு கூட்டுறவு முறையின் மூலமாக இந்தத் தொழிலை ஆரம்பிப்பது பற்றியது. ஆனால் ஒவ்வொரு உறுப்பினரும் 25 ரூபாய் ஷேர் காப்பிடல் கட்டி கூட்டுறவு முறையில் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பது ஒரு முறை. ஆகவே இரண்டு முறைகள் இருக்கின்றன. ஆகவே அங்கே இதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து நாம் சிறப்பாக செயலாற்றிக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 எப்ரல் 21

நீலகிரி மாவட்டத்தில் தொழிற்பேட்டை.

*வினா எண் 596—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் தொழிற்பேட்டை ஒன்று (Industrial Estate) அமைப்பது அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: நீலகிரி மாவட்டத்தில் ஒரு தொழிற்பேட்டை அமைப்பது பற்றி செயற்குறிப்பு உள்ளது. தொழிற்பேட்டை அமைப்பதற்கு தேவைப்படும் நிலத்தை தேர்வு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

[முற்பகல் 9-20]

திரு. என். பழனிவேல் : நீலகிரி மாவட்டத்தில் ஒரு தொழிற்பேட்டை அமைப்பதற்கான செயற்குறிப்பு உள்ளதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்தத் தொழிற்பேட்டை எந்த ஊர்களில் அமைக்கப்படும் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, சிட்கோ மூலமாக அங்கங்கு கிடைக் கின்ற மூலப்பொருட்களை வைத்து, ஒரு லட்சம் ரூபாய் அளவுக்கு மூலதனத்தை வைத்து நடத்துகின்ற தொழிற்சாலைகளை துவக்குவதற்கான அளவில் எங்கெங்கு கட்டிடங்களை கட்டிக் கொடுக்கலாம் என்பதைப்பற்றி ஆலோசித்து கட்டிடங்களை கட்டுவதற்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும் என்ற அளவில் என்னென்ன தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம் என்பதைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கை கிடைத்த வுடன் மாவட்டத்தில் இரண்டு மூன்று இடங்களில் இப்படிப் பட்ட தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1979 ஏப்ரல் 2

வைட்டமின் 'ஏ' குறைவால் கண்பார்வை இழக்கும் சிறுவர்கள்

*வினா எண் 597—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வைட்டமின் 'ஏ' புரதசத்து குறைவு காரணமாக ஆண்டுதோறும் கண் பார்வையை இழக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை கணக்கெடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதைத் தடுக்க அரசு எடுத்திருக்கும் முயற்சி என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் குழந்தைகளின் கண்பார்வை இழப்பைத் தடுக்க ஊட்டச்சத்து வழங்குதல், சுகாதாரக் கல்வி போதிக்க நடவடிக்கைகள் எடுத்தல், சத்து குறைபாட்டு நோய்களை கண்டறிதல், ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வைட்டமின் 'ஏ' செறிவுத் திரவம் வழங்குதல் முதலிய நடவடிக்கைகள் சுகாதாரம் மற்றும் சமூதாய அளவுப் பணியாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, கண்பார்வையற்ற குழந்தைகளுக்கு என்று ஒவ்வொரு வட்ட தலைநகர் ஆசுபத்திரிகளிலும் தனிப் பிரிவுகள் இல்லாமல் இருக்கிறது. ஆகவே அந்த வட்ட தலைநகரில் உள்ள ஆசுபத்திரிகளில் தனிப்பிரிவு ஏற்படுத்தி இந்தக் குறையைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது, வட்ட மருத்துவமனைகளில் கண் சிகிச்சைக்கு என்று தனிப்பிரிவு வேண்டும் என்று கேட்கிறாரா அல்லது குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து—புரத சத்து குறைவு காரணமாக கண்பார்வையில்லாத குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்க தனிப்பிரிவு வேண்டும் என்று கேட்கிறார்களா என்பதைப் பற்றி தெளிவாகக் குறிப்பிடவில்லை. மூலக்கேள்வி வைட்டமின் 'ஏ' சத்து குறைவு காரணமாக குழந்தைகளுக்கு ஏற்படுகின்ற கண்பார்வை குறைவு சம்பந்தப்பட்டது. வைட்டமின் ஏ சத்துக் குறைவு காரணமாக குழந்தைகளுக்கு கண் பார்வையற்று போகாத நிலைமையில், நல்வாழ்வுத் துறை மூலமாக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆங்காங்கு கிராமங்களுக்குச் செல்லுகின்ற பணியாளர்கள் இதனுடைய அவசியத்தைப் பற்றியும் எடுத்துச் சொல்லி தேவையான மருந்துகளையும் வழங்கி வருகிறார்கள்.

1979 ஏப்ரல் 2]

திரு. மு. அம்பிகாபதி: இங்கேயே மைக் வேலை செய்ய வில்லையென்றால் வெளியில் எப்படியிருக்கும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சில நேரங்களில் திடீரென்று மனித உடலே கெட்டுவிடுகிறது. கரண்டு சப்ளையில் கோளாறு ஏற்பட்டிருப்பதை பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டிய தேவையில்லை திரு. யூசுப் அவர்கள்.

திரு. யா. ச. மு. யூசுப்: தலைவர் அவர்களே, புதுச் சத்து காய்கறிகளில் நிறைய இருக்கின்றது. அப்படிப்பட்ட காய்கறிகளை வீடுகளிலுள்ள தோட்டத்தில் விளைவிப்பதற்கு அரசு மானியம் கொடுக்க முன்வருமா என்பதைத் தெரிந்து கொள்வதோடு, இதற்கான விளம்பரத்தையும் செய்ய முன் வருமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இது வேறு துறை சம்பந்தப்பட்ட கேள்வி. ஆகவே மறு கேள்வி போட்டால் இதற்கு உரிய பதில் அளிக்கப்படும்.

திரு. பெ. சு. திருஞானசம்பந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குழந்தைகள் கிராமங்களில் கண் பார்வையற்று இருக்கின்றன. அவைகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் இதற்கென்று சத்துள்ள மாத்திரைகளை ஒவ்வொரு பள்ளிக்கும் சென்று விநியோகிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கிராமங்களில் இருக்கின்ற குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து வழங்க வேண்டும் என்பதற்காக, ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கின்ற இந்தத் துறை சம்பந்தப்பட்டவர்கள் கிராமம் கிராமமாகச் சென்று அங்குள்ள மக்களை சந்திப்பதோடு மட்டுமல்லாமல், அங்கங்குள்ள குழந்தைகளையும் தாய்மார்களையும் சந்தித்து வைட்டமின் 'ஏ' சத்து, காய்கறிகள் எப்படி இருக்கிறது, எப்படி ஊட்டச்சத்து கிடைக்கிறது என்பதை எடுத்துச் சொல்வதோடு, குறிப்பாக கர்ப்பமாக இருக்கின்ற தாய்மார்களிடம் வைட்டமின் 'ஏ' சத்து பெறுவதற்காக எப்படியெல்லாம் உடம்பை பராமரித்துக் கொள்ளவேண்டும் என்பதைப்பற்றி எடுத்துச்சொல்கிறார்கள். அதோடு சத்துள்ள மாத்திரை, நிரவம் போன்றவைகளும் கிராமங்களில் வழங்கப்பட்டு வருகின்றன.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வைட்டமின் 'ஏ' சத்து குறைந்த காரணத்தினால் கண்பார்வை இழந்தவர்களின் எண்ணிக்கை பட்டியல்

இருக்கிறதா? அப்படி இருந்தால் அதை அறிவிக்க இயலுமா? தற்போது நடவடிக்கை எடுத்த காரணத்தால், பார்வை வரப்பெற்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1971 ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு மாவட்டத்திலும் கண்பார்வை இழந்த குழந்தைகளின் எண்ணிக்கை, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதால் பயனடைந்த குழந்தைகளின் எண்ணிக்கை என்ன என்பதைப் பற்றிய குறிப்பு எடுத்து வைத்திருக்கிறோம். அதன்படி விவரம்:

மாவட்டத்தின் பெயர்.	கண்பார்வை இழந்த குழந்தைகளின் எண்ணிக்கை.	பலனடைந்த குழந்தைகளின் எண்ணிக்கை.
செங்கற்பட்டு	445	69,330
தென் ஆற்காடு	524	159,527
தஞ்சாவூர்	511	114.171
புதுக்கோட்டை	142	13,482
திருச்சிராப்பள்ளி	465	464,620
மதுரை	581	116,142
இராமநாதபுரம்	413	175,596
திருநெல்வேலி	461	145,086
கன்னியாகுமரி	180	58,410
சேலம்	438	76,214

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, தாங்கள் ஏற்கனவே ஒரு டைரக்ஷன் கொடுத்திருக்கிறீர்கள். அதன்படி உடையில்லை மேஜைமீது வைத்து விடலாம்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இது சப்ளிமென்டரி கேள்வியானதால், இதை சொல்லித்தான் ஆகவேண்டும்.

மாவட்டத்தின் பெயர்.	கண்பார்வை இழந்த குழந்தைகளின் எண்ணிக்கை.	பலனடைந்த குழந்தைகளின் எண்ணிக்கை.
தர்மபுரி	251	194,274
கோயம்புத்தூர்	646	48,855
நீலகிரி	223	27,341
வட ஆற்காடு	546	199,212

1979 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வியாக இருந்தாலும் சுருக்கமாகப் பதில் சொல்வது நல்லது. இது போன்ற பட்டியல் இருந்தால், அச்சடித்துக் கொடுக்கலாம். தொல்லை இருக்காது.

சென்னை மருத்துவக் கல்லூரி

*வினா எண் 598—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மருத்துவக் கல்லூரியை பட்ட மேற்படிப்புக் கல்வி ஆராய்ச்சி நிலையமாக உயர்த்தும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: இத் திட்டம் 1979-80-ம் ஆண்டில் செயற்படுத்தப்படுவதற்கான செயற் குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது.

மருந்தாளுநர்களது பணிகள்

*வினா எண் 599—திரு. ரா. த. பெருமாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரிய மருத்துவமனைகளில் பணியாற்றும் பார் மஸிஸ்டுகளுக்கு எழுத்து வேலை போன்ற பிற வேலைகள் கொடுப்பதை நிறுத்திடும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: (அ) & (ஆ) இப்பிரச்சினை குறித்து மருத்துவக் கல்வி இயக்குநர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை துணை இயக்குநர் வேறு சில மருத்துவத் துறை அதிகாரிகள், தமிழ்நாடு மருந்தாளுநர் சங்கத் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் ஆகியோர் அடங்கிய கூட்டத்தில் விவாதிக்கப் பட்டு நடைமுறைக்குகந்த ஒரு வேலைத் திட்டம் வரையப்பட்டு அது மருந்தாளுநர் சங்க நிர்வாகி களாலும் ஏற்கப்பட்டுள்ளது.

[1979 ஏப்ரல் 2

திருக்கோயிலூர் வட்டத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை

*வினா எண் 600—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) திருக்கோயிலூர் தாலுக்காவில் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று அமைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் என்றால் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : (அ) இல்லை. ஆனால் உருந்தூர்ப்பேட்டை தாலுக்கா பெரியசெவலை கிராமத்தில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை. முன்பு உருந்தூர்ப்பேட்டை தாலுகா திருக்கோயிலூர் தாலுகாவின் கிளைத் தாலுகாவாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

சர்க்கரை விலை

*வினா எண் 601—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் ஒரு டன் சர்க்கரைக்கு உற்பத்தி செலவு எவ்வளவு ?

(ஆ) மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : (அ) தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் ஒரு டன் சர்க்கரைக்கு உற்பத்தி செலவு சுமார் ரூ. 2,080-லிருந்து ரூ. 2,930வரை உள்ளது.

(ஆ) மத்திய அரசு சர்க்கரைக்கு இருந்த கட்டுப்பாடுகளை 16—8—1978 முதல் நீக்கிவிட்டது. எனவே தற்போது விலை ஏதும் நிர்ணயிக்கப்படுவதில்லை.

[முற்பகல் 9-30]

திரு. மு. அம்பிகாபதி : தமிழகத்தில் மட்டுமல்லாமல் இந்தியாவிலேயே சர்க்கரைத் தொழிலை அழித்துவிடும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. ஒரு ஆலை என்றால் உற்பத்தி செய்கிற பொருளுக்கு விலை நிர்ணயம்

1979 ஏப்ரல் 2]

செய்து மத்திய அரசு உத்தரவாதம் அளித்து அந்தத் தொழிலைக் காப்பாற்ற வேண்டும். தமிழகத்தில் சர்க்கரைத் தொழில் நசித்து தொழிலாளர்கள் பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது தமிழக அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுத்து நிறுத்த ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்; சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தமட்டில் தமிழ்நாட்டில் ஒரு பெரிய சோதனைக் கட்டத்தை அவை சந்தித்துக் கொண்டிருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியும். எந்த அளவுக்கு அந்த சோதனைகளில் இருந்து அந்த ஆலைகளை மீட்டு வர முடியுமோ அந்த முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய சர்க்கார் சர்க்கரை ஆலைகளையே ஒழிக்கின்ற உன்னதமான திட்டத்தில் ஈடுபட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனக்குத் தெரிந்த தகவலின் அடிப்படையில் தெரிவித்தார். என்னிடம் அந்தத் தகவல் இல்லை.

டாக்டர் கே. சமரசம்: தமிழகத்தில் உற்பத்தியாகும் சர்க்கரைக்கு டன் ஒன்றுக்கு ரூ. 2,080ல் இருந்து 2,930 வரை செலவாவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் ஒரு டன் விற்பனை விலை எவ்வளவு? விற்பனை விலை குறைவாக இருந்தால் அரசு அதை ஈடுகட்ட என்ன முயற்சி எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அதுபற்றித் தனி கேள்வி போடவும்.

திரு. சி. கோவிந்தராசன்: சர்க்கரைக்கு ஏற்கனவே இரண்டு விதமான விலைகள் இருந்து கொண்டிருந்தன. ஒன்று லெவி பிரைஸ், இன்னொன்று ஃப்ரீ மார்க்கட் பிரைஸ். இன்றைக்கு லெவி பிரைஸ் நிக்கப்பட்டுவிட்டது. சர்க்கரை ஆலை முதலாளிகள் அவர்கள் இஷ்டத்திற்கு விலை வைத்து விற்கக்கூடிய சூழ்நிலையை மத்திய சர்க்கார் உருவாக்கியிருக்கிறது. சர்க்கரை ஆலைகளுக்கு நஷ்டம் வருவதாகக் கூறி கரும்பு விவசாயிகளுக்குப் பணம் கொடுக்க மறுக்கிறார்கள். இதைத்தான் சோதனை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்களா? சோதனை இதுதானா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அந்தச் சோதனைகளில் இதுவும் ஒன்று.

திரு. மு. அம்பிகாபதி : சர்க்கரைத்தொழில் லாபகரமாக மாறிக் கொண்டிருக்கிறது. பல தொழிற்சாலைகளில் லட்சக்கணக்கான மூட்டை சர்க்கரை தேங்கிக் கிடக்கிறது. கரும்பு விவசாயிகளுக்குப் பணம் கொடுப்பதில் மிகுந்த தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு கிலோ சர்க்கரை இங்கே மூன்று ரூபாய்க்கு விற்கிறது. இலங்கையில் ஒருகிலோ சர்க்கரை ரூ. 9ல் இருந்து 11 வரை விற்கப்படுகிறது. ஆகவே, சர்க்கரையை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய சர்க்கார் ஷுகர் கேன் கார்ப்பரேஷன் மூலமாக ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினரவர்களின் தீர்ய ஆலோசனை கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : திரு. அம்பிகாபதி அவர்கள் மத்திய அரசாங்கம் சர்க்கரை ஆலைகளை ஒழித்துக் கட்டவேண்டுமென்ற திட்டத்தோடு செயல்படுவதாகக் கூறினார்கள். அப்படிப்பட்ட திட்டம் இருக்குமென்று சொன்னால் தமிழ்நாட்டில் பேட்டைவாய் சர்க்கரை ஆலையை மத்திய சர்க்கார் ஏற்று நடத்தத் தேவையில்லையென்பதை அரசு அறியுமா ? மத்திய சர்க்கார் 8.5 ரூபாவுக்கு இருந்தால் 100 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்து வட மாநிலங்களில் 100 ரூபாய்க்கு அதிமாக சர்க்கரை உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கும் சூழ்நிலையில் இங்கு 100 ரூபாய் கூட கொடுக்காமல் 85 ரூபாய்தான் கொடுப்பதால் நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அரசுக்குத் தெரியும். இந்தப் பிரச்சினையை மத்திய சர்க்காரின் கவனத்திற்கு அரசு கொண்டுவந்திருக்கிறது.

திரு. வி. கோ. சின்னசாமி : நலைவர், அவர்களே சர்க்கரை ஆலைகளில் சர்க்கரையை உற்பத்தி செய்கின்ற நேரத்திலே கிராமப்புறங்களிலே நாட்டுச் சர்க்கரை, கரும்பு வெல்லம் ஆகியவற்றை உற்பத்தி செய்கிற ஆலைகளையும் அமைப்பதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

MICRO Tools Limited, Madras

*Q. No. 602—Thiru R. UMANATH
Thiru R. KRISHNAN
Thiru V.K. KOTHANDARAMAN } Will be

1979 ஏப்ரல் 2]

Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the present Chairman of the Tamil Nadu Industrial Investment Corporation Limited (TIIC) is or has been the promoter of MICRO Tools Limited, Madras?

(b) if so, whether the said company had borrowed loans from Tamil Nadu Industrial Investment Corporation Limited, Industrial Finance Corporation of India and Industrial Credit Investment Corporation of India and the amount so borrowed?

(c) whether the said company has defaulted to the above said financial institutions and if so, to what extent; and

(d) whether at the instance of these financial institutions, receivers have been appointed for Micro Tools Limited?

603—

மாண்புமிகு திரு. கி. மனோகரன் :

*பேரவையின் முன் *ஒரு அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

திரு. ந. உமாநாத் : தலைவரவர்களே இந்த திவாலான மைக்ரோ டூல்ஸ் கம்பெனியின் மேனேஜிங் டைரக்டராக இருக்கிறார். டி. ஐ. ஐ. சி. யிலுள்ளடைய அந்த பைனான்சியல் இன்ஸ்டிட்யூஷனுடைய சேர்மேனாகவும் அவர் போடப்பட்டு இருக்கிறார். அமைச்சர் கொடுத்து இருக்கிற ஸ்டேட்மெண்ட் படி அந்த பைனான்சியல் இன்ஸ்டிட்யூஷனுக்கு அந்த திவாலான கம்பெனி கொடுக்கவேண்டியது கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய். அதிலே அந்த டி. ஐ. ஐ. சி.க்கு மட்டும் அரை கோடி ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. அந்த டி. ஐ. ஐ. சி., மற்றும் நிறுவனங்களிடமிருந்து வாங்கப்பட்ட கடன்களுக்கு அந்தக் கம்பெனியின் மேனேஜிங் டைரக்டராக இருக்கிறவர் தான் இன்றைய தினம் அந்த டி. ஐ. ஐ. சி. க்கு பெர்சனல் கியாரண்டி நின்றிருக்கிறார். ஆகவே பெர்சனலாக ஆக்ஷன்

* 137 ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது]

எடுக்கவேண்டியிருக்கிறது. அதனாலே டி. ஐ. ஐ. சி.யினுடைய சேர்மன் என்ற முறையிலே அந்த மேனேஜிங் போர்டுக்கு அதிலே நடவடிக்கை எடுப்பதில் சங்கடம் ஏற்படும். இப்படி இருப்பதால் அந்த மானேஜிங் போர்ட் பண்ணமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அவரை சேர்மன் பதவியிலிருந்து நீக்குவதற்கு அரசாங்கம் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, இன்றைக்கு டி. ஐ. ஐ. சி. நிறுவனத்தின் டைரக்டராகப் போடப்பட்டு இருப்பவர் திரு. அனந்தகிருஷ்ணன். அவர் மைக்ரோ டூல்ஸ் நிறுவனத்தின் மேனேஜிங் டைரக்டராக இருந்தவர். 1973 ஆம் ஆண்டு அந்த மேனேஜிங் டைரக்டர் பொறுப்பை ராஜிநாமாச் செய்தவர். ஆகவே அவர் மானேஜிங் டைரக்டராக மைக்ரோ டூல்ஸ் நிறுவனத்திற்கு இல்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். திரு. அனந்த கிருஷ்ணன் தனிப்பட்ட முறையிலே அந்த நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறவில்லை. ஆகவே பெர்சனல் கியாரண்டி என்பது எழாது. மைக்ரோ டூல்ஸ் கம்பெனிக்காகத்தான் பெற்றார். தங்களுக்குச் சேரவேண்டிய தொகைக்காக அவர்கள் உயர்நீதி மன்றத்திற்குச் சென்றார்கள். அதற்குப்பிறகு அந்த நிறுவனம் கலைக்கப்பட்டு அபிஷியல் லிக்விடேட்டர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர்களுக்கு இருக்கிற விதிகளின் படி ஒரு தொழில் நிறுவனங்கள் பெற்றுள்ள கடன்களுக்காக, அவர்கள் இயக்குநராகவோ தலைவராகவோ நியமிப்பதற்குத் தடை கிடையாது.

திரு. டி. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, இந்த டி. ஐ. ஐ. சி.யினுடைய விதி மிகுந்த அற்புதமாக இருக்கிறது. பஞ்சாயத்துக்கு நிற்கவேண்டுமென்றால் அவர் வரி கட்டியிருக்க வேண்டுமென்று இருக்கிறது. எம். எல். ஏ.வுக்கு நிற்க வேண்டுமென்றால்கூட வரி கட்டியிருக்கவேண்டுமென்று இருக்கிறது. ஒரு கோடி வாங்கியிருந்தாலும் டைரக்டராக ஆகலாம் என்று குவாலிபிகேஷன் இருப்பது முறைதானா என்பதை அரசு பரிசீலிக்கவேண்டும், அது கோடி ரூபாய், ரொம்ப சீரியஸான விஷயம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இதற்கு நான் ஏற்கனவே பதில் சொல்லிவிட்டேன். அவர் கியாரண்டி கொடுத்து இருக்கிறார். அவருக்காகக் கடன்பெறவில்லை. அது மட்டுமல்ல.

[முற்பகல் 9-10]

ஸ்டேட்மெயினானசிங் கார்ப்பரேஷன் ஆக்ட் இங்கே பயன்படுத்தப்படவில்லை. மாறாக, டி. ஐ. ஐ. சி. தனக்கென்று ஒரு அடிப்படையில் இயங்கிக்கொண்டு இருக்கிறது. ஆகவே, தென்

1979 ஏப்ரல் 21

வாக அவர்களுக்கு இருக்கின்ற விதிமுறைப்படி As regards his appointment as Chairman of HIC there is no contravention so far as legal position is concerned.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, ஏற்கனவே கொடுத்த கடிதங்கள் எல்லாமே, அந்த ரெகவரி எல்லாமே, கொடுத்த கடன்களை அந்தக் கம்பெனி இவர் மேனேஜிங் டைரக்டராக இருக்கிற பொழுது முறையாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறதா அல்லது முறை தவறிப் பயன்படுத்தப்பட்டிருக் கிறதா என்பதைப்பற்றி சீரியசான என்கொயரி நடத்த வேண்டி யிருக்கும். மறுபடியும் நான் லீகல் பொசிஷனைப்பற்றிக் கேட்கவில்லை. Morally is it correct on the part of the Government? அந்த டைரக்டர் போர்டு இப்படிப்பட்ட என்கொயரியை, தன் சேர்மன்சம்பந்தப்பட்டிருக்கும்படியான நிலைமையிலே அவர்பேரில் எப்படி என்கொயரி நடத்துவது என்ற தயக்கம் இருக்கும் ஆகவே தயக்கம்இல்லாமல் என்கொயரி நடத்துவதற்கு-தடை இருக்கிறதா இல்லையா என்ற கேள்விக்குப் போகவில்லை- தடையில்லாமல் செய்வதற்காக— Morally is it correct? ஃபிரீ என்கொயரி நடத்து வதற்கு இவர்களை சேர்மன்ஷிப்பிலிருந்து ரிமூவ் செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, அப்படியொரு என்கொயரி நடத்தப்பட வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினரவர்களின் கோரிக்கையை அரசு ஏற்பதா இல்லையா என்பதைப்பற்றி இப்பொழுது முடிவு சொல்லத் தயாராக இல்லை. அப்படி ஒரு முடிவு எடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் செய்ய வேண்டிய முறைப்படி அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அவை முன்னவர் அவர்கள் விடையளிக்கும்பொழுது அப்படியொரு நிலைமை ஏற்பட்டால் எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுக்கும் என்று சொன்னார்கள். இவர் சேர்மனாக இருக்கின்ற காரணத்தினால் அப்படியொரு நிலைமை ஏற்படாமலே போய்விட்டால் என்ன நிலைமை என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, நமது எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் கற்பனை செய்வது அப்படி, நான் இப்படிக் கருதுகிறேன்.

திரு. கி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த 'மைக்ரோ டூல்ஸ்' நிறுவனம் 1970-ஆம் ஆண்டு ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வரலாறு வேண்டாம், கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. சி. கோவிந்தராசன் : கேள்விதான். 1977 ஜூலை மாதத்திலே மூடப்பட்டது. இந்த நபர் அதனுடைய மேனேஜிங் டைரக்டராக இருக்கும்பொழுது திறமையில்லாத காரணத்தினாலே நஷ்டம் ஏற்பட்டது, பிறகு இது Wymen Gard என்ற கம்பாயிலுள்ள கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டது. இப்படித் திறமையற்ற ஒருவரால் இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டு, அரசாங்க நிறுவனத்திடமிருந்து வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலைக்கு ஆக்கிய இந்த நபரை கடன் கொடுக்கக் கூடிய நிறுவனத்திற்குத் தலைவராகப் போடுவது எப்படிச் சரியாகும்? சட்டப்படி எப்படியிருந்தாலும் அவர்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் உறுப்பினர் முன்பு கட்ட கேள்வியையே கேட்டு நேரத்தை வீணாக்க வேண்டாம். புதிதாகக் கேள்வி கேட்டால் பரவாயில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, திறமைக் குறைவு காரணமாக இந்த நிறுவனம் அல்லது ''மைக்ரோ டூல்ஸ்' மூடப்பட்டது என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தராசன் அவர்கள் எழுப்பினார்கள். 1966-இல் இந்திய நாணயத்தின் மதிப்பு குறைக்கப்பட்டதால் இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களின் மதிப்பு, தொழில் நுட்ப அறிவு ஆகியவற்றின் கட்டணம் அதிகமாகியது. இது ஒன்று. அயல் நாட்டு தொழில் உற்பத்தியாளர்கள் கூறிய கருத்தால், கட்டிடங்களில் மாற்றம் செய்யப்பட்டதாலும், கட்டிடம் கட்டத் தேவையான பொருள்கள் விலை அதிகமானதாலும், கட்டிடச் செலவு அதிகமானது. மேலும் நிறுவனம் தான் உற்பத்தி செய்த பொருள்களுக்குச் சந்தையில் அதிகச் சிரமம் ஏற்பட்டது. இதன்காரணமாக அப்பொழுது இந்தத் தொழிற்சாலை மூடப்பட்டது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கும்பொழுது திறமைக் குறைவு காரணம் அல்ல என்பது போல் அமைச்சரவர்கள் பதில் சொல்லியதிலிருந்து, நடவடிக்கைகள்கூட எடுக்க மாட்டார்களோ என்ற சந்தேகம்தான் உண்டாகின்றது. மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும் பொழுது, He stood personsl guarantee என்று சொன்னார்கள். If he stood personal guarantee, he is also liable to pay the dues. எனவே, பர்சனல் கியாரண்டியை வைத்து, அவர் மீது நடவடிக்கை எடுக்க முன் வருமா? அதைபோல் முன்னால் ஒருவரைத் தலைவராகப் போட வேண்டுமென்று அரசாங்கம் யோசிக்கும்பொழுது கடன் சம்பந்தமான பிரச்னையில் அவரைப் போடாமல் விட்டு விட்டது. அதே கொள்கை வருங்காலத்தில் பின்பற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 21

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, ஏற்கனவே நான் பதில் சொல்லியிருக்கிறேன். 'மைக்ரோடுல்ஸ்' நிறுவனம் தங்களுக்குச் சேர வேண்டிய தொகைகளை, அந்தத் தொகைகளைத் திருப்பிப் பெற உயர்நீதிமன்றத்தில் விண்ணப்பித்திருக்கிறார்கள். இப்பொழுது நிறுவனம் கலைக்கப்பட்டு Official Liquidator நியமிக்கப்பட்டிருக்கிறார். இதுதான் இப்பொழுதிருக்கிற நிலை. இப்பொழுதிருக்கிற நிலைமையைச் சொல்கிறேன், அவ்வளவுதான்.

பழனி வட்டத்தில் கூட்டுறவு கடன் வசூல்

*வினா எண். 603 — திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பழனித் தாலூகாவில், கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகள் வாங்கியுள்ள கடன் வசூலை மிகவும் கெடுபிடி செய்து ஜப்தி செய்வது இந்த அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதைத் தடுத்து நிறுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, (அ) பழனி தாலூகாவில், கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகள் வாங்கியுள்ள கடன் வசூலை மிகவும் கெடுபிடி செய்து ஜப்தி செய்வது பற்றி புகார்கள் ஏதும் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

(ஆ) இந்த வினாவிற்கு இடமில்லை.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி 8, 9 மாதங்களுக்கு முன்னால் போட்ட கேள்வி. ஆனால், வசூலில் கெடுபிடி உண்டு என்று புகார் ஏதும் வரவில்லையென்று அமைச்சரவர்கள் கூறினார்கள். நான் புகாரைப்பற்றிக் கேட்கவில்லை. ஜப்தி நடவடிக்கைகள் அந்தப் பகுதியிலே உண்மையிலே நடந்தது. ஆகவே, அதைப் பற்றித்தான் கேட்டிருந்தேன். ஆகவே, இன்றையதினம் அந்த விவசாயிகளுடைய கடன் வசூலுக்காக 15 நாளைக்கு ஒருமுறை ரிஜிஸ்தர் நோட்டீஸ் அனுப்புகிறார்கள். ரிஜிஸ்தர் நோட்டீஸ் அனுப்ப ரூ. 4, ரூ. 4.50 செலவு என்று அந்த விவசாயிகள்மீது சுமத்தப்படுகிறது. ஆகவே, அவைகள் கொஞ்சம் நிறுத்தி வைக்கப்பெற்று, நெடு கடந்த காலம் என்று சொல்லி இதற்கு ஓவர்டியூ வட்டி விதித்திருக்கிறார்கள். அந்த ஓவர்டியூ வட்டியையாவது ரத்து செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த 16-12-1978-ஆம் தேதியிலிருந்து ஜப்தி நடவடிக்கையைத்தான் நிறுத்தி வைத்திருக்கிறோமே தவிர, நியாயமாக விரும்பிக் கேட்கிற விவசாயிகளிடமிருந்து பெறுகின்ற அந்த முறையை நிறுத்தி வைக்கவில்லை. அந்த முறையில் சட்டபூர்வமான நடவடிக்கையை இன்று கூட்டுறவு துறை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, பழனி தாலூகாவில் கூட்டுறவு சங்கங்களில் 1978-79-ஆம் ஆண்டில் விவசாயிகளுக்குக் கொடுத்த மொத்தக் கடன் தொகை எவ்வளவு? அந்த ஆண்டிலே இதுகாறும் கடன் திரும்பப் பெறாமல் நிலுவையாக உள்ள தொகை எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 31—3—1979 வரை பழனி வட்டத்திலுள்ள 53 கிராமக் கூட்டுறவு சங்கங்களும் மதுரை மத்திய கூட்டுறவு வங்கிக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை 207.30 இலட்சம் ரூபாய். இதில், தவணை கடந்த பாக்கி 173.15 இலட்சம் ரூபாய். அப்படி பார்க்கின்ற பொழுது 85% தவணை கடந்த பாக்கியாக பழனி தாலூகாவில் மட்டும் மதுரை மத்திய கூட்டுறவு வங்கிக்கு இன்றையதினம் நிலுவை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, இந்தத் தவணை கடந்த பாக்கிகளைக்கூட கடந்த 3½ மாதமாக 16-12-1978 வதுநாளிலேயிருந்து ஜப்தி நடவடிக்கையோ, கெடுபிடி நடவடிக்கையோ பழனி தாலூகாவில் நிச்சயமாக எடுக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, கெடுபிடி வசூல் இல்லையென்று சொன்னதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஒவர்டியூ வட்டி என்பது இன்றையதினம் சந்து வட்டியைக் கூட தாண்டிவிட்டது. ஆகவே, கெடு கடந்த காலத்திற்கென்று விதிக்கக்கூடிய அதிக வட்டியை ரத்து செய்ய அரசு ஏதாவது யோசித்துள்ளதா என்பதை அறியவிரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே கூட்டுறவு மாளியத்தின் பொழுது இந்த மன்றத்திலே அரசு உறுதியளித்திருக்கிறது. இதற்காக நியமிக்கப்பட்டிருக்கிற விவசாய உயர் மட்டக் குழு, இதனையும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அதன் முடிவு வந்த பிறகு நிச்சயமாக இந்தத் தண்ட வரிப் பிரச்னை பற்றியும் மிகுந்த ஆழ்ந்த கவனத்தோடு இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேமிப்பு அறையுடன் கூடிய கிராமக் கூட்டுறவுச் சங்கக் கட்டிடங்கள்.

* வினா எண். 604—திரு. த. புஷ்பராஜ் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் உள்ள, கிராம கூட்டுறவு சங்கங்களில் எத்தனை சங்கங்களுக்கு சேமிப்பு அறையுடன் கூடிய அலுவலகக் கட்டிடம் உள்ளது?

(ஆ) ஏனைய கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மேற்படி வசதி செய்து தர எடுக்கப்பெற்ற நடவடிக்கை யாது?

[முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, (அ) தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராம கூட்டுறவு சங்கங்களில் 415 சங்கங்களுக்குச் சேமிப்பு அறையுடன் கூடிய அலுவலகக் கட்டிடம் உள்ளது.

(ஆ) ஏனைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு மேற்படி வசதி செய்து தர தற்போது இயலவில்லை என்றாலும் வேறு மாற்று வசதி செய்து தரப்படுகிறது.

திரு. வி. தொ. சின்னசாமி : தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் நிறைய கூட்டுறவு சங்கங்கள் அந்தச் சங்கத்தின் தலைவரின் இல்லங்களில், சொந்தமாக கட்டிடங்களில் வைத்து நடத்துகிறார்கள். ஆகவே, பொதுமக்கள் அங்கே போக அஞ்சப்படும் நிலை இருக்கிறது. ஆகவே, கூட்டுறவு சங்கத்திற்கு என்று தனிக் கட்டிடம் கட்டி, அங்கே இயங்க ஏற்பாடு செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. ஆகவே, அருள்கூர்ந்து உறுப்பினர் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. கெ. சொக்கலிங்கம் : தலைவர் அவர்களே, கிராமப்புற கூட்டுறவு சங்கங்களுக்குச் சொந்தமாகக் கட்டிடம் இல்லாத குறை நிறைய இருக்கிறது. அதைத்தான் திரு. சின்னசாமியும்

கேட்டார். ஆனால் நான் கேட்பது, அந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்கு அரசு மானியம் வழங்கப்படுகிறதா? அது எவ்வளவு வழங்கப்படுகிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, மூலக்கேள்வி எத்தனை நகைக் கடன்கள் கொடுக்கின்ற சங்கங்களுக்குள்ளில் சேமிப்பு அறையுடன் கூடிய அலுவலகக் கட்டிடம் உள்ளது என்பதாகும். எனவே மாண்புமிகு உறுப்பினர் தயவு செய்து தனிக்கேள்வி போட்டால் விவரங்கள் சேமித்து இந்த மன்றத்தில் வைக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நகை சேமிப்புள்ள கூட்டுறவு சங்கங்கள் கட்டிடங்கள் கட்டித்தர வேண்டும் என்று நீண்டகாலமாக கோரிக்கைகள் வந்தும் கூட இன்னும் அரசு அதற்கு அனுமதி அளிக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அந்தக் கோரிக்கை வைத்துள்ள நகை சேமிப்பு சங்கங்களுக்கு உடனடியாக கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்திலே இருக்கிற 4742 விவசாயக் கூட்டுறவு சங்கங்களில், 839 சங்கங்கள் மட்டுமே நகைக்கடன்கள் வழங்குகின்றன. அதிலும் இன்றைய தினம் 415 சங்கங்களில் மட்டுமே இந்த சேமிப்பு அறைகள் இருக்கின்றன. மிகுதி இருக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கு அரசு இன்று ஒரு மாற்று ஏற்பாடு செய்து இருக்கிறது. ஏற்கனவே நகைக் கடன்கள் வழங்கி வரும் மற்ற சங்கங்களுக்கும், நகைக் கடன்கள் புதிதாக வழங்க முன் வரும் சங்கங்களுக்கும், ஒரு சங்கத்திற்கு ரூ. 3,300 வீதம் இழுப்பறை, தராசு, எடைகளுடன் கூடிய சேமப் பெட்டி வாங்கும் பொருட்டு நிதியுதவி வழங்க தமிழ் நாடு அரசு திட்டமிட்டுள்ளது. 1978—79—ல் 150 சங்கங்களுக்கு ரூ. 5 லட்சம் கடனாக நிதியுதவி அளிக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்திட்டத்தின் கீழ் நடப்பு ஐந்தாண்டுத் திட்ட மத்தியில் சுமார் 1000 சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கற்குன்றுகள்

*வினா எண். 605— திரு. வி. சின்னய்யா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் 42 குவாரிகள் பல இலட்சக்கணக்கான குபாய்கள் அரசு வருவாய் இழந்து

1979 ஏப்ரல் 2]

வருவதும் மேற்படி குவாரிகள் கனிவளங்கள் சட்டத்திற்கு புறம்பாக ஒரு கிலோ சுரண்டலுக்கு ஆளாகி வருவதும் இந்த அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் முந்தைய புதுக்கோட்டை சமஸ்தானத்தினால் 41 கற்குன்றுகளில் கல்லுடைக்கும் உரிமையோடு திருகோகர்ணம் மற்றும் அடப்பைக்காரன் சத்திரத்தைச் சேர்ந்த 70 குடும்பங்களுக்கு மேற்படி ஊர்களில் உள்ள கோவில்களில் இறைபணி செய்வதற்கு ஈடாக மானியமாக அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இந்த மானியங்களை அரசு மேற்கொள்ள தகுந்த சட்டம் இயற்ற ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

புள்ளம்பாடி விவசாயத்திற்குக் கூடுதல் வரி

*வினா எண். 606—திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்குடியில் 22—1—1979 அன்று புள்ளம்பாடி வாய்க்கால் விவசாயிகள் 4,000 பேர் ஏக்கருக்குக் கூடுதலாக விதித்துள்ள வரியை ரத்து செய்யக் கோரி விவசாயிகள் பேரணி நடத்தியது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இதன் பேரில் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) விவசாயிகளின் கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமானூர் ஒன்றியத்தைச் சேர்ந்த கிராமங்களில் புள்ளம்பாடி வாய்க்கால் இரண்டாம் தர வாய்க்கால் என்ற அடிப்படையில் வரி வசூல் செய்யப்படுகிறது? அதை முதல் தர வாய்க்காலாக கட்டித் தரவேண்டும். மேலும், வரியைக் குறைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, அதைப் பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது. முதல் தரமான வாய்க்கால் தமிழ்நாட்டில் எங்கேயும் இல்லை.

முதல் தர வாய்க்கால் என்றால் ஆண்டு பூராவும் தண்ணீர் போகும் வாய்க்கால். இது இரண்டாம் தர வாய்க்காலாக இருக்கிறது. இதை மூன்றாம் தரம், நான்காம் தரம் என்று ஆக்கவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விட்டு இருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. த. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இது முதல்தரமான வாய்க்கால் இல்லை என்று சொல்கிறார்கள். நந்தியாறு வாய்க்கால், ஐயன்வாய்க்கால போன்ற இடங்களில் 11 மாதம் தண்ணீர் விடப்படுகிறது. ஆனால் புள்ளம்பாடியில் 4 மாதம் தான் தண்ணீர் விடப்படுகிறது. இதிலே 11 மாதத்திற்கு தண்ணீர் விட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற சட்டப்படி மேட்டூர் நீர்த்தேக்கத்தில் 94 அடி தண்ணீர் இருக்கிறபோதுதான் இதற்குத் தண்ணீர் விடவேண்டும் என்று சட்டம் இருக்கிறது. 94 அடி தண்ணீர் இருக்கிறபோது தண்ணீர் விடுகிறகாரணத்தால் இதை முதல் தரம் என்று ஆக்குவதற்கு இயலாது என்று கருதப்படுகிறது. இருந்தாலும் அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யும்.

திண்டுக்கல் பஞ்சாயத்து ஒன்றிய பள்ளிகளில் வழங்கப் பெற்ற மதிய உணவு

* வினா எண். 607—திரு. என். வரதராஜன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978 ஏப்ரல் 3-வது வாரத்தில் திண்டுக்கல் பஞ்சாயத்து ஒன்றியப் பள்ளிகளில் மதிய உணவு உட்கொண்ட குழந்தைகள் பாதிக்கப்பட்டு இருவர் மரணமடைந்தது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) & (ஆ) பள்ளி மதிய உணவு காரணமாக அக்குழந்தைகள் இறந்ததாகத் தெரியவில்லை. எனினும் மனிதாபிமான அடிப்படையில் அக்குழந்தைகளின் தந்தைக்கு முதலமைச்சர் அவர்கள் தமது திவாரண நிதியிலிருந்து ரூ. 2000 உதவிப் பணம் வழங்கியுள்ளார்.

1979 ஏப்ரல் 21

* வினா எண். 603 திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திண்டுக்கல் கள்ளாத்துப்பட்டியில் உள்ள பள்ளியில் புதிய உணவு விஷம் கலந்து விட்டதன் காரணமாக மாணவர்கள் இறந்தது உண்மையா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

பள்ளாட்டு திராவிட மொழியியல் நிறுவனத்திற்கு மானியம்.

* வினா எண். 609—திரு. எஸ். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள பன்னாட்டு திராவிட மொழியியல் நிறுவனத்திற்கு அரசு தொடர் செலவுகளுக்கும் தொடராச் செலவுகளுக்கும் மானியங்கள் வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) திருவனந்தபுரத்திலுள்ள பன்னாட்டு திராவிட மொழியியல் பள்ளிக்கு 1978-79-ம் ஆண்டு முதல் ஆண்டொன்றுக்கு ரூ. 1.76 இலட்சம் வீதம் ஐந்து ஆண்டுகளுக்கு தொடர் மானியமாக ஐந்தாண்டுத் திட்டப் பணிகளுக்காக அரசு ஒப்பளிப்புச் செய்துள்ளதுடன், தமிழ் இலக்கணப் பெரியார் தொல்காப்பியர் பெயரில் ஒரு கட்டடம் கட்டும் வகைக்காக தொடராச் செலவினமாக ரூ. 4.71 இலட்சம் வழங்கு வதற்கும் அரசு ஒப்புக்கொண்டு, இத்தொடரா மானியத்தில் முதற் தவணையாக ரூ. 1 இலட்சம் வழங்க ஆணையிட்டுள்ளது. மீதித் தொகை கட்டடம் கட்டுமானப் பணி முடியக்கூடிய நிலையில் இரண்டு சம தவணைகளில் வழங்கப்படும்.

உள்ளாட்சி மன்றங்கள் உள்ள கட்டடங்கள்.

* வினா எண். 610 — திரு. எஸ். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) உள்ளாட்சி மன்றப் பகுதிகளில் அமைந்துள்ள கட்டடங்கள் இடிக்கப்படுவது பற்றிய தாக்கீது ஏதேனும் உள்ளாட்சி மன்றங்களுக்கு அண்மையில் அனுப்பப்பெற்றதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

ஊராட்சி ஒன்றிய டிராக்டர் ஓட்டுநர்களுக்கு வழங்கப்படும் ஊதியம்

* வினா எண். 611—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றிய டிராக்டர்கள் ஓடாத காலங்களிலும் பழுதுபார்க்க விடப்படும் காலங்களிலும் அவற்றின் டிரைவர்களுக்கு கொடுக்கப்படும் ஊதியங்கள் தலைதிக் கணக்கு தணிக்கையில் ஆட்சேபிக்கப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம்.

(ஆ) 60 நாட்களுக்கு மேல் டிராக்டர் பணியின்றி இருந்தாலோ அல்லது பணிமனையில் இருக்க நேரிட்டாலோ அதனை உடனடியாக ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு தெரிவித்து உரிய ஆணைகள் பெற்று தணிக்கை தடைகள் எழாவண்ணம் பார்த்துக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றிய டிராக்டர்கள் பணியில் இல்லாது 60 நாளைக்கு மேல் இருக்கக் கூடாது என்று ஆணையிட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்த இடைக் காலத்தில், அந்த ஊராட்சி ஒன்றியத்தில் ஓட்டுநராக பணியாற்றுபவர்களுக்கு ஊதியம் கொடுக்கக்கூடாது என்று தணிக்கை அதிகாரிகள் ஆட்சேபம் தெரிவித்து இருப்பதாகத் தெரிகிறது. அதைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஆட்சேபணை செய்து, அதன் மூலம் சம்பளம் பிடித்தம் செய்வதாக தலைமை உள்ளாட்சிக் கணக்காய்வாளர் கூறியிருக்கிறார்.

1979 ஏப்ரல் 2]

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய டிராக்டர்களை சம்பந்தமான கேள்வி இது என்று சொல்லி, தாவு செய்து அமைச்சர் தவிர்க்கேள்வி போடுங்கள் என்று சொல்லிவிடக்கூடாது. பழனி தாலுக்காவில் மொத்தம் 3-4 பழுதடைந்து கிடக்கிறது. அதற்கு கிட்டத்தட்ட 85,000 ரூபாய் இதுவரையில் செலவிடப்பட்டு இருக்கிறது 3 ஆண்டுகளாக எந்த விதமான பிரயோசனமும் இல்லாமல் இருக்கிறது. அந்த இயக்குனரையும்—டிரைவரையும் வேலையை விட்டு நீக்கிவிட்டார்கள். இது சம்பந்தமாக நான் அரசாங்கத்திற்கு ஏற்கனவே புகார் அனுப்பி இருந்தேன். இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது சம்பந்தமாக அமைச்சர் விளக்கம் அளிப்பாரா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதைப்பற்றிய தகவல் இல்லை. ஆனால் நிச்சயமாக அரசு கவனிக்கும்.

நகராட்சிகளில் சொத்து வரி.

*வினா எண். 612 — திரு. கு. ரமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள நகராட்சிகளில் சொத்து வரி உயர்த்துவதை நிறுத்தி வைக்க அரசு உத்தரவிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு காலம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம்.

(ஆ) மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்கள் பொறுப்பேற்கும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, தன் அதிகாரியின் ஆட்சியின் கீழ் இருக்கும்படியான நகராட்சிகளில் 3 மடங்கு, 4 மடங்கு, 5 மடங்கு கூட வரி உயர்த்தப்பட்டுள்ள விவரங்கள் குறித்து மக்களிடமிருந்து ஏராளமான ரிப்போர்ட்டுகள், குறிப்பாக கோவை நகராட்சி மன்றத்தில் இருந்து அப்படிப்பட்ட ரிப்போர்ட்டுகள் அரசுக்கு வந்துள்ளதா? அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அங்கே அதை வசூலிப்பதற்கு நிர்ப்பந்தம் செய்வது அரசுக்குத் தெரியுமா?

[1979 ஏப்ரல் 2

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்தப் புகாரின் அடிப்படையில் தான் நிறுத்தி வைக்கப்பட்டது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் மற்றொரு புகார் அதன் அடிப்படையில் எழுப்பியிருக்கிறார்கள். அது உண்மையாக இருக்கிறதானால் உரிய நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, நகராட்சிகளில் விதிக்கப்படுகிற வரி நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பேரூராட்சியில் இது போன்ற வரி உயர்வு செய்வது சட்ட விரோதம் என ஆட்சேபித்து அரூர் பேரூராட்சியில் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து உண்ணாவிரதம் இருந்தார்கள். அதை நிறுத்தி வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பொதுவாக 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை வரி உயர்வு செய்து, அதன் மூலம் வரி உயர்த்தப்பட்டு இருக்குமானால், அப்படிப்பட்ட உயர்வினை மக்கள் மன்றம் ஏற்றுக் கொள்ளும் வரையில் நிறுத்தி வைக்க முயற்சிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

[முற்பகல் 10-00]

திரு. யா. ஷை. மு. யூசுப் : தலைவரவர்களே, ஊராட்சிகளுக்கு வரி விதிக்கின்ற நேரத்திலே தனி அதிகாரிகள்தான் இந்த வரியை நிர்ணயம் செய்கிறார்கள். அப்பீல் செய்வதற்குக் கூட இடம் இல்லாத வகையில் நிலைமை இருக்கிறது. நகராட்சிகளில் உள்ளது போன்ற அப்பீல் முறையை ஊராட்சிகளுக்கும் கொண்டுவர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அவர் ஆண்டுக்கு ஒருமுறை புதிய வரிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. வாடகை அடிப்படையிலும், சொத்து மதிப்பின் அடிப்படையிலும் வரி விதிக்கிறார்கள். வரிவிதிப்பு முறைகளை அரசு உன்னிப்பாக கவனித்து வருகிறது.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, நகராட்சிகள் சொந்த வீடுகளுக்கு விதிக்கின்ற வரியானது வாடகை வீடுகளுக்கு விதிக்கின்ற அடிப்படையில் பல மடங்கு அதிகமாக விதிக்கப்படுகிறது. இது அரசுக்குத் தெரியுமா? இந்தக் குறைபாடுகளை "ரிவிஷன் ஆபீஸர்" என்கின்ற முறையிலே தனி அதிகாரிகள்தான் விதிக்கிறார்கள். இந்த சொத்து வரி உயர்வினை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

1975 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் மன்றம் அமைக்கப்பட்ட பிறகு இதுபற்றி அரசு விரிவாகப் பரிசீலித்தும்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவரவர்களே, கோவை நகராட்சியிலே விதிக்கின்ற வரி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்களிடமிருந்து செய்தி வந்தது. கோவை நகரிலே இருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர்களுடைய ஆலோசனைகளைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு சரியான அடிப்படையில் வரிவிதிக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா? அல்லது அதற்குப் பதிலாக தனி அதிகாரிகளுடைய ஆலோசனையை மட்டும்தான் கணக்கில் எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, தனி அதிகாரி தருகின்ற தகவல், அனைத்துக் கட்சியினர் விடுக்கின்ற வேண்டுகோள் இவைகளை எல்லாம் பரிசீலித்துத்தான் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 613—619 நாளைய தினம் எடுத்துக் கொள்ளப்பெறும். வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறியிடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தன்விளை விளக்கம்.

உறுப்பினர் திரு என். கிட்டப்பா அனுமதி கோரல்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, என்னைப்பற்றி ஒரு தன்விளை விளக்கம் அளிக்க தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் எழுத்து மூலமாக எழுதித் தாருங்கள். நான் அதைப் பரிசீலனை செய்து என் முடிவைத் தெரிவிக்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: மிக்க நன்றி.

(3) உரிமைப் பிரச்னை.

முரசொலி, அலலஒசை, கிலகரன் நாளேடுகள் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் 184—ஆ விதியின் கீழ், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். மணியாறன், திரு. மு. அ. செங்கோட்டையன் மற்றும் டாக்டர் கே. சுப்ரசப

ஆகியோர் அவை உரிமைமீறல் குறித்த ஒரு பிரச்சனையை அவையில் எழுப்ப அனுமதி கேட்டுள்ளனர். அதற்கான அனுமதி அளிக்கப்படுகிறது. யாராவது ஒருவர் இப்பிரச்சனையை எழுப்பலாம். திரு. ஆர். மணிமாறன்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, கடந்த 26.3.1979-ம் தேதி அன்றைக்கு இந்தப் பேரவையின் நடவடிக்கைகளின்போது பல்வேறு விவாதங்கள் எழுப்பப்பட்டன. அந்த விவாதங்களின்போது மாண்புமிகு அவைத் தலைவரவர்கள் சில தீர்ப்பினை வெளியிட்டு அவைக்குறிப்பில் இந்த நிகழ்ச்சிகள் இடம் பெறக்கூடாது என்று அவையிலே தெரிவித்ததற்குப் பின்னாலும் கூட முரசொலி, அலைஓசை, தினகரன் போன்ற பத்திரிகைகள் அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்பட வேண்டுமென்ற அந்த உத்தரவை, தாங்கள் அளித்த அந்த உத்தரவிற்குக் கட்டுப்படாமல், அந்தக் கட்டளையை ஏற்றுக் கொள்ளாமல் இட்டுக்கட்டி தலைப்புப்போட்டு மேற்சொன்ன பத்திரிகைகள் 26-3-79ம் தேதி அன்றைக்கு வெளியிடப்பட்ட 'அலைஓசை' பத்திரிகையிலேயும், 27-3-79-ம் நாள் வெளியிடப்பட்ட 'முரசொலி' பத்திரிகையிலேயும், 'தினகரன்' பத்திரிகையிலேயும் அவற்றை வெளியிட்டு இருப்பது அவை உரிமையை மீறிய செயல் என்று நான் கருதி இந்த உரிமைப் பிரச்னையை அந்தப் பத்திரிகைகள் மீது நான் கொண்டு வந்து இருக்கிறேன் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீண்ட பாரம்பரியத்திற்குச் சொந்தமாக்கப்பட்ட இந்த அவையின் மரபுகளை உடைத்து எறிகின்ற அளவிலே அவைக்கு மாசு கற்பிக்க வேண்டுமென்று குறுகிய எல்லைக் கோட்டுக்குள்ளே நின்று கொண்டு இத்தகைய செய்திகளைப் பிரசுரிப்பதைக் காண்கின்றபோது பத்திரிகை தர்மத்தின் குரல் வளையை நெறிப்பதாகக் கருதுவதால்தான் நான் இந்த உரிமை மீறல் பிரச்சனையை இன்றைக்குக் கொண்டு வந்து இருக்கிறேன் என்பதை மாண்புமிகு அவைத்தலைவராகிய உங்கள் முன்னால் இந்த மாமன்றத்திலே நான் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். பாரம்பரியம் மிக்க இந்த சபையை மாசுபடுத்துவதாக அந்தப் பத்திரிகைகளின் நடவடிக்கை இருக்கிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் பிரச்சனை என்ன என்பதை மட்டும் சுருக்கமாகச் சொல்லிவிட்டு அமருங்கள், மற்றவைகளைப்பற்றி நீங்கள் விளக்கத் தேவை இல்லை.

1979 ஏப்ரல் 2]

திரு. ஆர். மணிமாறன் : தாங்கள் அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பில் இடம் பெறக்கூடாது என்று தீர்ப்பளித்திருக்கிறீர்கள். அதற்குப் பின்னாலும் அந்த நிகழ்ச்சியை * * * என்று தலைப்பிட்டு அலை ஓசை பத்திரிகையிலும், முரசொலி பத்திரிகையிலும், தினகரன் பத்திரிகையிலும் அந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள்.

தாங்கள் தீர்ப்பளித்திருக்கிறீர்கள். இருந்தாலும் கூட அதை பிரசுரித்து இருப்பது அவை உரிமையை மீறிய செயலாகும். ஆகவே, இதை உரிமைக் குழுவிற்கு விட வேண்டுமென்று தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. நடராசன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'சிரோ அவரில்' பாயின்ட் ஆப் ஆர்டர் முன்வரிசையில் இருக்கக்கூடிய கட்சித் தலைவர்கள் தான் கேட்கலாம் என்ற மரபை ஏற்படுத்தியிருக்கிறோம். தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள்.

திரு. மணிமாறன் அவர்கள் பேசும்போது * * என்று சொன்னதை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

இங்கே எழுப்பப்பட்டிருக்கிற பிரச்சனை பத்திரிகைகளைப் பற்றியதாக இருப்பதால், சம்பந்தப்பட்ட பத்திரிகைகளிடம் விளக்கம் கேட்டு, பின்னால் என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன்.

(4) ஒழுங்குப் பிரச்னை.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகளை எடுத்துக் கொள்ளாதது குறித்து:

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, நான் மாண்புமிகு முதலமைச்சர் மீது கொண்டு வந்திருக்கிற உரிமைப் பிரச்சனையை தாங்கள் இன்று எடுத்துக் கொள்வதாகச் சொன்னீர்கள். ஆனால் இன்றைக்கும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அறையிலேயே தங்களுக்கு நிலைமையை விளக்கினேன். அதை ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்பினேன். ஆனால் நீங்கள் மீண்டும் அதைப்பற்றி அவையிலே எழுப்புகிறீர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உடல்நிலை சரியில்லை.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேரவைத் தலைவர்] [1979 ஏப்ரல் 2

* * * அதைப்பற்றி தங்களுக்குத் தெரிவித்தேன். அவர்கள் வந்த பிறகு தங்களுடைய உரிமைப் பிரச்சனையை எடுத்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : இங்கே எழுப்பப்பட்ட பிரிவிலேஜ் மோஷனில் சில வார்த்தைகளை எடுத்துவிட வேண்டுமென்று சொன்னீர்கள். அந்த வார்த்தைகளை எடுத்துவிட்டால் பிரிவிலேஜ்மோஷன் கொடுத்ததற்கான பேசிஸ் இல்லாமல் போய்விடும். ஆகவே, அது ரெக்கார்டில் இருந்தால்தான் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது ஏற்கெனவே நீக்கப்பட்ட வார்த்தைகள். அந்த வார்த்தைகளை மீண்டும் பிரசுரிப்பது நல்லதல்ல. என்னிடத்தில் விளக்கங்கள் வந்திருக்கின்றன. என்னிடம் இருக்கின்ற குறிப்பில் எல்லா விவரமும் இருக்கிறது. அதனால்தான் ஏற்கெனவே நீக்கப்பட்ட வார்த்தைகளை மீண்டும் பத்திரிகைகளில் வெளியிட வேண்டாம் என்று உத்தரவிட்டிருக்கிறேன். *** வேண்டுமானால் 'முதலமைச்சருக்கு உடல்நிலை சரியில்லை, அதனால் அவைக்கு வரவில்லை, வந்த பிறகு எடுத்துக்கொள்கிறேன்' என்ற பகுதி மட்டும் குறிப்பில் இருக்கட்டும்; மற்றப் பகுதிகளை எல்லாம் நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். நான் கொடுத்திருந்த உரிமைப் பிரச்சனையை இன்றைக்கு எடுத்துக் கொள்வதாக தாங்கள் சொன்னீர்கள். எனக்குப் பின்னால் கொடுக்கப்பட்ட உரிமைப் பிரச்சனைகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஒருவேளை எனக்கு உரிமைப் பிரச்சனை எழுப்ப உரிமை இல்லையோ என்று நான் கருதுகிறேன். என்ன காரணத்தால் இன்றைக்கு என்னுடைய உரிமைப் பிரச்சனை எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் அப்படிச் சொல்வது சரியல்ல. தங்களால் கொடுக்கப்பட்ட எத்தனை உரிமைப் பிரச்சனைகள், எத்தனை ஒத்திவைப்புத் தீர்மானங்கள், எத்தனை கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. என்பதை விளக்கத்தோடு என்னால் சொல்ல முடியும். ஆகவே, உரிமை இல்லையா என்று கேட்பது சரியல்ல. அது ஆப்பில் இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(5). அறிக்கை அளித்தல்

பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் சார்பாக கீழ்க்கண்ட அறிக்கைகளை அவைக்கு அளிக்கிறேன்:

(1) 1973-74 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் தமிழ்நாடு அரசின் வணிகத் துறைகள் பற்றிய அறிக்கையின் மீதான ஏழாவது அறிக்கை.

(2) 1973-74 ஆம் ஆண்டிற்கான வணிகத்துறை அல்லாத துறைகள் பற்றிய இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையின்மீதான எட்டாவது அறிக்கை.

[முற்பகல் 10-10]

(6). குறுகிய கால விவாதம்

மண்ணெண்ணெய் பற்றாக்குறை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து குறுகிய கால விவாதம். இதிலே எல்லா கட்சித் தலைவர்களையும் நான் கேட்டுக் கொள்வது கட்சிக்கு ஒருவராகப் பேசி ஒரு மணி நேரத்திற்குள் அமைச்சரின் பதிலோடு முடிவடையவேண்டும். ஆகவே ஒவ்வொரு கட்சியிலே இருந்து தாங்களாகவே ஒருவரைச் சொன்னால் நல்லது. அதை வைத்துத்தான் நான் முடிவெடுக்க முடியும்.

பேரவையின் 57-வது விதியின் கீழ் அறிவிப்பு கொடுத்துள்ள மாண்புமிகு உறுப்பினர்களைத் தவிர, இப்பிரச்சனை குறித்து பேரவையின் 41 மற்றும் 42-வது விதிகளின் கீழ் பல்வேறு உறுப்பினர்களிடமிருந்து அறிவிப்புக்கள் வந்துள்ளன. பேரவையின் 57—வது விதியின் கீழ் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள இருப்பதால் 41 மற்றும் 42-வது விதிகளின் கீழ் கொடுக்கப்பட்ட அறிவிப்புக்கள் எடுத்துக்கொள்ளப் படவில்லை. ஆயினும் இப்பிரச்சனையில் அந்த உறுப்பினர்களும் அக்கறை எடுத்துக் கொண்டுள்ளார்கள் என்பதைத் தெரிவிக்கும் வகையில் அவர்களது பெயரைப் படித்துவிட விரும்புகிறேன். திரு. மு. அம்பிகாபதி, திரு. கி. ஆறுமுகம், திரு. வி. கே. ராஜு, திரு. மா. மணியாறன், திரு. கே. பண்ணை சேதுராம், திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா, திரு. ப. பொன்னுரங்கம், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம், திரு. செ. இராமலிங்கம், திரு. கூ. ச. முருகேசன், திரு. அ. செல்லப்பா, திரு. க. மருதாசலம்,

திரு. கா. செங்கோடன், திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. பி. சொரணம், திரு. டி. ஞானசிகாமணி, திரு. கு. ரமணி, திரு. வி. கே. தோதண்டராமன், திரு. ரெ. வி. சுவந்திரராஜன், திரு. மு. ஆறுமுகம், திரு. கெ. சொக்கலிங்கம், திரு. அ. ரகுமான்கான். இந்தத் தீர்மானத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் ஒரு மணி, எனவே, கட்சிக்கு ஒருவர் பேசினால் போதும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தின் மீது விவாதிப்பதற்கு ஒரு மணி நேரம் ஒதுக்கி இருக்கிறீர்களே, என்னுடைய பதிலுரைக்கும் சேர்த்தா அந்த ஒரு மணி நேரம் என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்களுடைய பதிலும் சேர்த்துத்தான். அமைச்சருக்கு 15 நிமிடம், மற்ற உறுப்பினர்களுக்கு ஐந்தைந்து நிமிடங்கள்.

*திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, கடந்த ஒரு மாத காலமாக மண்ணெண்ணெய் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் மத்திய அரசு வரி விதிப்பதுதான் என்று சொல்லப்படுகிறது. வரி என்றாலே பொருட்கள் மாயமாக மறைந்துவிடுவது சர்வசாதாரணமாக ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது. அதைப் போல் சாதாரணமாக கடைகளிலே கிடைத்த மண்ணெண்ணெய் இப்போது கிடைப்பதில்லை. இந்த ஏப்ரல் மாத வெயிலிலே மக்கள் நீண்ட க்யூ வரிசையிலே மண்ணெண்ணெய் கிடைக்காமல் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை வரக்கூடாது என்பதற்காக பலமுறை இந்த சட்டமன்றத்திலே விதி 42-ன் கீழும், விதி 41-ன் கீழும் எடுத்துச் சொல்லி இருந்தாலும் கூட இந்தப் பிரச்சனை இன்றைக்குத்தான் இங்கே வருகிறது. ஆகவே இந்த அளவுக்காவது இதனை இங்கே எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மண்ணெண்ணெய் இல்லாவிட்டால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. சிறு சிறு குடும்பங்கள், ஏழைக் குடும்பங்கள் மண்ணெண்ணெய் கிடைக்காத காரணத்தினால் அவர்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்ட நிலையிலே இருக்கிறார்கள். அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படுகிறது என்று சொன்னால் தமிழகத்திலே உள்ள மெஜாரிட்டி மக்களின் வாழ்க்கையே பாதிக்கப்படுகிறது. ஆகவே இதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும், இந்த மண்ணெண்ணெய் மிக அத்தியாவசியமான பொருள். ஆகவே கடந்த ஒரு மாத காலமாக இதற்கு ஏற்பாடுகள் செய்யாவிட்டால் இப

1979 ஏப்ரல் 2] [திரு. டி. சி. சிவசாமி]

போதாவது உடனடியாக தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். ஒரு மாதகாலமாக அதாவது இன்று வரைக்கும் சரியான முறையிலே நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு இந்தச் சபைக்கு நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்தமாதிரி அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காத போது மத்திய அரசுதான் காரணம் என்று பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல், ஏனோதானோ என்று இருந்துவிடாமல் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே பாதிக்கப்படுவது தமிழ்நாட்டு மக்கள்தான். மத்திய அரசு வரி போட்டதன் காரணமாகத்தான் மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்று சொல்லக்கூடாது. சரியான விநியோகம் நடைபெறாமல் இருப்பதற்கும் மத்திய அரசுதான் காரணம் என்று அவர்கள்மீது பழியைப் போட்டுக் கொண்டிருக்கக் கூடாது, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் மண்ணெண்ணெய் சப்ளை செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் அங்கே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிடம் சென்று கேட்கக்கூடிய காலத்திலே தமிழக அரசிடமிருந்து எந்தவிதமான கோரிக்கையும் எங்களுக்கு வரவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே நீங்கள் எவ்வளவு சீக்கிரத்தில் இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கப் போகிறீர்கள் என்பதை இந்த சபைக்குச் சொல்லியாகவேண்டும்.

அது மட்டுமல்ல, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனிடத்தில் போய் கேட்கக் கூடிய நேரத்தில் அவர்கள் சொல்லுகிறார்கள், எங்களுடைய ஸ்டாக்கைப்பற்றி மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இன்னும் தெளிவுபடுத்தவில்லை. அதன் காரணமாகத்தான் இன்னும் சரியாக சப்ளை செய்ய முடியவில்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் இங்கு இருக்கக்கூடிய அமைச்சர்களும் அதிகாரிகளும் பற்றாக்குறை இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இதன் காரணமாக இன்றைக்கு தமிழகம் முழுவதும் மண்ணெண்ணெய் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றி பல தடவை எடுத்துச்சொல்லியும் கூட அரசு சரியான முறையில் கவனம் செலுத்தவில்லை. ஏனென்றால், நாம் எல்லாம் இங்கு ஸ்பானின் அடியில் இருந்து கொண்டிருக்கிறோம். இது கூட உஷ்ணமாக இருக்கிறது என்று சொல்லி, ஏ.ஸி. ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அறையில் போய் உட்கார்ந்து கொள்கிறோம். இப்படிப்பட்ட இந்த ஏப்ரல் மாத வெயிலில் மக்கள் க்யூ வரிசையில் நின்று சிலர் மண்ணெண்ணெய் வாங்குகிறார்கள், பலர் வாங்காமல் திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் இப்போது ஒரு பரிதாபகரமான நிலைமை இருக்கிறது, சென்னை நகரிலும் அதே நிலைமைதான், கிராமங்களில் விளக்கு எரிக்க முடியவில்லை, சாப்பாடு இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இதையெல்லாம் உடனடியாகத் தீர்ப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[1979 ஏப்ரல் 2

*திரு. துவரை முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மண்ணெண்ணெய்க்கும் டீசல் ஆயிலுக்கும் என் தட்டுப்பாடு ஏற்பட்டது என்பதை இதற்கு முன் அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். நமக்கு ஜனவரி மாதத்தில் வரவேண்டிய கோட்டா குறைந்ததின் விளைவாகவும், மத்திய அரசு போட்ட வரியின் காரணமாகவும், பதுக்கல்காரர்கள் பதுக்கி வைத்துக்கொண்டதன் காரணமாகவும் தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இந்த வகையில் மாநிலத்திற்கு கிடைக்க வேண்டிய கோட்டாவை மத்திய அரசிடமிருந்து தட்டிக் கேட்கின்ற வகையில் இந்தச் சட்டப்பேரவையானது எடுத்துச் சொல்லியிருக்கிறது. இதில் தமிழகத்திலுள்ள அனைத்து கட்சிகளிலுள்ளவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கிராமங்களில் உள்ள வீடுகளில் விளக்கு எரியவில்லை, நகரங்களிலுள்ள கஷ்டத்தை சொல்ல வேண்டியதில்லை. நகரத்தில் கரி, கியாஸ், போன்றவற்றின் விலை எல்லாம் அதிகமாகிக்கொண்டிருக்கிறது, இன்னும் கொஞ்சநாள் போனால் இதுவே கிடைக்காது என்ற நிலைமை வந்து சேரும். இந்த நிலையில் மக்கள் க்யூ வரிசையில் காலையிலிருந்து மாலை வரை நிற்கிறார்கள். சிலருக்கு கிடைக்கிறது, சிலருக்கு கிடைப்பதில்லை. போலீஸ் பாதுகாப்பு கூட போட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசு மாநிலத்திற்கு தரவேண்டிய மண்ணெண்ணெய்யையும் டீசலையும் தரவில்லை என்று சொன்னார்கள். இந்த தட்டுப்பாட்டுக்கு மத்திய அரசாக இருந்தாலும் சரி, மாநில அரசாக இருந்தாலும் சரி, ஒன்றில் 'வால்பேல்' பாலிஸி மாதிரி தூங்கிக் கொண்டிருக்க வேண்டும், அல்லது நேருவின் பாலிஸி மாதிரி உணர்வை தட்டி எழுப்பி உணர்ச்சியை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இரண்டும் இல்லாத நிலையில், இரண்டும் கெட்டான் நிலையில், திரிசங்கு சொர்க்கத்தில் இருந்து கொண்டு இருக்கக்கூடாது. இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், வரி போட்டதின் காரணமாக இந்த தட்டுப்பாடு வரும் என்று சொன்ன நேரத்தில் இதையெல்லாம் அலட்சியம் செய்ததின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு பதுக்கல் செய்து வைத்துக்கொண்டு அதிகமான விலைக்கு விற்பவர்கள் மீது கடுமையான தண்டனையை கொடுப்பதற்கு அரசு முன் வரவேண்டும். கடுமையான தண்டனையை கொடுப்பதற்கு வேண்டிய சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அதற்கு மேலாக, மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு மண்ணெண்ணெய் டீசல் போன்றவைகளுக்கு கோட்டாவை குறைத்திருக்கிறார்கள். ஒரு கண்ணுக்கு சுண்ணாம்பும், ஒரு கண்ணுக்கு வெண்ணெய்யும் வைக்கின்ற நிலை தான் இருக்கிறது. இங்கு இருக்கின்ற அனைத்துக் கட்சியினருக்கும் இந்தத் தட்டுப்பாடு இருக்கிறது. கிராமங்கள் எல்லாம் இருளில் மூழ்கிக் கிடக்கின்றது. நகரத்திலுள்ளவர்களும் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இங்கு அனைத்து கட்சிகளும் சேர்ந்து ஒரு தீர்மானம் போட்டு மத்திய அரசுக்கு அனுப்பி மாநிலத்திற்கு உரிய கோட்டாவை தரவேண்டும், விலையைக் குறைக்க வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்த வேண்டும்.

அதற்குமேல் இதை அலட்சியமாக, சர்வசாதாரணமாக நினைக்கு மானால், மக்கள் இப்போது ஏதோ பொறுத்துக்கொண்டிருக் கிறார்கள், இது தொடர்ந்து கொண்டிருக்குமானால், இதற்கு முன்பாக, அண்ணாத்துரையின் அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் எதிர்கட்சியாக இருந்தபோது எம். எல். ஏ.க்கள், எம். பி.க்கள் வீடுகள் முன்னால் சென்று ராஜிநாமா செய்யவேண்டும் என எப்படிச் சொன்னார்களோ, அது போல், இப்போதுள்ள எல்லா எம். எல். ஏ.க்கள், எம். பி. க்கள் வீடுகளிலும் சென்று உங்கள் பதவியை ராஜிநாமா செய்யுங்கள் என்று சொல்வதற்காக மக்கள் ஊர்வலமாக வரப்போவதாகக் கேள்வி. இப்படிப்பட்ட போராட்டத்தில் தாய்மார்களும் கலந்து கொள்ளப்போவதாகக் கேள்விப்படுகிறேன். இப்படிப்பட்ட நிலைமையை தயவு செய்து உருவாக்கவேண்டாம். நல்ல முடிவுகளை எடுத்து மத்திய அரசுக்கு நாம் ஒரே குரலாக எடுத்துச்சொல்லி, குறைந்த விலை யில் தட்டுப்பாடில்லாமல் மண்ணெண்ணெய் கொடுக்கவேண்டும் எல்லா இடங்களிலும்—இப்போது கிராமங்களில் இரண்டு லிட்டர் என்று சொல்லுகிறார்கள், ஆனால் அரை லிட்டர்தான் கொடுக் கிறார்கள், நகரங்களில் நான்கு லிட்டர் என்று சொல்லுகிறார்கள் ஆனால் 3½ லிட்டர், 3½ லிட்டர் என்றுதான் கொடுத்துவருகிறார் கள். இப்படிப்பட்ட அவல நிலையைப் போக்குகின்ற நிலையில் முடிவு எடுக்கவேண்டும். அதற்கான வகையில் நாம் ஏகோபித்த ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொண்டு, அமருகிறேன்.

[முற்பகல் 10-20]

*திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மிகவும் நெருக்கடி யான ஒரு சூழ்நிலைமையை இந்த மண்ணெண்ணெய் பற்றாக் குறை ஏற்படுத்தியுள்ளது. மண்ணெண்ணெய் ஏதோ ஈரான் நாட்டிலே இருந்து நம்முடைய நாட்டிற்கு இறக்குமதியில் கொஞ்சம் தடை ஏற்பட்டிருக்கிறது. இரண்டாவதாக, மத்திய சர்க்கார் இந்த மாநிலத்திற்கு கொடுத்துக் கொண் டிருந்த மண்ணெண்ணெயின் அளவு ஒரளவு குறைந்திருக்கிறது என்று தெரிந்தவுடன், பதுக்கல்காரர்கள் மண்ணெண்ணெய்யைப் பதுக்கி, மக்களுக்கு தொந்தரவுகளைக் கொடுத்து, மக்களை பயங்கரமான கஷ்டத்திற்கு ஆளாக்கியிருக்கிறார்கள். தாய்மார்களும், குழந்தைகளும் நீண்ட க்யூவிலே நின்று கொண்டு, நெருக்கடி ஏற்பட்டு, உதாரணமாக அந்த நெருக்கடியைத் தடுப்பதற்காக போலீசும் நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. வண்டிக்காரர்கள் வீடுவீடாக, தெருத்தெருவாக வீட்டிலே கொண்டுவந்து கொடுத்துக் கொண்டிருந்த நிலைமை மாறி, அவர்களுக்கு வேலை இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. காரணம், அவர்களுக்கு

சப்ளை செய்ய முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு மண்ணெண்ணெய் கொடுப்பதில்லை. ஆகவே, முதல் தரமாக அத்தனை மக்களையும் தெருவிலே இழுத்துக் கொண்டுவந்து நிறுத்தக்கூடிய ஒரு சூழ்நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வீடுவீடாக தெருத்தெருவாக விநியோகம் செய்ய ஒரு ஸ்கீமை உருவாக்கி உதவ வேண்டும். இல்லையென்றால், பொது மக்களே சேர்ந்து ஒரு பெரும் போராட்டத்திலே இறங்கக் கூடிய ஒரு சூழ்நிலைமை ஏற்பட்டால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஆகவே, இந்த கியூ வரிசை இல்லாமல். பொது மக்களுக்கு வீடு வீடாக சப்ளை செய்வதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். ஒரு கார்டு சிஸ்டத்தை உருவாக்கி, சகல மக்களுக்கும் மண்ணெண்ணெய் முழுமையாக வழங்கப்பட ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் எந்த அளவுக்கு ஏற்கனவே உபயோகித்து வந்தார்களோ அந்த அளவுக்கு அவர்களுக்கு மண்ணெண்ணெய் கிடைக்கவேண்டும். விறகு விலையும் பயங்கரமாக ஏறிவிட்டதால், நகரங்களில் சாதாரண வீடுகளில் மண்ணெண்ணெய் பயன்படுத்தினால் செலவு குறைவாகும் என்று சாதாரண குடும்பங்கள்கூட மண்ணெண்ணெய்யைக் கொண்டு சமையல் செய்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இப்போது ஒரு குடும்பத்திற்கு 2, 4 லிட்டர்கள் கிடைத்தால்தான் அவர்கள் சமையல் செய்து சாப்பிட முடியும். இந்தத் தட்டுப்பாட்டினால் விறகு விலையும் ஏறி, அவர்களால் இன்றைக்கு விறகு வாங்க முடியவில்லை. அப்படி வாங்குவதற்கு அவர்களுக்கு கட்டுப்படியாகவில்லை. ஆகவே, அவர்கள் ஏற்கனவே உபயோகித்து வந்த அளவுக்கு மண்ணெண்ணெய் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். இப்படிச் சொல்வதால், அவர்களுக்கு அளவுகள் குறைக்கப்படாமல் கிடைக்க வழி செய்ய வேண்டுமென்பதே பொருள். தெருத்தெருவாக வீடு வீடாக சப்ளை செய்ய ஏற்பாடு செய்யும்போது அதைக் கண்காணிப்பதற்காக அந்தந்த வார்டுகளிலே ஒரு மக்கள் கமிட்டியோ அல்லது ஒரு குறிப்பிட்ட குழுவின் மூலமாகவோ இதைச் சமாளிக்கலாம்.

அடுத்து, விலை சம்பந்தப்பட்டமட்டிலும் விலை ஏறிக் கொண்டே போய்க் கொண்டிருக்கிறது. அதைத் தடுக்க முடியவில்லை, எந்த அதிகாரி சொன்னாலும் கேட்பதில்லை. மத்திய அமைச்சர் பகுகுணா அவர்கள்கூட இதுபற்றி சொல்லுகின்ற நேரத்தில், நிச்சயமாக மண்ணெண்ணெயின் விலையை உயர்த்தக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் காதில் வாங்கியதாகத் தெரியவில்லை. எனவே, இந்த விலையேற்றத்தைக் கட்டாயமாக தடுத்து நிறுத்த வேண்டும். ஏற்கனவே இருந்த விலையிலே ஒரு பைசாகூட இதிலே ஏற்றம் செய்யக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 2] [திரு. கு. ராமணி]

இது தவிர முன்பு இந்த வண்டிக்காரர்கள் வீடு வீடாகச் சென்று சப்ளை செய்தார்களே, அந்த ஊழியர்கள் வேலை போகாமல் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும், மக்களுக்கு மண்ணெண்ணெய் கிடைக்கின்ற உத்தரவாதம் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கும்போது அவர்களுக்குத் தேவையான அளவு குறையாமல் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தக் காரியங்களைத் துரிதமாகச் செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் கட்டுப்பாட்டினால் இன்று தமிழகத்தில் எந்த அளவுக்கு பிரச்னை வளர்ந்திருக்கின்றது என்பதை எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு அங்கத்தினர்கள் எடுத்துக் கூறினார்கள். மாண்புமிகு அங்கத்தினர்கள் அப்படி எடுத்துக் கூறிய சில கருத்துக்கள் உண்மையிலேயே உண்மைக்குப் புறம்பான கருத்துக்களாக இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.]

குறிப்பாக, நண்பர் நுரை முத்துசாமி அவர்கள் ஏதோ மத்திய அரசு வேண்டுமென்றே கோட்டாவை தமிழ்நாட்டிற்கு குறைத்து இருக்கின்றது என்ற ஒரு குற்றச்சாட்டை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இந்த அரசுக்கு நன்கு தெரியும், ஈரான் நாட்டிலே இருந்து இந்தியாவிற்கு இறக்குமதி ஆகின்ற குரூட் ஆயில் குறைந்ததனால் காரணம் என்பது, ஏற்கனவே நமக்கு இந்தத் தகவல் வந்திருக்கிறது. கொடுத்த அளவு குறைந்ததுதான் இதற்குக் காரணம் என்பது இந்த அரசுக்கு நன்கு தெரியும் என்று எண்ணுகிறேன்.

இதற்கு முன்னதாக 34,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய்யை மத்திய அரசு தமிழ்நாட்டுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தது. இப்போது ஏறத்தாழ 3000 அல்லது 4000 கிலோ லிட்டர் அளவுக்குக் குறைக்கப்பட்டிருப்பதாகத் தகவல். ஆகவே, இந்தக் குறைந்த அளவு குறைக்கப்பட்ட மண்ணெண்ணெயின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று கூற முடியாது.

திரு. நுரை முத்துசாமி : மாண்புமிகு ஜனதா கட்சித் தலைவர் முதலில் பேசுகிறபோது மத்திய அரசு கோட்டாவைக் குறைத்ததாக தவறாகக் கூறுவதாகக் கூறிவிட்டு பின்னால் அவரே 3,000 அல்லது 4,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் குறைக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்.

திரு. ஜே. ஜேம்ஸ் : வேண்டுமென்றே தமிழ்நாட்டுக்கு குறைக்கப்படவில்லை என்றுதான் எடுத்துக் காட்டினேன். எல்லா மாநிலங்களுக்கும் இந்தக் குறைவு ஏற்பட்டிருக்கிறது.

[திரு. ஜே. ஜோன்] [1979 ஏப்ரல் 2

அதன் காரணமாகத்தான் கூறினேன், அதுமட்டுமல்லாமல் மத்திய அரசு மண்ணெண்ணெய் மீது வரி விதித்ததால் இந்தக் குறைபாடு ஏற்பட்டது என்ற நிலையும் உண்மையல்ல. ஏற்பட்டிருக்கின்ற நிலைமை என்னவென்றால் மத்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மண்ணெண்ணையை உரிய முறையில், மக்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய வகையில் விநியோகிக்கும் பொறுப்பு மாநில அரசைச் சேர்ந்தது என்பதை மாநில அரசு உணர்ந்துகொள்ள வேண்டும். இப்போது ஏறத்தாழ இரண்டு மூன்று வாரங்களாக இந்த மாநிலத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை விநியோக முறையில் சீர்கேடு இருப்பதுதான். அதன் காரணமாகத்தான், இந்த நிலைமை ஏற்பட்டது என்பதைக் கூற விரும்புகிறேன்.

சாதாரணமாக, இங்கு கைவண்டிக்காரர்களை வைத்து மண்ணெண்ணையை தெருத்தெருவாக விற்பனை செய்து கொண்டிருந்தார்கள். இந்தக் கட்டுப்பாடு என்ற நிலைமை வந்தவுடன் நியாயமான முறையில் கார்டுகள் மூலமாக வாங்குகிறவர்களுக்கு முறையாகக் கொடுத்திருந்தால் நிச்சயமாக இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. நான் கேரள மாநிலத்தைக் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த மாநிலத்திற்கும் மத்திய அரசு ஏற்கனவே கொடுத்து வந்த கோட்டாவைக் குறைத்து விட்டது. சற்றுக் குறைவாகக் கொடுத்தார்கள். ஆகவே, கட்டுப்பாடு ஏற்படவில்லாம் என்று அவர்கள் ரேஷன் கார்டுகளை எடுத்து விநியோக முறையைக் சீராக்கிக் கொண்டார்கள். அங்கே, பிரச்சினையோ, சிக்கலோ எழவில்லை. தமிழ்நாட்டைப் பார்த்தால் அலங்கோலமான நிலை. முப்பது லட்சம் மக்கள் இருக்கிற சென்னை நகரத்தில் 17 சென்டர்களில் இப்போது மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுகிறது. மைலாப்பூர், திருவல்லிக்கேணி இப்படி ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு சென்டர் என்றால் எப்படி மக்கள் எங்கே சென்று மண்ணெண்ணையை வாங்குவார்கள்? அப்படி வாங்குகின்ற டெப்போக்களில் எந்த அளவுக்கு கூட்டம் இருந்து வருகிறது என்பதை நிச்சயமாக இந்த அரசு உணரவேண்டும். கூட்டம் வருகிற இடத்தில் வாங்குகிறவர்களை முறையாகச் சீர்படுத்திக் கொடுக்க உள்ள ஏற்பாடு கூட இந்த அரசால் செய்யப்படவில்லை. சட்டம் அமைதியைக் காக்கக்கூட போலீசைக் கொடுக்கவில்லை. இந்த அரசின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் இந்தப் பொறுப்பை ஏற்று சில நாட்களாகச் செய்து கொண்டிருந்தார்கள். இந்தியன் ஆயில் காரப்பரேஷனுக்கும் மண்ணெண்ணெய் விநியோகத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. விநியோகப் பொறுப்பு மாநில அரசைச் சேர்ந்தது. இன்றைய தினம் தமிழ்நாட்டில் இருக்கும் இந்தப் பயங்கரமான நிலைக்கு மத்திய அரசு பொறுப்பல்ல. குறிப்பாக விநியோக முறை சீராக இல்லாததன் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 2] [திரு. ஜே. ஜேம்ஸ்]

மற்ற மாநிலங்களில் இருப்பது போல் ரேஷன் கார்டுகள் மூலமாக 400-க்கு மேற்பட்டு இருக்கக்கூடிய ரேஷன் டெப போக்கள் மூலம் மண்ணெண்ணெயை வழங்க வழி செய்தால் இந்தப் பிரச்சினை எழாது. ஆகவே, இதுவரை அதைச் செய்யத் தவறிவிட்டாலும்கூட, இனிமேலாவது உடனடியாக ரேஷன் கார்டுகள் மூலமாக சிலில் சப்ளை கார்ப்பரேஷன் உடனடியாக விநியோகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டால் நிச்சயமாக இந்தப் பிரச்சினை எழாது. மாநில அரசு உடனடியாக அதைச் செய்யும் என்று எதிர்பார்க்கிறேன்.

[முற்பகல் 10-30]

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நாடு முழுவதும் ஏற்பட்டிருக்கக் கூடிய மண்ணெண்ணெய் தட்டுப்பாடு குறித்து இந்த அவையிலே விவாதிக்கின்ற வகையில் என்னுடைய கருத்துக்களையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். மண்ணெண்ணெய் தட்டுப்பாடு, உண்மையிலேயே என்ன காரணத்தால் ஏற்பட்டது என்பதை நாம் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். மத்திய அரசு நமக்குக் கொடுக்கின்ற கோட்டாவைக் கொடுக்காமல் மற்ற மாநிலங்களை விடக் குறைத்துக் கொடுத்து இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன என்பதை ஜனதாக் கட்சித் தலைவர் நன்கு அறிந்திருக்கிறார்கள். ஈரான் நாட்டிலிருந்து வருகின்ற குடோயில் குறைந்திருக்கிறது என்பது ஒரு காரணம் என்று சொல்கிறார்கள். அப்படிக் குறைந்திருக்குமேயானால் அது இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களுக்கும்தான் குறைவாக இருக்க வேண்டும். ஆனால் மற்ற மாநிலங்களுக்கு மட்டும் அதிகமாகக் கொடுக்கிற போது நம்முடைய தமிழ்நாட்டிற்கு மட்டும் குறைத்துக் கொடுக்கிற நிலையில் அவர்கள் எங்களோடு சேர்ந்து போராடுவதற்குத் தயாராக இருப்பார்களானால் நாங்கள் அதற்காகப் போராடுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவது காரணமாக பதுக்கல்காரர்கள் அதை பதுக்கி வைப்பதுதான் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, இந்த அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் பதுக்கல்காரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கத் தயாராக முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் என்னுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்த நேரத்திலேகூட அமைச்சர் அவர்களைக் கேட்டேன். என்ன ஏற்பாடுகளைச் செய்திருக்கிறீர்கள், ரேஷன் கார்டுகள் எத்தனை கொடுத்திருக்கிறீர்கள், ஒவ்வொரு ரேஷன் கார்டுக்கும் எவ்வளவு கொடுக்கிறீர்கள், ரேஷன் கார்டுகள் இதுவரையில் கொடுக்கப்படாதவர்களுக்கு என்ன

[திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்] [1979 ஏப்ரல் 2

செய்யப்போகிறீர்கள் என்று கேட்டபோது அமைச்சர் அவர்கள், அலட்சியம் என்று கூட நான் சொல்ல மாட்டேன், அதற்குப் பதில் சொல்லிவிட்டேன் என்று கூறி அமர்ந்துவிட்டார்கள். அன்றைய தினமே நடவடிக்கைகளை எடுத்திருந்தால் இன்றைக்கு இப்படிப்பட்ட நிலைமை கூட வந்திருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக எத்தனை கடைகளில் கொடுக்கப்படுகிறது? இண்டியன் ஆயில் கார்ப்பரேஷன் மூலமாக எத்தனை கடைகள் இருக்கின்றன என்று கேட்டோம். ஏனென்றால் இன்றைக்குச் சில பத்திரிகைகள் தவறான கணக்குகளைப் போடுகிறார்கள். நியாய விலைக் கடைகளின் மூலமாக மண்ணெண்ணை வழங்கப்படுமானால் பதுக்கல்காரர்கள் பதுக்கிவைக்க முடியாது என்பதோடு மண்ணெண்ணை தட்டுப்பாடும் இல்லாமல் இருக்கும். ஆகவே நியாய விலைக் கடைகளின் மூலமாக வழங்குவதற்கு அரசு தயாராக இருக்கவேண்டும்.

இன்னொன்று மண்ணெண்ணைத் தட்டுப்பாட்டினால் விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இன்றைக்கு எத்தனையோ கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருந்தாலும்கூட, பண வசதி இல்லாத காரணத்தினால் வீடுகளுக்குக்கூட மின்சார வசதி செய்ய முடியாத நிலை பல இடங்களில் இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலே நாம் 8 லட்சம் பம்புசெட்டுகளுக்குத்தான் மின் இணைப்புக் கொடுத்திருக்கிறோம். மற்றவர்கள் எல்லாம் மண் எண்ணையையும், டீசலையும் நம்பித்தான் இன்றைக்கு விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். மண்ணெண்ணை கிடைக்காததால் விவசாயிகளுக்கு அவர்களுடைய பிரச்சினைகள் அதிகமாக வந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக, டீசலைப் பயன்படுத்துகிற விவசாயிகளுக்கு அதிகமாகக் கொடுக்க அரசு முன்வர வேண்டும்.

ரேஷன் கார்டுகள் மூலமாக சென்னையிலே கொடுக்கப்பட்டாலும், மற்ற இடங்களிலேயும் ரேஷன் கார்டுகள் மூலம் கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், உரிமம் பெற்றவர்கள் மட்டும்தான் அதை வியாபாரம் செய்ய அனுமதிக்க வேண்டும். உரிமம் பெற்றவர்களிடமிருந்து சில பதுக்கல்காரர்கள் மொத்தமாக வாங்கிக் கொண்டுபோய், பதுக்கிவைத்துக்கொண்டுவிடுவதால் மண்ணெண்ணைத் தட்டுப்பாடு அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. ஆகவே உரிமம் பெற்றவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் எவ்வளவு ஒதுக்குகிறோமோ அந்த அளவை அவர்கள் எல்லா சிறு விவசாயிகளுக்கும், மண்ணெண்ணையை வீடுகளுக்குப் பயன்

1979 ஏப்ரல் 2] [திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்]

படுத்துகிறவர்களுக்கும் கொடுக்கவேண்டும், அவர்கள் பதுக்கல் காரர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். உண்மையிலேயே மத்திய அரசாங்கம் நமக்குக் குறைவாகக் கொடுக்குமானால் அதைக் கண்டிக்கிற வகையிலே நாம் இந்த அவையிலே ஒரு தீர்மானத்தைப் போடவேண்டு மென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு உறுப்பினர் சின்னசேலம் சுப்பிரமணியம் அவர்கள் பேசுகின்றபோது மத்திய அரசு மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டிற்குக் குறைவாகக் கொடுப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் அப்படி எந்த அடிப்படையில், எந்தப் புள்ளி விவரத்தின் அடிப்படையில் சொல்லியிருக்கிறார்கள் ? அப்படி இல்லாத நேரத்தில் இங்கே அதைச் சொல்லக் கூடாது. ஆகவே அவர்கள் அதை விளக்கினால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை யெல்லாம் விளக்க வேண்டாம். அவருக்கு வந்த தகவலை அவர் சொன்னார். ஏற்கனவே திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசுகிற பொழுது அவர்களே விளக்கம் சொல்லிவிட்டார்கள்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைய தினம் மாநிலம் முழுவதும் தெருக்களிலே செல்லக் கூடியவர்கள் ஒரு சம்பவத்தினைப் பார்க்கலாம். 1967 ஆம் ஆண்டுக்கு முன்பு இந்த நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு முன்பு, உணவில் ஒரு பஞ்சம் ஏற்பட்டு மக்கள் எப்படி நீண்ட கியூ வரிசையிலே நின்றிருந்தார்களோ அதைப் போன்ற நிலைமை மண்ணெண்ணெய் கிடைக்காமல் பாதிக்கப் படும் மக்கள் தெருக்களிலே அலைந்து கொண்டிருப்பதைப் பார்க்கலாம். ஒரு பொருளின் மீது கட்டுப்பாடு விதித்தால் தான் தட்டுப்பாடு வரும் என்று சொல்வார்கள். ஆனால் கட்டுப்பாடு விதிக்காத நேரத்திலேயே அந்தப் பொருளுக்குத் தட்டுப்பாடு வருகிறது என்றால் உண்மையிலேயே மத்திய அரசால் இந்த மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு குறைந்ததுதான் காரணம் என்று கூறினாலும், மத்திய அரசு மண்ணெண்ணெய்க்கு விலையை உயர்த்தியதன் எதிரொலியாகவும் மண்ணெண்ணெய்க்குச் செயற்கையான தட்டுப்பாடு ஏற்பட்டது என்று சொல்லலாம்.

இன்றைக்கு மண்ணெண்ணெயைப் பதுக்கி வைத்திருப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க சட்டம் நாட்டிலே இல்லை. நெருக்கடி காலத்தில் மக்களுடைய ஏழ்மையைப்

[திரு. சேலம் மு. ஆறுமுகம்] [1979 ஏப்ரல் 2

பயன்படுத்தி, இன்றைக்கு கொள்ளை இலாபம் அடிக்கக்கூடிய சில கள்ள மார்க்கெட்காரர்கள் பதுக்கி வைக்கிறார்கள். அப்படிப் பதுக்கப்பட்ட மண்ணெண்ணெய் வெளியிலே கொண்டுவரப்பட வேண்டும். இன்றைக்கு ஏழைகள் தங்களுடைய வீட்டிற்கு விறகு வாங்கச் சென்றால் அதுவும் விலையேறியிருக்கிறது. அதைப் போல லீக்கோ கரியின் விலையும் ஏறியிருக்கிறது. கேஸ் சிலிண்டர்களும் சரிவரக் கிடைப்பதில்லை. இப்படிப் பட்ட நேரத்தில் மண்ணெண்ணெயும் கிடைக்காமல், நாட்டிலே இந்த ஆட்சியில் மக்கள் ஒளிமயமான எதிர் காலத்தை நாம் நிச்சயமாக காணலாம் என்று எண்ணினார்கள், ஆனால் இன்றைக்கு விளக்கேற்றக்கூட மண்ணெண்ணெய் இல்லாமல் இருள் மயமான எதிர் காலத்தை நோக்கக்கூடிய நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்றைய தினம் நாட்டிலே உண்மையிலே மண்ணெண்ணெய்க்கு இயற்கையான தட்டுப்பாடு இல்லை. இங்கிலாந்து நாட்டில்கூட தொழிற் கட்சி ஆட்சியிலே இருந்த காலத்தில் இப்படியொரு நெருக்கடி ஏற்பட்டபொழுது மண்ணெண்ணெயின் மொத்த விற்பனையையும் அரசாங்கமே ஏற்றுக்கொண்டு இலாக்கா மூலம் மக்களுக்குச் சீராக விநியோகம் செய்தது என்பதை வரலாறு படித்தவர்கள் அறிவார்கள். ஆகவே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்குத் தனியார் மண்ணெண்ணெயை வைத்துக்கொண்டு கொள்ளை இலாபம் அடிப்பதற்காகத் தட்டுப்பாட்டை உருவாக்கி இருக்கிறார்கள். எனவே, மண்ணெண்ணெய் விற்பனை முழுவதையும் அரசாங்கமே ஏற்றுக்கொண்டு, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகவும், கிராமப் புறங்களில் இருக்கும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும், சீராக, நியாயமான விலைக்கு விற்பனை செய்ய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு டீசல் கிடைக்காமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அதைப்போல பவர்லூம் வைத்திருக்கும் நெசவாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். சிறு சிறு லாரி வைத்திருக்கக்கூடிய முதலாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்றையதினம் 5 லிட்டர் டீசல் 7 ரூபாய் 50 காசு என்று வாங்குவதற்குச் சென்றால் ஒரு லிட்டர் என்ஜின் ஆயிலையும் வாங்க வேண்டுமென்று கட்டாயப் படுத்தப்படுகிறார்கள். டீசலின் விலை 7 ரூபாய் 50 காசு ஆனால் ஒரு லிட்டர் என்ஜின் ஆயிலின் விலை 10 ரூபாய் 50 காசு. இப்படி ஒன்றோடு ஒன்றை இணைத்து விற்காத பொருளை, வாங்குகின்றவர்களின் தலையிலே கட்டுகின்ற நிலைமை இருக்கிறது.

1979 ஏப்ரல் 2] [திரு. சேலம் மு. ஆறுமுகம்]

ஆகவே, மசல், மண்ணெண்ணெய் ஆகிய இவற்றைப் பதுக்கி வைத்திருக்கும் வியாபாரிகளின் லைசென்ஸ்களை உடனடியாக ரத்து செய்து, அவர்கள் மீது கடுமையாகத் தண்டனை விதிக்கக்கூடிய வழிவகைகளை இந்த நேரத்திலே அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைய தினம் மண்ணெண்ணெய் பற்றாக்குறையைப்பற்றி நாம பேசிக்கொண்டிருக்கிற நேரத்தில், தெருக்களிலே டின்களைத் தூக்கிக்கொண்டு மாதர்கள் செல்கின்ற பரிதாபகரமான நிலைமைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதைக் கூறிக்கொண்டு நான முடித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-40]

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே மக்களுக்கு மிக அத்தியாவசியத் தேவையான மண்ணெண்ணெயும், மசல் போன்றவைகளும் கிடைக்கவில்லையென்பது பிரத்தியட்ச உண்மை. இது பற்றாக்குறையால் மட்டும் ஏற்பட்டது அல்ல, பதுக்கலால்தான் ஏற்பட்டது என்பது எல்லோருக்கும் தெரிந்த பகிரங்க ரகசியம். இந்த நிலையில் 'கோட்டா சிஸ்டம்'த்திலே மத்திய அரசாங்கத்தினால் மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிற மண்ணெண்ணெயும் மசல் போன்றவைகளும் பற்றாக்குறை. இதிலே பற்றாக்குறை ஏற்படுகிறது என்று சொல்லால் அதற்கு யார் பொறுப்பு என்பதை மாநில அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏனென்றால், மாநில அரசு அந்தக் கோட்டாவை, ஒதுக்கீட்டைப் பெற்று, மாநில அரசின் வாயிலாக, தன்னுடைய கண்காணிப்பிலே, நாட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படுகிற பொருள் இது. தமிழ்நாட்டிலே உற்பத்தி செய்யப்படுகிற பொருள் அல்ல. தமிழ்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகிற பொருளாக இருந்தால், பதுக்கல் ஏற்படுகிறது என்றால், அது புரிந்து கொள்ளப்படுகிற ஒன்று ; நடப்பது, நடந்து கொண்டிருக்கிற ஒன்று என்ற வகையில் அதை நாம் புரிந்து கொள்ளலாம். ஆனால், மாநில அரசினுடைய கண்காணிப்பிலே, மத்திய அரசாங்கத்தின் சார்பாக அளிக்கப்படுகிற மண்ணெண்ணெயும், மசலும் இன்றைக்கு கிடைக்கவில்லையென்று சொன்னால், இதற்கு வியாபாரிகளுடைய பதுக்கல் மட்டும்தான் காரணமா? கண்காணிப்பு அதிகாரிகள் எவ்வளவு தூரம் சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்? அல்லது இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற பற்றாக்குறைக்கு அவர்கள் எவ்வளவு தூரம் காரணம் என்பதை அரசு தெரிவிக்கவேண்டும்.

நேற்றைய தினம் திருவண்ணாமலையிலே நான் பார்த்தேன். விவசாயிகள் அழுது கொண்டிருக்கிறார்கள். இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்கு அங்கே ஆயில் இன்ஜின் ஓடாவிட்டால்,

பயிர் பச்சைகள் எல்லாம் அழிந்துவிடும் என்று அழுது கொண்டிருக்கிறார்கள். எங்கோ நான் போனவனைப் பார்த்து, என் காலிலே அவர்கள் விழுந்து, 'ஐயா, எங்களைக் காப்பாற்றுங்கள்' என்று அழுதுகொண்டே சொல்கிறார்கள் என்றால், இந்தக் கோரமான காட்சியைத் தமிழகத்திலே ஏற்படுத்தியவர்கள் யார் என்பதை விளக்கவேண்டும். ஒரு பக்கம் மின் இணைப்பு இல்லை, மின்சாரத் துறையினர் கெடுபிடி செய்கிறார்கள். பம்ப் செட்கள் ஓடவில்லை. மின் இணைப்பு இல்லாததன் காரணமாக பம்ப் செட்கள் ஓடவில்லை, குறைந்த பட்சம் ஆயில் இன்ஜினாவது ஓட வேண்டுமென்று பார்த்தால் அதற்கும் பற்றாக்குறை. இன்றைக்கு ஏழைகள் தான் இதைப் பயன்படுத்துகிறார்கள்.

குறிப்பாக சென்னைநகரத்தில் விறகு கிடைப்பதில்லை. கிராமப்புறங்களாக இருந்தால் விறகிலே எரித்து சமையல் செய்ய லாம். அமைச்சருக்குத் தெரியும். இங்கே விறகு கிடையாது. பெரிய இடத்துப் பெண்கள் கூட--வெளியே வராத பெண்கள் கூட --கியூவிலே நிற்கிறார்கள் அடிபடுகிறார்கள், உதை படுகிறார் கள், தள்ளப்படுகிறார்கள், மண்ணெண்ணெய்க்காக. இது எப்போதுமே ஏற்படாத ஒன்று. இந்த நிலைமை ஏன் ஏற்பட்டது என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, உடனடியாக விநியோக முறையிலே செம்மையைக் காண வேண்டும். இதிலே 'ரேஷனைசேஷன்' வேண்டும். இரண்டு மூன்று இடங்களிலே டெப்போக்களை ஏற்படுத்தி யிருக்கிறோம் என்று சொன்னால் சென்னை நகரத்திலே இருக்கிற அத்தனை பேரும் அந்த மூன்று இடங்களில் பெறுவது சாத்தியமா? கார்ட் இருந்தால் கொடுப்பார்கள் என்று சொல்கிறார்கள். கார்ட் இல்லாவிட்டாலும் ஒரு சிலருக்கு கொடுப்பதாக அறிவிப்பு தந்திருக்கிறார்கள். அதையும் மீறி, இன்னொரு அதிகாரி, ஒரு உண்மையைச் சொல்லியிருக்கிறார்கள். கார்ட் இல்லாமல் சில பேர் வந்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். வாங்கிய மறு நிமிடமே அதைக் கள்ளச் சந்தையில் அதிகாரிகளுக்கு எதிரிலே விற்கிறார் கள். வாங்கியதைக் கொடுத்துவிட்டு மறுபடியும் கியூவிலே நிற்கிறார்கள். வாங்குகிறார்கள். உண்மையாகவே, தேவையாக உள்ள குடும்பங்களிலே உள்ளவர்கள், மரியாதையான முறை யிலே, மண்ணெண்ணெய் வாங்க முடியாத நிலைமை இருக்கிறது என்று சொன்னால் அரசு என்ன செய்துகொண்டிருக்கிறது. சமூக விரோத சக்திகள் இதைப் பயன்படுத்திக் கொண்டிருக் கிறார்கள் என்றால் அரசு என்ன செய்கிறது என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். சமுதாயத்திலே பொருளாதார ஏற்றத்தாழ்வு இருப்பதற்கு இதெல்லாம்தான் காரணம். கூலிகள் அதிகமாக வேண்டும் எம்பளம் உயர்வு வேண்டும் கிராக்கிப்படி அதிகமாக வேண்டும். என்று ஏழை எளியவர்கள் அதிகமாக தொகை வேண்டுமென்று கேட்கிறார்கள். ரூ. 10 படி

1979 ஏப்ரல் 2] [திரு. எம். ஏ. லத்தீப்]

தந்தால், ரூ50. விலை ஏறுவதாக இருக்கிறது. இப்படி வரி நிட்டங்கள், பிஸகல் பாலிசிக்கள் அமைந்திருக்கின்றன. ஒரு சிந்தனையும் இல்லாமல் வரி என்றால்? வரி வேண்டும் என்றால் அந்த வரியால் என்ன ஏற்படும் என்ற சிந்தனை இல்லை. ஆகவேதான் இந்த நிலைமை இருக்கிறது. இவர்கள், செய்தார்கள். அவர்கள் செய்தார்கள் என்பதை விட, விநியோகத்தில்கு பொறுப்பு ஏற்றிருக்கிற மாநில அரசு இதற்குப் பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசு குறைவாகக் கொடுத்தது, மத்திய அரசு பாலிசி சரியாக இல்லையென்று சொல்லி நாம் இங்கே உட்கார்ந்திருக்க வில்லை. அதுபற்றிப் பேச பாராளுமன்றம் இருக்கிறது. அவர்கள் பேசுவார்கள். ஆனால், விநியோகம் யாருடையது? இங்கே புரடக்ஷன் இல்லை. அந்த டிஸ்டிரிபியூஷனுக்கு யார் ரெஸ்பான்சிபிலிட்டி என்று சொன்னால், இந்த அரசுதான் ரெஸ்பான்சிபில். இதிலே பெரிய குறை ஏற்பட்டிருக்கிறது. பதுக்கல் ஏற்பட்டிருக்கிறது. ஊழல் ஏற்பட்டிருக்கிறது. செயற்கையான பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது, மக்கள் வாடிக் கொண்டிருக்கிறார்கள். பயிர் வாடிக் கொண்டிருக் கிறது, கள்ளச் சந்தை தாராளமாக நடந்து கொண்டிருக்கிறது மக்களுடைய பணத்தை ஒருசில சமூக விரோதிகள் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள், பல புதுப் பணக்காரர்கள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். பணக்காரர்கள் ஏழைகளாக உருவாகிக் கொண்டிருக்கிறார்கள், சமுதாயத்திலே ஏற்றத்தாழ்வு வருகிறது. இந்த அரசு பார்த்துக் கொண்டிருக்கிறது. மத்திய அரசு இப்படி செய்கிறது என்று சொன்னால், அது வேடிக்கையான வாதமாக இருக்கிறது. நீங்கள் எதற்கு இருக்கிறீர்கள்? தயவு செய்து எல்லா இடங்களிலும் விநியோகிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்..... (மணியடிக்கப்பெற்றது).

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் மிக முக்கியமான நெருக்கடியான பிரச்சனை மண்ணெண்ணெய், டீசல் பற்றாக்குறை. மண்ணெண்ணெய் பற்றாக்குறை காரணமாக, ஊழல் மலிந்து விட்ட காரணத்தால், சமூக விரோத சக்திகள் இதைப் பயன்படுத்திக்கொண்ட காரணத்தினால் இந்தப் பிரச்சனை இன்று பயங்கரமாக உருவெடுத்துவிட்டிருக்கிறது. இதனால் இன்றைக்கு பொது மக்கள், குறிப்பாக சென்னையிலே இருக்கிற குடிசை வாழ் மக்கள் மண்ணெண்ணெய் பற்றாக் குறை காரணமாக நாமும் ஒரு போராட்டத்தை நடத்தலாமா ஒரு பெரிய கண்டன ஊர்வலம் நடத்தலாமா என்று என்னைக் கேட்டார்கள். நான் அவர்களிடத்திலே சொன்னேன், இப் பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர் திரு. எட்மண்ட் மிகத் திறமைசாலி, உடனடியாகச் செய்யக்கூடியவர் எப்படி அவர்கள் தவறிவிட்டார்கள் என்று தெரியவில்லை என்று

அவர்களிடம் சொன்னேன். சமாதானப் படுத்தி இருக்கிறேன். ஆகவே அமைச்சர் விரைந்து செயல்படவேண்டுமென்ற கோரிக்கையை மீண்டும் வற்புறுத்துகிறேன். பத்திரிகைக் குறிப்புகளைப் பார்த்தால் தெரியும். இரண்டு குறிப்புகளை மாத்திரம் குறிப்பிட விரும்புகிறேன். "ஹிந்து" பத்திரிகை 31ம் தேதி மண்ணெண்ணெய் வழங்கும் இடத்தில் ஒரு பெரிய கூட்டம் இருப்பதை அவர்கள் படம் போட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

It's scramble that upsets kerosene distributions

The picture at right shows the scramble for kerosene at a distribution centre on Mowbray's Road on Friday. The scene is more or less the same at many other distribution points in the city.

It is now more than 10 days since the oil companies introduced the system of issuing four litres of kerosene for each family cardholder in the city. Yet, the consumers complain that they have to wait for hours to get their quota.

அது மாத்திரம் அல்ல. அங்கே கோட்டா அளவு குறைக்கப் படுகிற பிரச்சனை எல்லாம் சொன்னார்கள். அந்த அதிகாரி Mr. Cy. V. Rao, Regional Manager, IOC, who went round the distribution centres, also appears to be not very happy about the state of affairs. He said there was absolutely no scarcity of kerosene but the way people crowded around the depots upset the arrangements. என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

In distribution centres, according to him, anti-social elements created a law and order problem. These elements threatened to burn down the depots unless they were given some kerosene. To avoid an unpleasant situation, the depots had been instructed to give some quantity even to those who do not have cards. But the pity was these persons sold it at a premium and again joined the queue thus aggravating the problem.

Mr. Rao felt the sooner the State Government took over kerosene distribution, the better it would be. Enquiries show that at the distribution centre on Mowbray's Road alone, 22,600 litres were issued on Friday as against the normal offtake of 16,000 litres.

இந்தப் பிரச்சனையை இந்த அரசின் கவனத்திற்கு, நாங்கள் எல்லாம் ஏற்கனவே பல நாட்களுக்கு முன்பே ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்தும் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்

1979 ஏப்ரல் 2] [திரு. எஸ். தே. காதிக்பாட்சா]

நம் கொண்டு வந்திருக்கிறோம். இதில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களின் பட்டியலைப் பார்த்தாலேகூட இந்தப் பிரச்னை எந்த அளவுக்கு முக்கியமானது என்று அரசாங்கம் உணர முடியும். இதை அரசாங்கம் தட்டிக் கழிக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் சொல்ல விரும்புகிறேன். மண்ணெண்ணெயும், டீசலும் மிக முக்கியமான பொருள்கள். இன்னொருக்கு நம்முடைய மின்சாரத் துறை அமைச்சரவர்கள் மின்சாரத் தட்டுப்பாட்டை அறிவித்த பிறகு விவசாயிகளுக்கு மிக முக்கியமாகத் தேவைப்படுவது டீசல். விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கும் அந்தக் கஷ்டத்தை நிவர்த்திக்கின்ற பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. டீசல் தட்டுப்பாடு இல்லாமல் விவசாயிகளுக்குக் கிடைக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அதேபோல சென்னை நகரத்திலே டீசல் வேண்டுமென்று கேட்டால், அல்லது தனியார் போய்க் கேட்டால் 5,10 லிட்டர்களுக்கு மேல் கொடுக்கமாட்டேன் என்று சொல்கிறார்கள். லாரி ஓட்டுகின்றவர்கள் போய்க் கேட்டாலும் இதே நிலைதான். தினமணி 31ம் தேதி :

கொரசின் விற்கும் இடங்களில் ரௌடிகள் அட்டகாசம்: நமலாப்பூரில் ஐ. ஒ. சி. மண்ணெண்ணெய் வியாபாரி ஒருவரை, சென்ற ஞாயிறன்று சில விஷமிகள் தாக்கியதாகக் கூறப்படுகிறது. மண்ணெண்ணெய் விநியோகம் சம்பந்தமாக ஏற்பட்ட தகராறே காரணமாம்.

தொல்லைகள் ஏற்படலாமென்று அஞ்சுவதால் விதிமுறைகளைக் கண்டிப்பாக அமல் நடத்த தாங்கள் பயப்படுவதாக சில வியாபாரிகள் கூறுகின்றனர்.

இன்னும் பல செய்திகள் இருக்கின்றன. நான் கடைசிப் பத்தியை மட்டும் படிக்கிறேன்.

கடந்த 2 வாரமாக நகரில் சப்ளை நிலவரம் மோசமாயிருந்தும் கூட, இது பற்றி அரசு மௌனம் சாதிப்பது கண்டு பலர் எரிச்சல் அடைந்துள்ளனர்.

[முற்பகல் 10-50]

இந்த எரிச்சல் எல்லாம் மாண்புமிகு அமைச்சர் எட்மண்ட் அவர்களுக்கு இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கவலை. வேறு யாராவது இருந்தால் நான் கவலைப்பட மாட்டேன். எட்மண்ட் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிற இந்த நேரத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கலாமா? அதைப்பற்றி சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1979 ஏப்ரல் 2

குறிப்பாக இன்றைக்கு சென்னை மாநகரில் ஏற்கெனவே 1964-65 ஆம் ஆண்டில் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு ஏற்பட்டபோதும், 1969-70 ஆம் ஆண்டில் பற்றாக்குறை ஏற்பட்டபோதும் அரசு அங்கீகாரம் பெற்ற கடைகள் மூலமும், கைவண்டிகள் மூலமும் அந்தந்த இடங்களுக்குச் சென்றும் விற்றும் மக்களுடைய குறைகளைப் போக்கியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு 47 கடைகளும், 3,000 வியாபாரிகளும் இருக்கிற சென்னை நகரில் இந்த கடைகள் மூலம் விற்பனைச் செய்வதற்குப் பதிலாக குறிப்பிட்ட இடங்களில்தான் வாங்கவேண்டுமென்று இருக்கிற காரணத்தால்தான் இந்த கோளாறு ஏற்பட்டிருக்கிறது. இதை உடனடியாகக் கவனிக்க வேண்டும். கிராமப்புறங்களில் விவசாயிகளுக்கும் தாராளமாக கிடைக்க வேண்டும். இன்றைக்கு விலை அதிகமாக இருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் எட்மண்ட் அவர்கள் பொறுப்பேற்று இருக்கிற இந்த நேரத்தில், இப்போது மண்ணெண்ணெய் பற்றாக் குறையாக இருக்கிறது; நாளை சிமின்ட் பற்றாக்குறை என்று சொல்ல நேரிடும். ஏனென்றால் 4 கப்பல்களில் இருக்கிற சிமின்டை அன்லோடு பண்ணாததால் நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் டேமரேஜ் கட்டவேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். கூட்டுறவு கடைகள் சிமின்ட் அலாட்மெண்ட் எடுக்கவில்லை என்று அதற்குக் காரணம் சொல்கிறார்கள். மேலும் இதைப்போன்ற பிரச்சனைகள் வந்துவிடக் கூடாது என்பதால் சொல்கிறேன். உடனடியாக கவனம் செலுத்தி, மண்ணெண்ணெய் பற்றாக்குறை, சிமின்ட் பற்றாக்குறை, டீசல் பற்றாக்குறை போன்ற குறைகளைப் போக்க உடனடியாக நடவடிக்கை எடுத்து, நாளைய போராட்டத்தை தவிர்க்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே அதிலும் குறிப்பாக சென்னை மாநகரிலே மண்ணெண்ணெய்க்கு ஏற்பட்டிருக்கிற ஒரு தட்டுப் பாட்டைக் குறித்து இங்கே தீர்மானங்களைக் கொண்டுவந்து, அந்தத் தீர்மானங்கள்மீது தங்களுடைய கருத்துக்களை தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அரசின் சார்பில் என்னுடைய நன்றியறிதலை முதற்கண் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம், ஒரு தவறான எண்ணம் அரசின் மீது இருக்கிறது என்றே நான் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் இங்கே உரையாற்றும்போது அரசு விநியோகத்தை முறுங்கான முறையில் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை

இங்கே எடுத்துச்சொன்னார்கள். ஆனால் அந்தக் குற்றச் சாட்டுக்கு அரசின் சார்பில் நான் என்னுடைய பதிலை சொல்வதற்கு அவசியம் இல்லாத அளவில் மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் 31-ந்தேதி இந்து பத்திரிகையில் வெளியான செய்தியை இங்கே எடுத்துக்கூறிய நேரத்தில் ஐ. ஒ. சி. நிறுவனத்தினுடைய ஜெனரல் மானேஜர் பொது மேலாளர்-இந்த விநியோகத்தை அரசே ஏற்றுக்கொண்டு நடத்தினால் மிகவும் நல்லதாக இருக்கும் என்று சொன்ன அந்த செய்தியைக் சொடுத்து, லத்தப் அவர்களுடைய குற்றச் சாட்டுக்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லாத நிலையை உருவாக்கியதற்காக அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியறிதலை முதற்கண் தெரிவித்துக்கொள்வது நிச்சயமாக என்னுடைய கடமை என்றுதான் கருதுகிறேன்.

மண்ணெண்ணெயைப் பொறுத்தமட்டில் மத்திய அரசு இன்றைய தினம் முன்னால் கொடுத்துவந்த அளவைவிட குறைவாகக் கொடுக்கிறார்கள் என்கிற உண்மையை மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் கூட இந்த மன்றத்தில் மறுக்கவில்லை. கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் 35,665 கிலோ லிட்டர் ஒதுக்கப்பட்ட நிலைமை மாறி, இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் 34,487 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய்தான் மத்திய அரசாலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் சொன்னதுமென்றால் மிஞ்சிப்போனால் 1,000 கிலோ லிட்டர்தானே மத்திய அரசால் குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்று சொல்லலாம். ஆனால் 1,000 கிலோ லிட்டர் என்பது ஒரு இலட்சம் லிட்டர் என்பதை நான் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருவது பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன். இதற்கு முன்னாலே இப்படிப்பட்ட தட்டுப்பாடு இருந்தது. அப்போதெல்லாம் விநியோக முறை ஒழுங்காகக் கண்காணிக்கப்படவில்லையா என்கிற குற்றச் சாட்டு இந்த அவையிலே எடுத்து வைக்கப்பட்டது.

நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மெத்த பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புவதெல்லாம் முன்பு ஏற்பட்ட தட்டுப்பாட்டிற்கும் இப்போது ஏற்பட்டிருக்கின்ற மண்ணெண்ணை தட்டுப்பாட்டிற்கும் முழுமையான வித்தியாசம் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணரவேண்டும்.

முன்னாலே மண்ணெண்ணை மாத்திரம்தான் குறைவாக மத்திய அரசாலே ஒதுக்கப்பட்டது. ஆனால் எரிவாயு எந்த அளவுக்கு ஒதுக்கப்பட்டதோ அந்த அளவுக்கு எல்லா மாநிலங்களுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டைப் பொறுத்த வரையிலே மத்திய அரசு மண்ணெண்ணையைக் குறைவாகக்

கொடுக்கிறது. அதே நேரத்தில் எரிவாயு ஒதுக்குவதிலும் ஒரு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்கிற நிலைமை நாம் ஒத்துக் கொண்டாக வேண்டும்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தமட்டில் தமிழ்நாட்டிலே மாத்திரம் எரிவாயு பயன்படுத்தப்படுகிறவர்களின் எண்ணிக்கை 2,01,131. சென்னை நகரத்திலே மாத்திரம் எரிவாயு உபயோகப் படுத்துகிறவர்களின் எண்ணிக்கை 1,19,233. முன்னாலே எல்லாம் எரிவாயு ஒரு சிலிண்டர் கொடுக்கிறார்கள் என்றால் சாதாரணமாக அது 20 நாட்கள் அல்லது 25 நாட்களுக்கு பயன் படுத்த முடியும். எரிவாயு பயன்படுத்துகிறவர்கள் அந்த சிலிண்டர் முடிந்த உடனே இன்னொரு சிலிண்டர் வாங்கிக் கொள்வதற்கான வாய்ப்பு வசதிகள் அன்றைக்கு இருந்தது. ஆனால் இன்றைக்கு நிலைமை அப்படி இல்லை. 20 நாளிலே எரிவாயு சிலிண்டர் தீர்ந்துபோனாலும் 31 நாட்கள் கழித்த பிறகுதான் அடுத்த சிலிண்டர் தரப்படும் என்கிற ஒரு வெளி யீட்டையும் அந்த சிலிண்டர் கொடுக்கின்ற நிறுவனத்தார் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே நிலைமை என்ன ஆகி இருக்கிறது என்றால் முன்னாலே மண்ணெண்ணை வாங்க உபயோகித்தவர்கள் மட்டும் மண்ணெண்ணை வாங்கிக்கொண்டு இருந்தார்கள். ஆனால் என்றும் இல்லாத அளவுக்கு எரிவாயு உபயோகப்படுத்துகிறவர்களும்கூட எரிவாயு 20 நாட்களுக்குத் தானே வரும் ஆகவே மீதி நாட்களுக்கு எரிவாயு இல்லாவிட்டால் என்ன செய்வது என்று எண்ணி அவர்களும் முண்டி அடித்துக் கொண்டிருக்கின்ற நிலைமை இன்றைய தினம் நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. ஆகவேதான் மண்ணெண்ணைக்கு இன்றைக்கு ஒரு பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. ஆகவேதான் அதிகமான கூட்டம் பல்வேறு பகுதிகளிலே இன்றைய தினம் ஏற்பட்டிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் மண்ணெண்ணை வாங்கி உபயோகித் தவர்கள் மண்ணெண்ணை குறைவாக கிடைக்கின்ற காரணத்தால் அவர்களும் முண்டியடித்துக் கொண்டிருக்கிறார்கள், எரிவாயுவை பயன் படுத்துகிறவர்களும் எரிவாயு கிடைக்காத காலத்தில் எரி பொருள் தேவை என்பதற்காக மண்ணெண்ணை வாங்குவதற்கு முண்டி அடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இதிலே இன்னொரு நிலைமையை மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். அதாவது சில சமுதாய விரோதிகள், அதாவது ரவுடிகள் என்று சொல்லப்படுபவர்கள் இந்தக் குழ்நிலையினை பயன்படுத்திக் கொண்டு ஆங்காங்கே வண்டிகளிலே சென்று மண்ணெண்ணை வாங்கிக்கொண்டு சென்று கூடுதல் விலைக்கு விற்கின்ற முறையில் ஏற்பட்டுக்கொண்டிருக்கிற நிலைமைகள் பற்றியும் பத்திரிகையிலே வந்திருப்பது குறித்து படித்துக் காட்டினார்கள்.

1970 ஏப்ரல் 2] [திரு. த. உரோஎட்மண்ட்]

ஆகவே இப்பேர்ப்பட்ட நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தாலே தான் இன்றையதினம் மண்ணெண்ணெய்க்கு ஒரு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

அடுத்து விநியோக முறையை சீர்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். இந்தப் பேரவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் மொத்த பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். விநியோகம் செய்கின்ற உரிமை இந்த அரசுக்கோ அல்லது நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கோ நிச்சயமாக இல்லை. ஆனால் மண்ணெண்ணெயை யார் யார் விற்கவேண்டும் என்பதற்கான உரிமங்களை அதாவது லைசென்சுகளை மாத்திரம் இன்றையதினம் இந்த அரசு வழங்கிக்கொண்டு இருக்கிறது. அதிலும் ஐ. ஒ. கி. நிறுவனத்தார் மற்றும் வேறு பல நிறுவனத்தார் இதனை யார் யாருக்குக் கொடுக்கவேண்டும் என்று சொல்கிறார்களோ அவர்களுக்கு இந்த அரசு கொடுத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே அவர்கள் மொத்த வியாபாரிக்குக் கொடுக்கிறார்கள். மொத்த வியாபாரிகள் சில்லறை வியாபாரிகளுக்குக் கொடுக்கிறார்கள் அந்த அடிப்படையிலே இன்றையதினம் இந்த விநியோக முறையை அரசு முழுமையாகவோ அல்லது நுகர்பொருள் வாணிபக் கழகம் முழுமையாகவோ இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை, எடுத்துக்கொள்ளவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் நல்லதொரு கருத்தைச் சொன்னார்கள். விநியோகத்தைப் பொறுத்தவரை அது இந்த அரசினுடைய தவறுதான் என்று சொன்னாலும் கடைசியாக அவர் பேசுகின்றபோது நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக இப்பேர்ப்பட்ட விநியோக முறைகளை எல்லாம் அரசே ஏற்று நடத்த வேண்டும் என்கிற ஒரு நல்ல யோசனையை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் இந்த அவையிலே எடுத்துச் சொன்னார்கள். நான் உண்மையிலேயே அவர்களுக்கு அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன், மத்திய அரசிடம் நாம் இதைத்தான் வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம்.

[முற்பகல் 11-00]

இந்த மண்ணெண்ணெய் விநியோக முறையை தமிழகத்தில் இருக்கின்ற நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்று தொடர்ந்து நாம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் இந்தக் கருத்தை எடுத்துச்சொன்னார்கள். மகுதியில் இருக்கின்ற ஆட்சி, இவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சியைச் சார்ந்த அரசாக இருப்பதால், அவர்கள் ஒத்துழைப்பு கூடுகின்ற வரையில்

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1979 ஏப்ரல் 2

இந்த கோரிக்கைக்கு மத்திய அரசு இணங்குகின்ற வகையில், மத்திய அரசிடம் எடுத்துச்சொல்லி, தமிழ்நாட்டுக்கு கொடுக்கின்ற மண்ணெண்ணெய் விநியோக முறையை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தவேண்டும் என்று இந்த நேரத்தில் அவர்களை கேட்டுக்கொள்வது என்னுடைய கடமை என்றுகூட கருதுகிறேன்.

இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். விநியோகத்தைப் பொறுத்தமட்டிலும், இந்த அரசு என்னென்ன முயற்சிகளை எடுக்கவேண்டுமோ அவற்றை எடுத்துக் கொண்டு வருகிறது. இதில் இருக்கின்ற சிக்கலை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்ளவேண்டும். மொத்த வியாபாரிகள் அல்லது சில்லறை வியாபாரிகள் இவர்கள் ஐ. ஒ. சி. நிறுவனத்தின்கீழ் நேரடியாக இருந்து வருகிறார்கள். நேரடியாக விநியோகத்தையும் பெற்று வருகிறார்கள். இது போன்ற தட்டுப்பாடு வருகின்ற நேரத்தில் அரசு இந்த விநியோக முறையை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் மீதமுள்ள நேரங்களில் அவர்களே இந்த விநியோக முறையை வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் விநியோக முறையை அரசு கொள்கை அளவில், கொள்கையின் அடிப்படையில் முடிவு எடுக்கவேண்டியிருக்கிறது. இதனால் ஏற்படுகின்ற செலவுகளை நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும், மண்ணெண்ணெய்யை வாங்கி வைத்துக்கொள்வதற்கான டாங்கர்களை தயாரிக்கவேண்டும். இவைகளை பூமிக்கு அடியில் வைத்து சேமித்து வைத்து, எந்தெந்த இடங்களுக்கு எல்லாம் கொடுக்க வேண்டுமோ அந்த இடங்களுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இப்படி பல்வேறு நிலைமைகளை எல்லாம் நாம் செய்ய முன்வந்தாலும், அதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கினாலும் இதற்கான நிரந்தரமாக விநியோக முறை நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் இருக்கும் என்கின்ற நிலைமையை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசுடன் பேசி முடிவு எடுக்கப்படுமேயானால் இந்த முயற்சியில் நுகர்பொருள் வாணிபக் கழகம் இதில் துணிந்து ஈடுபடுவதாக இருந்தால் இப்படிப்பட்ட சிக்கல் இருக்காது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன். இதைத்தான் மத்திய அரசிடம் நாம் வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். ஐ. ஒ. சி. நிறுவனம் மண்ணெண்ணெய் மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் கொடுக்கின்ற ஒதுக்கீட்டை நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கொடுப்பதாக இருந்தால், அதன் கீழ் உள்ள கடைகள் மூலமாகவோ, கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகவோ, கிராமங்களில் உள்ள கடைகள் மூலமாகவோ மண்ணெண்ணெய்யைக் கொடுப்பதற்கு உண்டான ஏற்பாடுகளை செய்வதற்கு இந்தத் துறையில் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இருந்தாலும் இதற்கான நடவடிக்கைகளை இந்த

1979 ஏப்ரல் 2] [திரு. க. உரோ. எட்மண்ட்]

அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. ஐ. ஒ. டி. நிறுவனத்தார் விநியோகத்திற்கு ஏற்பாடு செய்து பல்வேறு முறைகளைக் கையாண்டு கொண்டிருப்பதில் இந்தத் துறை தனது ஒத்துழைப்பைக் கொடுத்துக்கொண்டு வருகிறது. ஆகவே காலப் போக்கில் நிச்சயமாக இந்தக் குறைபாடுகள் நீக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்வது என் கடமை என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் இப்போதுள்ள ஏற்பாட்டினால் வண்டிக்காரர்களுக்கு வேலையில்லாமல் போய் விடுமோ என்ற அச்சத்தைத் தெரிவித்தார்கள். அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த வண்டிக்காரர்கள்தான் ஹோல்ஸேல் வியாபாரிகளிடமிருந்து வாங்கி வெளியில் கொண்டு போய் விற்கிறார்கள். இப்போது இவர்கள்தான் அங்கு நின்று விநியோகத்தை நடத்துகிறார்கள். இப்படிப்பட்டவர்கள்தான் சில தவறுகளை, அதாவது நான்கு லிட்டர்களை 3 லிட்டர், 3½ லிட்டர் என்று கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தவறுகள் இவர்களிடத்தில் ஏற்படுகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாகப் பரிசீலனை செய்து சிறந்த முறையில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக விநியோகம் நடைபெறும்போது இப்படிப்பட்ட தவறுகளை எல்லாம் களைய வாய்ப்பு ஏற்படும். ஆகவே இதற்கான விநியோக முறையை நுகர்பொருள் வாணிபக் கழகம் ஏற்றுக்கொள்ளும்போது, இதில் முடக்கப்படுகின்ற பணத்திற்கு ஏற்ற வகையில் நல்ல முறையில் செயல்படுத்த முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. இதற்கான நிலைமைகளை எல்லாம் கவனிக்காமல் உறங்கிக்கொண்டிருக்கவில்லை. எல்லா நடவடிக்கைகளையும் செய்து கொண்டிருக்கிறது.

மசலைப் பொறுத்தவரையில், மசல் தட்டுப்பாடு இருப்பதாக இந்த அரசாங்கத்திற்கு எந்தவிதமான தகவலும் வரவில்லை. மண்ணெண்ணெயைப் பொறுத்தவரையில் சென்னை, மதுரை போன்ற பெரிய நகரங்களில் மட்டும்தான் நெருக்கடியிருப்பதாக . . . . (குறுக்கீடு) இன்னும் பல நகரங்களிலும் தட்டுப்பாடு இருப்பதாகத் தெரிகிறது. கிராமப்புறங்களில் இப்படிப்பட்ட தட்டுப்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. . . .

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குகின்றபோது, மத்திய அரசாங்கத்தோடு மாநில அரசு தொடர்பு கொண்டிருக்கின்றது என்று சொன்னார்கள். எதுவாக இருந்தாலும் மக்கள் இதற்கு உடனடியாகப் பரிகாரம் காண விரும்புகிறார்கள். எனவே,

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1979 ஏப்ரல் 2

இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், போராட்டம் நடத்தித்தான் மத்திய அரசையும் மாநில அரசையும் பணிய வைக்கவேண்டுமென்று விரும்புகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, அப்படி உடனடியாக அறிவிக்க முடியாததற்கு நான் ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன். அந்த விநியோகம் செய்கின்ற உரிமை நம் கைக்கு வந்தால்தான், அந்தப் பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ள முடியும். இப்போது மத்திய அரசாங்கம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிர்வாகத்தினுடைய பொது நிர்வாகியே, மாநில அரசு எடுத்துக்கொண்டால்தான் நல்லது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதுவரை மாநில அரசின் கைக்கு வரவில்லை. இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதால் இதிலே சிக்கல்களைத் தீர்த்து வைக்கமுடியாத ஒரு நிலைமை உருவாகியிருக்கிறது. எனவே, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நமக்குக் கொடுத்தால்தான், மாநில அரசு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக ஒழுங்கான முறையில் விநியோகிப்பதற்கு முடியும். அப்போது நிச்சயமாக இதற்குப் பரிகாரம் காண முடியும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உடனே இது தீர வேண்டுமென்றால், அமைச்சர் அவர்கள் நேரடியாக டெல்லிக்கு உடனே சென்று, அவர்களைக் கேட்க வேண்டும், இல்லாவிட்டால் நம் கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும். இந்த அவையிலே எல்லாக் கட்சித் தரப்பிலும் தீர்மானித்திருப்பதைத் தெரிவித்து, இரண்டு மூன்று நாட்களில் இதற்குப் பரிகாரம் காண வேண்டும். இல்லாவிட்டால், இப் பிரச்னை தீப்பற்றி எரியும், மண்ணெண்ணெய் இல்லாவிட்டாலும். எனவே, உடனடியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புலவர் திரு. கா. கோவிந்தன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், குரூட் ஆயில் பிரச்னையிலே தட்டுப்பாடு இல்லை என்று குறிப்பிட்டார்கள். நான் நேற்று ஊருக்குச் சென்று வந்தேன், ஆயில் எஞ்சினுக்கு குரூட் ஆயில் வேண்டுமென்று கேட்டால், 10க்கு 5 லிட்டர்தான் தந்தார்கள். அதேபோல், டிராக்டருக்கு 45 லிட்டர் வேண்டுமென்று கேட்டால் 10 லிட்டர் கொடுத்துவிட்டு, நாளைக்குத் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, கிராமங்களிலே விவசாயிகளுக்கு முக்கியமான இந்த டீசல் தட்டுப்பாடு இருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

1979 ஏப்ரல் 2]

திரு. துரை முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக இந்த அரசு வழங்குவதற்கு திரு. ஜேம்ஸ் அவர்கள் உதவவேண்டுமென்று கேட்டார்கள். மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது குறித்து நாம் ஏகோபித்த ஒரு தீர்மானத்தைப் போட்டு, மத்திய அரசுக்கு அனுப்பினால் என்ன என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்?

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் இந்த விநியோகம் செய்கின்ற பொறுப்பை வைத்திருக்கிறது. இன்னும் இந்தப் பொறுப்பை இந்த மாநில அரசுக்குக் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். எனக்குக் கிடைத்த தகவல் எல்லாம், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் இதைத் தரத் தயாராக இருப்பதாகவும், மாநில அரசுதான் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் வேலை நிறுத்தம் செய்ததன் காரணமாக, ஐ.ஓ.சியே செய்யவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. எனவே, தமிழகஅரசு இப்படி பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது தகவல். அது உண்மையா என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட வேண்டும். அது மட்டுமல்லாமல், இந்த ஜனவரி, பிப்ரவரியிலே...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்கு ஒரு மணி நேரம்தான் ஒதுக்கப்பட்டது. 11.10-க்கு முடிக்க வேண்டும். நேரமாகி விட்டது. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அது மட்டுமல்லாமல், ஏற்கனவே ஜனவரி, பிப்ரவரியிலேயே கோட்டா கொண்டு வரப்போவது இந்த அரசுக்குத் தெரியும். எனவே, இப்படி தட்டுப்பாடு வரப்போவது ஏற்கனவே தெரியும். எனவே, விநியோகத்தை எங்களிடம் கொடுக்கவேண்டுமென்று அப்போதே கேட்டதா? எப்போது இதுபற்றி மத்திய அரசாங்கத்தோடு இது தொடர்பாக விடிதப் போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டது என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு வருவது முன்பே தெரியுமே நீங்கள் ஏன் முன்பே கடிதத் தொடர்பு வைத்துக்கொள்ளக்கூடாது என்று ஜேம்ஸ் அவர்கள் கேட்டார்கள். இது தொடர்பாக மாநில அரசு மத்திய அரசாங்கத்தை நீண்ட நாட்களுக்கு முன்பே கேட்டுக்கொண்டிருக்கிறது. அப்படி கேட்டுக்கொண்டும், மத்திய அரசுதான் இதிலே மவுனம் சாதித்துக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள், இங்கே ஒரு யோசனையைச் சொன்னார்கள். உடனடியாக அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று பேசி, இதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் சொன்னார்கள்.

(முற்பகல் 11—10.)

நிச்சயமாக நான் உடனடியாக டில்லிக்குச் சென்று மத்திய பெட்ரோலியம் அமைச்சர் அவர்களுடன் பேசி இந்த விநியோக முறையை நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்த இருக்கிறேன். மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் மைய அரசுக்கு தொலைபேசி மூலமாகவோ, தந்தி மூலமாகவோ, கடிதம் மூலமாகவோ உணவு அமைச்சர் வருகிறார் மண்ணெண்ணெய் விநியோக முறையை நுகர் பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைத்து விடுங்கள் என்று சொல்வார்களானால் ஜேம்ஸ் அவர்களுக்கும் உண்மையில் தனிப்பட்ட முறையில் நன்றிக்கடன் பட்டவனாக இருப்பேன்.

டீசல் தட்டுப்பாட்டைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் முன்னாள் பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் சொன்னார்கள். இதுவரை அரசின் கவனத்திற்கு வரவில்லை என்றுதான் சொன்னேன். தட்டுப்பாடு ஒருவேளை இருக்கலாம். நிச்சயமாக அதிகாரிகளின்மூலம் அறிந்து அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது.

(7) வரவு செலவுத் திட்டம் 1979-80 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 32—பின்தங்கிய வகுப்பினர் நலன்.

மாண்புமிகு திரு. க உரோ. எட்மண்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் —

"மானியக் கோரிக்கை எண் 32-பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,04,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

திரு. சு. பாலன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய வகுப்பினர்களின் நலனை ஆராய தனிக் குழு அமைப்பது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,04,41,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

1979 ஏப்ரல் 2]

திரு. சோ. பாலகிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆடு மாடுகள் வைத்திருக்கின்ற பின்தங்கிய வகுப்பினர் தங்கள் கால்நடைகளுக்குக் குடிதண்ணீர் மற்றும் மேய்ச்சல் தரை தேடி ஊர் விட்டு ஊர் போகின்ற காரணத்தால் அவர்களுடைய குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்காத வகையில் அவர்களுக்குத் தனிப் பள்ளிகள், உணவு விடுதி ஏற்படுத்தி அரசுத் துறையில் பராமரிப்பது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்றதலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,04,41,000-ல் ரூபாய் 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய மாணவர்கள் பெற்றுவந்த மத்திய அரசு மானியப் பணத்தை அடியோடு யாருக்குமில்லாமல் நிறுத்திவிட்டதை மீண்டும் கொடுக்கும்படி வற்புறுத்துவதைப் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 32-பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,04,41,000—ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru P. VIJAYARAGHAVAN : To discuss the need to establish more number of Backward Class Students' hostels in Tamil Nadu, I move:—

"That the allotment of Rs. 7,04,41,000 under Demand No. 32-Welfare of the Backward Classes be reduced by Rs. 100."

திரு. செ. சிவசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு ஹாஸ்டல்களில் போதுமான இடம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியதைப் பற்றியும் பத்து வருடங்களுக்கு முன்பிருந்த அமைப்பை மாற்றி, தற்போது உள்ள இடங்களை இரட்டிப்பாக்கி குறிப்பாக பரமக்குடி நயினார் கோவில் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன்என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,04,41,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1979 ஏப்ரல் 2

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 32-பின் தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,04,41,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மானியக் கோரிக்கைக்கு 1½ மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பேசுகிற மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஐந்து நிமிடத்திற்குள் தங்களுடைய கருத்தைச் சுருக்கமாக எடுத்துச் சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மானியக் கோரிக்கையின்மீது தங்களுடைய அரிய கருத்துக்களை மிகத் தெளிவான முறையில் சொல்லுகிறவகையில் துறையால் தயாரிக்கப்பட்ட பிற்பட்ட நலத் துறைக் கொள்கை விளக்கக் குறிப்பு* ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் பிற்பட்டோர் நலத் துறையின் பல்வேறு திட்டங்களைப் பொறுத்தமட்டில் இந்த அரசு ஏற்கனவே எடுத்துக்கொண்டு ஆற்றிய சாதனைகளைப் பற்றியும், வருகிற ஆண்டுக்கு இந்த அரசு செய்ய இருக்கிற பல்வேறு திட்டங்களைப் பற்றியும் அதிலே தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பினுடைய பேச்சை அவை ஏட்டிலே ஏற்றுக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்கள் சொன்ன பின்னால் அதற்குப் பதில்சொல்ல அனுமதி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத்துறை மானிய விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நானும் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டில் சமுதாயத்தினுடைய அடித்தட்டில் உள்ள பிற்பட்ட சமுதாய மக்கள் மேம்பாடு அடைய பல்லாண்டு காலமாக தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், பெருந் தலைவர் காமராஜர் அவர்களும், இன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களும் இந்தச் சமுதாய மேம்பாட்டுக்காகப் பாடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* 437–455-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

19/9 ஏப்ரல் 27] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

இன்றைய தினம் காலத்தினுடைய ஒரு நிலையின் காரணமாக பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கூட அவர்கள் அந்தச் சமுதாயம் முன்னேற்றம் அடைய வேண்டுமென்ற அடிப்படையில் அவர்களும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு இன்றைய தினம் பின் தங்கியோர் பட்டியல் அதிகமான அளவிலே வளர்ந்து இருக்கிற காரணத்தால் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற 31 சதவீதம் என்பதை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அப்படி அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்கிற நேரத்திலே இந்த அரசுக்கு அதற்கு அதிகாரம் இல்லை என்று சொன்னாலும் இந்த அரசாங்கம் அதற்கான தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்குச் சொல்லி அந்த உரிமையை வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் பின்தங்கியோர் பட்டியலில் இருக்கின்ற பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த ஏழை எளிய மக்கள் அவர்களுடைய பிள்ளைகளைப் படிக்கவைக்கிற நேரத்திலே அரசாங்க உதவித்தொகையைப் பெறுவதற்கு அவர்களுடைய ஆண்டு வருமானம் 2 ஆயிரம் முதல் 2,500 ரூபாய் வரை இருக்கவேண்டுமென்று இருப்பதை இன்னும் அதிகப்படுத்த வேண்டும். காரணம், இன்றைய தினம் அந்த ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள், மிகச் சாதாரண குடும்பங்களுக்கு கணக்கிடுகிறபோதுகூட அந்தத் தொகையைத் தாண்டிவிடுகிற நிலைமை இருக்கிறது. அதன் காரணமாக பல்வேறு நடுத்தர குடும்பங்கள், ஏழை எளிய குடும்பங்கள் அந்த உதவித் தொகையை பெறமுடியாமல் இருக்கின்றன. அதனால் அரசாங்கம் அந்த வரம்பை இன்னும் தளர்த்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று, பிற்பட்டோர் பட்டியலில் இருக்கின்றவர்கள் அரசாங்க வேலைக்கு வருகிற நேரத்திலே இன்றைய தினம் இருக்கின்ற வேலையில்லா கொடுமையின் காரணமாக அவர்களுக்கு வேலைக்காக நிர்ணயித்து இருக்கிற வயது வரம்பைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, அந்தப் பட்டியலைப் பார்க்கிறபோது, பிற்பட்டோர் நலத் துறையிலே அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பல்வேறு பட்டதாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் ஐ. ஏ. எஸ். அல்லது ஐ. பி. எஸ். பரீட்சைக்கு அவர்களைப் பயிற்றுவிக்கின்ற ஒரு பள்ளி பல ஆண்டுகளாக நடைபெற்று வந்து, அதிலே பயின்ற பல மாணவர்கள் பரீட்சைகள் எழுதினார்கள். ஆனால் இருக்கின்ற புள்ளிவிவரத்தைப் பார்க்கிறபோது ஆண்டுக்கு ஒருவர், இருவர் தான் தேறுகிற நிலைமை இருக்கிறது. அதிலேயும் தமிழகத்திலே உள்ள மாணவர்கள் இந்தியாவிலேயே

இருக்கிற மற்ற மாநிலங்களிலே உள்ள மாணவர்களை விட திறமையாக படிக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். அப்படி இருந்தும் என்ன காரணத்தாலோ அப்படி நடைபெறுகிறது என்பதையும் இந்த அரசாங்கம் நன்கு ஆராய்ந்து இன்னும் அதிகமான அளவிலே அந்தப் பரீட்சைகளிலே தேறுகிற வகையிலே அவர்களைப் பயிற்றுவிக்கவேண்டும். அதோடு அப்படிப் பயிற்று விக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்த வேண்டும்.

இன்னொன்று, பிற்பட்டோர் நலத்துறையின் கீழ் சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர் இன்னும் பல பேர்களுக்கு அவர்களுக்கு வேண்டிய கருவிகளை வாங்குவதற்கு ஒரு தொகை யைக் கொடுக்கிறோம். மாவட்ட அளவிலே விண்ணப்பங்கள் பெறப் படுகின்றன. ஆகவே ஒதுக்கப்படுகிற தொகையை அதிகப்படுத்த வேண்டும். இந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து அதிகமான விண்ணப் பங்கள் வருகின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறை யிலே நாங்கள் தொகுதிகளுக்கு செல்கிறபோது விண்ணப்பங்களை எங்களிடம் நூற்றுக்கணக்காக கொடுக்கிறார்கள். நாங்கள் அவைகளை வாங்கிக் கொண்டுபோய் அதிகாரிகளிடம் கொடுக் கிறோம். இப்படி நேரடியாக விண்ணப்பம் கொடுக்கிறவர்கள் அல்லது எங்களிடம் தருகிறவர்களுக்கு அந்தக் கருவிகள் கிடைக் காமல் போகின்றன. நாங்கள் அதிகாரிகளைச் சந்திக்கிற நேரத்திலே தெரிவது, அதற்காக ஒதுக்கப்படுகிற தொகை குறைவாக இருக்கிறது என்பதாகும். அதை அதிகப்படுத்த வேண்டும். இந்த ஆண்டு பல ஆயிரம் பேர்கள் விண்ணப்பங்கள் தருகிறார்கள் என்றால் அவர்களிலே நூற்றுக்கணக்கானவர்களுக்கு தான் தொகை கிடைக்கிறது. பாக்கியுள்ள விண்ணப்பதாரர் களுக்குக் கிடைப்பதில்லை, ஆனால் அப்படிப்பட்ட விண்ணப்பங் களை அடுத்த ஆண்டு பரிசீலிக்க வேண்டும். இந்த ஆண்டு விண்ணப்பம் செய்து கிடைக்காதவர்கள் விண்ணப்பங்கள் தள்ளப்பட்டு விடுகின்றன. ஆனால் விண்ணப்பம் போட்டவர்கள் நமக்குக் கிடைக்கும் என்று கருதிக்கொண்டிருக்கிறார்கள். பிறகு அடுத்த ஆண்டுக்கு புதிதாக விண்ணப்பங்கள் வருகின்றன, பல பேர்கள் மனுச் செய்கிறார்கள். அதிலே ஏற்கனவே சென்ற ஆண்டு தள்ளுபடி செய்யப்பட்ட விண்ணப்பங்களையும் சேர்த்துக் கொண்டு அவர்களுக்கும் கிடைக்கும்படி செய்வதிலே அரசாங்கத் திற்கு எந்தவிதமான தடையும் இருக்காது, அந்த முறையிலே அவர்களுக்கும் கருவிகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு சென்ற ஆண்டு விண்ணப்பங்கள் அளித்திருந்தால் அவர்களுக்கு தொகை கிடைக்காது இருந்தால் அந்த விண்ணப் பங்களை இந்த ஆண்டு சேர்த்து பரிசீலித்து அவர்களுக்கு கருவிகளை வாங்குவதற்குத் தொகைகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1979 ஏப்ரல் 2] [திரு. பெ. கு. திருவேங்கடம்]

[முற்பகல் 11-20]

அதே போன்று, கிராமங்களிலே பிற்பட்ட வகுப்பினர் பட்டியலிலும், தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலும், பழங்குடியினர் பட்டியலிலும் சேர்க்கப்படாமல் மிகவும் பின்னடைந்த வகுப்பினராக இருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கும்பொழுது, சமுதாயத்தின் மிக அடிமட்டத்திலே, கல்வி வசதி, பொருளாதார வசதி போன்ற இப்படிப்பட்ட வசதிகள் இல்லாமல் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களில் ஒன்றிரண்டு சாதியினரை இந்தத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலும், பழங்குடி வகுப்பினர் பட்டியலிலும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, கிராமங்களில் பல்வேறு இடங்களில் மேல்நிலைப் பள்ளிகளை ஆரம்பித்திருக்கிறார்கள், தனித்தனியாக ஆரம்பிக்கப்படவில்லை என்றாலும், அரிஜன மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் படிக்கின்ற அந்த விடுதிகளிலே சேர்ந்து அந்தப் பள்ளிகளிலே படிக்கும் வகையில் ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளிக்கும் ஆண், பெண் இருபாலரும் படிக்கும் வகையில் விடுதிகளை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) இது முக்கியமான விஷயம்.

மாண்புமிகு போரவைத் துணைத் தலைவர்: பேசுகின்ற எல்லோருமே முக்கியமான விஷயம் என்றுதான் பேசுகிறார்கள். ஐந்து நிமிடங்களில் முடிக்க வேண்டும். அப்படி முடிக்கவில்லை என்றால் அடுத்த உறுப்பினரைக் கூப்பிட்டு விடுவேன்.

திரு. பெ. கு. திருவேங்கடம்: இறுதியாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கிராமங்களிலே பிற்படுத்தப்பட்ட வகுப்பிலே இருக்கின்ற பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் பி. ஏ., எம். ஏ. என்று படித்துவிட்டு, வேலையில்லாமல் இருக்கிறார்கள். இதனால் அவர்கள் தங்கள் இல்லத்திற்கும், பெற்றோர்களுக்கும் சிரமம் கொடுக்கின்ற அளவிற்கு இருக்கிறார்கள், எனவே, அவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் மேற்கொண்ட அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு நான் இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. வி. கோ. சின்னசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய பின்தங்கிய வகுப்பினர் நலன் குறித்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை வெளியிடக் கடமைப்பட்டிருக்கிறேன். 1967-68-ஆம் ஆண்டிலே 1 கோடியே 61 இலட்சம் ரூபாயாக ஒதுக்கப்பட்ட தொகை

[திரு. வி. கொ. சின்னசாமி] [1979 ஏப்ரல் 2

1979-ஆம் ஆண்டில் 7 கோடி ரூபாய் என்ற அளவிற்கு அதிகமாக உயர்த்தி இருப்பதற்காக உள்ளபடியே என்னுடைய பாராட்டைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல், பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக எத்தனை விடுதிகள் திறக்கப்பட்டன. எத்தனை விடுதிகள் திறக்கப்பட இருக்கின்றன என்ற பட்டியலை வரிசைக் கிரமமாகக் கொடுத்துள்ளார்கள், இந்த ஆண்டில் 25 விடுதிகளைத் திறப்பதாக அறிவித்திருப்பது உள்ளபடியே பாராட்டுதற்குரியது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டு வருமானத்தையும் 2,000 ரூபாயிலிருந்து 2,500 ரூபாயாக உயர்த்திருப்பதும் உண்மையிலே பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், விடுதி துவங்கப்படும் என்று இருக்கிறதே தவிர விடுதி கட்டப்படும் என்ற அறிவிப்பு இந்த மானியத்தில் இல்லை என்பதை நான் வருத்தத்தோடு கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல சலவைத் தொழிலாளர்களுக்கென சலவைத் துறைகள் கட்டுவதற்காக நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். பவானி சாகர் பகுதியிலே, பவானி ஆற்றின் கரைகளுக்குப் பக்கத்தில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளர் ஆகியவர்களுக்கு 13 இலட்சம் ரூபாய் என்று அமைச்சரவர்கள் உயர்த்தியிருப்பதற்காக அந்தச் சமுதாயத்தின் சார்பாக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கு 100 ரூபாய் மதிப்புள்ள கருவிகளைத் தருவதற்காக 10,000 ரூபாயை ஒதுக்கி இலவசமாக கொடுக்கப் போவதாக அறிவித்திருப்பதும் புதிய ஒன்று என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இருந்தாலும் நான் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், பிற்படுத்தப்பட்டோர் என்ற பட்டியலில் 31 சதவீதம் என்று கொடுக்கப்பட்டிருந்தாலும் மிகவும் பின்தங்கிய 30, 31 சமுதாயத்தினர் மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் இருக்கிறார்கள். அவர்களுக்கும் சேர்த்து பின் தங்கியோர் பட்டியலில் சேர்த்துக்கொண்டிருப்பது அந்தச் சமுதாயத்தினருக்குக் கொஞ்சம் சிரமமாக இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், டாக்டர் கலைஞர் காலத்தில் ஒரு சில

சமுதாயத்தைப் பின்தங்கியோர் பட்டியலில் சேர்த்தார்கள். அதையும் சேர்த்திருக்கின்ற ஒரு நிலைமையைப் பார்க்கும் பொழுது பின்தங்கியோர் பட்டியல் மிகவும் அதிகரித்துள்ளது. ஆகவே, நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால். தமிழக அரசு தேர்வு ஆணைக்குழுவிற்குப் பின்தங்கியோர் பட்டியலைக் கொடுத்திருப்பதைப் போல, மிகவும் பின்தங்கியோருக்கும் இத்தனை பர்சென்ட் கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், நான் இன்னொன்றையும் நினைவுபடுத்தக் கடமைப்பட்டுள்ளேன். 13-8-78-ல் தமிழ்நாடு வேட்டுவ கவுண்டர் என்ற சமுதாயத்தினர் மாண்புமிகு நாஞ்சிலார் தலைமையில் ஒரு மாநாட்டை நடத்தினார்கள். அந்த மாநாட்டிற்கு மாண்புமிகு நாஞ்சிலார் அவர்களும், நீங்களும் வந்து கலந்து கொண்டீர்கள் என்பதற்கு நான் பாராட்டு தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன்: அந்த மாநாட்டில் ஒரு சில கோரிக்கைகளை அங்கே வைத்தார்கள். வேட்டுவ கவுண்டர் என்ற அந்தச் சமுதாயம் பொருளாதாரத்திலும், கல்வி வசதியிலும் மிகவும் பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலும் திருச்சி மாவட்டத்திலே டீ-நோட்டிஃபைட் என்றும் தோவை, சேலம் மாவட்டங்களிலே, மோஸ்ட் பாக்வார்ட் என்றும் வைக்கப் பட்டுள்ளார்கள். அந்த நிலைகளை மாற்றி, அவர்களை ஷெடியூல்ட் என்று நிர்ணயிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு நாஞ்சிலார் அவர்களிடத்திலும் உங்களிடத்திலும் வைத்தார்கள். அதற்கு நீதியமைச்சர் அவர்கள் அவர்களுக்குத் தகுந்தாற் போல அங்கே பதில் கூறியதாக எனக்கு நினைவிருக்கிறது. ஆகவே, அதற்கு மேற்கொண்டு, மாண்புமிகு முதல்வரையும் கலந்து, நம்முடைய அமைச்சரையும் கலந்து, தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் அவர்களைச் சேர்க்க ஆவன செய்ய வேண்டுமென நான் கடமை உணர்வோடு கோருகிறேன். காரணம், ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். அதிகாரி கள் தேர்வு எழுதியோர் பட்டியலைக் கொடுத்துள்ளார்கள். அந்தப் பட்டியலிலே இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவராவது இருப்பார்களா என்று பார்த்தால் நிச்சயமாக ஒருவர் கூட இல்லை என்றுதான் எனக்குத் தென்படுகிறது. ஆகவே, நான் குறிப்பிடுவது தேர்வாணைக் குழுவிலே மோஸ்ட் பாக்வார்ட் என்போருக்கு ஒரு குறிப்பிட்ட பர்சன்டேஜ் ஒதுக்க வேண்டும். அப்படி ஒதுக்கினால்தான் இந்த மோஸ்ட் பாக்வார் டுலேயுள்ள அத்தனை பேரும் படிப்பிலும் பொருளாதாரத்திலும் முன்னேற வாய்ப்புகள் கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல் தீண்டப்படாதோர் என்ற அடிப்படையில் ஒரு சில சமுதாயத்தினரைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திருப்பதாக என்னுடைய நினைவிற்கு வருகிறது. பீகார் மாநிலத்திலும் போயர் என்று கல்லுடைக்கும் சமுதாயத்தினரை மத்திய சர்க்கார் அனுமதியோடு, மாநில சர்க்கார் தாழ்த்தப் பட்டோர் பட்டியலில் சேர்த்திருக்கிறார்கள். அதே போல், தமிழகத்திலே வேட்டுவ கவுண்டர் என்ற சமுதாயத்தினரை ஒரு மாவட்டத்திலே ஷெடியூல்ட் என்று வைத்திருக்கிறார்கள், ஒரு மாவட்டத்திலே டீ-நோட்டிஃபைட் டிரைப்ஸ் என்று வைத்திருக் கிறார்கள், இன்னொரு மாவட்டத்திலே, மோஸ்ட் பாக்வார்ட் கிளாஸ் என்று வைத்திருக்கிறார்கள். அவர்கள் மூன்று பிரிவினரையும் ஒன்றாக்கி, அவர்களை ஷெடியூல்ட் என்ற அறிவிப்பை நீங்கள் கொடுத்து உதவ வேண்டுமென்ற கோரிக் கையை இந்த நேரத்திலே, அமைச்சரவர்களுக்கு விட விரும்புகிறேன்.

அதே போல், 25 புதிய விடுதிகளைத் திறப்பதாக அறிவித் துள்ளார்கள். என்னுடைய தொகுதியான பவானிசாகரிலே அல்லதுபுஞ்சைப்புலியம்பட்டியிலே, மாணவர் விடுதியைஏற்படுத்தி தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த விடுதிகளைக் கட்டுவதற்கு அமைச்சரிடத்திலே தெரிவிப்பது, முதலமைச்சரிடத் திலேயும், நிதியமைச்சரிடத்திலேயும் பல இலட்சக்கணக்கான ரூபாய்களை கல்விக்காக வாங்கி, மாணவர்கள் விடுதிகள் கட்டித் தரவேண்டும். காரணம், மிகவும் இடைஞ்சலான இடத்தில் 6 பேர், 7 பேர் இருக்கிற நிலைமையை என்னுடைய தொகுதி யிலுள்ள புலியம்பட்டியிலே நான் கண்கூடாகக் கண்டிருக்கிறேன். ஆகவே, எங்கெங்கே மாணவர், மாணவியர் விடுதிகள் வாடகைக் கட்டிடத்திலே இயங்குகிறதோ, அங்கே நிரந்தரமாகக் கட்டிடம் கட்ட ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

[முற்பகல் 11-30]

திரு.ரா.பெரியசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, பிற்பட்டோர் நலத்துறை மானியத்தின் மீது இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பிலே பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டில் மேற்குப் பக்கத்தில் கௌண்டர்கள் சமுதாயமும், தெற்குப் பக்கத்தில் நாடார்கள் சமுதாயமும், தென்கிழக்குப் பகுதியில் மறவர்களும், வடகிழக்கில் பள்ளியர்ச்சி சமுதாயமும், ஆகிய இப்படிப்பட்ட பெரும் பான்மையான சமுதாயங்கள் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப் பட்டிருக்கிறது. இங்கு 'டோபி' என்று அழைக்கிறார்கள்.

கிராமத்தில் 'வண்ணான்' என்கிறார்கள். 'முடிதிருத்துவோன்' என்று பட்டணத்தில் பேசுகிறார்கள், அங்கு, 'பரிகாரி' 'அம்பட்டன்' என்று அழைக்கிறார்கள். சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், போயர்கள் ஆகியோர் இந்த பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்கள் பிற்பட்டோர், முற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் இன்னும் மலைவாழ் மக்களுக்கு எல்லாம் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு தனியாக ஷெடியூல் காஸ்ட்டோ, ஷெடியூல்ட் டிரைபோ அல்லது இன்னும் அதை விட மட்டமானவகையிலே பிற்பட்டோர் யாராவது இருந்தால் அந்தத் தரத்திலேயிருந்து கண்டுபிடித்து எடுத்து இவர்களை அதிலே சேர்த்து இவர்களுக்கு ஒரு தனித்துறை ஏற்படுத்த வேண்டும். அந்தத்துறை மூலம் இவர்களுக்கு கல்வி வசதி அளிக்க வேண்டும். அவர்கள் என்றும் மற்றவர்களைப் போல் பாஸ் செய்ய முடியாது. அவர்கள் என்றும் ஏணிப்படிகளாகத்தான் இருக்க முடியுமே தவிர ஏணியில் ஏற முடியாது. மலைவாழ் மக்களைப்போல அவர்களுக்கும் தனித்தன்மை வாய்ந்த ஒரு தொகுதியை ஏற்படுத்தித் தர வேண்டும். அல்லது அவர்களுக்கு இந்த அரசாங்கத்தில் ஒரு எம். எல். சி. மாதிரி பதவியாவது ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, இந்த தமிழ்நாட்டில் 1 கோடி முத்தரையர் சமுதாயத்தினர் இருக்கிறார்கள். இவர்கள் பல பிரிவுகளைச் சார்ந்தவர்கள், மூறையே: முத்துராஜா, முத்தரையர், பாளையக்காரர், அம்பலக்காரர், நுழையன், வலையன் என்று பல பிரிவுகள் உள்ளன. இந்தப் பல பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் ஒருவர் கூட ஒரு ஆர். டி. ஓவாகவோ, தாசில்தாராகவோ வருவதேயில்லை. அவர்களில் பலருக்கு படிப்பு வாசனையே கிடையாது. அப்படியே படித்தாலும் அவர்களை முன்னுக்கு வர விடுவதில்லை. ஏனென்றால் அவர்கள் சர்வீஸ் கமிஷனில் பாஸ் செய்யமுடிவதில்லை. அப்படியே பாஸ் செய்தாலும், இன்டர்வியூவிலே அவர்களுக்கு கைகொடுத்துத் தூக்குவதற்கு அங்கே யாரும் இல்லை. அதனாலே ஷெடியூல்ட் டிரைப்போடு சேர்த்து அவர்களுக்கு கல்வி வசதி அளித்து தனிப்பட்ட சலுகை கொடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். உத்தியோகத்திற்குப் போனாலும் சரி, படிப்பதற்குப் போனாலும் சரி, அவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் கிடைப்பதில்லை.

எதை எடுத்தாலும் பெரியார் கண்ட வழியில் செல்கிறோம் என்று சொல்கிறார்கள். பெரியார் வழியில் என்று சொல்வது தாழ்த்தப்பட்டோர், நொந்து போன மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்வதுதான். இன்றைக்குக் கூட கிராமங்களில் பலர் தெருவில் செருப்பைப் போட்டுக்கொண்டு முற்பட்டோர் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் நடக்கிற தெருவில் நடந்தால்

அவன் எந்தச் செருப்பைப் போட்டுக் கொண்டு நடந்தானோ அதே செருப்பைக் கொண்டு அவனை அடிக்கிறார்கள். இந்த மாதிரி நிலைமையைப் போலீஸில் போய் புகார் செய்தால் போலீஸ் எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதில்லை. இந்த மாதிரி நிலை இந்த 20-ம் நூற்றாண்டில் நடக்கிறதா என்று கேட்பீர்கள். ஆனால் உண்மையில் நடக்கிறது. இந்த அநியாயத்தை இந்தத் தமிழக அரசு தவிர்க்கவனம் செலுத்தி போக்க வேண்டுமென்று மிகுந்த பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தக் குற்றப்பரம்பரையோடு அம்பலக்காரர்களையும் சேர்த்து விட்டார்கள். ஆனால் எந்தவிதமான சலுகையும் கிடையாது. தாழ்த்தப்பட்டோர், ஷெட்யூல் ட்ரைப்ஸ், பிற்பட்டோர், முற்போக்கானவர் என்று 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தும் அவர்கள் எந்தப் பிரிவு என்று உறுதியாக அறிவிக்கப்படவில்லை. ஏனென்று கேட்டால் எதை எடுத்தாலும், எதைக் கேட்டாலும் அவர்கள் பிற்பட்டவர்கள் என்று சொல்லி விடுகிறார்கள்: ஆனால் அதற்கான சலுகை இல்லை. குற்றப்பரம்பரை என்று சொல்கிறார்களே தவிர எந்தவிதமான சலுகையும் அளிக்கவில்லை. படிப்பு வசதி, உத்தியோகத்தில் வசதி போன்ற சலுகைகள் நிச்சயமாக அவர்களுக்கு இல்லை. ஆகவே, அவர்களை மோஸ்ட் பாக்வெர்டு கிளாஸ் என்று அறிவித்து, அதற்கு கொடுக்கப்படுகின்ற எல்லா வித்தமான சலுகைகளையும் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு தனியாக எத்தனை சதவீதம் நூற்றுக்கு எவ்வளவு என்று இப்போது குறிப்பிடப்படவில்லை: அதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இராமநாதபுரம் மாவட்டத்தில் இடையர்கள் சமுதாயம் இருக்கிறது. அவர்களை எந்த ஜில்லாவிலும் பார்க்கலாம். அந்த இடையர் சமுதாயம், கோனார் சமுதாயம் ஆடு ஓட்டிக்கொண்டு, குடும்பம் குடும்பமாக பல மாவட்டங்களில் இருக்கிறார்கள். எங்கு புல் அதிகமாக இருக்கிறதோ அங்கெல்லாம் அவர்கள் இருப்பார்கள். அவர்களுடைய பிள்ளைகளுக்கு கல்வி வசதி இல்லை. இந்த 20-ம் நூற்றாண்டிலே கூட அவர்கள் கல்வி அறிவு இல்லாமல் இருக்கிறார்கள்.

அதே மாதிரி நரிக்குறவர்கள் இருக்கிறார்கள். நரிக்குறவர்களை இன்றைக்கு நாடோடி கூட்டம் என்று அறிவித்து அவர்களுக்கு பல சலுகைகள் அளித்து வருகிறார்கள். அது போதுமா என்றால் போதாது. மேலும் பல சலுகைகள் அளிக்க வேண்டும். அதைபோல கோனார் சமுதாயத்தையும் நாடோடி கூட்டமாக கருதி, பல்வேறு வசதிகள், சலுகைகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு கொடுத்த தலைவருக்கு நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 21

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் இந்த அவையில் வைக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கை மீது சில கருத்துக்களைக் கூற நான் முற்படுகிறேன்.

இந்த அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருக்கிற பணத்தின் அளவு கூறப்பட்டிருக்கிறது. 1967-68 ஆம் ஆண்டில் பிற்பட்ட வகுப்பினருக்காக 1,61,00,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்க, 1979-80 ஆம் ஆண்டில் 7,04,00,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக, 1967-68 ஆம் ஆண்டை விட பல மடங்கு கூடுதலாக 1979-80 ஆண்டுக்கு, அதாவது 6, 7 மடங்கு கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று பெருமைப்பட்டிருக்கிறார்கள், மகிழ்ச்சியடைகிறேன்.

ஆனால் பிற்பட்டோர் சமுதாய மக்கள் எந்த அளவுக்கு இந்த 10 அல்லது 12 ஆண்டுகளில் பெருகியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது உண்மையிலேயே அந்த அளவுக்கு போதுமான தொகை ஒதுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு அமைச்சரவர்கள் வைத்திருக்கிற அறிக்கையில் பார்க்கிறபோது, கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. அது மட்டுமல்ல. அவர்களுக்காக செலவிடுகின்ற நிதி ஒதுக்கமும் குறைந்து கொண்டே வருகிறது. 1976-77 ஆம் ஆண்டில் 78,841 மாணவர்களும், 1977-78 ஆம் ஆண்டில் 74,469 மாணவர்களும் படிப்பதாக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல 1976-77-ல் 295 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்: ஆனால் 1977-78ல் 291 இலட்சம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக, இந்தப் புள்ளிவிவரங்களைப் பார்க்கிற போது இந்த அரசானது பின்தங்கிய வகுப்பினர் மீது போதுமான அக்கரை செலுத்தவில்லை, உரிய தொகை ஒதுக்கவில்லை என்பது நிரூபணமாகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாணவர்கள் படிப்பைப் பார்க்கும்போது, இந்த அளவுக்குக் குறைந்து கொண்டே வருகிறார்கள். அதுமட்டுமல்ல, அவர்களுக்கு அரசு வழங்குகின்ற சலுகைகளும் அதே மாதிரி குறைந்து கொண்டே போகிறது. இப்போது 9-வது வகுப்புக்கு மேலுள்ள மாணவர்களுக்கு உதவித்தொகை கொடுக்கப்படுவதாகக் கூறப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், இந்த சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் இருக்கிற நிலையைப் பார்க்கும் போது, அவர்களுக்கு இந்த உதவித் தொகையை முதல் வகுப்பிலிருந்தே அனைவருக்கும் வழங்குவதுதான் சரிப்பொருத்த

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 ஏப்ரல் 2

மாக இருக்கும். ஆகவே, அரசாங்கம் அனைவருக்கும் முதல் வகுப்பிலிருந்தே உதவித்தொகை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

அத்தோடு தனியார்கள் நடத்துகின்ற சில விடுதிகள் இன்னும் இருக்கின்றன என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அந்த இடங்களிலே அரசு விடுதிகள் ஆரம்பித்தால் சிறந்ததாக இருக்கும். இந்தத் தனியார் விடுதிகளில் இருந்து படிக்கின்ற மாணவர்களுக்கு அந்த விடுதியின் மூலமாக பணம் வேளா வேளைக்குக் கிடைக்காத காரணத்தால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று கூறப்படுகிறது. ஆகவே வேளா வேளைக்கு இந்த நிதி உதவியை அந்த நிறுவனங்களுக்கு அளிக்க வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன். தனியார் விடுதிகள் இருக்கின்ற காலம் வரையில் இதனை வேளாவேளைக்குக் கொடுத்தால் நல்லது என்று சொல்லிக் கொள்கிறேன்.

இந்த மானியக்கோரிக்கை அறிக்கையில் அய். ஏ. எஸ்., அய். பி. எஸ். படிக்கின்ற மாணவர்களுக்குப் பயிற்சி தருவதற்காக அதாவது ட்ரெயினிங் தருவதற்காக வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக உள்ள புள்ளி விவரங்களைப் பார்க்கின்றபோது பல ஆண்டுகளில் ஒரு மாணவன்தான் தேறி இருக்கிறான். சில ஆண்டுகளில் 'நில்' என்ற ரிசல்ட்தான் அங்கே காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தப் பயிற்சி நிலையங்களின் மூலமாக எந்த அளவுக்கு மாணவர்கள் பயன்படுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். ஆகவே இந்தப் பயிற்சி நிலையங்களை மேலும் சீர்படுத்தி மாணவர்களுக்குப் பயன்தரத்தக்க விதத்தில் அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த மக்கள் என்று கூறுகின்றபோது மேற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களே இந்த மாநிலத்தில் இல்லையோ என்கிற அளவுக்கு பெருவாரியான சமுதாயங்கள் அந்தப் பட்டியலிலே சேர்க்கப்பட்டு விட்டார்கள். அப்படி சேர்க்கப்படுவதால் அதன் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. ஆகவே அவர்களுக்கென்று ஒதுக்கப்படுகிற பணம் போதாது என்கின்ற நிலை ஏற்படுகிறது என்பதைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பட்டியல் அதிகமாக வருகின்றபோது அதற்கான நிதியினையும் அதிகமாக ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக வன்னியர், தேவர், நாடார் ஆகிய இந்த மூன்று இனத்தவர்களும் பெருவாரியாக இருக்கிறார்கள். அதாவது கிட்டத்தட்ட 80 சதவீதம் மக்கள் இந்த வகுப்புகளைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அப்படி இருக்கின்றபோது இந்தச் சமுதாயத்தினருக்கென்று ஒதுக்கப்படுகிற விகிதாச்சாரத்தினபடி உத்தியோகங்கள் கிடைக்கின்றதா என்பதைப் பார்க்கின்றபோது உயர்நீதி

மன்றத்திலே இருப்பது போன்ற உயர் அதிகாரிகளின் எண்ணிக்கை ப்ரொப்போர்ஷனேட்டாக இல்லை. அதாவது சரியான விகிதாச்சாரம் கிடைக்கவில்லை என்பதை நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இதனை ஒரு குற்றச்சாட்டாகவே நான் கூற விரும்புகிறேன். பிற்பட்ட சமுதாயத்தினரின் பெயரைச் சொல்லி மற்றவர்கள் தான் இந்த உத்தியோகங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு விடுகிறார்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

உயர்நீதி மன்றத்தில் இப்போது இருக்கின்ற சூழ்நிலையைப் பார்க்கின்றபோது அங்கே 23 ஜட்ஜுகள் இருக்கிறார்கள். இவர்களில் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் 8 பேர்களும், முற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் 15 பேரும் இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. இது நியாயமா என்பதை இந்த அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே ஏற்பட்டிருக்கின்ற இந்த மாதிரி சீர்கேடுகளை எல்லாம் இனிமேலாவது நிவர்த்தி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பிற்பட்ட அரிசனங்களுக்கு வீட்டு வசதி எல்லாம் நாம் செய்து கொடுக்கிறோம். ஆனால் அரிசனங்களை விட மிகவும் மோசமான பிற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதி செய்வதற்கான ஏற்பாட்டை இந்த அரசு மேற்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறது என்பதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து சமுதாயத்தில் இருக்கின்ற ஒரு அநீதியை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மதம் மாறிய கிறிஸ்தவர்கள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே அவர்கள் இந்துக்களாக இருந்தபோது பிற்பட்டவர்கள். ஆனால் அவர்கள் ஏதோ காரணங்களால் மதம் மாறிய காரணத்திற்காக பிற்பட்ட வகுப்பிலே சேர்க்கப்படாமல் முற்பட்ட வகுப்பினராக எண்ணப்படுவது நிச்சயமாக ஒரு அநீதி என்று இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதிலே இன்னொன்றைக் கூற விரும்புகிறேன். என்னைப் போன்றவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கிறிஸ்தவர்களாக இருந்தாலும் கூட நாங்கள் பிற்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களாகத்தான் இருக்கிறோம். மாநிலத்தில் மற்ற பகுதிகளில் கூட இதே வகுப்பைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். ஆகவே இவர்களை எல்லாம் முற்பட்டவர்கள் என்று கருதினால் அது நிச்சயமாக சமூக அநீதி என்பதை இந்த அரசு உணர வேண்டும். ஆகவே எந்த சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் ஏற்கெனவே எந்த சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்களோ அதே சமுதாயத்தைச் சார்ந்தவர்களாகத்தான் அவர்கள் மதம் மாறிய பிறகும் கருதப்படவேண்டும். அதாவது அவர்களை அந்தப் பட்டியலிலேயே வைத்திருக்கவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

ஒவ்வொரு சமுதாயத்திலும், மதம் மாறியவர்கள் இருக்கிறார்கள். செக்குலார் ஸ்டேட் என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற நாம் மதம் மாறியவர்களுக்கும் எல்லா நன்மைகளையும் எல்லா சலுகைகளையும் செய்து கொடுக்கவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இப்போது ஒரு பிற்பட்டோர் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்களது அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். அது மட்டுமல்ல, மத்திய சர்க்காரால் பேக் வார்ட் கிளாஸ் கமிஷன் என்று ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. மாநிலத்தில் இருக்கின்ற பல்வேறு நிலைமைகளையும் ஆராய்ந்து, முற்போக்கு வகுப்பினர் என்று கருதப்படுகின்ற பல சமுதாயத்தினர் பிற்பட்ட சமுதாயத்தினராகத்தான் இருக்கிறார்கள். முக்கியமாக மதம் மாறியவர்களை பிற்பட்ட சமுதாயத்தில் சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, பிற்பட்ட வகுப்பினர்களில் பலர் மிகவும் ஏழ்மையான நிலையில் இருக்கிறார்கள். குறிப்பாக பனைமரத் தொழிலாளர்கள் பல சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். இந்தத் தொழில் மிகவும் கடுமையான தொழில். ஆகவே இவர்களை மோஸ்ட் பேக்வார்ட் இனத்தில் மட்டுமல்ல, ஷெட்யூல்டு காஸ்டை விட மோசமான நிலையில் இருந்து வருகிறார்கள். ஆகவே இவர்களை ஸ்பெஷல் கேட்டகரியாக கருதி, அவர்களுக்கு விடுதலை கட்டிக்கொடுப்பது, அவர்களது குழந்தைகள் படிப்பதற்கு பல சலுகைகள் இவைகளை எல்லாம் செய்து கொடுக்க திட்டங்களை கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைப் பெற்றுக்கொள்கிறேன்.

*திரு. சி. ராமநாதன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவமைச்சர் அவர்கள் கொண்டு வந்த பிற்பட்ட நலத்துறை மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாநிலத்தில் பெரும்பாலானவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்வதற்கு எந்தவிதமான வழியும் இல்லை. பின்தங்கிய நிலையில் அரிசன மக்களைவிட அதிகமான மோசமான நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இருந்தாலும் இந்த அரசு அப்படிப்பட்ட மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக 1969-ம் ஆண்டு முதற்கொண்டு பிற்பட்டவர்களுக்கென்று ஒரு துறையை ஏற்படுத்தி, 1974-ல் அதற்கு என்று தனியாக அதிகாரிகளையும் நியமித்து செயல்படுத்த முற்பட்டிருந்தும், இன்னும் கிராமப்புறங்களில் உள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவில்லை. இதை இங்கு கொடுக்கப்

1979 ஏப்ரல் 2] [திரு. ஏ. ராமநாதன்]

பட்டிருக்கும், வளர்ச்சியை குறிக்கும் பட்டியலில், 1973-74-ல் கல்வி பயிலுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை குற்ற பரம் புரையிலிருந்து நீக்கப்பட்டவர்களுடைய பட்டியலில் 67,772 பேர்கள் உயர்நிலைப்பள்ளியில்படித்ததாகவும், 1973-74-ல்65,876 பேர்கள் என்றும், இவ்வாறு தொடர்ச்சியாக இதனுடைய வளர்ச்சி குறைந்து கொண்டே வந்து, 1977-78-ல் 1,10,639 பேர் என்று உயர்ந்திருக்கிறது. அதைப்போலவே, பிற்பட்டோர் வகுப்பில், 1972-73-ல் 1,04,486 பேர் என்றும், 1973-74-ல் 94,032 பேர் என்றும் இவ்வாறு குறைந்திருக்கிறது. பின்னால் 1977-78-ல் 1,07,501 என்றும் உயர்ந்திருப்பதை பார்ப்போமேயானால், இது அரசினுடைய உதவியைப் பொறுத்துத்தான். இந்த சமுதாயத்திலுள்ள மக்கள் விரும்பி படித்து வருகிறார்கள் என்பது புலனாகிறது. ஏனென்றால் வருடவருவாய் குறைந்திருந்த காரணத்தால், சலுகை பெறுகின்றவர்களின் தொகை குறைவாக இருந்தது. அந்த வரம்பை அதிகப்படுத்திய பின்னால், 2,500 ரூபாய் என்று உயர்த்தியதின் காரணமாக படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறது. இதில் 2,500 என்று இருப்பதை இன்னும் அதிகமாக்கி 3,500 என்ற அளவுக்கு உயர்த்தினால் இன்னும் அதிகமான மாணவர்கள் படிக்க வாய்ப்பு இருக்கும் என்பதை கூறிக் கொள்ளவிரும்புகிறேன்.

[மற்பகல் 11-50]

அடுத்து, விருத்தாசலத்திலே பிற்பட்டவர்கள் விடுதி இருந்தும், அவர்கள் தங்குவதற்கு அரசுக்கட்டிடம் வசதியில்லாத நிலைமை இருக்கிறது. எனவே, அங்கே ஒரு விடுதியைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர்களுக்கு அங்கே பகுதிநேர படிப்பு வசதி செய்துத் தரப்பட வேண்டும். நகரங்களிலே உள்ள மாணவர்கள் அறிவு பெறுவதற்கு வாய்ப்பு வசதி இருப்பது போல் கிராமங்களிலே உள்ள மாணவர்கள் பொது அறிவு பெறுவதற்கு நமது அரசு அதிக செய்திதாள்களை பள்ளிக்கூடங்களிலே கொடுத்து, அதன்மூலமாக அதிகப்படியான கல்வி அறிவு பெறுவதற்கு வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதுகவிர, பின்தங்கிய மாணவர்களுக்கு படிப்பதற்கு தனிப் பயிற்சி அளிக்க வேண்டும். இப்படி கிராமங்களிலே உள்ள பள்ளிகளிலே தனிப் பயிற்சிக்கு வசதி செய்தால், அறிவிலே பின்தங்கியுள்ள மாணவர்கள் படித்து முன்னேறுவதற்கு வசதியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொண்டு, இந்த அளவிற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. என். பழனிவேல் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, 1979-80 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக நமது தமிழகஅரசு ரூ. 7.01 கோடி தொகை ஒதுக்கியுள்ளது. இந்த தொகையானது நமது அரசுக் கூறிக்கொள்வது போல் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய எண்ணத்தை, அவர்களுடைய ஆட்சி எப்படி நடந்ததோ அதேபோல் நடத்துகிறோம் என்று கூறிக் கொள்ளும் இந்த அரசு, அவர் ஆண்ட காலத்தில் 1967 ஆம் ஆண்டு இதே துறைக்கு ஒதுக்கிய தொகை ரூ. 82.90 இலட்சம் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால், அந்தக் காலத்தில் இந்தத் துறையை, சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் 31,409 பேர்கள் என்று சொல்லப்பட்டது. அதே நிலையை நாம் கணக்கிட்டுப் பார்க்கும்போது, 1977-78 ஆம் ஆண்டு 1,81,970 பேர்கள் கல்லூரிகளிலும், பள்ளிகளிலேயும் படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 29,51,000 ரூபாய் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆகவே, மாணவர்களின் தொகை 4 பங்காக உயர்ந்திருக்கிறது; ஒதுக்கப்பட்டுள்ள உதவித் தொகை 4 பங்காக இல்லை. ஆகவே, இது ஏமாற்றக்கூடிய அளவிலே இருக்கிறது. அது மட்டுமல்ல. அவர்களுக்கு கொடுக்கப்படக்கூடிய தொகை இன்றையதினம் அவர்கள் வாழ்க்கையை நடத்துவதற்கும், அவர்கள் இந்தப் பிரச்னையை மறந்து, கல்வித் துறையிலே கவனம் செலுத்துவதற்கும் முடியாமல் இருக்கிறது. ஒரு பக்கம் உயர்த்த வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கின்ற நேரத்தில், அவர்களுக்கு ஏற்கனவே இருந்த தொகையைக் காட்டிலும் குறைவாக ஒதுக்கியிருப்பது சரியல்ல. எனவே அவர்களுக்குத் தொகையை அதிகப்படுத்த வேண்டும்.

அது மட்டுமல்ல. இன்றையதினம் ரூ. 2,500 என்று வருமான வரம்பு வைத்திருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், மற்றும் குற்ற பரம்பரையினருக்கும் இந்த வருமான வரம்பே என்னைப் பொறுத்தவரையில் தேவையில்லை. ஆனாலும், இப்படிச் சொல்கிறபோது ஓரளவு ரூ.5,000 என்று வருமான வரம்பை உயர்த்தினால், அவர்கள் அதைப் பயன்படுத்தி, அவர்கள் நிலைமையை உயர்த்திக்கொண்டு முன்னேறி வருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

நெருக்கடி நிலை அமுலிலே இருந்த காலத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சி ஒரு பிற்பட்ட குடும்பத்தில் எத்தனை பேர்கள் இருந்தாலும், அவர்கள் இந்தச் சலுகைகைப் பெறலாம் என்றிருந்த நிலைமையை மாற்றி, ஒரு குடும்பத்திலே இரண்டு பேர்கள் தான் இந்த சலுகையை பெறலாம் என்று செய்திருக்கிறார்கள். ஆகவே, பழைய நிலையை

1979 ஏப்ரல் 2] [திரு. என். பழனிவேல்]

கொண்டு வருவதற்கு, இந்த அரசு ஒரு குடும்பத்திலே 2 பேர்கள் என்றில்லாமல், எத்தனை பேர்கள் இருந்தாலும், எல்லோரும் இந்த சலுகையைப் பெறலாம் என்ற நிலைக்கு கொண்டு வர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : இந்திரா காங்கிரஸ் அரசு இப்படி ஒரு சட்டம் போட்டிருக்கிறது என்று சொல்கிறார். எந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு பேசுகிறார் என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. என். பழனிவேல் : இந்திரா காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆட்சி செய்து கொண்டிருந்த நேரத்தில் எமர்ஜன்சியை டிக்ளேர் செய்து ஏழை எளியவர்கள் வயிற்றில் அடிக்கக்கூடிய பல்லாயிரக் கணக்கான சட்டங்களைப் போட்டார்கள். அதிலே இதுவும் ஒரு சட்டம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். சில நாட்கள் அவகாசம் கொடுத்தால் ஆதாரத்தைத் தருகிறேன்.

இவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை போதுமானதல்ல. குற்றப்பரம்பரை என்று சொல்லப்படுகிறவர்களுக்கு மிகவும் குறைவான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

(திரு. துரை முத்துசாமி எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் பேச முடிந்த பிறகு கேளுங்கள்.

திரு. துரை முத்துசாமி : * * * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. துரை முத்துசாமி அவர்கள் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் ஆதாரம் இல்லாமல் பேசுவதாகக் குறிப்பிட்டார்கள். நெருக்கடி காலத்தில் ஏழை எளியவர்களுக்கு எந்த விதமான முன்னறிவிப்பும் இல்லாமல் குடும்பக்கட்டுப்பாடு என்ற பெயரால் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்தார்கள். இந்தியா முழுவதும் இவ்வாறு நடந்திருக்கிறது. இதற்கு ஆதாரம் வேண்டுமா? அரசியல் தலைவர்களை எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல் வருஷக் கணக்கில் சிறையில் அடைத்து வைத்தார்கள். அவர்கள் ஜாமீனில் கூட வெளியே வர முடியவில்லை. குடும்பத்தில் இருப்பவர்கள் சென்று அவர்களைப் பார்க்க முடியவில்லை. இதற்கெல்லாம் என்ன ஆதாரம் வேண்டு

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மென்று கேட்கிறார்கள். இந்திரா காங்கிரஸ் அரசு நெருக்கடி காலத்தில் செய்த அக்கிரமங்கள், அநியாயங்கள் பல. அப்போது பிற்பட்ட மக்களும், அரிசன மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

எனவே, அத்தக் குறைகளையெல்லாம் இந்த அரசு போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. சோ. பாலகிருஷ்ணன் எழுந்து நின்றார்.)

திரு. துரை முத்துசாமி : அப்படியானால் நாங்கள் வெஸ்ட் பெங்காலில் நடப்பதைப் பற்றியெல்லாம் இங்கே பேசலாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் பேசி முடித்த பிறகு திரு. துரை முத்துசாமி அவர்கள் பேசலாம் என்றுதான் சொன்னேன். ஏன் அவர்கள் ஆந்திரப்படுகிறார்கள் என்று தெரியவில்லை. அர்த்தமில்லாமல் கோபப்பட வேண்டாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : *** ***

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதிலே விவாதம் வேண்டாம், தயவு செய்து உட்காருங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : *** ***

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கோதண்டராமன் அவர்கள் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

*திரு. செ. சிவசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை போதுமானது அல்ல. இது கடலில் கரைத்த பெருங்காயம் மாதிரி இருக்கிறது. நூற்றுக்கு 80 சதவீதம் மக்கள் அரிசன, பிற்பட்ட மக்களாக தமிழ்நாட்டில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மக்கள் வாழ்க்கைத் தரம் உயர இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை கடலில் கரைத்த பெருங்காயமாகத்தான் இருக்கிறது. இந்த தொகையை அடுத்த ஆண்டாவது அதிகமாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்டவர்களின் நிலை மோசமாக இருக்கிறது. உங்களுடைய குறிப்பில் அவர்களுக்கு உண்டி, உறையுள் வசதிகள் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எந்த அளவில்

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

1979 ஏப்ரல் 21] [திரு. செ. சிவசாமி]

கொடுக்கிறார்கள் என்று தெரியவில்லை, பிற்பட்டவர்களுக்கு ஹாஸ்டல் வசதி கிடையாது. இருக்கின்ற ஹாஸ்டலிலும் 35 அல்லது 40 பேருக்கு மேல் தங்க வசதி கிடையாது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் பரமக்குடி, நயினார் கோயில், இளையாங்குடி போன்ற பகுதிகளில் ஹாஸ்டலில சேரவேண்டுமென்று ஆயிரம் பேர் மனுப் போட்டால் 35 பேருக்குக் கூட இடம் கிடைக்க முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதுதான் பிற்பட்ட மக்களுக்குச் செய்யும் உதவியா என்று கேட்க விரும்புகிறேன்.

[நண்பகல் 12-00]

ஆதலால் அங்கு இருக்கக்கூடிய ஆசிரியர்களை அதிகப்படுத்த வேண்டும். அங்கே தங்கிப் படிக்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்தவேண்டும்.

மாணவர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு கிட்டத்தட்ட, கல்வி மானியம் வரக்கூடிய நேரத்திலே கல்வி அமைச்சர் கொடுத்த குறிப்பிலே 2,500 வருமானம் என்று இருப்பதை நிறுத்தி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இப்போது அது மீண்டும் இதிலே தலைதூக்குகிறது. இங்கே இந்தத் துறையின் சார்பாகத் தரப்பட்டிருக்கிற குறிப்பிலே 2,500 இருப்பதாகப் போடப்பட்டிருக்கிறது. ஏன் இந்த பாகுபாடு? பிற்பட்டோருக்கு ஒரு முறை, மற்றவர்களுக்கு ஒரு முறை என்று பாகுபாடு தேவையா என்று கேட்க விரும்புகிறேன். இதிலே கிளாரிபிகேஷன் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கேரளாவில் இருப்பதைப்போல் 8 ஆயிரம் என்ற வருமானத்தின் அடிப்படையிலே பிற்பட்டோருக்கு நன்மைகள் புரிகிற வகையில் அந்தக் குழந்தைகள் படிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

அடுத்து, டெஸ்டிட்யூஷன் சர்டிபிகேட் கொடுப்பதைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். 300 ரூபாய் என்று நிர்ணயிக்கப் படுகிறது. ஒரு தொழிலாளருக்கு ஒரு நாளைக்கு 7 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று சட்டத்தை போட்டிருக்கிறார்கள். அப்படிப்பார்த்தால் ஒரு நாளைக்கு 7 ரூபாய் வீதம் வருடத்திற்கு 2,555ரூபாய் வந்துவிடுகிறது. ஆகவே 1,000 ரூபாய் என்ற அடிப்படையில் அந்த சர்டிபிகேட்டுக்கு நிர்ணயம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்களில் 22 காசுகள் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அந்த 22 காசுகள் சரியாக விநியோகிக்கப் படவில்லை. அந்த உணவு வழங்கல் இன்றைக்குப் பாதிக்கப் பட்டிருக்கிறது. அந்த குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடிய

உணவிலே மோசடி நடக்கிறது. குழந்தைகள் தான் சமைக்க வேண்டியிருக்கிறது. குழந்தைகள் தான் பாத்திர பண்டங்களை கொண்டுவர வேண்டியிருக்கிறது. குழந்தைகள் தான் அந்த பாத்திர பண்டங்களை கழுவ வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் செய்தாலும்கூட அவர்கள் சாப்பிடுகிறபோது, சம்பந்தா சம்பந்தம் இல்லாதவர்கள் வந்துவிடுகிறார்கள். அதன் காரணமாக அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய உணவும் குறைந்து விடுகிறது.....

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மன்ட்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசாமி அவர்கள் சில குற்றச்சாட்டுக்களை இங்கே சொன்னார்கள். ஒட்டுமொத்தமாக திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 22 காசுகள் கொடுக்கப்படுகின்றன, அதிலே தவறுகள் நடக்கின்றன என்று சொல்கிறார்கள். குறிப்பாக எந்த எந்த இடங்களில் தவறுகள் நடக்கின்றன என்று எடுத்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக அரசு அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கும். ஆனால் பொதுப்படையாக ஆதாரம் இல்லாமல் குற்றச்சாட்டுகளை வைப்பது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவதை எல்லாம் அமைச்சர்கள் குறித்து வைத்துக் கொண்டு கடைசியிலே பதிலளிக்கும்போது பேசலாம், நேரம் இல்லை.

திரு. செ. சிவசாமி: டோபிகானா சம்பந்தமாக பல இடங்களிலிருந்து மனுக்கள் வந்திருக்கின்றன. அவர்களுக்கு இன்னும் கட்டிக் கொடுக்கப்படவில்லை. நாங்களே அவைகளைக் கட்டிக்கொள்கிறோம், இடமாவது கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அதைக்கூட இந்த அரசு செய்யத் தயாராக இல்லை. அதைச் செய்யவேண்டும்.

குற்றப்பரம்பரைச் சட்டத்தின் கீழ் வருகிறவர்களுக்கு 2,500 ரூபாய் கிணறு வெட்டுவதற்காகக் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அந்த குற்றப் பரம்பரையினர் பெரும் பகுதி மதுரை ஜில்லாவிலே தான் இருக்கிறார்கள். மதுரை ஜில்லாவிலே 2,500 ரூபாய் கிணறு வெட்டுவதற்கு போதுமானதா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நீங்கள் 2,500 ரூபாய் குற்றப் பரம்பரையினரைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கிறோம் என்று அந்த லிஸ்டிலே பெயர் வருவதற்காகத்தான் செய்கிறீர்கள். அடுத்து..... (மணியடிக்கப்பட்டது)

திரு. ரா. மார்க்கபந்து: தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய கனவுகளை நனவாக்க முயற்சித்துக் கொண்டிருக்கிற இந்த அரசுக்கு அதை ஏற்றுக்

1979 ஏப்ரல் 21 [திரு. ரா. மார்க்கபந்து]

கொண்டிருக்கிற சில முயற்சிகளுக்கு முதலாவதாக நான் உறுப்பினர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக மனமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விவாதத்திலே கலந்துகொண்டு பேசிய அருமை நண்பர்கள் ஜேம்ஸ், வி. கே. சின்னசாமி போன்றவர்கள் சில கருத்துக்களை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசாங்கத்திலே இப்போது ஒரு பேக்வர்ட் கிளாஸஸ் கமிஷன் அமைந்திருக்கிறார்கள். அதிலே தமிழகத்திலேயிருந்து ஒரு ரெப்பரசென்டேடிவ்கூட இல்லை. ஆகவே, இந்த அரசாங்கம் அதற்கு வேண்டிய முயற்சியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசு இப்போது நியமித்திருக்கின்ற பிற்பட்டோர் நல ஆணைக் குழுவில் இருக்கின்ற சுப்பிரமணியம் என்ற உறுப்பினர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். நம்முடைய சென்னை நீதிமன்றத்திலே இருக்கிற—புதிதாக நியமிக்கப்பட்டிருக்கிற சண்முகம் அவர்களுடைய சகோதரர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனம் அமைச்சரவர்கள் இதையெல்லாம் குறித்து வைத்துக் கொண்டு இறுதியிலே பதில் சொல்லுங்கள். இடையிடையே விளக்கம் கொடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்திலே கடைப்பிடிக்கின்ற பின் தங்கியோர் பட்டியலை இந்த அரசாங்கம் ரெவிஸ் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். யார் யாருக்குச் செய்யப்பட வேண்டும், யார் யார் சேர்க்கப்பட வேண்டும் என்பதிலே அரசாங்கம் கவனம் செலுத்தி, இருக்கின்ற பட்டியலைத் திரும்பவும் ரெவிஸ் செய்து, புதிதாகப் பட்டியலை இந்த அரசாங்கம் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக ஜீ. ஓ. எம். எஸ். 437, தேதி 15.5.72-லே அரசாங்கம் மோஸ்ட் பேக்வார்ட் கிளாசஸ் என்று அங்கீகரித்திருக்கிறார்கள். இதை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பின்தங்கியோருக்கு 31 சதவீதம் என்று இருப்பதைப்போல, குறைந்தபட்சம் 15 சதவீதத்தையாவது ஒதுக்கி, சமூகவாரியாக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஜீ. ஓ. வில் 39 சமுதாயத்தினரைச் சேர்த்திருக்கிறார்கள். அரிசனங்கள் என்று சொல்லும் மக்களைவிடக் கீழான நிலையிலே இருக்கிற மக்கள் இருக்கிறார்கள். இதில் இரண்டில் ஒன்றைச் சொல்ல

வேண்டும். ஒன்று, இவர்களை மோஸ்ட் பேக்வார்ட் கிளாஸ் என்று அங்கீகாரம் செய்கிறோம் என்று சொல்லுங்கள். இல்லையென்றால், 39 சமுதாயத்தினரையும் வெட்டூல்ட் காஸ்ட் வகுப்பில் சேர்க்கவேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த அரசுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். 23 நீதிபதிகள் இருக்கிறார்கள் என்று ஜெம்ஸ் அவர்கள் சொன்னார்கள். அந்த 23 நீதிபதிகளிலே— நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டு ஏறக்குறைய 115 ஆண்டுகள் ஆகின்றன, ஆனால் ஒரு வன்னியர் கூட இல்லை. இந்த அரசாங்கம் பெரிய மனது வைத்து இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களையும் இங்கேயிருந்து ரெகமண்ட் செய்து அனுப்பினால் அது அங்கே தடைப்பட்டு நின்றுவிட்டது. அதை இப்படியே விட்டுவிடாமல் முயற்சி செய்து அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களையும் நீதிபதியாக நியமிக்க வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் இதை இங்கே சொல்கின்றபொழுது என்னை ஜாதிய வெறி உள்ளவன் என்று யாரும் கருத வேண்டாம். ஏனென்றால் சமூக நீதி வேண்டும் என்று பெரியார் கேட்டிருக்கிறார். சமூகஅநீதியும் இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டதாக நான் சொல்ல வில்லை. கடந்த ஆண்டுக்கால ஆட்சியிலே ஆரம்பிக்கப் பட்டதாலே இப்படிப்பட்ட நிலைமைகள் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது.

செகரட்டேரியட் என்று சொல்லும் நோத்தில் 'ஹெட் ஆப் தி டிபார்ட்மெண்ட்' 23 பேர் இருக்கிறார்கள். ஆனால் அதில் ஒரு வன்னியர்கூட இல்லை. இணைச் செயலாளர்கள் 13 பேர் இருக்கிறார்கள், அதில் ஒரேயொரு வன்னியர்தான் இருக்கிறார். டெபுடி செக்ரட்டரீஸ் 67 பேர் இருக்கிறார்கள், அதில் ஒரு வன்னியர்கூட இல்லை. டைரக்டர்கள் 64 பேர் இருக்கிறார்கள், அதில் வன்னியர் ஒருவர்கூட இல்லை. டெபுடி டைரக்டர்கள் 105 பேர் இருக்கிறார்கள், அதில் வன்னியர்கள் இரண்டு பேர்கள் இருக்கிறார்கள். அசிஸ்டண்ட் டைரக்டர்கள் 137 பேர் இருக்கிறார்கள், வன்னியர் ஒருவர்கூட அதில் இல்லை. கலெக் டர்கள் 15 பேர்கள் இருக்கிறார்கள், அதில் ஒருவர் வன்னியராக இருக்கிறார். எஸ். பி. க்கள் 25 பேர் இருக்கிறார்கள், அதில் வன்னியர் ஒருவர் இருந்தார், அவரும் சஸ்பெண்ட் செய்யப் பட்டிருக்கிறார். காலேஜ்பிரின்சிபால்கள் 186பேர்களில் 3பேர்கள் தான் வன்னியர்கள். மெடிகல் காலேஜ் பிரின்சிபால்கள் 8 பேர்களில் ஒருவர்கூட வன்னியர் இல்லை. இப்படிப்பட்ட நிலைமைகளை ஏன் உருவாக்குகிறீர்கள்? இந்தச் சமுதாயம் என்ன நாட்டிலே வாழ முடியாத சமுதாயமா? என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 2]

திரு. மு. செல்வராஜ்: பேரவைத் தலைவரவர்களே, எஸ். பி. திண்டிவனம், செல்வராஜ் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவர் ஒன்றும் சஸ்பென்ஷனில் இல்லை, வேலையிலேதான் இருக்கிறார்.

திரு. ரா. மார்க்கபந்து: நான் நன்றி சொல்லிக்கொள்கிறேன். என்னைப் பேச விடுங்கள். இந்த ஆண்டு தகுதி, திறமை அடிப்படையில் மெடிகல் காலேஜ் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். 1,200 மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறபொழுது மூன்றே மூன்று வன்னியர்களைத்தான் தேர்ந்தெடுத்திருப்பதாக அறிகிறோம். அதனால் மிகவும் வேதனைப படுகிறோம்.

திரு. ஜே. ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள், வன்னியர்கள், தேவர், நாடார்கள் 80 சதவீதம் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். குறிப்பிட்ட வன்னிய சமுதாயம் நான்கில் ஒரு பங்கு இருக்கிறது. அதிலே கிடைத்த இடங்கள் 36 தான் என்றால் அது ஒத்துக்கொள்ள முடியாத ஒன்று. ஆகவே, இந்த அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே,....

திரு. துரை முருகன்: அமைச்சர்கள் எத்தனை பேர் என்பதைச் சொல்லாமல் விட்டுவிட்டீர்களே,

திரு. ரா. மார்க்கபந்து: அமைச்சர்களாக இருப்பவர்களிலே ஒரே ஒருவர் என்று சொல்கிறார்கள். அதையும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரசாங்க அலுவலிலே இருக்கும் வன்னிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் on the verge of promotion இருக்கிறபொழுது they are purposefully victimised என்ற முறையிலே இருப்பதாலே அந்த நிலைமைக்கு வருபவர்கள் விக்டிமைசேஷன் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-10]

அனிமல் ஹஸ்பெண்ட்ரி டிபார்ட்மெண்டிலே டைரக்டராக வரவேண்டியவர் அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார். நீதித் துறையிலே ஜில்லா ஜட்ஜாக வரவேண்டியவர் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார். சி. இ. யாக வரவேண்டியவருக்குக் கொடுக்காமல் ஜூனியர்களை மேலே தூக்கி வைத்து, சீனியரை நிறுத்தி வைத்திருக்கிறீர்கள். இதுபோன்ற பல துறைகளிலே இந்தச் சமுதாய மக்கள் எல்லாம், இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த அதிகாரிகள் எல்லாம் they have been purposely victimised.

ஆகவே, நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை, இந்த அரசாங்கமே கணக்கெடுத்து என்ன குறைகளைச் செய்திருக்கிறார்கள், என்ன தவறுகள் செய்திருக்கிறார்கள் என்று உண்மையிலே செய்திருக்கிறார்களென்றால் தண்டியுங்கள், நான் வரவேற்கிறேன். ஆதாரம் இல்லாத குற்றச் சாட்டாகச் சொல்லி, இந்தச் சமுதாயத்திலே இருக்கிறவர்களைப் பழிவாங்க வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, பிற்பட்டோர் நலத் துறை மானியக் கோரிக்கை மீது பேசுவதற்காக வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய நம்முடைய உழைப்பாளர் கட்சித் தலைவர் மார்க்கபந்து அவர்கள், அவர்களுடைய இனத்தைப் பற்றி, அவர்கள் என்னென்ன பதவியிலே இருக்கிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் சொல்லி, கடைசியாக ஒரு அமைச்சர் இருக்கிறார், நன்றி, இன்னொரு அமைச்சர் வேண்டுமென்று சொல்லி முடித்துக்கொண்டார். நான் குறிப்பிடுவது, தமிழகத்திலே கிட்டத்தட்ட 1/4 பகுதி முத்திரையர் சமுதாயத்தினர் (அதாவது 1 கோடி பேர்கள்) இருக்கிறார்கள். அவர்கள் அதிகமான அளவிலே சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து இந்த அவைக்கு அனுப்பியிருக்கிறார்கள். கடைசியில் அந்தந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் பின்னால், தேர்ந்தெடுத்த மக்களுக்கு எந்தவிதமான உருப்படியான சலுகைகளும், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் செய்யவில்லை என்பதை நான் முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

1967-68-ல் பிற்பட்டோர் நலனுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1·61 கோடியாக இருந்ததைப் புரட்சித் தலைவர் அரசு 1979-80-ல் ரூ. 7·04 கோடியாக உயர்த்தியிருப்பதற்கு என்னுடைய பாராட்டுக்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அரிசன பிற்பட்டோர் மக்களுக்காக திட்டம் தீட்டி செயல்படுத்தி வரும் இந்த அரசுக்கு வேண்டுகோளாக சில கருத்துக்களை நான் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டிலேயே ஏறத்தாழ 1 கோடி முத்தரையர்கள் 21-க்கு மேற்பட்ட பெயர்களில் வாழ்ந்து வருகிறார்கள். தேர்தல் காலங்களில் முத்தரையரும் தமிழ்நாட்டில் பெரும்பான்மையான சமூகங்களில் ஒன்று என்று ஏற்றுக்கொண்டு அவர்களின் ஓட்டுகளை பெற்ற தலைவர்கள் பலர் தேர்தல் முடிந்ததும் இச் சமூகத்தையே மறப்பதோடு மட்டுமல்லாது வேறு சமூகத்தைச் சார்ந்தவர்கள்தான் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

1979 ஏப்ரல் 2] [திரு. எம். ஆர். கோவேந்தன்]

எனக்குத் தெரிந்தவரையில் புரட்சித் தலைவர் அவர்கள் தேர்ந்து எடுக்கப்பட்ட அருப்புக்கோட்டை தொகுதியிலிருந்து இராமநாதபுரம், சமயநல்லூர், காரைக்குடி, லால்குடி, கிருஷ்ணராயபுரம், மேலூர், வேலூர், காட்பாடி, திருத்தணி வரை 60-க்கு மேற்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை 10 ஆயிரம் வாக்குகளிலிருந்து 25 ஆயிரம் வரையில் அளித்து வெற்றி பெறச் செய்து இந்த அரசினை அமைக்க உதவி உள்ளார்கள்.

குடியாத்தத்தில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களையும் குளித்தலையில் டாக்டர் கலைஞர் அவர்களையும் தேர்ந்து எடுத்தது முத்தரையர் சமுதாயம். ஆனால் அவர்கள் முன்னேற்றத்திற்கு ஏதும் செய்யவில்லை. இதுவரையில் இருந்த எந்த அரசும் ஏதும் செய்யவில்லை. எந்த அரசியல் கட்சியும் இச் சமூகத்தை இதுவரையில் கவனிக்கவில்லை.

ஏற்கனவே இம் மன்றத்தில் நான் கூறியது ஒரு கோடி வரை ஜனத்தொகை உள்ள முத்தரையர்களில் 10 சதவீதம் தவிர மற்ற அத்தனைபேரும் கூலி வேலை செய்து பிழைக்கக் கூடிய நிலையில் உள்ளார்கள். குறிப்பாக, அரிசன மக்களை எந்த அளவிற்கு மதிக்கிறார்களோ அந்த அளவிற்குக் கூட இவர்களை மதிப்பதில்லை. எப்படி நடத்தப்படுகிறார்கள்? அதைவிட கேவலமாக நடத்தப்படுகிறார்கள்.

தமிழ்நாட்டில் எந்த மாவட்டமானாலும் முத்தரையர்கள் மிகவும் பின்தங்கிய முறையில் உடுக்க நல்ல உடையில்லாமல், நல்ல தொழில் செய்து பிழைக்க வழியில்லாமல் தனியார் நிலங்களில் கூலி வேலை செய்து நிலத்தை குத்தகைக்கு உழுது கொண்டிருக்கிறார்கள், பண்ணையார்களிடம் பரம்பரையாக அடிமைகள் போல் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக அரிசன மக்களைவிடக் கேவலமாக இவர்கள் நடத்தப்படுகிறார்கள். பல இடங்களில் முத்தரையர்கள் ஆதிக்கம் பெற்ற சமூகத்தினரால் தீண்டத் தகாதவர்களாகவும் அடிமைகளாகவும் நடத்தப்படுகின்றனர். டீ கடைக்கு டீ குடிக்கச் சென்றால் கூட மற்ற வகுப்பினர்களுடன் உட்கார்ந்து டீ குடிக்க முடியவில்லை. அப்படிக் குடித்தால் அவர்கள் தாக்கப்படுகிறார்கள். உதைக்கப்படுகிறார்கள். ஒரு சிலர் செருப்புப் போட்டு தெருக்களில் நடந்தால் ஏன் நடந்தாய் என்று அந்த செருப்பாலேயே தாக்கப்படுகிறார்கள். இவர்களுக்குத் தீண்டாமைச் சட்டத்தின்படி பாதுகாப்பு அளித்து சம அந்தஸ்துடன் நடமாட புரட்சித் தலைவரின் அரசு வழிவகைகள் செய்ய வேண்டுகிறேன். முத்தரையர் சமூகத்தில் ஏறத்தாழ ஒரு கோடி பேர்கள் இருந்தும் பெரும்பான்மையோர்க்கு படிக்க வாய்ப்பில்லை. படித்தவர்கள் மிகமிகக் குறைவு. சுமார்

[திரு. எம். ஆர். கோவேந்தன்] [1979 ஏப்ரல் 2

இரண்டாயிரம் பேர்கள் படித்துப் பட்டம் பெற்றிருந்தும் வேலை வாய்ப்பின்றி அல்லல்படுகிறார்கள். அரசாங்க வேலைகளில் அடிமட்டத்தில் இருப்பவர்கள் 50 பேருக்கு மிகாது அதிகாரிகள் நிலையில் இருப்பவர்கள் ஒரிருவரே. முத்தரையர்க்கு இதுவரை குரூப் ஒன்று தேர்வு நியமனங்களான, கோட்டாட்சித் தலைவர், காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் போன்ற பதவிகள் அளிக்கப்பட்டதேயில்லை. இந்த ஆண்டாவது கோட்டாட்சித் தலைவர், துணைக் கண்காளிப்பாளர் பதவி அளிக்குமாறு புரட்சித் தலைவரின் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். உயர் நீதிமன்றத்தில் முத்தரையர் சமுதாயத்திற்கு நீதிபதி பதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு எம். எல். சி. பதவி அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பட்ட நிலையில் வாழும் முத்தரையர்களுக்கு, அரிசனங்களுக்கு அளிக்கப்படுவது போல் கல்வி மற்றும் எல்லா சலுகைகளும் அளிக்கப்படவேண்டும். தொழில் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, விவசாயக் கல்லூரி, சட்டக் கல்லூரி ஏனைய கல்லூரிகளில் 25%-க்கு குறையாமல் இடம் ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாடு தேர்வு ஆணைக் குழுவில் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும். தமிழ்நாடு பிற்பட்டோர் நல ஆலோசனைக் குழுவில் முத்தரையர் சமூகத்தினர்க்குப் பிரதிநிதித்துவம் அளிக்க கேட்டுக்கொள்கிறேன். கோவை மாவட்டத்தில் இரர்யர்பாளையம் வலையர்கள் நடத்திவரும் பள்ளியினையும் மற்ற வலையர் பள்ளிகளையும் அரசு பிற்பட்டோர் நலத் துறையில் ஏற்று நடத்த வேண்டுகிறேன்: இருபத்தொரு வழங்கு பெயர்களில் வாழும் முத்தரையர் அனைவரும் முத்தரையரே என்று அறிவித்து மிகவும் பிற்பட்ட வகுப்பில் சேர்க்க வேண்டுகிறேன். சரியான புள்ளி விவரங்கள் எடுத்த பிறகு உப்பிலியபுரம் தொகுதியை பழங்குடியினர் தனித்தொகுதியாக மாற்றுவதை ஆலோசிக்க மைய அரசினைப் புரட்சித் தலைவரின் அரசு பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[மணி அடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.]

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சனை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டாம் உட்காருங்கள். திரு. துரைமுருகன்.

திரு. துரை முருகன்: பேரவைத் தலைவர் அவர்களே. பிற்பட்டோர் நல மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கட்சியின் சார்பிலே நான் சில கருத்துக்களைக் கூறக் கடமைப்

பட்டிருக்கிறேன். ஏறத்தாழ 4½ கோடி மக்களின் பிரச்சனைதான் இந்தப் பிற்படுத்தப் பட்ட மக்களின் பிரச்சனை என்று சுலபமாகச் சொல்லிவிடலாம். பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நல்லவாழ்வு வேண்டும், கல்வி வசதி வேண்டும், அவர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். சமுதாயத்தில் மற்றவர்களுக்குச் சமமான வாழ்வு பிற்படுத்தப்பட்டோருக்கும் வேண்டும். தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் வளர்த்த அந்த பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு-- அநாதை போல் இருந்த அந்த பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வாய்ப்பும் வசதியும் அதிகரித்துக் கொடுத்தவர் கலைஞர் என்பதை நாடு அறியும். ஆபிரகாம் லிங்கன் என்று சொன்னாலே அடிமை விலங்கை உடைத்தவரென்று ஞாபகம் வரும்., அதே போன்று கலைஞர் என்று சொன்னாலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வாழ்வு அளித்தவர், பிற்படுத்தப்பட்ட மக்களின் காவல் தெய்வம் என்று கருதப்படுகிறது. ஆகையால்தான் அவர்மீது வழக்குகள் போடப்பட்டு, ஒரு சிலர் அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் எல்லாம் பேசிய நேரத்திலே கூட: அவர் தூக்கி எறியப்பட்ட நேரத்திலே கூட, தாய் தன் குழந்தையை கைநீட்டிபிடித்து மடிமீது தாங்கிக் கொள்வது போல பிற்படுத்தப்பட்ட மக்கள் தங்கள் மடியிலே தாங்கிக்கொண்டார்கள். பிற்படுத்தப்பட்டோர்க்கு வழங்கப் படவேண்டிய சலுகைகள் குறித்து. இந்தத் துறை அமைக்கப் பட்ட காலத்திலேயிருந்து கேட்டுக் கொண்டு வந்தாலும், அரசாங்கம் சொல்லிக்கொண்டு வந்த பதிலையே சொல்லிக் கொண்டு வந்தது. தி. மு. க. ஆட்சிக் காலத்திலேதான் தனி இலாகா ஏற்படுத்தப்பட்டது. குறைகளை நிவர்த்திப்பதற்கு திரு. சட்டநாதன் தலைமையிலே ஒரு குழு அமைக்கப் பெற்றது. அந்தக் குழு சற்றேறக்குறைய 110 சிபாரிசுகளை செய்து அவற்றிலே பலவற்றை அன்றைக்கு இருந்த சர்க்கார் ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தி இருக்கிறது. பிற்படுத்தப் பட்டோருக்கு அதிக சதவீதம் ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று கேட்டால் ஆர்ட்டிகில் 15 (ஏ) பி (4) (15) க்கு முரண்பாடாக இருக்கிறது என்று சொல்கிறீர்கள். வாஞ்சிநாதன் கமிட்டி ரிபோர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது என்று சொல்கிறீர்கள்.

இந்தத் துறைக்கு தனியாக ஒரு அமைச்சரைப் போட வேண்டுமென்ற எங்கள் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு செயல் பட்டதற்கு எங்கள் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் ஏற்கனவே பளு நிறைந்த ஒரு துறையை நிர்வகிக்கும் ஒரு அமைச்சரின் பொறுப்பிலே இதை விட்டிருக்கிறீர்கள், உணவுத் துறையைப்பொறுத்த அளவிலே அதை சமாளிப்பதற்கு யானை பலம் வேண்டும்—ஆகையால் அந்த அமைச்சருக்கு இத்துறையைக் கவனிப்பதற்கு நேரம் இருக்குமோ என்றுதான் நான் அச்சப்படுகிறேன். எனவே சிரமத்தைப் பாராமல்

[திரு. துரைமுருகன்] [1979 ஏப்ரல் 2

பிற்பட்டோர்களின் குறைகளைக் களைய அமைச்சர் வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20]

இதிலே இருக்கிற முக்கியமான பிரச்னை, ஒன்றை அமைச்சர் தெளிவாக தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சட்டநாதன் கொடுத்த அறிக்கையில் இதுவரையில் சர்க்கார் எவ்வளவு பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டுள்ளது, எத்தனை சிபார்சுகளை நடைமுறைப்படுத்தியிருக்கிறது, எத்தனை நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கிறது, என்கிற விவரத்தைச் சொல்லவேண்டும். 50% ஒதுக்கீடு இடத்திற்கு மேல் போனால் அரசியல் சட்டம் தடுக்கிறது என்று சொல்கிறார்கள். அரசியல் சட்டம் எல்லாவற்றையும் தடுக்கும். தடுப்பதற்குத்தானே அரசியல் சட்டம் இருக்கிறது. இந்தி மொழியை அரசியல் சட்டம் சொல்கிறது. ஏற்றுக்கொள்கிறோமோ, எப்படி அதற்கு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று ஏகோபித்து தீர்மானம் நிறைவேற்றச் சொல்கிறோமோ, அதைப்போல பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அதிகச் சலுகை தருவதற்கு அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று இந்த சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், இது எல்லா மாநிலத்திலும் பரவி இருக்கிறது, பீகாரில் இருக்கிறது, மகாராஷ்டிராவிற்கு போய் இருக்கிறது. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு தனிச் சலுகை வேண்டும் என்று, இன்றைக்கு மத்திய சர்க்கார் கூட அதற்குவேண்டிய நடவடிக்கைகள் இன்று எடுத்து சில கமிஷன்களை அமைத்து இருக்கிறது. நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது, இதற்கான வேண்டிய நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்க வேண்டும் என்று.

திரு. மார்க்கபந்து அவர்கள் கூடச் சொன்னார்கள். எங்களுடைய வன்னிய சமுதாயத்திற்கு நீதிபதி இல்லையே என்று சொன்னார்கள். பெரியவர் ராமசாமி படையாச்சி அவர்கள் நம்முடைய கழக ஆட்சி காலத்தில் சர்வீஸ் கமிஷனில் மெம்பர் எங்கள் இனத்திற்கு வேண்டும் என்று கேட்டார். மெம்பர் தானே கேட்டீர்கள், நான் சேர்மன் தருகிறேன் என்று கொடுத்தார். நீங்கள் இவ்வளவு கெஞ்சிக்கேட்டு இருக்கிறீர்கள், இந்த நேரத்தில் கலைஞர் இருந்தால், ஹைக்கோர்ட் ஜட்ஜ் இரண்டு பேர் கொடுத்து இருப்பார். காலம் அதற்குள் இல்லாமல் போய் விட்டது.

திரு. ப. சந்திரன்: பாயண்ட் ஆப் ஆர்டர் சார்,....

1979 ஏப்ரல் 2]

திரு. துரை முருகன்: உங்களுக்கு ஆதரவாகத்தான் கேட்கிறேன். அதற்குப் பாயிண்ட் ஆப் ஆர்டரா. உங்கள் தலைவருக்காகத்தான் பேசுகிறேன்.

வரலாற்றிலேயே நீதிபதிகள் — அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை. காரணம் கேட்டால், அவரைம் பார்த்து, ஓ, மைலார்ட். என்று மேல் பிரிவினர் அட்ரஸ் செய்வதா என்று சொல்லிக்கொண்டு இருந்தார்கள் அதை உடைத்து எறிந்து விட்டு, அவர்களை அந்தப் பதவியில் உட்கார வைத்து, அவர்களை அங்கே உட்கார வைத்து, ஓ, மைலார்ட் என்று அவர்களைப் பார்த்து அழைக்கும் வகையில் செய்து விட்டார்கள், கலைஞர் அவர்கள்.

பிற்பட்ட மக்களுக்கு ரூ. 50, ரூ. 60 ஆஸ்டலில் இருந்தால் கொடுக்கிறீர்கள். எப்படி அது போதும். டிப்பன், காப்பிக்குக் கூட போதாது. சோறு போடுகிறோம். வயிறு நிறைய போடக்கூடாதா அரை வயிறுதான் போட வேண்டுமா? ஆகவே இந்த நிலையை மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டுவது, கல்வி பயிற்சி அளிப்பது என்று மட்டும் செய்தால் போதாது. அவர்கள் பொருளாதாரத்தையும் உயர்த்திக்கொள்ளும் வகையில் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். பிற்பட்ட மீனவர்கள் கடலில் பல மைல்கள் கட்டுமரத்தில் சென்று, படகில் சென்று மீன்பிடித்து வருகிறார்கள். அவர்களுக்கு ஜட்டி கட்டித்தரவேண்டும். இந்த மாதிரி அவர்களுக்கு பொருளாதரத்துறையில் வசதி செய்து தரவேண்டும் குறிப்பாக. படித்து விட்டு வேலை இல்லாமல் இருப்பவர்கள் எல்லோருக்கும் கொடுக்கமுடியவில்லை என்றால், பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு, அந்தச் சமுதாயத்தில் படித்து விட்டு இருப்பவர்களுக்கு ஒரு மாதத்திற்கு 200 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்கம் சர்ட்டிபிகேட் வேண்டும் என்றால் தாசில் தாரிடத்தில் போகவேண்டியிருக்கிறது. என் காலத்தில் இருந்து அப்படித்தான் இருக்கிறது. இப்போது பாஸ்போர்ட்டில் நாங்கள் எல்லாம் கையெழுத்துப் போடலாம் என்று வந்து இருக்கிறது. (குறுக்கீடு —பாஸ்போர்ட் அப்ளிகேஷனில் தான் போடலாம்) சரி, அதைப் போல் இன்கம் சர்டிபிகேட்டிலும் எம்.எல்.ஏக்கள் போடலாம் என்று சொன்னால் என்ன, அவர்கள் எங்கள் தொகுதியில் இருக்கிறார்கள், ஆகவே. அவர்களுக்கு வேண்டியவற்றை நாங்கள் உடனடியாகச் செய்து கொடுக்கமுடியும். ஆகவே, அதற்கு ஏற்ற வகையில் ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. துரை முருகன்] [1979 ஏப்ரல் 2

இந்தச் சர்க்கார் இருக்கிற நிலைமைகளைப் பார்த்தால் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு செய்ய மாட்டார்களோ என்ற அச்சம் எனக்கு இருக்கிறது. ஆளுநர் உரை விவாதத்தின்போதே சொல்லி இருக்கிறேன். அப்போது அமைச்சர் அவர்களுக்கு உடம்பு சரியில்லை. ஆகவே, இப்போது கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வேலையற்றிருப்போர் எண்ணிக்கை மிகுதியாகவும், அரசினர் வேலை வாய்ப்புகள் குறைவாகவும் உள்ளநிலையில், ஏழை எளியவர்களின் மக்களுக்கும், அவர்களிடையே பள்ளிகளில் வாயிற்படிகளையே கண்டறியாத குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை தரவேண்டும் என்று அரசு விரும்புகிறது. தாழ்த்தப்பட்டோர், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தோர் ஆகியோர்க்கான சிறப்புச் சலுகைகட்கு சரிவேற்படாமலும் (வித்அவுட் டெட்ரிமெண்ட்) இதனை அரசு நடைமுறைப்படுத்தும். கம்பூனில் ஜி. ஒ சட்டநாதன் குழு. ஆகியவற்றின் பரிந்துரைகளை அரசு கவனத்தில் கொண்டு, அதைத்தடுத்துவிடாவண்ணம் பார்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தலைவரவர்களே, அடுத்தபடியாக இன்னும் ஒன்றை மட்டும் குறிப்பிட்டு முடித்துக்கொள்கிறேன். வேலூரில் பால்டெக்னிக்கல் இணைக்கப்பட்டுள்ள டெக்னிக்கல் ஹைஸ்கூலில் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டது. அவர்களும் வாங்கி செலவு செய்துவிட்டார்கள். இப்போது ஆடிட் அப்ஜெக்ஷன் வந்திருக்கிறது; அதனால் வாங்கியப் பணத்தைக் கட்டுங்கள் என்று சொல்கிறார்கள். அதைக் கட்ட முடியாமல் மாணவர்கள் டைரக்டரிடம் ஸ்டே வாங்க அல்லது அரசாங்கத்திடம் ஸ்டே வாங்க வந்துகொண்டிருக்கிறார்கள். அதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால் டாக்டர் கலைஞர் அவர்கள் தான் இந்தத் துறையை ஆரம்பித்து வைத்தார்கள். நல்ல காரியங்களை தி.மு.க செய்திருந்தால், அவை நாங்கள் தொடர்ந்து நிறைவேற்றுவோம்; அதைப் பின்பற்றுவோம் என்று அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் சொன்னார்கள். இது நல்ல காரியம் மட்டுமல்ல 4½ கோடி மக்களுக்கும் நன்மை செய்கிற ஒரு காரியம். நாங்கள் செய்ய முற்பட்டோம். அதை மேலும் வளர்க்க வேண்டியது உங்கள் பொறுப்பு. வளர்ப்பதற்குப் பதிலாக அதை குழிதோண்டி புதைத்து பல்லாயிரக்கணக்கான மக்களுடைய சாபத்திற்கு நீங்கள் ஆளாகாதீர்கள் அந்த நிலைமை வராமல் அணை கட்டித் தடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். தடுப்பீர்கள் என்று நம்புகிறேன் காரணம் அமைச்சர் அவர்களும் அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரவர்கள் 10 நிமிடத்தில் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பிற்பட்டோர் நலத் துறை மானியக் கோரிக்கைமீது பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்துகொண்டு தங்களுடைய அரிய கருத்துக்களைத் தெரிவித்ததற்காக அரசின் சார்பில் குறிப்பாக இந்தத் துறையின் சார்பில் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவரவர்களே, நீங்கள் 10 நிமிடம் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். என்னைப் பொறுத்தமட்டில் 10 நிமிடம் கூட பேசவேண்டிய நிலை எனக்கு இல்லை என்று நான் கருதுகிறேன். காரணம் இதற்கு முன்னாலே இந்தத் துறையைப்பொறுத்தமட்டில் என்ன என்ன சாதனைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைபற்றியும் இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பின்னால் இந்தத் துறையிலே எவ்வளவு அக்கரை செலுத்தி, பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் முன்னேற்றத்திற்கு என்னென்ன சாதனைகளைச் செய்திருக்கிறது; வருகின்ற ஓராண்டு காலத்திற்கு இந்தத் துறையிலே தீட்டியிருக்கிற நல்ல திட்டங்கள் பற்றியும் ஏற்கெனவே நான் எடுத்துச் சொன்னதைப்போல தரப்பட்டிருக்கிற குறிப்புகளிலே சொல்லப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் அதைப் படித்து பார்த்தப்பிறகுதான் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் சொல்லும் போது பிற்பட்ட நலத் துறை என்ற ஒரு தனித் துறையை ஒரு விட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் இன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற மாண்புமிகு கலைஞர் அவர்கள் அன்றையதினம் ஆரம்பித்து வைத்தார்கள் என்று சொன்ன அந்தக் கருத்தில் இந்த அரசுக்கு எந்தவிதமான மாறுபாடான கருத்தும் நிச்சயமாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல இந்தத் துறையைத் தொடர்ந்து, தன்னுடைய நல்ல பணிகளை ஏற்றுக்கொண்டு, இப்போதும் அந்தப் பணியிலே, அதை நல்லமுறையிலே செயல்படுத்துகின்ற முயற்சியிலே இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நாம் எல்லோரும் தந்தை பெரியார் வழியிலும், பேரறிஞர் அண்ணா வழியிலும் வந்தவர்கள். அந்தவகையிலே இன்றைக்கு ஒரு புனிதமான ஆட்சியை நடத்திக்கொண்டு இருக்கிறோம்

என்பது மட்டுமல்ல; நாட்டிலே இருக்கிற பல்வேறு ஜாதி வேறுபாடுகளை ஒழிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இருந்தாலும் இருக்கிற சூழ்நிலைகளில் இன்றையதினம் சில தனிப்பட்ட சலுகைகளை வழங்க வேண்டிய கட்டாயத்திலே நாம் இருக்கிறோம் என்பதை மறுப்பதற்கில்லை. அந்த அடிப்படையிலேதான் இன்றையதினம் எதிர்கட்சித் தலைவராக இருக்கிற மாண்புமிகு கலைஞர் அவர்கள் அன்றையதினம் முதலமைச்சராக இருந்த காலத்திலே ஒரு தனிப்பட்ட துறையை ஆரம்பித்தார்கள் என்பதிலே இந்த அரசுக்கு எந்தவிதமான முரண்பாடான கருத்தும் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் இங்கே உரையாற்றும்போது இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை போதாது: இன்னும் அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

[பிற்பகல் 12-30]

நான் அவர்களை மெத்த பணிவோடு கேட்டுக்கொள்வதெல்லாம் அவர்கள் முன்னாலே வைக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பை அவர்கள் பார்ப்பார்களேயானால், இதற்கு முன்னாலே எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது என்பதையும் இப்போது இந்தத் துறையினுடைய முன்னேற்றத்திற்கு கோடி ரூபாய்க்கும் அதிகமான அளவிற்கு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் பார்ப்பார்களேயானால் நிச்சயமாக அந்தக் குறைபாட்டை அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லி இருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது

ஆனால் மாண்புமிகு திரு. ஜேம்ஸ் அவர்களை இந்த நேரத்திலே எண்ணிப்பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வதெல்லாம் பிற்பட்ட சமுதாயத்தினுடைய முன்னேற்றத்தில், பொருளாதார முன்னேற்றத்தில், சமுதாய முன்னேற்றத்தில், கல்வி முன்னேற்றத்தில் இந்த அரசு கடந்த 7, 8 ஆண்டுகாலமாக எவ்வளவு பணிகளைச் செய்துகொண்டிருந்தாலும் மத்திய அரசு தங்களுடைய பங்காக எதைச் செய்துகொண்டிருக்கிறது என்பதை அவர்கள் இந்த நேரத்திலே எண்ணிப்பார்ப்பது பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

இந்த ஆண்டு இந்த மாதம் 21-ம் தேதி டெல்லியிலே நடைபெற்ற மத்திய அரசாங்கத்தினுடைய பிற்பட்ட நலக் குழுவிலே மாநிலங்களினுடைய பல்வேறு அமைச்சர் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கின்ற நேரத்தில் தமிழக அரசின் சார்பிலே அதிலே கலந்து கொண்டு அந்தக் குழுவின் முன்னாலே அழுத்தந் திருத்தமாகச் சொல்லி இருக்கிறேன். கல்விக்கும்,

1979 ஏப்ரல் 21] [திரு. க. உரோ. எட்மண்ட்]

பொருளாதாரத்துறையின் முன்னேற்றத்திற்கும் என்று பின் தங்கிய சமுதாயத்திற்கு மாநில அரசுகள் தங்களால் இயன்ற நிதியினை கொடுப்பதை இந்திய அரசியல் சட்டத்தினுடைய 15, 16-வது விதிகளின்படி மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டாலும் இந்த சமுதாயத்தினுடைய முன்னேற்றத்திற்காக மத்திய அரசு எந்த வகையிலே பொருள் உதவி செய்கிறது, அல்லது வேறு பல உதவிகளைச் செய்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைய தினம் நாட்டிலே பெரும் பகுதியாக இருக்கின்ற அதாவது 54 சதவீதம் என்ற அளவிலே இருக்கின்ற பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு ஒரு மாநில அரசு எவ்வளவு, மத்திய அரசினுடைய துணை இல்லாமல் செய்ய முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் எண்ணிப்பார்ப்பது பொருத்தமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். இந்தத் திட்டங்களை நாங்கள் நிறைவேற்றுவதற்காக மாநில அரசுக்கு மத்திய அரசு எந்த உதவியும் செய்வதில்லை என்ற நிலையை உணரவேண்டும். இன்றையதினம் மாநில அரசாங்கம், குறிப்பாக நம்முடைய தமிழக அரசு பிற்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு 31 சதவீதம் அரசாங்கப் பணிகளிலே ஒதுக்கி இருக்கின்ற நிலைமையை ஏற்படுத்தி இருக்கின்றது. இந்த நேரத்திலே மத்திய அரசு, மத்திய அரசின் பணிகளிலே நடைபெறுகிற தேர்வுகளில், அது யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வாக இருந்தாலும் சரி, அல்லது அய். ஏ. எஸ்., அய். பி. எஸ். போன்ற தேர்வுகளாக இருந்தாலும் சரி பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு, மாணவர்களுக்கு எந்த அளவுக்கு இடம் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் எண்ணிப் பார்ப்பார்களேயானால் இங்கே அதிகமாக இடத்தை ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் இந்த கோரிக்கையினை மத்திய அரசிடம் வைக்கவேண்டும் என்று உணர்ந்து மத்திய அரசினை வலியுறுத்துவார்களேயானால் அது நிச்சயமாக பொருத்தமாக இருக்கும் என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் அவர்களுக்கு எடுத்துச்சொல்ல கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இந்தக் கருத்தை 21-ம் தேதி டெல்லியிலே நடைபெற்ற அந்தக் குழுக் கூட்டத்திலே நான் எடுத்துச் சொல்லி இருக்கிறேன். மாநில அரசுகள் பின்தங்கிய சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்கென்று எடுத்துக்கொள்கிற முயற்சிகளுக்கு மத்திய அரசு தங்களுடைய பங்காக தொகையை ஒதுக்க வேண்டும் என்பதோடு எப்படி மாநில அரசுகள் தங்களுடைய அரசாங்கப் பணிகளிலே 31 சதவீதம் இடத்தை இந்தப் பின் தங்கிய சமுதாயத்தை சேர்ந்த இளைஞர்களுக்கு ஒதுக்குகிறதோ அதைப்போல மத்திய அரசும் தங்களுடைய அரசுப் பணிகளிலே

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1979 ஏப்ரல் 2

அவர்களுக்கான ஒரு குறிப்பிட்ட இடத்தை ஒதுக்கி இப்போப் பட்ட சமுதாயத்தைச் சார்ந்த இளைஞர்களுக்கு வாய்ப்புகள் கொடுக்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி இருக்கிறேன். ஆகவே மாண்புமிகு திரு. ஜேம்ஸ் அவர்கள் என்னோடு சேர்ந்து குரல் கொடுத்தால் இந்த அரசுக்கு அவர்கள் ஒத்துழைத்தால் நாம் அதிலே நிச்சயமாக வெற்றிபெறக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இந்த சமுதாயத்தைச் சார்ந்தவர்களை பொருளாதாரத் துறையிலேயும் இன்னும் பல்வேறு துறைகளிலேயும் முன்னேற்ற முடியும் என்கிற நம்பிக்கை இந்த அரசுக்கு நிச்சயமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் ஒன்றை சொன்னார்கள். இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த நேரத்தில் அவர்கள் இந்தத் துறையின் மீது இருந்த ஆர்வத்தின் காரணமாக, அவர்கள் இப்போதும் முதலமைச்சராக இருந்திருப் பார்களேயானால் வன்னியர் சமுதாயத்திற்கு உயர்நீதிமன்ற நீதிபதியாக ஒரு இடத்தை பெற்றுத் தந்திருப்பார்கள் என்று சொன்னார்கள். அதில் எனக்கு முரண்பட்ட கருத்து கிடையாது. பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் மீது அக்கறை கொண்டு இதற்கென்று தனியாக ஒரு துறையை ஏற்படுத்தியதில் எனக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் கிடையாது. என்றாலும், ஏழாண்டு காலமாக முதலமைச்சராக இருந்த நேரத்தில் சாதிக்க முடியாததை இந்த இரண்டு ஆண்டு காலத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு சாதித்து இருக்கிறது. வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவருக்கு தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் உறுப்பினராக வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் தலைவர் பதவியே கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள் அதை மறுக்க வில்லை, ஆனால், பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கு ஒரு நீதிபதி பதவி, 25 நீதிபதிகள் இருக்கின்ற இடத்தில் ஒரு வாய்ப்பைக் கூட பெற முடியவில்லை. ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் தான், புரட்சித் தலைவர் காலத்தில் தான் இதற்கான வாய்ப்பு கிடைத்தது என்பதையும், அதே போன்று, முடி திருத்தும் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் நீதிபதி பதவி கிடைத்தது புரட்சித்தலைவர் காலத்தில் தான் என்பதை மாண்பு மிகு துரைமுருகன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வதற்கு நன்றி, மீனவ சமுதாயத்தினருக்கும், முடி திருத்தும் சமுதாயத்தினருக்கும் வாய்ப்பு கிடைத்தது இந்த அரசில் தான் என்று சொன்னார்கள். நான் அமைச்சர்களைப் பற்றித்தான்

1979 ஏப்ரல் 2] [திரு. துரை முருகன்]

சொன்னேன். அவர்களுக்கு அடுத்த மேல் நடவடிக்கை நான் இவர்கள் எல்லாம் வருகிறார்கள். ஆகவே இவர்களுக்கும் அந்த வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதில் எங்களுக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் கிடையாது.

மாண்புமிகு திரு. க. உதயோ. எட்மண்ட் : மலைவாழ் சமுதாயம் அல்லது மற்ற பிற சமுதாயங்களுக்கெல்லாம் முன்னால் மரியாதை கொடுக்கவில்லை என்று சொல்ல நான் தயாராக இல்லை. பிற்பட்ட வகுப்பினருக்காக எடுத்துச் சொல்ல முயற்சிகளை மறுப்பதற்கு நான் தயாராக இல்லை. அவர்களும் செய்திருக்கிறார்கள். அதைவிடவும் வேகமாக நமது புரட்சித் தலைவர் அவர்கள் மிகவும் குறுகிய காலத்தில் அதிகமாக செய்திருக்கிறார்கள் என்ற கருத்தைத்தான் சொன்னேனே தவிர, ஏதோ களங்கம் கற்பிப்பதற்காக முன்னாள் முதலமைச்சராக இருந்த, கலைஞர் காலத்தில் எதுவும் நடக்கவில்லை என்று நான் நிச்சயமாக குற்றச்சாட்டாக இதை சொல்லவேண்டும் என்று இதைச் சொல்லவில்லை என்பதை மாத்திரம் மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு கருத்தையும் கம்யூனிஸ்டு கட்சி சார்பில் சொன்னார்கள். எந்தா இந்திரா ஆட்சி காலத்தில், அதிலும் இடைக்காலத்தில், எமெர்ஜென்ஸி காலத்தில் ஒரு குடும்பத்தில் இரண்டு பேர்களுக்குத் தான் சலுகைகள் கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருந்ததாக சொன்னார்கள். அது மத்திய அரசாங்கத்தினுடைய திட்டத்தில் கீழ் ஏற்படுத்தப்பட்ட திட்டம் இது. ஆனால் நாம் மத்திய அரசின் திட்டத்தின் அடிப்படையில் நாம் அதை ஒத்துக்கொண்டு செயல்படுத்தவில்லை. இந்த அரசைப் பொறுத்தவரையில், வருட வருமானம் 2,500 ரூபாய்க்கு கீழேயுள்ளவர்களின் குடும்பத்தில் எத்தனை பேர்கள் இருந்தாலும் அத்தனை பேர்களுக்கும் தொடர்ந்து சலுகைகள் கொடுக்கப்பட்டு வருகிறது. அதை செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் முன்னால் இருந்த நிலைமையை சொன்னதிலும் தவறில்லை. ஆனால் அந்த முறையை நாம் செயல்படுத்தவில்லை. ஆகவே நமது முறையில் எந்தவிதமான தவறும் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மத்திய சர்க்காரில் பேக்வார்ட் கிளாஸ் லிஸ்ட் என்று ஒன்று கிடையாது. தாழ்த்தப்பட்டவர் என்ற லிஸ்ட் தான் உண்டு. பேக்வார்ட் கிளாஸ் லிஸ்ட் என்று ஒன்று கிடையாது. முக்கியமாக ஏழை எளிய குடும்பங்களில் இரண்டு பேர்களுக்கு மட்டும் இந்த சலுகை கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டது. அவ்வளவு தான்.

(1979 ஏப்ரல் 2

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: அதைத்தான் நானும் சொன்னேன். மத்திய அரசின் திட்டம் வேறு, நம்முடைய முறை வேறு, ஒரு குடும்பத்தில் இரண்டு பேர்களுக்கு கொடுக்கலாம் என்று அந்த காலத்தில் அறிவிக்கப்பட்டது உண்மைதான். அதை இந்த அரசு செயல்படுத்தவில்லை. பிற்பட்ட நலத்துறையில் 2,500 ரூபாய் ஆண்டு வருமானத்திற்கு குறைவாக இருக்கின்றவர்களின் வீட்டில் எத்தனை பேர்கள் இருந்தாலும் அரசு இந்த உதவியை கொடுத்து வந்து கொண்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

(திரு. வி. கே. கோதண்டராமன் பேசுவதற்கு எழுந்திருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வோருவரும் இப்படி பேச எழுந்திருந்து விட்டால், அடுத்த மானியத்தை எப்போது எடுத்துக்கொள்வது?

திரு. வி. கே. கோதண்டராமன்: பின்தங்கிய மக்களுக்கு மத்திய சர்க்கார் இந்த உதவியை அறவே நிறுத்தியிருப்பது உண்மையா இல்லையா, அதைச் சொல்லுங்கள்.

[பிற்பகல் 12-40]

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத் தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். மத்திய அரசாங்கத்தின் திட்டம் வேறு; மாநில அரசாங்கத்தின் நிலை வேறு. அந்தத் திட்டத்திற்கும், மாநில அரசாங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற பிற்பட்டோர் நலனுக்காக செய்து கொண்டிருக்கின்ற காரியத்திற்கும் சம்பந்தம் இல்லை. அவர்கள் இரண்டு பேர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று அந்தக் காலத்திலே அவர்கள் செய்த சட்டம், இன்னும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் பிற்பட்டோர் நலனுக்காக செய்துக் கொண்டிருக்கின்ற பல்வேறு காரியங்கள், அதன் அடிப்படையிலே கொடுக்கப்படுகின்ற சலுகைகள் தொடர்ந்து அமுலிலே இருந்து வருகிறது, செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தான் நான் எடுத்துச் சொன்னேன்.

இன்னும் சில உறுப்பினர்கள், சில சமுதாயங்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாக, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் வி. கொ. சின்னசாமி அவர்களும், மாண்புமிகு பெரியசாமி அவர்களும் சில சமுதாயங்களை, மோஸ்ட் பேக்வேர்ட் கம்யூனிட்டி என்று அழைப்பவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலே சேர்ப்பதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச்

1979 ஏப்ரல் 2] [திரு. க. உரோ. எட்மண்ட்]

செய்கின்ற அந்த அதிகாரம் மாநில அரசுக்கு நிச்சயமாக இல்லை. மாநில அரசு வேண்டுமென்றால், இந்தச் சமுதாயங்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற பரிந்துரையை மத்திய அரசுக்கு தெரிவிக்க முடியுமே தவிர, அந்த தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்கின்ற அதிகாரம் அந்த மாநில அரசுக்கு இல்லை. அப்பேர்ப்பட்ட சமுதாயங்களை அவர்கள் சேர்க்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கின்ற நேரத்தில் நிச்சயமாக இந்த அரசு அதைப்பற்றி பரிசீலித்து, அதற்கான புள்ளிவிவரங்களைச் சேகரித்து, மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யவேண்டிய அவசியம் இருக்குமானால், நிச்சயமாக அவற்றைச் செய்யும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு நல்ல பல கருத்துக்களை யெல்லாம் உறுப்பினர்கள் இந்த அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு, அதனுடைய நியாயங்களை, அவசியத்தை அறிந்து, அதை அமுல்படுத்தும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொண்டு, மானியத்தின்மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், அவைகளை வலியுறுத்தாமல், திரும்பப்பெற்று, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : விவாதம் முடிவுற்றது: வாக்கெடுப்பு

திருவாளர்கள் சு. பாலன், சோ. பாலகிருஷ்ணன், வி. கே. கோதண்டராமன், பொ. விஜயராகவன், செ. சிவசாமி, சேலம் மு. ஆறுமுகம் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,04,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(ஆ) கோரிக்கை எண் 25—சின்கோனா

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்; தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

''மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,86,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, "அன்னியச் செலாவணியைப் பெரிய அளவில் ஈட்டும் வகையில் சின்கோனாத் தொழிலை விரிவுபடுத்த வேண்டியதன் தேவையை வலியுறுத்த" வேண்டுமென்பது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,86,48,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, "சின்கோனா தொழிலாளர்களுக்கு நல்ல ரகமான புதுவீடுகள் கட்டித் தராமலும், பழைய வீடுகள் சரிவர பழுது பார்த்துத் தராம லிருப்பதை எடுத்துக் காட்டி" விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,86,48,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே' கொள்கை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,86,48,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, சின்கோனா மரங்களை மேலும் அதிகம் வளர்த்து நாட்டின் தேவையை பூர்த்தி செய்யும் அளவுக்கு மருந்து தயாரிப்பது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,86,48,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU SALEM M. ARUMUGAM : Sir, to discuss the need to provide encouragements to the Private Sector to engage in Cinchona Plantations' I move :

"That the allotment of Rs. 1,86,48,000 under Demand No. 25—Cinchona be reduced by Rs. 100"

1979 ஏப்ரல் 21

இ. கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை பற்றிய 45-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 5,41,90,000-க்கு மேற்படாத தொகை வழங்கப்பெற வேண்டும்".

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, காடுகளில் பலன் தரும் மரங்களை வளர்க்க தீவிர நடவடிக்கை எடுக்கக் கோரி விவாதிக்க :—

"மானியக் கோரிக்கை எண் 45 காட்டுவளத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,41,90,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். அண்ணாமலை : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் அரசு புறம்போக்கு நிலங்களில் 20, 30 ஆண்டுகளாக சாகுபடி செய்யும் நிலமற்ற விவசாயிகளை வெளியேற்றி வனத்துறை தன்று நடும் போக்கினை கைவிட்டு பாடுபடும் விவசாயிக்கு பட்டா வழங்குவது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 45— காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,41,90,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. பொ. விஜயராகவன் : பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,41,90,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் ஏக்கருக்கு மேல் பாசன வசதியுள்ள கண்மாயின் உட்பகுதிகளில் உடனடியாக கருவேல மரங்களை உற்பத்தி செய்வது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,41,90,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,41,90,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[ஈ] கோரிக்கை எண் 47—தகவல், சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 47—தகவல், சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,43,16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சுற்றுலாச் சிறப்பு வாய்ந்த தமிழ்நாட்டு இடங்களைப் பற்றிய விளக்கம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்குத் தெரியும் வகையில் அந்நாடுகளில் விளம்பரப்படுத்த வேண்டிய தேவையை வலியுறுத்த வேண்டியதைப் பற்றி விவாதிக்க

"மானியக் கோரிக்கை எண் 47—தகவல், சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,43,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, பழனி நகரைச் சுற்றுலா நகராக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 47-தகவல், சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,43,16,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU P. VIJAYARAGHAVAN : Sir, to discuss the need to develop Thirparappu Water falls in Kanyakumari District into tourist Centre-I move :

"That the allotment of Rs. 1,43,16,000 under Demand No. 47-Information, Tourism and Film Technology be reduced by Rs. 100/-"

[1979 ஏப்ரல் 2] [Thiru P. Vijayaragavan]

திரு. செ. சிவசா : தலைவர் அவர்களே, "குருசேத்ரு", "ராமேஸ்வரம்", சுற்றுலாத் தலமாக அபிவிருத்தி செய்வது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 47—தகவல், சுற்றுலா' திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,43,16,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU SALEM M. ARUMUGAM : Sir, to discuss the failure of the Government to give due importance to the function of the Opposition parties in the Tamil Arasu as is being done in the case of Government functioning—I move :

"That the allotment of Rs. 1,43,16,000 under Demand No. 47 - Information, Tourism and Film Technology be reduced by Rs. 100/-"

(உ) கோரிக்கை எண். 56—காட்டுவள மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 56—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,34,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 56—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,34,73,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டின் உள்ள வனவிலங்கு சரணாலயங்களை மேலும் அபிவிருத்தி செய்வது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 56—காட்டு வள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 5,34,73,000 ல் ரூ. 100 குறைக்க வேண்டும்..,

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 56—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,34,73,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்..,

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1979 ஏப்ரல் 2

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின்மீது இந்தத் துறைகளின் கொள்கை விளக்க அறிக்கைகள் அச்சடித்து அவை உறுப்பினர்களுக்கு தரப்பட்டிருக்கிறது. அதை இந்த மன்றத்தில் நான் ஆற்றிய உரையாகக் கருதி பதிவேட்டில் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்த பிறகு இறுதியில் என்னுடைய விளக்கத்தைத்தர அனுமதி அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, சின்கோனா, வனவளம், செய்தி, சுற்றுலா, திரைப்படம் சம்பந்தமாக சில கருத்துக்களை நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, நம்முடைய நாட்டில் வன வளத்தைப் பெருக்க வேண்டியது அவசியமாகும். வன வளம் பெருகினால் மன வளம் பெருகும் என்று கூறுவார்கள். வன வளத்தைப் பெருக்கி நம்முடைய தேசம் நல்ல பலனை அடைவதற்கு நாம் சிறப்பான திட்டத்தை வகுக்க வேண்டும். காரணம்— உலகத்தில் பலவேறு நாடுகளில் வனத்தைப் பேணிக்காப்பது என்பது மிகவும் முக்கியமான விஷயமாகக் கருதப்படுகிறது. சோவியத் யூனியன் போன்ற நாடுகளில் சைபீரியா பாலைவனத்திலிருந்து வருகிற பனிப் புயலைத் தடுக்கின்ற அளவுக்கு ஆயிரக்கணக்கான மைல் நீளமும், நூற்றுக்கணக்கான மைல் அகலமும் ஆன காடுகளை வளர்த்து பனிப் புயலைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். அதோடு அது மழையை கொடுப்பதோடு மற்றப் பலன்களைக் கொடுக்கிறது.

நம்முடைய நாட்டில் பல்வேறு காடுகள் அழிக்கப்படுகின்றன. நீலகிரி, கோடைக்கானல் போன்ற இடங்களில் அப்படி காடுகள் அழிக்கப்பட்ட காரணத்தால் மரங்கள் வெட்டப்பட்ட காரணத்தால் நிலச் சரிவுகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

மன்னர்கள், ஜமீந்தார்கள் ஆண்ட காலத்தில் கூட சாலையோரங்களில் புளிய மரம், பலா மரம், மாமரம் போன்றவற்றை வைத்து பராமரித்தார்கள். காடுகளை வளர்த்தார்கள். இயற்கைச் சூழலில் வருகின்ற பாதிப்புகளைப் போக்குவதற்காகப் பயன்படுத்தினார்கள். தற்போது காற்றில் பிராணவாயு விகிதம் குறைந்திருக்கிறது என்று சொன்னால் மரங்கள் வெட்டப்படுவதுதான். சென்னை நகரத்தின் பக்கத்தில் காடுகளை வளர்க்கவேண்டும். சாலைகளில் மரங்களை நட வேண்டும். அப்போதுதான் ஈகலாஜிகல் சிரைசிஸ்— இயற்கை

456-514 ம் பக்கங்களில் இணைப்புகள் III, IV, V அச்சிடப் பெற்றுள்ளன.

1979 ஏப்ரல் 2] [திரு. மு. அம்பிகாபதி]

சூழலில் ஏற்படுகின்ற பாதிப்பைத் தவிர்க்க முடியும். மனிதனுக்கு நல்ல காற்று கிடைப்பதற்கான வாய்ப்பு ஏற்பட முடியும்.

[பிற்பகல் 12.50]

கோவை மாவட்டத்திலே, பாலக்காட்டு கணவாயிலே வருகின்ற காற்றைத் தடுப்பதற்கு, சோவியத் யூனியனிலே சைபீரியன் டெசர்டிலே போடப்பட்டிருக்கிற திட்டத்தைப் போல தமிழகத்திலேயும் போட்டு வன வளத்தைப் பெருக்குவதற்கு வழிவகைகள் காணவேண்டும்.

காட்டு இலாகாவிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு பாதுகாப்புத் தருகின்ற நடவடிக்கைகளையும், அவர்களுக்குத் தேவையான வசதிகளையும் செய்து கொடுக்க சிறப்புத் திட்டங்களை வகுக்கவேண்டும்.

காடு என்பது ஒரு பிரதான ஆஸ்தி. அது ஒரு நாட்டினுடைய சிறந்த மூலதனம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து செய்தித் துறையைப் பொறுத்தவரையில் அண்மையிலே பட்ஜெட் கூட்டம் நடந்தது. அதற்குப் படம் எடுத்து, "தமிழரசிலே" போட்டு வந்தது. அதிலே வருகிற படங்களைப் பார்த்தால் ஆளுங்கட்சியைத்தான் படம் எடுக்கிறார்கள், போடுகிறார்களே தவிர எதிர்க்கட்சிக்காரர்களான எங்களையெல்லாம் எடுத்தால் என்ன? கேமிரா எடுக்கமாட்டேன் என்கிறதா? இரண்டு பக்கங்களிலேயும், முன்பக்கம், பின்பக்கம்; இடையிலே வருகிற பக்கங்களிலேயும் எல்லா இடங்களிலும் ஆளுங்கட்சியைத்தான் போடுகிறார்களே தவிர எங்களைப் படம் எடுத்துப் போடுவதில்லை. ஏன்? ஆளுங்கட்சிதான் சர்க்காரா? எதிர்க்கட்சிகள் எல்லாம் கட்சிகள் இல்லையா? எதிர்க்கட்சிகளின் கருத்துக்கள் சர்க்காருக்கு வலிவூட்டவில்லையா? உங்களை மட்டுமே படம் எடுத்துப்போட்டுக் கொள்கிறீர்களே ஏன் என்பதை நான் வினயத்தோடு கேட்க விரும்புகிறேன்....

திரு. எஸ். ஜே. இராமசாமி: தாங்கள் சொல்லியபடி, எங்கள் பக்கத்திலே யாரையும் எடுக்கவில்லை, நாங்கள் எல்லாம் பின்னாலே உட்கார்ந்திருக்கிறோம்.

திரு. மு. அம்பிகாபதி: ஏதோ அவர்களுக்கும் வருத்தம் இருக்கிறது. மாண்புமிகு திரு. இராமசாமி அவர்களை ஸ்ரீலோஸ்-அப்பிலே ஒரு படம் எடுத்துப் போட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளத்தாலே பாதிக்கப்பட்ட மக்களைப் பார்ப்பதற்காக எல்லாரும்தான் சென்றார்கள். ஆனால் ஒரு குறிப்பிட்ட அமைச்சர் மட்டும் புயலின் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களைப்

பார்க்கப்போனார் என்று லேஷ்டியை மடித்துக் கட்டிக்கொண்டு, முண்டாசு கட்டிக்கொண்டு படம் போட்டிருக்கிறார்கள். ஏன் நாங்கள் எல்லாம் போய்ப் பார்க்கவில்லையா? எதிர்க்கட்சித் தலைவர் போய் இருக்கிறார், நான் போய் இருக்கிறேன்...

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அப்படி, அசைடு என்ற ஆங்கில இதழிலே போட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் உங்களைக் குறிப்பிடவில்லை.

திரு. மு. அம்பிகாபதி: கோழி காணாமல் போய்விட்டது என்று சொன்னால் என்னுடைய தலையை நான் சொரிவானேன். நானே பார்த்தேன், நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் லேஷ்டியை மடித்துக் கட்டிக்கொண்டு முண்டாசோடு இருக்கிற படம் "தமிழரசிலே" வந்திருந்தது. தமிழக அரசு எடுக்கிற திரைப்படமானாலும் அப்படித்தான் வருகிறது. ஏனென்றால் அதனுடைய பெயரே தமிழ் அரசு, ஆகவே எல்லோருடைய படங்களும் வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

சுற்றுலாத் துறையிலே பணியாற்றுகின்ற தொழிலாளரின் பிரச்சினை, ஏ. ஐ. டி. யூ. சி. யின் தலைவர் கே. எம். சுந்தரம் இன்றைக்கு அரசாங்கத்திற்கு விண்ணப்பம் அனுப்பி இருக்கிறார். அரசாங்கம் அவர்களை அழைத்துப் பேசி சுற்றுலாத் துறை தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இன்றைக்கு சுற்றுலா என்பது சோஷலிஸ நாடுகளாக இருந்தாலும், கேபிடலிஸ்ட் கன்ட்ரிகளாக இருந்தாலும் அதை ஊக்குவிப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அது போல நம்முடைய தமிழகத்திலேயும் சுற்றுலா துறையை ஊக்குவிக்கவேண்டும், தொழிலாளர்கள் அந்த இடங்களில் போய்த் தங்க, குறைந்த வாடகையிலே தங்குவதற்கு வசதியாக இல்லங்களை அமைக்கவேண்டும். சோவியத் யூனியனிலே கொர்க்கி போன்ற இடங்களிலே தொழிலாளர்கள் குறைந்த வாடகையிலே வந்து தங்குவதற்காக இல்லங்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. அதைப்போன்று உழைக்கின்றவர்களுக்கு, தொழிலாளர்களுக்கு, அப்படிப்பட்டவர்கள் 15 நாட்கள், 20 நாட்கள் வந்து தங்க ஓய்வு எடுத்துக்கொள்வதற்காக குறைந்த வாடகையில் தங்குவதற்கு ஏற்ற முறையில் இல்லங்களை அமைத்துத்தர முயற்சிகளை எடுக்கவேண்டும்.

திரைப்படங்களுக்கு பரிசுகள் அளிக்கப்படவேண்டும். அண்மையிலே 7 படங்களுக்கு அரசு பரிசுகளை அளித்திருக்கிறது. அது வரவேற்கத் தக்கது. மேல்நாடுகளிலேயும் அது ஊக்குவிக்கப்

படுகிறது. கேரளா போன்ற மாநிலங்களிலே ஒரு படத்திற்கு 15 ஆயிரம் ரூபாய் அளிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. எனக்கு அதுபற்றித் தெரியாது. 7 படங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். நல்ல படங்களை ஊக்குவிப்பது என்பது மட்டுமல்ல, அவைகளுக்கு காம்பவுண்டிங் டாக்ஸையும், என்டர்டெய்ன்மெண்ட் டாக்ஸையும் ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவைகள் பழைய படங்களாக இருந்தாலும் சரி, தேச பக்திப் படங்கள் என்ற முறையிலே வந்த வீரபாண்டிய கட்டபொம்மன், வ. உ. சிதம்பரனார் பற்றிய கப்பலோட்டிய தமிழன் போன்ற படங்களுக்கு காம்பவுண்டிங் டாக்ஸை முழுக்க முழுக்க ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இது குழந்தைகள் ஆண்டு, உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. குழந்தைகளை வைத்து, அன்பின் அலைகள் என்ற படத்தைத் தயாரித்து இருக்கிறார்கள். ஒரு ஆண்டு ஆகிறது, எல்லோரும் குழந்தைகள். அதை இன்னும் வெளியிடாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட படங்களை எடுப்பது குழந்தைகளை மேம்படுத்துவதற்கும் உதவியாக அமையும். ஆகவே அந்தப் படங்களுக்கு அரசு உதவி செய்ய முன்வரவேண்டும். குழந்தைகள் ஆண்டில் இதை அரசாங்கம் செய்யவேண்டுமென்று கேட்டு, வன வளத்தைப் பெருக்கி, மன வளத்தைப் பெருக்கும் முறையில் அரசாங்கத் துறை அவசியமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று வேண்டிக் கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. சிகாமணி : பேரவைத் தலைவரவர்களே, செய்தி அறிநிலையத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த வனத் துறை மானியக் கோரிக்கையின் மீது எனது சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு நாட்டின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதி வனப் பகுதியாக இருக்கவேண்டும் என்று குறிப்பிலே கூறியிருந்தாலும், 17 சதவீதம்தான் நமது மாநிலத்தில் இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நாம் உணர்ந்தாக வேண்டும். காட்டு வளத்தைப் பாதுகாக்கும் நல்ல எண்ணத்தை அரசு மேற்கொண்டிருக்கிற வகையிலே, வனத் துறையைச் சார்ந்த நிலங்களை வழங்கக்கூடாது என்று அரசு உத்திரவு பிறப்பித்துள்ளதை நான் பாராட்டுகிறேன்.

அடிக்கடி காடுகளை அழிப்பதினால் காட்டின் வளப்பைப் பாதுகாக்கத் தவறியதோடு அல்லாமல் நாட்டின் பருவ மழையும் தவறுகிறது. அதோடு காட்டுப் பகுதியைச் சுற்றி வாழ்கின்ற, தொழிலாகக் கொண்டிருக்கின்ற தொழிலாளர்கள், மலைஜாதி மக்கள் ஆகிய இவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது. இதை இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

[திரு. பொ. சிவாமணி] [1979 ஏப்ரல் 2

ஏலக்காய் பயிரிடுவதற்காகத் தனியார்களுக்கு நீண்ட காலம் குத்தகை கொடுத்து வந்ததை ரத்து செய்திருப்பதைப் பாராட்டுகிறேன். ஒரு வருடம் நீட்டிப்பு குத்தகைக்காரர்களுக்கு அவர்களுடைய கஷ்டத்தைக் கருதி அரசு நீட்டியிருப்பது நல்லெண்ணத்தின் அடிப்படையிலே இருந்தாலும், அரசு விரிப்போடு இருந்து ஒரு வருடத்திற்குப் பிறகு தீவிரமாக அமல்படுத்தவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நல்ல வருமானத்தைத் தருகின்ற காடுகளின் மூலம் மேலும் வருவாய் வருகின்ற வகையிலே ஒரு சில கருத்துக்களை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சந்தன மரங்கள், செம்மரங்கள் போன்ற உயர்ந்த மரங்கள் சம்பந்தமாகத் திருட்டு நடைபெற்று வருகிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசு கடுமையான நடவடிக்கைக்கு ஆணை பிறப்பித்தாலும்கூட மேற்கண்ட சந்தன மரங்களும், செம்மரங்களும் திருட்டுப் போவதைப்பற்றி எண்ணும்பொழுது அதிகாரிகள் நல்ல முறையிலே செயல்படவில்லை என்று நினைக்கவேண்டியிருக்கிறது, இப்படிப்பட்ட மரங்கள் திருட்டுப் போவதால் அரசுக்குப் பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகின்றது. இப்படிப்பட்ட திருட்டில் சம்பந்தப்பட்டவர்களைக் கடுமையான சட்டத்தின் மூலம் தண்டிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் எப்பொழுதும் விழிப்பாக இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட மரங்களுக்கு மேலை நாடுகளில், குறிப்பாக ஜப்பான் போன்ற நாடுகளில் நல்ல கிராக்கி இருக்கிறது. இப்படிப்பட்ட தொழில் செய்பவர்கள், எக்ஸ்போர்ட் செய்கிறவர்கள் ஆகிய இவர்களை அரசு உடனடியாகக் கண்காணிக்க வேண்டும். இவர்களைக் கண்காணித்தாலே இந்த சந்தன மரங்கள், செம்மரங்கள் ஆகியவைகள் திருட்டு போவதை முழுவதுமாகத் தடுத்து விடலாம் என்ற நம்பிக்கையை இந்த நேரத்தில் நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது, குற்றங்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்து சொச்சம் என்று. அக் குற்றங்கள் சம்பந்தப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு சுமார் 35 இலட்சம் ரூபாய். ஆனால் இந்தக் குற்றங்கள் தடுக்கப்பட்டால் செல்லிங் பிரைஸ் அரசுக்கு அதிகமாக கிடைக்கும் என்று கருதுகிறேன். இதற்குப் பெருமளவில் அதிகாரிகள் உடந்தையாக இருப்பதால்தான் இப்படிப்பட்ட திருட்டுக் குற்றங்கள் பலவகையாக ஏற்பட்டிருக்கின்றன என்று சொல்ல விரும்புகிறேன். அதனால்தான் சொல்கிறேன், அதிகாரிகள் முழு அளவில் ஒத்துழைப்பு தந்தால் இப்படிப்பட்ட திருட்டுக் குற்றங்கள் ஏற்படாமல் இருக்கும் என்பதை நம்பிக்கையுடன் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காடுகள் வளர்ப்பு முயற்சி பாராட்டுதற்குரியது. அதற்கான நிதி ஒதுக்கீடும் அதிக அளவில் செய்திருப்பது வரவேற்கத்தக்கது.

ரப்பர் தோட்டங்கள், கிராமப்புறத் தோட்டங்கள் தேயிலைத் தோட்டங்கள் போன்றவற்றில் வளர்ச்சியை அரசு கொண்டு வந்திருப்பதைப் பாராட்டுகிறேன்.

கடலோரப் பகுதிகளில் மரம் நடுதல் போன்ற முயற்சி கடற்கரைப் பகுதி பாதுகாக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், புயல் போன்ற அபாயங்களிலிருந்தும் காப்பாற்றப்படும். இது போன்ற அரசின் முயற்சிகளும் பாராட்டுதற்குரியதாகும்.

ஒன்றை மட்டும் நான் கடைசியாகக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். தனியார் காடுகளை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக உடனடியாக சேலம், ஏற்காடு பகுதிகளிலுள்ள காடுகளில் மரங்கள் வெட்டுவதற்கு அரசு உடனடியாக இடைக்காலத் தடையை விதிக்கவேண்டு மென்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இதை உடனடியாக அரசு செய்யத் தவறினால் சேலம், ஏற்காடு பகுதி களில் தனியார்களால் காடுகள் அழிந்துவிடும் நிலையிலே முடியும் என்பதையும் இந்த நேரத்திலே கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

[பிற்பகல் 1-00]

திரு. சு. முத்துராமலிங்கம் (கரையாளர்): தலைவரவர்களே, வனத்துறை மானியத்திலே என்னுடைய கட்சியான காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். வனத்துறை என்று பார்த்தாலே, நமது தமிழ்நாட்டிலே இருக்கிற வனத்துறை ரொம்பக் குறைவு. 1957-லே பிரியக் கூடிய நேரத்திலே 40 மைல் சதுர வனவளத்தை நாம் விட்டு விட்டோம். அதை இப்பொழுது சொல்லி பிரயோஜனம் இல்லை. இப்பொழுது இருக்கக்கூடியதையாவது நாம் சரியாக பாதுகாக்க வேண்டுமா, இல்லையா? ரோடிலே போகும் போது சில இடத்திலே ரிசர்வ் ஃபாரஸ்ட் என்று போட்டிருக் கிறார்கள். ஆகவே மரங்கள் வேண்டாம், செடிகளாவது இருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. அப்பேர் பட்ட வனத்துறை தான் அங்கே இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையிலே இருக்கக்கூடிய ஏரியாக்களை நாம் விரிவு செய்ய வேண்டும். உதாரணமாக, செங்கோட்டைப் பகுதியிலே கொஞ்சம் மலைகள் உள்ளன. அந்த மலைப் பகுதியிலே மரங்கள் நிறைந்த ஏரியாக்களை விட, பாறைகள் நிறைந்த இடம் ஜாஸ்தியாக இருக்கின்றன. அப்படியிருந்தாலும் மரங் களும் கொஞ்சம் இருக்கின்றன. அந்த மரங்களை நாம் வெட்டக் கொடுக்கிறோம். பக்கத்திலே பட்டா நிலம் என்று சொல்லி, பட்டா நிலத்தில் இருப்பதை வெட்டுவதோடு

[திரு. முத்துசாமி கவுண்டர்] [1979 ஏப்ரல் 2

ஃபாரஸ்ட் நிலத்தில் இருக்கிற ஒன்றிரண்டை வெட்டுகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களிலே மரம் நட ஏற்பாடு செய்ய வேண்டும்.

செங்கோட்டைப் பகுதியிலே ரப்பர் பிளான்டேஷன் நல்ல விதமாகச் செய்யலாம். கன்னியாகுமரி ஏரியாவிலே எவ்வளவு வருகிறதோ அதைக்காட்டிலும் நல்ல ஏரியா இருக்கிறது. செங்கோட்டை ஏரியா என்று பார்த்தால், அம்பாசமுத்திரத்திலேயிருந்து புளியங்குடி வரையில் கண்டிப்பாக ரப்பர் போடலாம். ரப்பர் மாத்திரமல்ல, காஃபி பிளான்டேஷன் கூடப்போடலாம். அது விஷயமாக உடனடியாக நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஃபாரஸ்ட் ஏரியாவிலே ரோடு ஜாஸ்தியாகியிருக்கிறது. அப்படி இருந்தாலும் ரோடுகள் எல்லாம் நம்மிடம் இருக்கின்றன. ஃபாரஸ்ட் துறை இருக்கிற ரோடுகளை எல்லாம் தன்னுடைய கன்ட்ரோலில் வரவேண்டுமென்று ஆத்திரத்தில் இருக்கிறார்களே ஒழிய, அவர்களுடைய கன்ட்ரோலில் இருக்கிற ரோடுகளை நல்லவிதமாகச் செப்பனிடுவதில் அவர்களுக்குக் கவனமே இல்லை. இந்த ரோடுகள் சில எல்லைத் தடங்களிலே போகக்கூடிய ரோடுகளும், ஃபாரஸ்ட் ரோடுகளாக இருக்கின்றன. அந்த ரோடை ரிப்பேர் செய்ய வேண்டுமென்றாலும் அதற்கும் ஃபாரஸ்ட் துறை அனுமதிக்கவில்லை. அதே சமயத்திலே, பாபனாசத்திலே, பஞ்சாயத்து யூனியனிலே இரண்டு பாலம் கட்டி இருக்கிறார்கள். ஒரு பாலம் ஃபாரஸ்ட் ஏரியாவிலே தான் இருக்கிறது. ஃபாரஸ்ட் ஏரியாவிலே இருக்கக்கூடிய ரோடுகளை நாம் ரிப்பேர் செய்யாமல் இருக்கும்போது அந்தப் பாலத்தை நீங்கள் எடுத்துக்கொண்டால், அந்தப் பாலத்தினுடைய கதி என்ன ஆகும். பாலத்தை எடுத்துக்கொள்வதில் எங்களுக்கு அப்ஜெக்ஷன் கிடையாது. அதே சமயத்திலே அதை ஒழுங்காக வைத்துக்கொள்ளவும் நாம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஃபாரஸ்ட் லாண்ட் என்றிருக்கிறது. அதாவது, காட்டிலே போகும்போது, பார்க்கும் நிலை, அந்த இடத்திலே கருவேலம் போட்டிருக்கிறோம். அது புஞ்சைப்பட்டியிலே இருந்தால், அதிலே இருந்து கிடைக்கக் கூடிய வரும்படியிலே பஞ்சாயத்துக்கும் கொஞ்சம் கொடுத்தால், லைட் எரிய வைக்க, பல்ப் வாங்க உதவியாக இருக்கும். சில இடத்திலே கொடுப்பதாக அறிகிறேன், சில இடங்களிலே கொடுக்கவில்லை என்றும் அறிகிறேன்.

செய்தித் துறையிலே, மாண்புமிகு அம்பிகாபதி அவர்கள் சொன்னார்கள். எங்கள் பட்ஜெட் போடவில்லையென்று சொன்னார்கள். ஐயா, எங்கள் பட்ஜெட் போடவேண்டாம்.

1979 ஏப்ரல் 27 [திரு. க. முத்துசாமி, கரையாளர்]

அதற்கு நாங்கள் வருத்தப்படவில்லை. எதிர்க்கட்சியிலே இருந்து நல்ல கருத்துக்கள் இருந்தால், அதைத் தமிழரசு பத்திரிகையிலாவது போடலாம் அல்லவா? உங்களுக்கு எது நல்லது என்று படுகிறதோ அப்பேற்பட்ட கருத்துக்களையாவது நீங்கள் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுலா துறையிலேயும், செய்தித் துறையிலேயும், அரசாங்க ஊழியர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கும்போது சில சமயத்திலே உங்களுடைய கவனத்திற்குத் தெரியாமலேயே மாறுபட்ட அபிப்பிராயங்கள் வந்திருப்பதாகப் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதையும் சற்று ஆராயவேண்டுமென்று உங்களிடம் நான் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

*திரு. க. இரா. சின்னராசு: தலைவரவர்களே, 1979-80-ம் ஆண்டுக்குரிய வன இலாகா மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், இந்த மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பேசி, இதிலே இருக்கிற நல்ல பல திட்டங்களை இங்கே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வன இலாகாவிற்கு முக்கியத்துவம் கொடுத்து காடுகளை வளர்க்கிற நல்ல திட்டங்களைத் தீட்டி இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காடு நன்றாக இருந்தால்தான் நாடு நன்றாக இருக்கும். தலைவரவர்களே அதனுடைய அடிப்படையில் நல்ல காடுகளை வளர்ப்பதற்கும், சந்தனம், மூங்கில் போன்ற நல்ல மரங்களை வளர்ப்பதற்கும் திட்டங்களை தீட்டி இருப்பதை நான் பாராட்டி வரவேற்கிறேன். அதன் அடிப்படையிலே என்னுடைய தொகுதியிலே வேப்பனப் பள்ளி பகுதியில் நல்ல மண்வளம் இருப்பதால் சந்தனக் காடுகள் வளர்ப்பதற்கு, அரசு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன். காடுகளை வளர்ப்பதற்கு அரசு போட்டு இருக்கிற திட்டத்தின் ஒரு கட்டமாக பஞ்சாயத்து யூனியன் சாலை ஓரங்களில் புளியமரம், புங்கமரம் போன்ற மரங்களை வளர்த்து நல்ல வருவாயை ஈட்டித் தருகின்ற திட்டங்களைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், சாலை மருங்குகளில் அரசு இந்த திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்திலே இந்த மானியத்திலே சந்தனக் கட்டைகள் களவு போவதைத் தடுப்பதற்காக ஒரு கடுமையான சட்டத்தைப் போடுவோமென்று சொல்லியிருப்பதை உண்மையிலேயே பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். சந்தனக் கட்டைகள் திருடு போவது தடுக்கப்பட வேண்டும். தர்மபுரி மாவட்டத்திலிருந்து கர்நாடக மாநிலத்திற்கு சந்தனக்கட்டைகள் கடத்திச் செல்லப்படுகின்ற நிலைமைகளை நாங்கள் பார்க்கிறோம். அதற்கு பல அரசு வன இலாகா அதிகாரிகள் கூட உடந்தையாக இருப்பதாகச் சொல்லப் படுகிறது. அமைச்சர் அவர்கள்

[திரு. க. இரா. சின்னராசு] [1979 ஏப்ரல் 2

சமீபத்தில் தர்மபுரி மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்த போது அந்தப் பகுதிகளில் எல்லாம் என்ன என்ன மரங்களை விளைவிக்கலாம் என்பதை பார்த்து வந்திருக்கிறார்கள். அதை அவர்களுக்கு நினைவூட்ட நான் கடமைப் பட்டிருக்கிறேன். என் தொகுதியில் காட்டு நிலங்களில் 20, 25 வருஷங்களாக நிலம் இல்லாத ஏழை விவசாயிகள் அந்த நிலங்களை பயிர் செய்து தென்னை மரங்களையும், புளியமரங்களையும் உற்பத்தி செய்து இருக்கிறார்கள். அந்த ஏழைகள் அந்த நிலங்களை பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பம் கொடுத்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் அதை பரிசீலித்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதாக கூறிவந்துள்ளார். இதனை அமைச்சர் அவர்களுக்கு நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன். எனவே மேற்கண்ட நிலங்களை அந்த ஏழைகளுக்கு அடமானம் செய்துக் கொடுக்க கேட்டுக் கொள்கிறேன். எங்கள் மாவட்டத்தில் தரமான ரப்பர், காஃபி போன்றவை விளைவிப்பதற்கு நல்ல சீதோஷ்ணநிலையும் இயற்கை வளமும் இருப்பதை அமைச்சர் அவர்கள் சுற்றுப் பயணத்தின்போது கண்டு வந்துள்ளார்கள். அவைகளை உற்பத்தி செய்யவேண்டிய ஏற்பாடுகளை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் இருக்கிற பெரும்பாலான மலைகள் கற்கள் நிறைந்தவை. இம்மலைகளில் சீத்தாப்பழம் தருகின்ற சீத்தாச் செடிகளை வளர்த்து அதன் மூலமாக நல்ல வருமானத்தை அரசிற்குக் கிடைக்க வாய்ப்பில்லாததால் சீத்தாச் செடிகளை வளர்க்க அமைச்சர் அவர்கள் வேண்டிய நடவடிக்கைஎடுக்கவேண்டுமென்று கேட்டுகொள்கிறேன். வாய்ப்புக்கு நன்றி கூறி இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[பிற்பகல் 1-10]

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்கோனா, வனத் துறை, சுற்றுலா வாரியத்தின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இரண்டொரு வார்த்தைகள் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம் சுற்றுலாத் துறை பற்றி உலகம் முழுவதும் அபரிமிதமான முறையில் தீவிரப்படுத்த நடவடிக்கை எடுத்து வரும்போது, தமிழகத்திலும் அது ஓரளவுக்கு விஸ்தரிக்கும் நிலையை நமது தமிழக அரசு எடுத்து வருகிறது. இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்வது எல்லாம் என்னுடைய தொகுதிக்கு அருகாமையில் இருக்கக்கூடிய கொடைக்கானல், பழனி ஆகிய இரண்டும் மிக நெருக்கமான இடைவெளியில் இருக்கிறது. இதற்கு இடையில் பழனிப்பகுதியில், பாலாறு-அப்பலாறு நதியும், வரதமாநதியும் அருகே இருப்பதால், அந்த கொடைக்கானல், பகுதியில் இருந்து பழனிக்கு வரும்

1979 ஏப்ரல் 21 [திரு. என். பழனிவேல்]

சுற்றுலாப் பகுதி மக்கள் பார்த்து மகிழ வரதராஜ நதி அணைக் கட்டுக்குப் பக்கத்தில் ஒரு சுற்றுலா ஸ்தாபனம் சுற்றுலாத் துறை ஏற்படுத்திக் கொடுத்தால், அங்கே செல்லக்கூடியவர்களுக்கு வசதியாக இருக்கும், அந்தப் பகுதியும் முன்னேற்றம் அடையும் வாய்ப்பு இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

சென்னையில் இருக்கும் மிருகக் காட்சி சாலையை வண்டலூருக்கு மாற்றப்போவதாக திட்டமிட்டு இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அதற்கு 1.5 லட்சம் ரூபாய் செலவு செய்யப்போவதாகச்சொல்லி இருக்கிறார்கள். அந்த திட்டத்தை கைவிட்டு விட்டு, அதை கொடைக்கானல் பக்கத்தில் உள்ள பழனிப் பகுதியில், வனங்கள் மிகுந்த பகுதியில் கொண்டு வந்து வைத்தால் மிகவும் உதவியாக இருக்கும். அந்தப் பகுதியும் முன்னேற்றம் ஆவதற்கு உதவியாக இருக்கும், சென்னையில் எல்லாத் துறையும் குவிந்து இருப்பதை தவிர்க்க இதை அமல் படுத்தவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள் கிறேன்.

அதேபோல் இன்றையதினம் வனத் துறை அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்றால், சாதாரண ஏழை எளிய மக்களிடத்திலே வனங்களின் சொத்துக்களை அழித்துவிட்டார்கள் என்று இம்சிக்கிறார்கள். அதே நேரத்தில் பெரிய ஆட்களை அவர்கள் தொடுவது கிடையாது. அவர்களிடத்தில் ஏதோ காசுகளை வாங்கிக் கொண்டு உதவிகரமாக இருக்கிறார்கள். ஆனால் சாதாரண ஏழை எளியவர்கள் 1 ஏக்கர், ½ ஏக்கர் என்று எடுத்து ஜீவனம் செய்ய முயற்சித்தால் அவர்கள் மீது கிரிமினல் வழக்குப் போடுகிறார்கள். இதை அரசாங்கம் போக்கவேண்டும். அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சின்கோனா தொழிலில் இன்றைய தினம், நீலகிரி மாவட்டத்தில் 3,000-க்கும் மேற்பட்டவர்கள் ஈடுபட்டு இருக் கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான வசதியும் செய்து கொடுத்ததாகத் தெரியவில்லை. குறிப்பாக, வீட்டு வசதி அவர்களுக்குக் கிடையாது. அதுமட்டுமல்ல, அவர்களுக்கு மருத்துவ வசதி கிடையாது. மருத்துவ வசதி பெற வேண்டும் என்று சொன்னால் 15 மைல், அவர்கள் கால்நடையாகச் சென்று வரவேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு அந்தக் குறையைப் போக்கும் முறையில் நீலகிரி பகுதியில் ஒரு ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், நீலகிரி மாவட்டத்தில் மோயார் டிவிஷன் பகுதியில் உள்ள சின்கோனா தொழிலாளர்களை அந்த அதிகாரிகள் மிகவும் தொந்தரவு செய்வதாக எனக்குத் தகவல் வந்து இருக்கிறது. அதை நீங்கள் தடுத்திட்டுப் போக்கவேண்டும். அதேபோல், கன்னியாகுமரி மாவட்டத்தில்

[திரு. என். பழனிவேல்] [1979 ஏப்ரல் 2

சிறிப்பாறை என்ற இடத்தில் உள்ள ரப்பர் தோட்டத்தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி இல்லை. அவர்களின் இந்த குறையை கவனித்து அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும். மாஞ்சோலைப் பகுதியில் சட்டவிரோதமாக மரங்கள் வெட்டப்படுகின்றன. அப்படி வெட்டியவர்கள் மீது இதுவரையில் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை ஆகவே அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு, பழனிப் பகுதியை சுற்றுலாப் பகுதியாக உருவாக்கவேண்டும். லட்சக்கணக்கான மக்கள் யாத்திரிகர்களாகவும் வருகிறார்கள் சுற்றுலாப் பயணிகளாகவும் வருகிறார்கள், ஆகவே, அது இன்றையதினம் சுற்றுலா மையமாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், அதற்கு இந்த இடம் தகுதியான இடம் என்று சொல்லிக்கொண்டு அந்த வாய்ப்பை அளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, வனத் துறை மற்றும் சிங்கோனா, சுற்றுலா ஆகிய மானியங்கள்மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன் இந்த மானியக் கோரிக்கைகள் மீது பல்வேறு கருத்துக்களை சொல்ல வேண்டியதிருந்தாலும் காலம் இடம் கொடுக்காத காரணத்தால் வனத் துறையைப் பொறுத்த வரையில் மட்டும் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

வனத்துறையை எடுத்துக்கொண்டால் 1977-78 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகையைவிட 1979-80 ஆம் ஆண்டிற்கு குறைவாக இருக்கிறது (குறுக்கீடு) ஐ ஆம் சாரி. வருவாய் இனத்தில் 1977-78 ஆம் ஆண்டில் வந்த வருவாயைவிட 1979-80 ஆம் ஆண்டு எதிர்பார்க்கும் வருவாய் குறைவாக இருக்கிறது. எல்லாப் பொருட்களின் விலையும் உயர்ந்து கொண்டே போகும்போது வனத்துறை வருவாயில் மட்டும் 1977-78 ஆம் ஆண்டு 1051 இலட்சம் ரூபாய் வந்திருக்க 1979-80 ஆம் ஆண்டுக்கு எதிர்ப்பார்க்கும் வருவாய் 925.48 இலட்சம் ரூபாய் என்று எப்படி குறைய முடியும்? எப்படி இந்தக் கணக்கு காட்டப்பட்டிருக்கிறது, அதன் காரணம் என்ன என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

1977-78 ஆம் ஆண்டைவிட நிச்சயமாக எல்லா மலைப் பொருட்களுமே விலை ஏறியிருக்கின்றன. குறிப்பாக விறகு விலை எத்தனையோ மடங்கு உயர்ந்திருக்கிறது. வனத்திலிருந்து அதிகமாக விறகுகளை நாம் விற்றுக்கொண்டிருக்கிறோம். அதோடு 'டிம்பர்' எக்கச்சக்கமாக விலை ஏறியிருக்கிறது. இரப்பர் விலை ஏறியிருக்கிறது. அப்படி இருக்கும்போது வருவாய்க் கணக்கில் ஏன் குறைவாக காட்டப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர்வர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 2] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அடுத்தபடியாக, கன்னியாகுமரி ஜில்லாவில் கூப்பு ஏலம் விடுவதில் பல குறைபாடு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். ஒரு கூப்புக்கு அரசு ஏலம் விடும்போது 8,000 ரூபாய்தான் வருவாய் வருவதாகத் தெரிகிறது. ஆனால் அந்தக் கூப்பை ஏலம் எடுக்கும் கான்ட்ராக்டர்கள் சப்-கான்ட்ராக்டர்களுக்கு மறு ஏலம் விடும்போது ரேட் ஏறத்தாழ 20,000 ரூபாய்க்கு போகிறது. 8,000 ரூபாய்க்கு எடுக்கிற கூப்பு எப்படி 20,000 ரூபாய்க்கு போகிறது என்று பார்க்கவேண்டும். ஆக, அங்கே பல தில்லுமுல்லுகள், ஊழல்கள் நடைபெறுகின்றன என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நிச்சயமாக மாண்புமிகு அமைச்சரவர்கள் இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். ஒரு கூப்பில் இந்த அளவுக்கு இழப்பு ஏற்பட்டால் ஓராண்டு காலத்தில் எத்தனை இலட்சம் ரூபாய் இந்த ஒரு இனத்தின்கீழ் இழப்பு ஏற்படும் என்பதை அரசாங்கம் சிந்திக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, 100 அடி ஏலம் விடுவதாக கணக்கு எழுதுகிறார்கள். ஆனால் 200 அடி, 300 அடி பிறகு வெளியே போகிறது என்ற தகவல் இருக்கிறது. அதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

அடுத்தபடியாக மலைவாழ் மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் வன அதிகாரிகளின் பாதுகாப்பில் இருக்கிறார்கள். மலைவாழ் மக்களுக்கு வன அதிகாரிகள் 'காரியனாக' இருக்கிறார்கள். ஆனால் இப்போது இருக்கிற நிலைமை அந்த அதிகாரிகளின் தொல்லை எந்த அளவுக்கு இருக்கிறது என்றால் மலைவாழ் மக்கள் வனத்தைவிட்டு வெளியே போய்விடலாம் என்று எண்ணுகின்ற அளவுக்கு தொல்லை கொடுக்கிறார்கள். அவர்கள் விளைவிக்கின்ற விளைப்பொருட்களை சந்தைக்கு கொண்டுவருவதற்குக் கூட அந்த அதிகாரிகளுக்கு மாமூல் கொடுக்கவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு அரசாங்கம் நிலம் கொடுத்திருக்கிறது. அதிலே அவர்கள் விளைப்பொருட்களை பயிரிட்டு, வாழ்க்கை நடத்தலாம். ஆனால் அந்த அதிகாரிகளின் தொல்லைகளால் அந்த நிலங்களில் விளைப்பொருட்களை பயிரிட முடியாமல் இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிலத்தை அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மலைவாழ் மக்கள் வன விலங்குகளோடு போராட்டம் நடத்தி, வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் 'கன்ட்ரி கன்' வைத்துக்கொள்ள

ஏற்கனவே உரிமை இருந்தது. இடைக்காலத்தில் அந்த கன்களுக்கு லைசென்ஸ் எடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். லைசென்ஸ் எடுப்பதில் பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே இருந்த அரசியல் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவர்கள் இருக்கின்ற இடங்களுக்குச் சென்று லைசென்சை புதுப்பிக்க வேண்டும் என்ற முறை இருந்தது. இப்போது இரண்டு ஆண்டுகளாக அந்த முறை இல்லை. அதுபற்றி ஆலோசனை செய்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இரப்பர் பிளான்டேஷனைப் பொறுத்தமட்டில் 4,385 ஹெக்டேரில் அங்கே இரப்பர் வைத்திருக்கிறோம். ஆனால் 1,473 ஹெக்டேரில்தான் இப்போது பலன் கிடைக்கிறது. இந்தக் கணக்கைப் பார்க்கின்றபோது உண்மையிலேயே நமக்கு ஒழுங்காக கிடைக்க வேண்டிய பலன் வரவில்லை என்று நான் குற்றஞ் சாட்ட விரும்புகிறேன்.

தனியார் தோட்டங்களிலிருந்து கிடைப்பதைவிட இது மிகவும் குறைவாக இருக்கிறது. அதற்கு பல காரணங்கள் உண்டு. அவற்றை எல்லாம் இங்கே எடுத்துக்கூற நேரம் இல்லை. ஆகையால் எல்லாவற்றையும் நன்கு பரிசீலித்து தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காக இதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக்கொண்டுவர விரும்புகிறேன். மற்ற தனியார் இரப்பர் தோட்டங்களில் கிடைக்கின்ற வருமானம் நமக்கும் கிடைக்க வேண்டும். இப்போது அப்படி கிடைக்கவில்லை. அதற்குக்காரணம் என்ன? அமைச்சரவர்கள் அதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஏற்கெனவே தொழிலாளர்களுக்கு பல நன்மைகள் செய்து கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நன்மைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன, இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் பல தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்கப்படவில்லை. அவர்கள் மிகவும் தூரத்திலிருந்து வரவேண்டியிருக்கிறது. காலையில் 4 மணிக்கு, 5 மணிக்கு புறப்பட்டு வர வேண்டியிருக்கிறது. அப்படி வந்தால் தான் 'டேப்பிங்' ஒழுங்காக செய்ய முடியும்.

ஏற்கெனவே அவர்களுக்கு வாகன வசதி கொடுக்கப்பட்டிருந்தது. இப்போது இந்த வாகன வசதியே இல்லை. மணல் ஓடை, கல்லார், மருதம்பாறை போன்ற இடங்களில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு உடனடியாக போக்குவரத்து வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 27 [தி. ஜெ. ஜேம்ஸ்]

[பிற்பகல் 1.20]

மானாமிகு போக்குவரத்து அமைச்சரவர்கள் ஒரளவு சிறு சிறு பஸ்களை விட்டாலும் கூட அது அவர்களுக்குப் போதுமானதாக இருக்கும் என்று சொல்லி அதை அவர்கள் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக வாட்சர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்க வில்லை. அவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பது அவசியம். அவர்கள் அங்கேயே தங்கி இருக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் வாட்சர்கள் தினக்கூலிகளாக இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்கி மற்ற தொழிலாளர் களுக்குள்ள எல்லா உரிமைகளையும் அவர்களுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக இருக்கிறது.

(குறுக்கீடு)

இப்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அவ்வாறு கொடுக்கப்படுகிறது என்றால் அதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

அடுத்து சூப்பர்வைசர்கள் அங்கே இருப்பது போதாது. ஆகவே சூப்பர்வைசர்களை அப்பாயின்ட் பண்ணவேண்டும். அங்கே ஃபீல்டு வொர்க்கர்ஸ், டேப்பர்ஸ் போன்றவர்களில் எஸ். எஸ். எல். சி., பி. யு. சி. படித்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு சூப்பர்வைசர்களாக ப்ரொமோஷன் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு அவ்வாறு ப்ரொமோஷன் கொடுத்தால் அது பயனுள்ளதாக இருக்கும். அரசுக்கும் அது வருவாய் தரத்தக்கதாக இருக்கும். அடுத்து இன்னும் பல படித்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் அங்கே வேலைக் கொடுக்க வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து சி.எல்.ஆர். என்ற அந்த பணியாளர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்றும் அவர்களுக்கும் தொழிலாளர்களுக்குரிய அத்தனை நன்மைகளையும் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரே வேலை செய்யக்கூடிய ஆண்களுக்கும் பெண் களுக்கும் ஒரே கூலி கொடுக்கவேண்டும் என்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் அங்கே இந்த முறை பின்பற்றப்படவில்லை. ஆகவே அதனை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிரிப்பாறை ஃபேக்டரியில் ஏறத்தாழ 90 தொழிலாளர்கள் தெக்கல் வொர்க்கர்களாக அதாவது சி.எல்.ஆர்-களாக நீண்ட நாட்களாக வேலை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு எந்த நன்மையும் கிடைப்பதில்லை. அவர்கள் அதிக சர்விஸ் பெற்று விடக்கூடாது என்பதற்காக இடையிடையே இரண்டு வருடத்திற்கு ஒரு முறை அவர்களுடைய சர்விஸைப் பிரேக் செய்து அதன்

மூலம் சட்டத்திலே இருந்து தப்பித்துக்கொள்வதற்கு நிர்வாகத்தினர் முயற்சி செய்கிறார்கள். அது அநீதி என்பதைக் குறிப்பிட்டு நீண்ட நாட்களாக அங்கே வேலை பார்க்கும் அந்த தொழிலாளர்களை நிரந்தரமாக்கி வேலை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

ரப்பர் ஃபேக்டரியில் அதிக வேலை இருக்கிறது. கிடைக்கின்ற ரப்பர்களை உபயோகப்படுத்தாமல் தனியார்களுக்கு விற்கப்படுகிறது. அவ்வாறில்லாமல், உண்மையிலேயே இந்த அரசு தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும் என்று எண்ணி இருந்தால் தொழிலாளர்களை நிரந்தரமாக அமர்த்தி தனியாருக்கு ரப்பரை விற்காமல் அதை வைத்து வேலை நடத்தினால் நிச்சயமாக அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க முடியும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து தனியாருக்கு அந்த ரப்பரை வெளியே விற்பதால் பல ஊழல்கள் நடைபெறுகின்றன என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல் ரப்பரை வெளியே போடக்கூடிய நிலை இருப்பதால் பாதுகாப்பற்ற நிலை இருக்கிறது. அங்கே நிறைய திருட்டுப்போவதாகவும் தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. இவற்றை எல்லாம் அதிகாரிகளிடம் எடுத்துக் கொண்டால் அவர்கள் அதிலே கவனம் செலுத்துவதில்லை. இதனால் அரசுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து தனியார் தோட்டங்களில் எல்லா தொழிலாளர்களுக்கும் 20 சதவீதம் போனஸ் கொடுக்கப்படுகிறது. ஆனால் நாம் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுப்பதில்லை. இதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் சட்டத்தைக் காட்டலாம். அப்படி சட்டத்திலே இடம் இல்லை என்றாலும் எக்ஸ்கிரேசியா என்ற முறையில் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மராமத்து வேலைகள் அங்கே நடைபெறுகிறது. காண்டிராக்டர்கள் அதனைச் செய்கிறார்கள். அப்போது அவர்களைச் செக் பண்ணுவதற்காக டி. எஸ். ஓக்கள் இருக்கிறார்கள். அவர்கள் 20 சதவீதம் என்ற அளவில் கமிஷன் அவர்களிடம் வாங்குகிறார்கள். இந்த அளவுக்கு அங்கே ஊழலும் முறைக்கேடுகளும் இருக்கின்றன. இந்த ஊழல்களுக்கெல்லாம் காரணம் டி. எஸ்.ப் ஓக்கள் தான். இவர்கள் கையில் அதிகாரம் இருப்பதால்தான் ஊழலே நடைபெறுகிறது. ஏழை காண்ட்ராக்டர்களால் இவர்கள் கேட்கின்ற கமிஷனைக் கொடுக்க

[1979 ஏப்ரல் 2] [திரு. ஜே. ஜேம்ஸ்]

முடியாது. இருந்தாலும் அவர்கள் அவ்வாறு கொடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். இதனை மாண்புமிகு அமைச்சர் வர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதோடு சிற்றாறு பிளைவுட் ஃபிட்டிங், டிரேலிங் என்று கணக்கு எழுதி, எந்த விதமான வேலையும் செய்யாமல் 30 ஆயிரம் ரூபாய் கணக்கெழுதி எடுக்கப்பட்டிருக்கிறது. எம்.எம்.புக் எல்லாம் எழுதப்பட்டிருக்கிறது வேலை நடந்ததாக. உடனடியாக இந்தத் தகவலை விஜிலென்ஸ்-க்கு அனுப்பி உடனடியாக 'ஆன் தி ஸ்பாட்' இன்ஸ்பெக்ஷன் நடத்தினால் எந்தவிதமான வேலையும் செய்யாமல் 30 ஆயிரம் ரூபாய் கொள்ளை அடிக்கப்பட்டிருப்பதை கண்டுபிடிக்க முடியும் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வேலை செய்யாமல், வேலை செய்ததாக ரிக்கார்டு பண்ணியிருக்கிறார்கள். ஃபிட்டிங் அன்ட் டிரேலிங் என்ற முறையில் அங்கு எந்தவிதமான வேலையும் நடக்க வில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சிற்றாறு, கல்லாறு, மயிலாறு போன்ற இடங் களில் ப்ளட் ரிலிப் வொர்க்ஸ் என்று சொல்லி வேலை நடத்தப் பட்டதாக காண்பிப்பதற்கு, கல்வெர்ட் கட்டப்பட்டதாகவும், ட்ரிக்கார்ட்ஸ் கட்டப்பட்டதாகவும் கணக்கு எழுதுகிறார்கள். கல்வெர்ட் வேலை என்றும், ட்ரிக்கார்ட்ஸ் வேலை என்றும் புதிதாக தோற்றம் அளிப்பதற்காக கொஞ்சம் வெள்ளை அடித்துக் காட்டிவிட்டு, இப்படிப்பட்ட வேலையில் 50 ஆயிரம் ரூபாய் எடுத்திருப்பதாக தகவல் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் உடனடியாக விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்தால் இவையெல்லாம் நிரூபணம் ஆகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இப்படிப்பட்ட வேலைகளுக்கு அரசாங்கத்தினுடைய சிமிண்டு அலாட் செய்யப்படுகிறது. இப்படி அந்த ரப்பர் தோட்டத்திற்கு வேலைகளுக்காக எடுக்கப்பட்டுவரும் சிமிண்ட் தங்கம் தியேட்டருக்கு கொடுக்கப்பட்டதாக தகவல் வந்திருக் கிறது. இதை அமைச்சர் அவர்கள் உடனடியாக விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் இதை விஜிலென்ஸ்-க்கு அனுப்பினால் இன்னும் பல விஷயங்களை கண்டு பிடிக்க முடியும். இதற்கு முன்னாலும் இவ்விதம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதில் குற்றம் நிரூபிக்கப்பட்டு பலர் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதில் கூழல நடை பெற்றிருக்கிறது என்பதை சொல்லவிரும்புகிறேன். இன்னும் ஒன்றை சொல்ல விரும்புகிறேன்... (மணியடிக்கப் பட்டது) எனக்கு 10 நிமிட நேரம் தரவேண்டுகிறேன்.

மஸ்டர்ரோலில் ஐந்து காணிக்காரர்களை வேலை செய்ததாக போட்டுவிட்டு, அவர்களிடம் கையெழுத்து வாங்கிக் கொள்கிறார்கள். பின்னால் அதை டெண்டராய் செய்துவிட்டு

தனக்கு வேண்டிய கான்டிராக்டர் ஒருவரிடம் அவர் பெயரில் பெயர்களை போட்டுபணத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒரு மோசடி நடந்து கொண்டிருக்கிறது. இதை விசாரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஃபைர் லைன் வெட்டுதல் என்று சொல்லி சிறிய தொகையை போட்டு கணக்கு எழுதி ஏதாவது வேலை செய்ததாக கணக்கு காண்பித்துவிட்டு மொத்தப் பணத்தையும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதையும் அமைச்சர் அவர்கள் உடனடியாக நிவிரமாக கவனம் செலுத்தி விசாரணை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரசு பொறுப்பில் இருக்கின்ற அதிகாரிகளிடம் இப்படிப்பட்ட முறைகேடுகளைப்பற்றி கேட்டால், நாங்கள் என்ன செய்வது. கோதையாற்றிலும், கோவளத்திலும் அரசு தரப்பிலிருந்து வருகின்ற அதிகாரிகள் விருந்தாளிகளாக வரும் போது நாங்கள் செலவுக்கு எங்கே போவது என்று கேட்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. நாங்கள் இங்கே சென்னையில் இருக்கிறோம், அங்கே யார் யார் போகிறார்கள் என்று தெரியவில்லை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் சபையின் நேரத்தை இன்னும் சற்று நீட்டிக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். கன்னியாகுமரி ஜில்லாவில் டூரிஸ்ட் சென்டராக இருக்கின்ற கன்னியாகுமரி நகரியம் முக்கியமாக விளங்குகிறது என்பதை சொல்லத் தேவையில்லை. அண்மையில் அங்கு ரயில் போக்கு வரத்து ஆரம்பிக்கப் போவதாக இருக்கிறது. ஆயிரக்கணக்கான டூரிஸ்டுகள் தினமும் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதற்கு தகுந்த வசதிகள் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. முக்கியமாக குறைந்த அளவில் அவர்களுக்கு தங்கும் வசதி செய்து தொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் திற்பரப்பு நீர்வீழ்ச்சி இருக்கிறது, இதை ஒரு டூரிஸ்ட் சென்டராக ஆக்கவேண்டும். முக்கியமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் திற்பரப்பு, கோதையாறு முதலிய இடங்களுக்கு டூரிஸ்டுகள் போய்வருவதற்கு வசதியாக மினி பஸ்களை விட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-30]

* திரு. கா. வே. கந்தசாமி : தலைவர் அவர்களே, சென்கோனா, செய்தித் துறை மானியங்களின் பேரில் எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்லி, என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன். பொள்ளாச்சி

பகுதியில், மலைப்பகுதி அதிகமாக இருப்பதால், சிங்கோனா செடிகளை நடுவதுபோல், இன்னும் கோக்கோ, கடுக்காய் போன்ற செடிகளையும் கிட்டத்தட்ட இன்னும் ஆயிரக்கணக்கான ஏக்கர்களிலே பயிரிடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது நிரந்தரமான நகரும் சினிமா தியேட்டர்களுக்கு கம்பவுண்டிங் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த வரியை இன்னும் அதிகமாக விதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்ற ஆண்டு இதனால் 22 கோடி ரூபாய் வருமானம் வந்ததாகச் சொல்லப்படுகிறது. இப்போது கம்பவுண்டிங்கினால் அரசுக்கு அதிகம் வரி வருகிறது. இந்த வரி விதித்தலை டூரிங்சினிமாக்களுக்கும் கொண்டுவர இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன். சிறிய கிராமங்களிலே இப்போது டூரிங் சினிமாக்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு லைசன்ஸ் காலத்தை 5வருஷமாக கொடுக்கவேண்டும் என்றும், காலத்தை அதிகப்படியாக 5 ஆண்டுகளுக்கு கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். பக்கத்திலே, ஆந்திர மாநிலத்தில் அங்குள்ள கிராமங்களில் டூரிங் சினிமாக்களுக்கு 5 வருஷமாக லைசன்ஸ் கொடுக்கப்பட்டு, நடத்தப்பட்டு வருகின்றன.

அதேபோல, மின்சாரக் கட்டணத்தை எடுத்துக்கொண்டால் டூரிங் சினிமாக்களுக்கு ஒருவிதமாகவும், நிரந்தர சினிமாக்களுக்கு ஒருவிதமாகவும் இருக்கிறது. டூரிங் சினிமாக்களுக்கு ஒரு யூனிட்டுக்கு ஒரு ரூபாய் வீதம், டிப்பாசிட்டு வசூல் செய்கிறார்கள். 1000 ரூபாய் வசூல் செய்கிறார்கள். ஆனால், நிரந்தர சினிமாக்களுக்கு மாதா மாதம் எந்த அளவு மீண்டும் உபயோகம் செய்கிறார்கள். இப்படிப்பட்ட தியேட்டர்களுக்கு ஒரு யூனிட்டுக்கு எட்டணா வீதம் தான் வசூலிக்கிறார்கள். எனவே, இந்த வித்தியாசம் இல்லாமல் இரண்டிற்கும் பேங்கிற்கும் ஒரே விதமான தொகை வசூலிக்க வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது டூரிங் சினிமாவுக்கும், நிரந்தர சினிமாவுக்கும் இடையே ஒரு மைல் வித்தியாசம் இருக்க வேண்டுமென்று அரசாங்க உத்தரவு இருக்கிறது. அதை ஒரு கிலோ மீட்டராக குறைக்கவேண்டும். தவிர, அவர்கள் இதற்கான லைசன்ஸ்களை அங்குள்ள பஞ்சாயத்திலோ அல்லது தாலுகா அலுவலகத்திலோ கொடுப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது நிரந்தர சினிமா கொட்டகை வைத்திருப்பவர்கள் வாரத்திற்கு ரூ. 12,000/-, ரூ. 13,000/- என்று வாடகை வாங்குகிறார்கள். அதையும், இந்த அரசு கண்காணிக்க வேண்டும்; அதை கவனத்தில் கொண்டு இந்த டூரிங் சினிமாக்களுக்கு பெருநகரங்களிலும் லைசன்ஸ் கொடுக்க வேண்டும்.

[திரு. கா. வே. கந்தசாமி] [1979 எப்ரல் 2

கம்பவுண்டிங் டாக்சைப் நிரந்தர தியேட்டரூக்கும் போட வேண்டும். சென்ற ஆண்டு சிறிய கிராமங்களிலே கூட கொண்டு வந்தார்கள். அதிகாரிகளின் தொல்லையும், ஊழலும் தான் ஏற்பட்டது. ஆனால், நகர தியேட்டர்களுக்கு இரண்டு மடங்கு கம்பவுண்டிங் டேக்ஸ் போட்டாலும் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள் அதற்கு அவர்கள் சம்மதிக்கிறார்கள். கிட்டத்தட்ட இப்போது 30 கோடி ரூபாய் இந்த கம்பவுண்டிங் டாக்ஸ் மூலம் வருகிறது என்று தெரிகிறது. அதை 35 கோடி ரூபாய் வருகின்ற அளவுக்கு இந்த கம்பவுண்டிங் டாக்சைப் போட்டாலும் கட்டவேண்டும்.

பெருநகரங்களிலும் சைமி தியேட்டர் கட்டுவதற்கு அரசு முன்வர வேண்டும் சிறிய கிராமத்தில் இருப்பு கல்போட்டு நிரை தீ பிடிக்காமல் போட்டால் நிரந்தரமான லைசன்ஸ் கொடுக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பு அளித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

*திரு. துரை முருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்திலே கொண்டு வந்திருக்கின்ற காட்டு வளம், மற்றும் பல்வேறு இத்தியாதிகளையெல்லாம் ஒன்று சேர்த்து, ஒட்டுமொத்தமாக என்னுடைய கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை கூற நினைக்கிறேன்.

நாமெல்லாம் விட்டுக்குப் போக வேண்டிய நேரத்திலே, நான் உங்களையெல்லாம் காட்டுக்குப் போகலாம் என்று முதற்கண் அழைக்கிறேன். காட்டிலாகா பற்றி சர்க்கார் போடுகின்ற சட்டம் சரியில்லை. இப்போது, இந்த இலாகாவிற்குத் தலைவராக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி போடப்பட்டு, அவர் இந்த காட்டிலாகா பற்றி நடவடிக்கை எடுக்கிறார். ஐ.ஏ.எஸ். அதிகாரி என்றால் அவர் கலெக்டராக வரலாம். ஆனால், ஐ.ஏ.எஸ். அதிகாரி என்றால் அவருக்கு எல்லாம் தெரியும்; அவருக்குத் தெரியாததே ஒன்றுமில்லை என்று சொல்லப்படுகிறது.

ஐ. பி. எஸ். படித்தவர்களை போலீஸ் துறையில் போடுவார்கள், கலெக்டராகப் போடமாட்டார்கள். ஐ. எப். எஸ் - இந்தியன் பாரஸ்ட் சொர்வீஸ் படித்தவர்களை வனத் துறையில் போட வேண்டும். அவரை கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட் ஆகத்தான் போட வேண்டும். ஆனால் ஐ. எப். எஸ். படித்தவரை விட்டுவிட்டு இன்று ஒரு ஐ. ஏ. எஸ். படித்தவரை கொண்டுபோய் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட்ஸ் என்று போட்டிருக்கிறார்கள், எந்த அடிப்படையில் போட்டார்கள்? அப்படிப்பட்ட ஐடியாவை இந்தச் சர்க்காருக்கு யார் கொடுத்தார்கள்? ஆச்சரியமாக இருக்கிறது. ஐ. எப். எஸ். தேர்வு பெறுகிறவர் இரண்டு வருஷம் டேராடூனில் காட்டைப்

பற்றிப் படிக்கவேண்டும்; காட்டு மரங்களைப் பற்றிப் படிக்க வேண்டும். எந்தெந்த இடத்தில் மழை பொழியும், எந்தெந்த இடத்தில் என்ன மரம் வளரும் என்பதைப் பற்றியெல்லாம் படிக்க வேண்டும். அப்படிப் படித்தவரைத் தான் கன்சர் வேட்டர் ஆப் பாரஸ்ட்டாகப் போட வேண்டும். உங்கள் ஆட்சியில் இதுவரை இருந்து வந்த முறையை மாற்றி, எல்லாவற்றிலும் மாற்றத்தைச் செய்வது போல் இதிலும் மாற்றத்தைச் செய்து ஐ. ஏ. எஸ். படித்தவரைக் கொண்டு போய் அங்கே போட்டிருக்கிறீர்கள். அவருக்குக் காட்டைப் பற்றி என்ன தெரியும்? நாட்டில் கலெக்டராக இருந்து, ரெவின்யூ பற்றித் தெரியும், பட்டா கொடுப்பது பற்றித் தெரியும், சினிமாவுக்கு லைசென்ஸ் கொடுப்பது பற்றித் தெரியும். அவரைக் கொண்டு போய் அங்கே போட்டு தேக்கு மரத்தைப் பார், சந்தன மரத்தைப் பார், சிங்கத்தைப் பார், புலியைப் பார் என்று நாட்டில் இருந்தவரை காட்டுக்கு அனுப்பியிருக்கிறீர்கள். இது ஃபண்டமெண்டலாகவே தவறு. தமிழ்நாடு பாரஸ்ட் டிப்பார்ட்மெண்ட் கோட் என்று ஒன்று இருக்கிறது. அதிலே உள்ள ஒரு செக்ஷனில் என்ன சொல்கிறது என்றால் Sec. 27, The Administrative head of the department is the Chief Conservator of Forests who is also the professional advisre of Government in all matter relating to the department.

இதைப் பற்றியெல்லாம் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட்டுக்கு மட்டுந்தான் தெரியும். கலெக்டருக்குத் தெரியாது.

In the following matters the Collector may prima facie be presumed to have no concern and they may be conducted by the Divisional Forest Officer subject to the control of the Conservator, namely: (a) sowings and planting and silvicultural operations of all kinds, valuation surveys, fellings, extraction and disposal of forest produce and any other matters of a purely profession and technical character in so far as they do not affect interests outside the Forest Department,

அவர்தான் காட்டைப் பற்றி எல்லாவற்றையும் அட்வைசாக அரசாங்கத்துக்கு சொல்லக்கூடியவர். ஆகையால் காட்டைப் பற்றித் தெரிந்த ஐ. எப். எஸ். படித்தவர் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட்ஸ் ஆக இருக்கவேண்டுமென்பது சட்டம். கலெக்டருக்கு அதெல்லாம் தெரியாதா என்றால், தெரியாது. அதிலே செக்ஷன் 4-ல் சொல்லுகிறது—

Sec. 4—(b) statistics and accounts, livestock, stores, tools and plant, books and maps, stationery and printing, furniture, uniforms, accountents and camp equipments and

[திரு. துரை முருகன்] [1979 ஏப்ரல் 2

(c) subordinate forest establishment, 'that' appointment, leave, pay, pensions, allowance, promotion, transfer, touring and conduct

இவையெல்லாம் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட்டாக இருப்பவருக்குத்தான் தெரியும். இந்த நிலையில் எப்படி ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரி கையில் அந்தப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்கள். கன்சர்வேட்டர்தான், டி. எப். ஓ. என்ன வேலை செய்தார், வாச்சர் என்ன வேலை செய்தார், காட் என்ன வேலை செய்தார், யாருக்கு என்ன ப்ரோமோஷன் கொடுப்பது என்பதெல்லாம் கவனித்துச் செய்ய முடியும். இப்போது அந்தப் பொறுப்பு எல்லாம் ஐ. ஏ. எஸ், அதிகாரி கையில். கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட்ஸ் கையில் எஸ்டாபிளிஷ்மெண்ட் பொறுப்பு 20%; மீதி 80% பொறுப்பு ஐ. ஏ. எஸ். அதிகாரி கையில் கொடுத்திருக்கிறார்கள். இது பண்டமெண்டலாக சர்க்கார் போட்டிருக்கிற பயனற்ற திட்டம். யாரோ தவறான யோசனையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லியிருப்பார்கள் என்று கருதுகிறேன். அதன் காரணமாகத்தான் இத்தகைய நிலையை உருவாக்கியிருக்கிறார்களோ என்று கருதுகிறேன்.

ஏற்கனவே ஐ. சி. எஸ். படித்தவர்களை எல்லா வேலைக்கும் போடும் காலம் இருந்தது. அவர் ஜட்ஜாகப் போகலாம், கலெக்டராகப் போகலாம், ஒரு ஐ. சி. எஸ் ஸை கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட்டாக போட்டிருந்தபோது ராஜாஜி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அது தவறு என்று எடுத்திருக்கிறார், 1954 ஆம் ஆண்டில். அந்தத் தப்பை நீங்கள் மீண்டும் செய்யக் கூடாது என்பதற்காகத்தான் இதனை எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-40.)

இன்னொரு விவகாரம். கீழே இருக்கிற ஒரு பாரஸ்டர் அல்லது ரேஞ்சர் அல்லது காட் இருக்கிறார் என்றால் ஒருவன் காட்டில் விறகு வெட்டினான் என்றோ அல்லது மரத்தை வெட்டித் திருடிக் கொண்டு போகிறான் என்றோ சொன்னால் என்ன செய்வார்கள். அவனைப் பிடித்து அவன்மீது வழக்குப் போடுவார்கள். அவன் உடனே என்ன செய்கிறான், அந்த காட்டு இலாகா அதிகாரி ஊழல் செய்தான் என்றோ அல்லது வேறு வகையிலே அவன் மீது குற்றச்சாட்டுகளை அவன் மீது எழுதுகிறான். அதைப் பார்த்த உடனே அரசாங்கமோ அல்லது அதிகாரியோ என்ன செய்வார், நேராக அந்த ரிப்போர்ட்டை கீழே இருக்கிற டி. எப். ஓ.வுக்கு அனுப்பாமல் விஜிலன்ஸுக்கு அனுப்புகிறது. விஜிலன்ஸ் என்ன செய்கிறது? நேராக அந்த ஊருக்கு, எவர் ரிப்பட்டிலனைப்

1979 ஏப்ரல் 2] [திரு. திரை முருகன்]

பேட்டா னோ அவனையே பார்த்து அந்த பெட்டிஷன்மீது விசாரணை நடத்துகிறது. காட்டிலே திருடுகிறவன் ரௌடியாக ஆக இருப்பான், ஒரு மேஸ்கே இருக்கும் அங்கே. அவர்கள் அதற்கு வேண்டிய சாட்சிகளைத் தயாரித்து வைத்துக் கொண்டு, அந்த அதிகாரி குற்றம் செய்தார் என்று நிரூபிக்க முயற்சிக்கிறார்கள். அதை உடனே சர்க்கார் ஏற்றுக்கொண்டு அந்த அதிகாரியை விசாரணை செய்யாமல் சஸ்பெண்ட் செய்துவிடுகிறார்கள். இது எப்படி நியாயம்? முன்பெல்லாம் எப்படி நடக்கும்? அரசாங்கத்திற்கு வருகிற மகஜர் டி. எப். ஒ.-வுக்குப் போகும். அந்த டி. எப். ஒ. பெட்டிஷன் போட்டவனையும் காட்டு இலாகா அதிகாரியையும் வைத்து இரண்டு பேர்களை விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. இப்போது மாற்றிவிட்டார்கள். ஆகவே இதுவும் உங்களுடைய கோணல் சட்டத்திலே ஒன்று.

[மாண்புமிகு மாநிலத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி) தலைமை.]

இன்னொன்று. அதேபோன்று காட்டில் விறகு வெட்டுகிறான். அப்படி வெட்டுகிறவன் தேக்கு மரம் போன்றவைகளை வெட்டிவிட்டால் அந்த கார்டோ அல்லது வாட்சரோ அவனுக்கு காம்பவுண்டிங் என்ற முறையிலே 10, 5 ரூபாய் அபராதம் போடுகிற அதிகாரம் இருந்தது. இப்போது அதை என்ன செய்து இருக்கிறீர்கள்? தாய்க்குலத்திற்காகப் பாடுபடுகிறோம் என்று சொல்கிற இந்த அரசு விறகு வெட்டிக் கொண்டு போகிற தாய்மார்களுக்கு எதிராக ஒரு ஏட்டத்தைப் போட்டிருக்கிறது. அதன்படி விறகு வெட்டினால் அபராதம் போடக்கூடாது. அவன்மீது வழக்குப் போடவேண்டுமென்று புது சட்டம். இது நடக்கிற காரியமா? உதாரணத்திற்குச் சொல்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்திலே சிவகிரியிலே ஒரு தாய் விறகு வெட்டுகிறபோது ஒரு தேக்கு மரக் கிளையை வெட்டிவிட்டாள் என்பதற்காக அவன்மீது வழக்குப் போடுவதற்காக 35 மைல்களுக்கு அப்பால் உள்ள சங்கரன் கோவிலுக்கு அழைத்து வரவேண்டும். இதற்காகச் செலவுகள் செய்ய முடியாது. இன்னும் சொல்லப்போனால் மாலை 5 மணிக்கு அவனைப் பிடித்தால், காட்டிலாகாவிலே சப் ஜெயில் இருக்கிறதா? இல்லை, ஆகவே அங்கேயே ஒரு வீட்டிலேயே வைப்பான். உடனே கையைப்பிடித்து இழுத்தான் என்று கேஸ் போடுவார்கள். 10, 15 ரூபாய் அன்று அபராதம் போடுவதற்குப் பதிலாக இப்படி 40, 50 ரூபாய் செலவு அரசுக்கு ஏற்படுகிறது.

அடுத்து, இந்த காட்டு இலாகா சட்டம் திருத்தப்பட வேண்டும். தூண்டிவிடுவதற்கு அபெட்மெண்ட் என்கிறோம். ஐ.பி.சி. யிலே அதற்கு தண்டனை அளிக்க வகைசெய்யப்பட்டிருக்கிறது. ஆனால் காட்டு இலாகா சட்டத்தில் அது இல்லை. காட்டை வெட்டு, மூங்கிலைக் கொண்டுவா, சந்தனை

மரத்தைத் திருடு, அதை இங்கே கொண்டுபோய் விற்றுவிடு என்று சொல்லி ஒரு கூட்டம் இருக்கிறது. ஆகவே தூண்டிவிடுகிறவர்களைத் தண்டிக்க ஒரு சட்டம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வாட்ச்சர், பாரஸ்டர், ரேஞ்சர் இவர்கள் எல்லாம் குறைந்த சம்பளத்திலே இருக்கிறவர்கள். அவர்களை அந்தந்த டிஸ்ட்ரிக்குள்ளே தான் மாற்ற வேண்டும். ஆனால் இப்போது 2, 3 டிஸ்ட்ரிக்ட்கள் தள்ளி மாற்றக்கூடிய நிலைமை இருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்திலே பணியாற்றுகிறவரை நாகர் கோவிலில் உள்ள கீரிப்பாறையிலே போட்டு அங்கே மாற்றினால் அவர் என்ன செய்யமுடியும்? அங்கேயும் இங்கேயும் போய்விட்டு வருவதற்கு அவர்களுடைய சம்பளமே பற்றாது. கூப்புக் காரனை தாஜாபண்ணினால் போதும் என்ற நிலைமை இருக்கிறது. இப்படி ஊழல் வளருவதற்கு அது காரணமாக இருக்கிறது.

போலீஸ் கமிஷன் போட்டிருக்கிறார்கள், என். ஜி. ஓ.-க்களுக்காக சதாசிவம் கமிஷன் என்று போட்டார்கள். அதைப் போல அங்கே இருக்கிறவர்களுக்கு பாரஸ்ட் கமிஷன் போட வேண்டுமென்று ஒரு தீர்மானம் போட்டு வந்திருக்கிறது. ரொம்ப நாட்களாக அந்த வாட்ச்சர்கள் போன்றவர்கள் எல்லாம் பிரமோஷன் இல்லாமல் இருக்கிறார்கள், எஸ். எஸ். எல். சி. படித்திருக்க வேண்டும், 35 வயது வேண்டும் என்று இருக்கிறது. அதை மாற்றவேண்டுமென்று கோரிக்கையை கொடுத்திருக்கிறார்கள். அதை மாற்றவேண்டும்.

அடுத்து, ஒரு கார்டு அல்லது ஒரு வாட்ச்சர் அவருக்கு எவ்வளவு பீட் என்றால் 3.5 ஸ்கொயர் மைல்கள் என்று இருக்கிறது. ஒரு காலத்திலே இருந்தது. ஆனால் இன்றைக்கு பாபுலேஷன் அதிகம், விறகு வெட்டுகிறவர்களும் மரம் திருடுகிறவர்களும் காட்டை அழிப்பதற்காக திட்டம் போடுகிற கூட்டமும் இருக்கிறது. ஆகவே 8.5 என்பதை குறைக்க வேண்டும்.

நான் ஒரு பாட்டுக் கேட்டேன். விண்ணோடும் முகிலோடும் விளையாடும் வெண்ணிலவே என்ற ஒரு பாட்டைக் கேட்டேன். அதிலே கடலோரம் விளையாடும் இளம் மான்கள் போல என்று வருகிறது. என்ன இது, கடலோரம் மான் விளையாடுமா? காட்டிலே தானே விளையாடும், கடற்கரையில் மான் விளையாடுமா என்று பார்த்தேன். ஆனால் நான் நேற்று கோடிக்கரைக்குப் போய் இருந்தேன். தலைவர் அவர்களே, அங்கே மான் துள்ளி விளையாடுவதைப் பார்த்தேன். தலைவர் அவர்களே, நீங்களும் பார்க்கவேண்டும்.

1979 ஏப்ரல் 27 [திரு. துரை முருகன்]

ஏனென்று கேட்டால் "பிளாக் பக்" என்ற இனம் வெளி நாட்டிலேயிருந்து வருகின்ற உல்லாசப் பயணிகளையெல்லாம் கவர்க்கூடியதாக இருக்கிறது. தலைவரவர்களே, நீங்களெல்லாம் வந்து அதைப் பார்க்க வேண்டும். அமைச்சரவர்கள் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதைப்பற்றி நான் காட்டைச் சுற்றிவிட்டு சுற்றுலாத் துறைக்கு வரும்பொழுது சொல்லலாம் என்று எண்ணியிருக்கிறேன். அந்த "பிளாக் பக்" என்ற இனம் இந்தியாவிலே வேறு எங்குமே இல்லை. அந்தக் கடற்கரையை வெளிநாட்டினருக்குக் காட்ட வேண்டும். வேதாரண்யத்தில் இருக்கிற காட்டில் நித்தம் ஒரு மானை அடிக்கிறார்கள். ஒரு மான் 50கிலோ இருக்கும் 1 கிலோ பத்து ரூபாய்; அப்படியென்றால் 500 ரூபாய் தேறுகிறது. அதைத் தனிர தோல் இருக்கிறது, கொம்பு இருக்கிறது. இதெல்லாம் சேர்ந்தால் ஒரு மான் 750 ரூபாய்க்கு வரும். நேற்றையதினம் நான் கோடிக்கரையிலே இருந்தேன். முந்தாநாள்கூட ஒரு வேட்டுச் சத்தம் கேட்டது. அப்படியொரு திருடுகின்ற கூட்டம் அங்கே இருக்கிறது. யார் யாருடைய கையாட்கள் என்று இப்போது நான் சொல்லவில்லை. பெரிய பெரிய அதிகாரிகளுக்கு - அரசியலிலே இருப்பவர்களுக்கு அல்ல - அதிகாரத்திலே இருப்பவர்களுக்கு அங்கேதான் சாப்பாடு, மான் கறி பிரியாணி. நான் யார் என்று சொல்ல வில்லை. ஆதாரம் கேட்டால் கொடுக்கிறேன். ஆனால் இப்பொழுது நேரம் இல்லை. இப்பொழுதே ஒன்றே முக்காலை மணி தாண்டிவிட்டது. நான் பேசி முடிந்ததும் அமைச்சரிடத்தில் கொடுத்துவிடுகிறேன். அப்படி அங்கே மானை சுட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த இனம் இந்தியாவிலே வேறு எங்குமே கிடையாது. கடற்கரையோரக் சாடு, இயற்கையாள காடு, அலைபாயும் கடலோரப் பகுதி, வடக்கும் தெற்குமாக இருக்கின்ற கடல் மேற்கு நோக்கித் திரும்புகின்ற பாயிண்ட் கலிமீர் அங்கே இருக்கிறது. அந்த இடத்தைச் சுற்றுலாத் துறை எடுத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் எவ்வளவோ துறைகளில் பிரிக்கிறீர்கள்? இன்றைக்குப் போலீஸ் துறையை எடுத்துக்கொண்டால் 4 டிவிஷன்களாகப் பிரிக்கப் போவதாகச் சொல்கிறீர்கள். அப்படி இந்த பாரஸ்டிலும் பிரிக்கக் கூடாதா? ஃபாரஸ்ட் ரெவின்யூ ஒரு பக்கம். ஃபாரஸ்ட் ப்ரொடக்ஷன் ஒரு பக்கம் என்று இப்படி —[மணியடிக்கப்பட்டது] நான் போகிற வேகம் பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் வேகம். ஜேம்ஸ் அவர்கள் இருபது நிமிஷம் பேசிவிட்டார்கள். நான் எங்கள் கட்சியிலிருந்து ஒருவன்தான் பேசுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி): ஏரோப்ளேன் வேகத்தில் போக வேண்டும்.

திரு. துரை முருகன்: நான் மிக வேகமாகத்தான் போய்க் கொண்டிருக்கிறேன். எனவே, ஃபாரஸ்ட் டிபார்ட்மெண்டை நான்கு பிரிவுகளாகப் பிரிக்க வேண்டும். ஃபாரஸ்ட் ரெவின்யூ

எவ்வளவோ வருகிறது. அதைப் பிரித்துத் தனியாக ஒருவரைப் போட வேண்டும். அடுத்து லீபாரஸ்ட் புரொடக்ஷனை என்று, காட்டைக் காப்பாற்றுவதற்காக ஒரு பிரிவைப் போட வேண்டும் ஏனென்று கேட்டால், கேரளாவிலேயிருந்து மேற்குத் தொடர்ச்சி மலை மூலமாக இங்கே வந்து யானையைச் சுட்டுக் கொல்கிறார்கள். இதற்குமேலே சந்தனமரங்களைத் திருடிச் சென்று விடுகிறார்கள். ஆனால் நம்முடைய பகுதிகளிலே உள்ள இவர்களிடத்திலே துப்பாக்கி இல்லை. துப்பாக்கி இல்லாமல் இவர்கள் என்ன செய்ய முடியும். திருட்டை எப்படி தடுக்க முடியும்? இல்லையென்றால், காட்டிலே போய் "காயமே இது பொய்யடா, வெறும் காற்றடைத்த பையடா" என்று பாடிக் கொண்டு இருக்க முடியுமா? வன விலங்குகளுக்கு மத்தியிலேயும், திருடர்களுக்கு மத்தியிலேயும் வனப் பொருட்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் இவர்களுக்கு அவர்களது உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு இருக்க வேண்டாமா? கேரளாவிலேயிருந்து திருடுவதற்காக மேற்குத் தொடர்ச்சி மலை மூலமாக வருகிறார்கள், கொள்ளையடிக்க வருகிறார்கள். நாட்டுத் துப்பாக்கியை வைத்துக் கொண்டு இங்கேயுள்ள அதிகாரியைச் சுட்டுக் கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது என்றால் அதைத் தடுக்க வேண்டாமா என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றும் பார்க்கிறேன். "அடிஷனல் கன்சர்வேட்டர் ஆஃப் ஃபாரஸ்ட்" 12, 14, 16 போஸ்ட்கள் என்று காலியாக இருக்கிறது. அவைகள் ஏன் நீங்கள் ஃபில்-அப் செய்ய மாட்டேன் என்கிறீர்கள்? [மாண்புமிக்கப்பட்டது] நாட்டைப் பற்றி பல நேரங்களில் நாம் பேசுகிறோம், காட்டைப் பற்றியும் நாம் பேச வேண்டாமா? அதற்காகக் கொஞ்சம் டயம் எடுத்துக்கொள்வோம். நான் எனக்காகப் பேசவில்லை. அந்தக் காடுகள் வாயில்லா ஜீவன்கள் இருக்கின்ற இடம். அங்கிருக்கின்ற மான் ரூல் 41-ல் தீர்மானம் கொடுக்குமா, அட்ஜர்ன்மெண்ட் மோஷன் கொண்டு வருமா? எனவே, ஜீவகாருண்யத்தை முன்னிட்டு நாம் இதை எடுத்துக் கொள்ள வேண்டும். ஆகவே, காலியாக இருக்கின்ற இந்தப் பதவிகளை நிரப்ப வேண்டும். இவர்களை ஏன் போடவில்லை என்று கேட்டால், இவரைப் போடலாமா, அவரைப் போடலாமா என்று இப்படியொரு நிலைமை உருவாகிக் கொண்டே போவது தேவையில்லாத ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சந்தன மரத் திருட்டைப் பற்றி எடுத்துக்கொண்டால், எங்கள் ஜில்லாவிலே ஏலகிரி மலை என்று இருக்கிறது. நான் இது சம்பந்தமாக சர்க்காருக்கு ஒரு திட்டத்தைச் சொல்கிறேன், சந்தன மரத்தை மூலதனமாகக் கொண்டு நடத்தப்படும் அத்தனை தொழில்களையும் அரசாங்கமே எடுத்துநடத்தும்

1979 ஏப்ரல் 27 [திரு. துரை முருகன்]

என்று முடிவு செய்து விடுங்கள். அப்பொழுது எப்படித் திருட்டுப் போகும்? கூப்பு பறி போகாது. அரசாங்கமே நடத்தினால் தொழிற்சாலை நடக்கும். எனவே, வடார்க்காடு மாவட்டத்தில் ஒரு சர்க்கரைத் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். அப்பொழுது திருட்டு இருக்காது. கூப்பு திருட்டு இருக்காது. மக்களுக்கு வேலையும் கிடைக்கும், தொழில்களும் பெருகும். இவற்றைச் செய்வதற்கு அமைச்சரவர்கள் தங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-50)

நான் ரொம்ப நேரம் காட்டிலேயே இருந்துவிட்டதால் நாட்டைப் பற்றிச் சொல்ல மறந்து விட்டேன். ஒன்றே ஒன்றை மட்டும் - சினிமாவைப் பற்றி மட்டும் - சொல்லி விட்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ்.டி. இராமசாமி): அதற்காகத்தான் நான் ஆரம்பத்திலேயிருந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன். நேரம் ஆகிவிட்டது.

திரு. துரை முருகன்: ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி விட்டுப் போகிறேன். சினிமாவைப் பற்றி, கலைத் துறையில் நம்முடைய அமைச்சர் அவர்கள் நன்கு அனுபவம் பெற்றவர்கள். அவர்கள் பல படங்களை, புது முகங்களைப்போட்டு படம் எடுத்த அனுபவம் பெற்றவர்கள். மெட்ராசிலே கலைவாணர் அரங்கம் என்று இருப்பதைப் போல வேறூரில் அண்ணா நினைவரங்கம் என்று இருக்கிறது. விஸ்வநாதன் என்பவர் ஒருவர் இருக்கிறார்—அமைச்சருக்கு மிக வேண்டியவர் - படப்புரொக்கர் அங்கே விட்டத்தட்ட அவர்தான் படம் போட உரிமை உண்டு, வேறு யாரும் படம் போட முடியாது. புரொடியூசரிடமிருந்த அவர்தான் படம் போடலாமே தவிர வேறு யாரும் போட முடியாது. எச். பி.யில் படம் போட விஸ்வநாதனுக்கு மட்டும்தான் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. வேறு யாருக்கும் கொடுக்கப்படவில்லை. அவருக்கு மாதம் சுமார் ரூ. 10,000 வருமானம் வரும் என்கிறார்கள். ஆனால் வேறு ஒரேயொரு நபருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. காமராஜ் பிக்சர்ஸ் அந்தப் பாபு என்பவருக்கு - அவர் 12-வது வட்ட வேலூர் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர் - அவர்தான் "நானா நமதே", "வாணி ராணி" படங்களைப் போட அனுமதிக்கப்பட்டவர்கள். அவருடைய பிக்சரிலே இருந்தவர்தான். ஆகவே இப்படியெல்லாம் நிலைமைகள் இருக்கின்றன. ஆனால் இவைகள் சரியல்ல என்று எல்லோரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் இப்படிப்பட்ட ஒரு ஏகபோகத்தை, இயற்பாட்டை நீக்குகின்ற முறையில், முறை நடக்கிறது என்று சொல்லாத முறையில் மாற்றி விட்டு

விட்டுப் போங்களேன். அண்ணா கலையரங்கத்தில் படம் போடுவதற்கு டெண்டர் விட்டு விட்டுப் போங்களேன். காஞ்சிபுரத்திலே இருப்பது ஒன்றே ஒன்றுதான். அண்ணா கல்சுரல் அகாடமி என்று, அதையும் சினிமாவாக மாற்றுவதாகச் சொல்கிறார்கள். அங்கேயும் விஸ்வநாதன் தான் வருகிறார், அங்கேயும் படம் போடுவது என்றால் விஸ்வநாதனுக்குத்தான் கொடுக்க வேண்டியிருக்கும்.

கடைசியாக ஒரு கருத்தை இந்தச் சர்க்காருக்குச் சொல்ல விரும்புகிறேன். சர்க்கார் என்ன செய்திருக்கிறீர்கள் என்றால் பழைய நடிகர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். பம்மல் சம்பந்த முதலியார் காலத்திலேயிருந்து இருக்கிறது, அதையெல்லாம் நான் சொல்லத் தேவையில்லை. வாழ்க்கையிலே அவர்கள் நொந்துபோய் வறுமையிலே மிதந்து கொண்டிருக்கும்பொழுது வைஜயந்திமாலாவிற்குக் கொண்டு போய்க் கொடுக்கிறீர்கள். அதைவிட வருமானம் இல்லாத எத்தனையோ நடிகர்கள் இருக்கிறார்கள். ஆனால் கேட்டால் சொல்வார்கள், எத்தனைபேர்களுக்கு மகிழ்ச்சி அளித்திருக்கிறார்கள், எத்தனை பேர்களுக்குச் சேவை புரிந்திருக்கிறார்கள் என்று. நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இன்கம்டாக்ஸ் கட்டக்கூடிய கோடிக்கணக்கான, இலட்சக்கணக்கான ரூபாய் வருமானம் பெற்றவர்களுக்கு—அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறீர்கள். ஆனால் கக்கன் அவர்கள் செய்த சேவை கொஞ்சமா? கக்கன் அவர்கள் ஆகஸ்ட் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டவர், உப்புச் சத்தியாக்கிரகத்திலே ஈடுபட்டவர், அவருக்கு 500 ரூபாய், இந்த அம்மாளின் சேவை உங்களுக்குத்தான் தெரிகிறது. ஆகையினாலே நீங்கள் பணம் கொடுப்பதை வேண்டாமென்று சொல்லவில்லை. அதில் உள்ள பாகுபாட்டைப் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன்.

வனத்திலே நீண்ட நேரம் இருந்துவிட்ட காரணத்தாலே சுற்றுலாவிற்கு வர முடியவில்லை, அமைச்சரவர்கள் மன்னித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, வனத்துறை, சின்கோனா, செய்தி, சுற்றுலா, சுரைப்பட்டத் தொழில் நுட்பவியல் துறைகளுக்கான மானியக் கோரிக்கைகளின் மீது இங்கே பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் நேரமாகி விட்டது என்பதை நினைவுபடுத்திக்கொண்டே அவர்கள் நேரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பேசுவதற்கு முன்னால்வரை நானும் அதிக நேரத்தை எடுத்துக்

1979 ஏப்ரல் 27 [திரு. ஆர். எம். வீரப்பன்]

கொள்ள வேண்டிய அவசியமிருக்காது என்றுதான் கருதிக் கொண்டிருந்தேன். என்றாலும், அவர்கள் சில விவரங்களை இந்த மன்றத்தின் முன்னால் வைத்து, அதையொரு பிரச்னையாக ஆக்கிவிட்டிருப்பதால், இந்தக் கருத்துக்களின்மீது விளக்கம் தருவதற்காக தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர்கள் சிறிது நேரத்தை எனக்குத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வனத்துறையைப்பற்றி எல்லா உறுப்பினர்களும், எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும், அதிலே நடைபெறுகிற குறைகளை, குற்றங்களை எடுத்துச் சுட்டிக்காட்டி, அது திருத்தப்பட வேண்டுமென்று இங்கே தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்திலே நடைபெற்றிருப்பதாக, அவருக்குத் தகவல் வந்திருக்கின்ற அடிப்படையில், சில குற்றச்சாட்டுக்களை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள், அருள்கூர்ந்து இந்த விவரங்களை என்னிடத்திலே தெரிவித்திருந்தால் அவர்கள் விரும்புகின்ற பலனை என்னாலே ஏற்படுத்தித் தந்திருக்கமுடியும். ஆனால், என்னிடத்திலே சொல்லாமல், இந்த மன்றத்திலே இப்பொழுது தெரிவித்திருக்கின்ற காரணத்தாலே ஒரு வேளை அந்தத் தவறுக்கு உள்ளானவர்கள் அல்லது தவறு செய்தவர்கள் அந்தக் குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளக்கூட அவர்கள் வழிவகுத்து விட்டார்களோ என்று நான் பயப்படுகிறேன், காரணம், இந்தப் பேச்சிற்குப் பிறகும் அவர்கள் முன்னாலேயே தெரிவித்தார்கள் தடயங்களை எப்படி அழித்தார்கள் என்று — இதற்குப் பிறகும் அவர்கள் தடயங்களை வைத்திருப்பார்களா? குற்றவாளிகள் கிடைப்பார்களா? அவைகளையெல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்த மன்றத்திற்கு நான் ஒன்றைத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். வனத்துறையைப் பொறுத்தவரை நீண்ட நெடுங்காலமாகக் குறைச் சொல்லப்படுகிறது, குற்றம் சாட்டப்படுகிற ஒரு துறையாக வனத்துறை இருந்து வருகிறது என்பதை யாரும் மறக்க முடியாது. அதற்கு யார் காரணம்? எந்த அதிகாரி காரணம் என்பது ஆராய்வதற்குரிய பிரச்னை அல்ல. இந்தத் துறை அமைக்கப்பட்டிருக்கிற முறை அந்தக் குற்றங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது; எப்படி காடு என்பது மனிதன் உள்ளே போகமுடியாதது, அண்டமுடியாதது என்று கருதப்பட்டதோ அதுபோல்தான் இந்தத் துறையும் இவ்வளவு நாட்களாக மக்களுடைய மன்றத்திலே இருந்து மறைக்கப்பட்ட துறையாக, கவனத்திற்கு வராமல் இருந்த துறையாக இருந்த காரணத்தால் தான் இந்தத் துறை இவ்வளவு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகிற நிலைமை ஏற்பட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அந்தக் குற்றச்சாட்டுகளை எல்லாம் களைந்து, ஊழல்கள் என்று கருதப்படுமேயானால், அந்த ஊழல்களை ஒழித்து அதற்கு உடந்தையாக அந்த அதிகாரிகளே இருக்கிறார்கள் என்ற கருத்து வளருமானால்,

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1979 ஏப்ரல் 2

அந்த வரவுக்கு உடந்தையாக இருக்கிற அதிகாரிகளைத் தண்டிக்கவும், கண்டிக்கவும், முடியுமானால் அவர்களை வேலையை விட்டே அகற்றவும், இந்தப் பொறுப்பிலே இருந்தே நீக்கவும் இந்த அரசு கடந்த இரண்டு ஆண்டுகாலத்திலே கடுமையான நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்களுடைய குற்றச்சாட்டுகளைப் பற்றி, இங்கே அதிகாரிகள் உட்கார்ந்திருப்பார்கள், குறிப்பு எடுத்துக் கொண்டிருப்பார்கள். உடனடியாக, இதற்கான விசாரணை தொடங்கப்படும், கண்டு பிடிக்கப்படும், தயவு செய்து, மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் எனக்கொரு உதவியைச் செய்யவேண்டும். இதைச் சட்ட மன்றத்திலே சொல்லிவிட்டோம், கடமை தீர்ந்துவிட்டது என்று கையை உதறி விட்டுச் சென்று விட்டார்களானால் குற்றவாளியைக் கையும் களவுமாகப் பிடிக்கமுடியாது. இதற்கான தடயங்கள், சான்றுகள் அவரிடத்திலே இருந்தால், அதைக் கொடுத்து உதவவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் எவ்வளவு பெரியவர்கள் ஆனாலும், அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்பதை இந்தச் சட்டமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்).

இரண்டு பெரிய அதிகாரிகள் இன்றைக்கு சஸ்பென்ட் செய்யப் பட்டிருக்கிறார்கள், எத்தனையோ அதிகாரிகள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற கருத்தும் இங்கே கூறப்பட்டிருக்கிறது. ஒரு கன்சர்வேட்டர் ஆஃப் பாரஸ்ட், ஒரு ஏ.எஃப்.ஓ. இவர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள், மற்றும் பெரிய அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

எனக்கு ஒரு ஆச்சரியம் என்னவென்றால் ஒருபுறம் வாழலே கூடாது என்று சொல்கின்ற நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் துரைமுருகன், இந்த அதிகாரிகளுக்காக, அல்லது தவறு செய்கிற அதிகாரிகளுக்காக வக்காலத்து வாங்குவதைப் போல் இன்றைக்கு அவர்கள் வாதாடுகிறார்கள். நான் உண்மையிலே அச்சப்படுகிறேன், அவருடைய வாதம் தவறு செய்கிற வனத்துறை அதிகாரிகளுக்குப் பயன் அளிக்குமே தவிர, பலன் தருமே தவிர, அந்தக் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க உதவாது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.]

திரு. துரை முருகன் : சார், ஆன் எ பாயிண்ட் ஆஃப் பெர்சனல் எக்ஸ்பிளனேஷன். நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன், நான் தவறு செய்கிற

1979 ஏப்ரல் 2] [திரு. துரை முருகன்]

அதிகாரிகளை நீங்கள் ஏன் விட்டுவிடவில்லை என்று வாதாடவில்லை. இன்னும் கூட ஒருபடி மேலே சொல்கிறேன், நம்முடைய அமைச்சர் அவர்கள் — எனக்கு இருக்கிற தகவல்— இங்கே இருக்கிற விவரங்களைப் பேசினாலும், உண்டா, இல்லையா என்று 'டிப்'பாக பார்ப்பார்; என்பது. ஏற்கனவே, டிபார்ட்மெண்ட்டல் ஆக்ஷனிலே இருந்ததை விஜிலன்சுக்கு அனுப்பினார்கள்; அவர்கள் என்ன செய்வார்கள்? நேராக போய், கன்சர்ன்ட் பார்ட்டியைக் கேட்பான். திருத்துறைப் பூண்டியிலேயிருந்து காட்பாடிக்கு மாற்றிப் போட்டார்கள். அந்த ஊரிலே, அவருக்குச் சாதகமாகத்தான் வரும். லோகல் பியூப்பில் அவருக்குச் சாதகமாகத்தான் சொல்வார்கள். ஆகவே, முறைப்படி ஏன் செய்யவில்லை.....

(பிற்பகல் 2-00)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் என்னுடைய பேச்சை முழுமையாகக் கேட்டுவிட்டு இறுதியாக வேண்டுமானால் அவர் விளக்கம் கொடுக்கலாம். அவர் ஆதரவு அளித்தார் நேரடியாக, என்று நான் சொல்லவரவில்லை. உங்களுடைய பேச்சு எப்படி முனனுக்குப் பின் முரணாக அமைந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டினால்தான் இந்தக் குற்றவாளிகள், அல்லது குற்றம் சாட்டப்பட்டவர்கள் எப்படி சட்டமன்ற உறுப்பினர்களின் தயவைக் கூடப் பெறமுடிந்தது என்பதை உணரமுடியும். நாங்கள் சில நிர்வாகச் சீர்த்திருத்தங்களை செய்து இருக்கிறோம்; இந்த அரசு செய்து இருக்கிறது. இந்த வனத்துறையிலே ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை சிப் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட் என்ற தலைமைப் பொறுப்புக்கு போடலாமாமென்று கேட்டார்கள். ஏன் போட்டோமென்று கேட்டிருந்தால் நீங்கள் விளக்கத்திற்காகக் கேட்கிறீர்கள் என்று பொருள். விளக்கத்தையும் கேட்காமல், கேள்வியையும் கேட்டு, அதற்கு விடையையும் நீங்களே தந்த பிறகு ஏன் போட்டோமென்று எங்களைக் கேட்பதிலே என்ன பலன்? என்ன பலன் கிடைக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்களோ அந்த பலன் எப்படிக் கிடைக்கும்?

மூதறிஞர் இராஜாஜி, விஜயராகவன் என்ற அதிகாரியை நமது மாநிலத்திலே இன்ஸ்பெக்டர் ஜெனரலாகப் போட்டார், அவரே மாற்றினார் என்று சொன்னார்கள். போட்டது அவர்தான், ஆனால் அவர் மாற்றவில்லை, அவர் காலத்திலேதான் போடப்பட்டது. இன்னும் சொல்கிறேன். மூதறிஞர் இராஜாஜி அவர்களுடைய செயலை அன்றைக்கு உதாரணமாக எடுத்துக் கொண்டீர்கள் அல்லவா? இன்றைக்கு உதாரணம் மூதறிஞர் இராஜாஜிதான். 1953-ல் திரு. வி. வி. சுப்ரமண்யம், ஐ. சி. எஸ், முதல் முறையாக தமிழ்நாட்டில் வனத்துறைக்குத் தலைமை அதிகாரியாக, "சிப் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட்" என்ற அந்தப் பொறுப்புக்கு மூதறிஞர் ராஜாஜி அவர்கள்தான் நியமித்தார்கள். என்ன காரணம்? நிர்வாக சீர்கேடுகள் வனத்

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1979 ஏப்ரல் 2

துறையிலே மலிந்துவிட்ட காரணத்தால், நிர்வாக சீர்கேடுகளைப் போக்குவதற்கு ஒரு ஐ. சி. எஸ். அதிகாரி வேண்டுமென்று முடிவு எடுத்து அந்தக் கோப்புகளிலே அவர் மிகத்தீவிரமாக எழுதி மத்திய அரசாங்கத்திடம் வாதாடி நியமித்தார்கள். வனத்துறை என்பது நீங்கள் சொல்வது போல இந்த அதிகாரிகள் போய் உட்கார்ந்து கொண்டு மரத்தை வளர்க்கிறார்கள் என்று அல்ல. வனத்துறையைபற்றித் தெரிந்துகொள்ள நமக்கு எப்படித் தகுதி இருக்கிறதோ அப்படி ஒரு தகுதி ஐ.ஏ. எஸ். அதிகாரிக்கு வராதா? வனத்துறையை நிர்வகிப்பதற்கு ஒரு அமைச்சருக்கு தகுதிவருகிற போது ஐ. ஏ. எஸ். அதிகாரிக்கு வராதா? இங்கே சட்டமன்ற உறுப்பினர், மக்களுடைய பிரதிநிதி என்ற முறையிலே விவகாரங்களை விவாதிக்கிறபோது ....

திரு. துரை முருகன் : ரூல்ஸ் இருக்கிறது. ரூல்ஸ் மாத்திரம்..

மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன் : ஆக்ட் வேறு. அட்மினிஸ்ட்ரேஷன் ரூல்ஸைப் படிக்கவேண்டும். நீங்கள் தனியார் வனப் பாதுகாப்பு சட்டத்தைப் படித்துப் பலன் இல்லை. அங்கே கலெக்டருக்கு என்ன அதிகாரமோ ....

திரு. துரை முருகன் : தமிழ்நாடு ஃபாரஸ்ட் கோட், சேப்டர்....

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஃபாரஸ்ட் டிபார்ட்மெண்ட் கோட் இருக்கிறது. அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. நான் கேட்கிறேன். இன்றைக்கு நம்முடைய தலைமைச் செயலகத்திலே, சென்னை கமிஷனராக இருந்த ஒரு போலீஸ் அதிகாரி, அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆஃபீஸராக இருக்கிறார். தெரியுமா? திரு. ஷெனாய் இருக்கிறார் தெரியுமா? என். நேற்று முன்தினம் விவசாயத்துறையிலே ஒரு நிபுணராக இருந்தவர் மத்திய விவசாயத்துறைச் செயலாளராகப் பொறுப்பாற்றுகிறார் அவர் பெயர் திரு. சுவாமிநாதன் ஐ. ஏ. எஸ்., அதிகாரி இந்த இடத்திற்கு விவசாயத்துறை நிபுணர் எப்படிப் போகமுடியும். அப்படிச் செல்லும் போது இங்கே ஏன் போகக்கூடாது? நீங்கள் தயவு செய்து கடந்த காலத்தை எண்ணிப்பார்க்க வேண்டும். அதை எல்லாம் நீங்கள் மறந்து இருக்கலாம். நான் மறக்க முடியாது. அந்தக் காலத்திலேதான் 2 சீ. டி. எப். 4 தனிமை வனப் பாதுகாப்பு அதிகாரிகள் பதவி ஏற்படுத்தப்பட்டது. ஜயதேவ் என்று ஒரு சீப் கன்சர்வேட்டர் ஆப் ஃபாரஸ்ட் இருந்தார். அவரை டெபுடேஷனில் நாகாலாந்திற்கு அனுப்பினார்கள். கடந்த கால வரலாற்றைச் சொல்கிறேன் — அவர் ஒருசீனியர் ஐ. எப். எஸ். ஆபீஸர். அவர் டெபுடேஷனில் போனதற்குப் பிறகு 'கன்சர்வேடர்' ஆக இருந்தவர் சீப் கன்சர்வேட்டர்ஆகப் போடப்படுகிறார். திரு. ஜெயதேவ் டெபுடேஷன் முடிந்து திரும்பி வருகிறார். அவர் திரும்பி வந்தவுடன் என்றைக்கு இந்த அரசு என்ன செய்து இருக்க

1979 ஏப்ரல் 2] [திரு. ஆர். எம். வீரப்பன்]

வேண்டும். அவர்தான் சீனியர் அதிகாரி. இவ்வளவு சட்ட நுணுக்கங்களைப் பேசுகிற மாண்புமிகு உறுப்பினர் (திரு. துரை முருகன்) அன்றைக்கும் சட்டமன்ற உறுப்பினர்தான் என்ற நம்பிக்கையில்தான் பேசுகிறேன் — டெபுடேஷனில் இருந்து வந்ததற்குப் பிறகு அந்த இடத்தைக் காலிசெய்து சீனியர் அதிகாரியை அந்த இடத்திலே போட்டு இருக்க வேண்டும். அதற்குப் பதிலாக அந்த அரசு 2 சிப் கன்சர்வேட்டர் ஆப் ஃபாரஸ்ட் பதவிகளை உருவாக்கியது.

அதற்குப் பெயர் சி. சி. எப். (ஜெனரல்), சி. சி. எப். (டெவலப்மெண்ட்) என்று அங்கே உருவாக்கினார்கள். கடந்த அரசே உருவாக்கியது. ஆகவே, இரண்டு பேர் அங்கே இருந்து கொண்டு இருந்தார்கள். 2 அதிகாரிகள், இரண்டு பிரிவுகள், இரண்டு குரூப்கள். அரசியலில்தான் கேள்விப்பட்டு இருக்கிறோம் குரூப் பாலிடிக்ஸ் என்று. அதை இந்த வனத்துறையில் செய்து வைத்தார்கள். இரண்டு தலைமை அதிகாரிகள் இருந்தால் அந்த நிர்வாகம் எப்படி பிரிந்து இருக்கும், பிளவு பட்டு இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அந்த வனத்துறை சீரழிக்கப்பட்டதற்குக் காரணமே இரண்டு தலைமை அதிகாரிகளை உருவாக்கியது தான். இன்றைக்கு அந்தத் தலைமை அதிகாரி ஒருவர் ரிடையர் ஆகிறார். ஆகவே, அரசாங்கம் இன்றைக்கு மக்களிடையே இருந்து வரும் அத்தனை புகார்களையும், மாண்புமிகு உறுப்பினர்கள் தருகிற அத்தனை குற்றச்சாட்டுகளையும் பரிசீலித்து, அந்தத் துறையை சீர்திருத்தம் செய்ய வேண்டுமானால் எப்படி செய்வது? எங்கே முன்மாதிரி இருக்கிறது என்று பார்த்தால், மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்கு நிர்வாகத் திறன் இல்லை என்று மறந்தும்கூட, கனவில் கூடஇங்கே யாரும் சொல்ல மாட்டோம். அப்படிப்பட்ட மூதறிஞர் நிர்வாகத் துறையில் ஆற்றல் மிக்கவர், அதில் உலக புகழ் பெற்றவர், என்ன நடவடிக்கை எடுத்தார் என்று கோப்புகளைப் பார்த்தோம் அவர் என்னென்ன காரணங்கள் கூறினார் என்று கவனித்தோம் அவர் ஒரு வழியைக் காட்டியிருக்கிறார். சீரழிந்து இருக்கும் நிர்வாகத்தைச் சீர்திருத்தம்செய்யவேண்டுமானால், அந்தவனத் துறையில் நடைபெறும், கொள்ளை, அக்கிரமங்கள் தடுக்கப்பட வேண்டுமானால், ஒரு நிர்வாக அதிகாரியை அந்த நிர்வாகத் திற்குப் போடவேண்டும். அதே நேரத்தில் நம்முடைய மாண்புமிகு துரைமுருகன் பயப்படுகிறதுபோல், இந்த வனச் செல்வம் பாதுகாக்கப்படுவதிலும், வளர்க்கப்படுவதிலும், காப்பாற்றப்படுவதிலும், இந்த அரசு அக்கரை கொண்டு இருக்கிறது. அந்த அதிகாரம், சி. சி. எப் டெவலெப்மெண்ட் உங்கள் காலத்தில் எற்படுத்தியது. அப்படியே இருக்கிறது. ஐ. எப். எஸ். அதிகாரிக்கு இருக்கிறது. ஆகவே, நிர்வாகத்தைச் சீர்திருத்தவேண்டும், செம்மைபடுத்தவேண்டும், அதற்காக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அதற்காகத்தான் ஐ. ஏ. எஸ். அதிகாரியைப்போட்டு இருக்கிறோம். அவர் ஐ. ஏ. எஸ் என்று மாத்திரம் தேர்ந்தெடுக்கப்படவில்லை. மாவட்ட

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1979 எப்ரல் 2

ஆட்சித் தலைவராக இருந்து எத்தனை மாவட்டங்களில் அந்த வனத் துறையோடு தொடர்பு கொண்டு இருந்தார். என்று ஆராய்ந்து வனத் துறையில் நுழைந்து, நீங்கள் சொல்கிற வகையில் பிசிகல் அட்டென்டன்ஸ், செய்து அப்படிப்பட்ட நல்ல விசாரணையில் ஈடுபடுகிற அதிகாரியார் என்று தேர்ந்தெடுத்து இன்று அங்கே போட்டு இருக்கிறோம்.

இங்கே சொன்னார்கள். குற்றச்சாட்டுக்களை விஜிலென்சுக்கு அனுப்புகிறார்கள் என்று, மன்னிக்கவேண்டும். நாங்கள் எல்லாம் பழைய கதையைச் சொல்லக்கூடாது என்று விரும்பினேன். நீங்கள் விஜிலென்சுக்கு அனுப்பாமல் குற்ற வாளிகளை எல்லாம் டிபார்ட்மெண்ட் என்கொயரி என்ற பெயரில் 5 ஆண்டு காலம் கடத்தி இருக்கிறீர்கள், 6 ஆண்டு காலம் கடத்தி இருக்கிறீர்கள். இங்கே கண்டி பார்க்கில் மான் உணவு வாங்கியதில் அடித்த கொள்ளைக்காரன் 6 ஆண்டு காலம் கடத்தி இருக்கிறான். அதற்குள் இந்த ஆட்சி வந்து விடுகிறது. அது டிபார்ட்மெண்ட் ஆக்ஷன். நீங்கள் சொல் கிறீர்களே, எல்லாம் தெரிந்த அதிகாரிகள், அந்த அதிகாரிகள் இருந்தபோது தான், அந்த வனத்துறை அதிகாரிகள் இருந்த போது தான் நேரடியாக ஒரு உயர் அதிகாரி, விசாரித்து அறிக்கை கொடுத்தபோது அந்த அதிகாரி தருகிற விசாரணை அறிக்கை மீது முறையாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இன்று விசாரித்தால் ஒருவர் ரிடையர் ஆகிவிட்டார், ஒருவர் மத்திய சர்க்காருக்குப் போய்விட்டார், இன்னொருவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமானால் அக்கௌன்டெண்ட் ஜெனரல் ஆபீசில் சென்று வவுச்சர் கொண்டுவா என்று சொல்லுகிறார்கள். அங்கேபோய் கேட்டால் அவர்கள் எல்லாவற்றையும் கொளுத்தி விட்டோம் என்று சொல்கிறார்கள் ஏன் என்றால் 5 ஆண்டுகள் ஆகிவிட்டது என்று சொல்கிறார்கள் அவர்களாகக் கொளுத்தி னார்களா அல்லது கொளுத்த வேண்டினார்களா நமக்குத் தெரியாது. இப்படிப்பட்ட ஊழல்கள் நிறைந்து, மக்களுடைய மிகப்பெரிய குற்றச்சாட்டுக்கு உள்ளான அந்தத் துறையில் நிர்வாகச் சீர்த்திருத்தம் செய்யவேண்டும் என்றுதான் டெபுடி கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட்ஸ் என்று போட்டு அந்த முறை கேடுகளைத் தவிர்ப்பதற்கும், வனங்களைக் காப்பாற்றவும் இன்று ஆரம்பித்து இருக்கிறோம்.

இதிலே சட்டச் சிக்கல் இல்லை. சட்டம் தெரியாதவர் களாக நிர்வாகம் தெரியாமல் செய்யப்படவில்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் மூலம், நாட்டுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், இந்தப் பிரச்னையை என்னிடத்தில் வந்து எழுப்பினார்கள். ஐ. எப். எஸ். அதிகாரிகள் கேட்டார்கள். எங்களை இப்படி கைவிட்டு விடலாமா என்று சொன்னார்கள். நான் சொன்னேன், இந்த மன்றத்தில் சொல்லக்கூடாது என்று அல்ல. அங்கே படிப் படியாக பதவிகளில் கிரேடேஷன் வகுக்கப்படவில்லை.

1979 ஏப்ரல் 27 [திரு. ஆர். எம். வீரப்பன்]

கன்சர்வேட்டர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு மாதம் 1,750-2,000 வரை வழங்கப்படுகிறது. அதற்கு மேல் அவர்கள் எங்கே போகிறார்கள். சீப் கன்சர்வேட்டர் ரூ. 2,500—2,750. அவர் சூப்பர் டைம் ஸ்கேல் என்ற உயர் கட்டத்திற்கு போகிறார். இதற்கு இடையில் அரசின் சட்டத்தில் இருக்கிறது. டெபுடி சீப் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட், அல்லது அடிஷனல் டிபுடி சீப் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட் என்று இரண்டு பதவியை உருவாக்கி இருக்கலாம். திரு. ஜெயதேவ் வந்த அன்றைக்கு உருவாக்கியிருக்கலாம். அவரை அங்கே வைத்து விட்டு, அதை யெல்லாம் செய்யவில்லை, ஆனால் ஒரு கன்சர்வேட்டர் ரூ. 2,000 வாங்குபவர், எங்கே போகிறார், ரூ. 2,500—க்கு போகிறார்.

(பிற்பகல் 2-10)

இடையிலே இரண்டு பதவிகள் உருவாக்கப்படாமல் இருந்தன. இன்றைக்கு ஒரு பதவி உருவாக்கப்பட்டிருக்கிறது. டிபுடி சீஃப் கன்சர்வேட்டர் ஆஃப் பாரஸ்ட் என்ற பதவி உருவாக்கப் பட்டிருக்கிறது. அவர் இவருக்கு உதவியாக, துணையாக இருக்கிறார். ஆகவே, தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் அஞ்சவேண்டாம். இந்த காடுகள் எல்லாம் உங்கள் காலத்திலே காப்பாற்றப்பட்டதைவிட மிகத் தெளிவாக, மிகுந்த அல்லியமாக, மிகச் சிறந்த முறையில் காப்பாற்றப்படும்; அதைப்பற்றி நீங்கள் அஞ்சவேண்டாம்.

மற்றவர்களுக்கு 'கம்பவுண்டிங்' பற்றிச் சொன்னார்கள். அதிலே இப்போது என்ன நடைமுறை இருக்கிறது? இந்த கம்பவுண்டிங் என்ற முறையை அந்த காலத்தில் சட்டத்தை உருவாக்கியவர்கள் சில நோக்கத்திற்காக ஏற்படுத்தினார்கள், பாவம்., ஏழை எளிய மக்களைத் தொந்தரவு படுத்தக் கூடாது; கள்ளி பொறுக்குகிறவர்களைத் தொல்லைபடுத்தக் கூடாது; இலை தழைகளைப் பொறுக்கிச் செல்பவர்களை துன்பங்களுக்குள்ளாக்கக்கூடாது என்பதற்காக ஏதோ ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், 5 ரூபாய், 10 ரூபாய் கம்பவுண்டிங் செய்ய வேண்டுமென்று சட்டத்தில் ஒரு விதியை உருவாக்கினார்கள். இன்றைக்கு அது எப்படி பயன்படுகிறது என்றால், நம்முடைய அதிகாரிகள் சந்தன மரத்தைத் திருடு கிறவனையும் கம்பவுண்டிங் செய்து விடுகிறார்கள்; தேக்கு மரத்தைத் திருடுகிறவனையும் கம்பவுண்டிங் செய்துவிடுகிறார்கள்.

ஒரு சிறிய உதாரணத்தை மட்டும் அதற்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர் கோவிலில் ஒரு லாரி லோடு தீக்குச்சி மரங்களைக் கள்ளத் தனமாகக் கடத்திக்கொண்டு போனார்கள். அதன் மதிப்பு 30,000 ரூபாய். அதை கேரளத்திற்கு கொண்டுபோய் விற்று விட்டார்கள். விற்றுவிட்ட பிறகுதான் நம்முடைய அதிகாரிகள் அதைக் கண்டுபிடித்து, என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்

தெரியுமா? 5,000 ரூபாய் கம்பவுண்டிங் — 30,000 ரூபாய் மதிப்புள்ள தீக்குச்சி மரங்களைத் திருட்டுத்தனமாக கடத்திக் கொண்டுபோனதற்கு 5,000 ரூபாய் கம்பவுண்டிங் செய்திருக்கிறார்கள். ஆகையால்தான் அரசாங்கம் எங்கெங்கே ஓட்டை இருக்கிறதோ, எங்கே சட்டத்திலே பொந்துகள் இருக்கிறதோ அவைகளை அடைக்க வேண்டுமென்பதற்காக இன்றைக்கு இப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்கியுள்ளோம்.

சந்தனமரத்தை திருடுகிறார்கள், தேக்குமரத்தை திருடுகிறார்கள்; கள்ளத்தனமாக விற்று, கொள்ளை லாபமடிக்கிறார்கள். அவைகளை தடுத்து நிறுத்தத்தான் இந்த கம்பவுண்டிங் முறையை நிறுத்த வேண்டுமென்று சொல்லுகின்ற அதே நேரத்திலே வனத்துறை அதிகாரிகளுக்கு ஒன்றைத் தெளிவாக தெரிவித்திருக்கிறோம்; வனத்துறை அதிகாரிகள் யாராக இருந்தாலும் ஏழை எளிய மக்கள்மீது கை வைக்காதே; விறகு குச்சி எடுத்துச்செல்கிறார்கள் என்பதற்காக தண்டனை கொடுக்காதே; இலை தழைகளை எடுத்துச்செல்கிறார்கள் என்பதற்காக தண்டிக்காதே; ஆடு மாடுகளை மேயவிடுகிறார்கள் என்பதற்காக பின்னாலே பணம் வாங்காதே என்று தனியாகச் சொன்னோம். மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் இந்த அவையிலே பிரச்னையை எழுப்பி, இப்போது சட்டமன்றத்தில் அதைச் சொல்ல வைத்துவிட்டார். எங்கே தவறு நடந்தாலும் அதை விட்டுவைக்க மாட்டோம் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சந்தனமரத்தைத் திருடுகிறான் என்றால் இப்புகல்தான் காலத்தில் அவன் கையை வெட்டவேண்டுமென்பது சட்டம். ஆனால் நம்முடைய காலத்தில் என்ன நடக்கிறது என்றால் அவனை பிடித்துக்கொண்டுபோய் மாஜிஸ்ட்டிரேட் கோர்ட்டிலே நிறுத்துகிறார்கள்; கோர்ட் கலையும்வரை சிறை என்று அங்கே அவனுக்குத் தண்டனை கொடுக்கிறார்கள்.

சென்னை நகரில் சமீபத்தில் கிடைத்திருக்கிற ஒரு செய்தி ஒரு இலட்சம் அமெரிக்கன் டாலருக்கு பாம்புத் தோலையும் சந்தன மரத்தையும் கள்ளத்தனமாக அனுப்பி வைப்பது என்பது அந்த செய்தி. அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். சில குற்றவாளிகள் பிடிபட்டுள்ள செய்தியை நீங்கள் அறிவீர்கள். இப்படித் திட்டமிட்டு நடைபெறுகிற காரியங்கள் யாரால் நடைபெறுவதாக இருந்தாலும் சரி, அவர்கள்மீது நடவடிக்கை எடுத்தே தீரும். எந்தக் காரணத்தால் குற்றம் நடைபெற்றது என்பதை நான் சொல்ல விரும்பவில்லை, யார் காரணம் என்றும் சொல்ல விரும்பவில்லை. அது தொடர்பான மற்ற பல விபரங்களையும் நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் வனத்துறை இந்த நாட்டின் செல்வம் என்பதை நாம் அனைவரும் மறந்துவிட்டோம். 30 ஆண்டு காலத்தில், வெள்ளைக்காரன் உருவாக்கி வைத்திருந்த இந்த

1979 ஏப்ரல் 2] [திரு. ஆர். எம். வீரப்பன்]

வனச் செல்வம் சுதந்திரம் பெற்ற பிறகு, அழிக்கப் பட்டிருக்கிறது. அதற்கு எல்லோரும் ஒருவகையில் காரணமாக இருந்திருக்கிறோம். அதற்கு ஒரு சான்றைத் தருகிறேன்.

இப்போது மூங்கில் கூப்பு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. அதுபற்றி ஒரு பட்டியல் வந்திருக்கிறது. எந்த எந்த கூப்பிலே எவ்வளவு டன் கிடைக்கும் என்று தோராயமாக கணக்கு தருகிறார்கள். அந்த கணக்கை வனத்துறை அதிகாரிகள் தருகிறார்கள். அதன்படி சேலம் முத்தூர் சென்ட்ரல் டிவிஷனில் ஒரு கூப்பிலே 250 டன் மூங்கில் கிடைக்கும் என்று வனத்துறை அதிகாரிகள் கணக்கு தந்திருக்கிறார்கள். வேறு ஒரு தகவலின் அடிப்படையில் அதை மீண்டும் பரிசீலனை செய்யுங்கள் என்று சொன்னேன். ஐ. எஃப். எஸ் அதிகாரிகளைப் போடுவதற்குப் பதிலாக ஐ. ஏ. எஸ் அதிகாரிகளை ஏன் போடுகிறீர்கள் என்று துரை முருகன் அவர்கள் கேட்டார்கள். இப்போது நான் சொன்ன இந்த கணக்கை கொடுத்தவர்கள் வனத்துறையைச் சேர்ந்த I. F. S. அதிகாரிகள்தான். அதை மறுபரிசீலனை செய்யும்படி அவர்களைக் கேட்கவில்லை; ஐ. ஏ. எஸ் அதிகாரியைக் கேட்டேன். முந்தாம்நாள் கோவைக்குப் போகும்போது சொன்னேன். நான் கோவைக்குப் போகிறேன்; திரும்பி இரயிலுக்கு வருவதற்குள் தெரிந்தாக வேண்டுமென்று சொன்ன 24 மணி நேரத்தில் அல்ல; 12 மணி நேரத்தில் அந்த கூப்பினை மீண்டும் கணக்கெடுத்து அவர் ஒப்புக்கொண்டது 1,000 டன்.

அவர்கள் தந்திருக்கின்ற கணக்கு 250 டன். இன்றைக்கு மார்க்கெட் விலை 400 ரூபாய் என்ற அளவில் பார்த்தால் கூட, இந்த 750 டன் வித்தியாசத்திற்கும் — 1,500 டன் என்றெல்லாம்கூட எனக்கு தகவல்கள் வந்தன. ஆகவே அதனை மீண்டும் பரிசீலிக்கச் சொல்லி இருக்கிறேன். ஆனால் அவர்களே ஒப்புக்கொண்டபடி ஆயிரம் டன் — கணக்குப் போட்டுப் பார்த்தால் 3 இலட்சம் ரூபாய் அதன் மதிப்பு.

நான் ஒன்றை உறுப்பினர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். தயவு செய்து திரு. துரைமுருகன் அவர்களே நாங்கள் ஈடுபடுகிற எந்த காரியமும் நிதானித்து, சிந்தித்து செயல்பட்டு அந்த வகையிலேயே முன்பின் பார்த்து பிசகாமல் அடிகளை எடுத்து வைக்கின்ற அரசு இது. நடவடிக்கை எடுக்கின்ற அரசு இது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது நீண்ட நேரம் நிர்வாகத்திற்குள்ளே நீங்கள் நுழைந்துவிட்ட காரணத்தாலே, நீங்கள் பேசிவிட்ட காரணத்தாலே பேசவேண்டியிருக்கிறது. அங்கே இருக்கின்ற அதிகாரிகள் மீது நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறது இந்த அரசு. அவர்கள் கன்னியாகுமரியிலே அடித்த கொள்ளைக்கு ஒரு தனி கோர்ட் போடப்பட்டது. அதிலே பலபேர் மீது குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன. நீண்டகாலம் அந்த வழக்கு நடைபெற்று கடைசியில் அத்தனை

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1979 ஏப்ரல் 2

சூழ்நிலைகளும் நிரபராதி என்று விடுவிக்கப்பட்டுவிட்டார்கள். ஒரே ஒரு ஆளுக்கு மட்டும் ஏதோ ஒரு சாதாரண தண்டனை பெயருக்குக் கொடுக்கப்பட்டது. அது குறித்து அப்பீல் செய்ய வேண்டுமானால் அப்பீல் செய்வதற்கு சட்டம் இல்லை, சட்டத்திலே இடம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். நீங்கள் சொல்கின்ற அதிகாரிகள்தான் இதுமாதிரித் தவறுகளைச் செய்தவர்கள். நான் கன்னியாகுமாரிக்குச் சென்றிருந்தபோது நேரிலேயே விசாரித்து கலெக்டரிடத்திலே சொல்லி அதற்கான விவரங்களை அனுப்பச் சொல்லி உடனடியாக உயர்நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்யவேண்டுமென்று சொன்னால் அதற்குள்ளாக டைம் பார் ஆகிவிட்டது. இப்படிப்பட்ட சூழ் நிலையிலே இந்தத் துறை இருந்துகொண்டிருக்கிறது என்பதை தயவுசெய்து நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். இந்த மன்றமும் நாடும் தெரிந்துகொள்ளவேண்டும். ஏன் ஐ. ஏ. எஸ் அதிகாரியைப் போட்டோம், ஐ. எஃப். எஸ். அதிகாரிகள் மீது எங்களுக்கொன்றும் காழ்ப்புணர்ச்சி இல்லை. அவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய தகுதிகள் இன்றைக்கும் பாதுகாக்கப்படுகின்றன. என்றைக்கும் இல்லாத பதவியை அவர்களுக்காக இன்றைக்கு உருவாக்கி இருக்கிறது இந்த அரசு. நான் அதையும் சொல்கிறேன். நீங்கள் சொன்னீர்களே அசில்டென்ட் கன்சர்வேட்டர் ஆஃப் ஃபாரஸ்ட் அவர்களை எங்கே பொறுக்குவது, யாரைத் தேர்ந்தெடுத்தால் நல்லது என்பது பற்றி யோசித்து யாருக்கும் பாதகம் இல்லாமல் சீனியாரிட்டிபடி கொடுப்பதற்கு உத்தரவுகள் போட்டாகிவிட்டது. இருப்பவர்களில் நல்லவர்களாகப் பார்த்து இன்றைக்குப் பிரமோஷன் பட்டியல் தயாராகிவிட்டது. ஆகவே நிர்வாகக் கோளாறு இல்லை. நான் மாண்புமிகு மன்றத்தலைவரின் மூலமாக ஒரு வேண்டுகோள் வைக்கிறேன் எந்தப் பிரச்னையானாலும் அதனை அரசின் கவனத்திற்கு கொண்டுவந்தால் உடனடியாக அதனைத் தீர்க்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

திரு. அம்பிகாபதி அவர்கள் ஒன்று சொன்னார்கள், அதாவது எதிர்க்கட்சிக்காரர்களை எல்லாம் படத்தில் காட்டக் கூடாதா என்று கேட்டார்கள். நான் அதைப்பற்றி நீண்டநேரம் விவாதம் நடக்கும் என்று சுருதி அதற்கான செய்திகளைச் சேகரித்துக் கொண்டு வந்தேன். ஆனால் எல்லோரும் விட்டு விட்டார்கள். அதற்காக நான் காலையிலேகூட ஒரு செய்திப் படச் சுருளைப் பார்த்துவிட்டு வருகிறேன். இங்கே நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையினைத் தந்தார்களே அது இங்கே பிடிக்கப்பட்டது. அதிலே யார் யார் எல்லாம் இருக்கிறார்கள் என்பதைக்கூட காலையிலே பார்த்துவிட்டு வந்தேன். இன்னும் வரவில்லை. விரைவில் திரைக்கு அது வர இருக்கிறது. அதிலே இந்தப் பக்கம் இருக்கிறவர்கள் தெரிகிறார்கள். அங்கே இருக்கிறவர்களும் தெரிகிறார்கள். அங்கே திரு. புலவர்

கோவிந்தன் அவர்களிலே இருந்து ஆரம்பித்து எல்லோரும் இருக்கிறார்கள். திரு. துரைமுருகன் அவர்களும் தெரிகிறார் என்று கருதுகிறேன். அவர் மிகவும் அழகாக வருகிறார். பிறகு அங்கே இருந்து இந்தப் பக்கம் வருகிறபோது கொஞ்சம் பின்னாலே வந்திருக்கிறார்கள். ஆகவே இதிலே எல்லாம் எங்களுக்கு ஒன்றும் இல்லை. நான் புள்ளிவிவரம் தெளிவாக வைத்திருக்கிறேன். நீங்கள் எப்போது வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம். செய்திப் படங்களிலே எதிர்கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டால் கலந்துகொண்ட அத்தனை பேர்களுக்கும், அத்தனை நிழற்சிகளிலும் தக்க மரியாதையோடு அங்கே படம் எடுத்து காண்பித்திருக்கிறோம். எங்கேயாவது விடுபட்டிருந்தால் அதனைக் குறை என்றுதான் நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர குற்றம் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. எங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அந்தத் தவறை நீக்கிக்கொள்வோம்.

[பிற்பகல் 2-20.

அவர் குறிப்பாக, தமிழரசு இதழைப்பற்றி சொன்னார்கள், தமது நிதி அமைச்சர் அவர்கள் இந்தப் பக்கத்திலிருந்து நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்யும்போது, காமிராவை அந்தப் பக்கம் வைத்துத்தான் எடுப்பார்கள். அப்போது இங்கே இந்த வரிசையில் இருப்பவர்கள் எல்லாம் அந்தப் படத்தில் வரும். அதை அப்படியேதான் போட முடியும். அது மட்டுமல்ல வரலாற்றிலேயே முதன்முறையாக நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்துகொண்ட இந்தி திணிப்பு எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் கூட்டினார்கள். இதில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் வந்திருந்தார்கள். அந்தச் செய்தியும் தமிழரசில் வந்திருக்கிறது. அதில் எதிர் கட்சித் தலைவர் அவர்களுக்கு முதலிடம் தரப்பட்டிருக்கிறது. சிலர் கூட என்னிடம் கேட்டார்கள். என்ன, முதலமைச்சரைப்போலவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு முதலிடம் தரப்பட்டிருக்கிறதே என்று கேட்டார்கள். இதில் அரசு ஒன்றும் செய்யவில்லை. இதன் ஆசிரியர்கள் பார்த்து வரிசைப்படுத்தி போட்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். இதில் எந்தவிதமான வித்தியாசமும் பார்ப்பதில்லை என்று சொன்னேன். ஆகவே எந்தவிதமான வித்தியாசமும் பாராமல் பரந்த எண்ணத்தோடு நிர்வாகத்தை நடத்தவேண்டுமென்று எண்ணி புரட்சித் தலைவரின் ஆணையின் கீழ் நாங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

மேலும், வனத்துறையில் முன்னால் இருந்ததைவிட வருமானம் ஏன் குறைந்தது என்று கேட்டார்கள். 78–79-ல் வருமானம் 868. 43 லட்சம். 79–80-ல் 925.18 லட்சம் வருமானம். ஆகவே இந்த இரண்டு ஆண்டுகளில் குறைவு எதுவும் இல்லை. 77–78-ல் 1051.59 லட்சம் வருமானம் வந்திருக்கிறது. அந்த காலத்தில் வருமானம் அதிகமாக

வந்திருப்பதற்கு காரணம் விறகு கூப்பு விட்டதில் 204 லட்சம் வந்திருக்கிறது. சந்தனமரம் விற்றதில் 434. 79 லட்சம் வந்திருக்கிறது. சந்தனமரத்தின் விலை உயர்ந்திருந்த நேரத்தில் 60 ஆயிரம் 70 ஆயிரம் என்றிருந்த நேரத்தில் சந்தன பில்லட்டுகளை ஏற்றுமதி செய்யக்கூடாது என்று மத்திய அரசு தடை விதித்திருந்ததால், பின்னால் வந்த காலத்தில் வருமானம் குறைந்துவிட்டது. இதன் காரணமாக இரண்டு ஆண்டுகளிலும் 77—78-லும், 78—79-லும் வருமானம் குறைந்தது. இதைப்பற்றி மீண்டும் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். சந்தனமர ஏற்றுமதியின் பேரில் போடப்பட்டிருக்கின்ற தடையை நீக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

மேலும் சிங்கோனாத் துறையிலுள்ள தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதைப்பற்றி சொல்லப்பட்டது. இதற்காக இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு 11 லட்சம் இதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட முயற்சிகளில் அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

ஆக, தொழிலாளர்கள் பிரச்னையாக இருந்தாலும் சரி, அதிகாரிகள் பிரச்னையாக இருந்தாலும் சரி, அதையும் மக்கள் பிரச்னைகளில் ஒன்றாக நினைத்துப் பரிசீலிப்பதில் அரசு கவனம் செலுத்தி வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரைப்படத் துறையைப்பற்றியும் சொன்னார்கள். அழகிரிசாமி அவர்கள் கண்டனத்தோடு கருத்தை தெரிவித்தார்கள். ஆனால் அம்பிகாபதி அவர்கள், திரைப்படத்துறையில் தீவிர கவனம் செலுத்தவேண்டும் என்று கூறினார்கள். திரைப்படத்துறையைப் பொறுத்தவரையில், அரசுக்கு, இது பொன் முட்டை இடுகிற ஒரு வாத்து என்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். தேங்காய்க்கு வரி போட்ட போது, அதற்கு பலவிதமான ஆட்சேபணைகள் எழுப்பியதன் காரணமாக அந்த வரி பின்வாங்கப்பட்டது. திரைப்படத் துறையைப் பொறுத்தவரையில், அரசுக்கு ஒரு காசுகூட செலவு இல்லாமல் அரசுக்கு ஒவ்வொரு ஆண்டும் 22 கோடி ரூபாய் நமது கஜானாவில் கொண்டு வந்து கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இந்தத் துறையில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு பெறுகிறார்கள். இன்றைக்கு திரைப்படம் இல்லையென்றால், இந்த நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு பொழுதுபோக்குக்கு எதுவும் கிடையாது. ஆனால் ஏதோ ஒரு தவறான கருத்து, ஏதோ இந்தத்துறையில் வரிய குறைத்துவிட்டார்கள் என்பது. கடந்த ஆண்டில் 21 கோடி வருமானம் வந்து கொண்டிருந்தது. இந்த ஆண்டு 22½ (இருபத்தி இரண்டே முக்கால் கோடி) கோடி ரூபாய் என்று உயர்ந்திருக்கிறது. மேலும் திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களிடமிருந்து ஒரு வேண்டுகோளாக வைக்கப்பட்டது. இந்த கேளிக்கை வரியைப்

1979 ஏப்ரல் 2] [திரு. ஆர். எம். வீரப்பன்]

பொறுத்த அளவில், விற்பனைவரி அதிகாரிகள் மிக கடுமையாக நடந்து கொள்கிறார்கள் என்றும், அதை போக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. இப்போது சிறிய 'B' Grade முனிசிபாலிட்டிவரை இந்த பிரச்னை தீர்ந்து விட்டது. அதற்கு மேல் 'A' Grade முனிசிபாலிட்டியில் இருக்கின்ற பிரச்னையில் முடிவு எடுப்பதற்காக, வருவாய்த்துறை அமைச்சர் அவர்களிடமும் நிதி அமைச்சர் அவர்களிடமும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்களும் இதைபரிசீலிப்பதாக சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அடுத்த கட்டமாக, 'எ' கிரேட் முனிசிபாலிட்டிகளுக்கும் 70, 80 லக்ஷ அரங்குகளில் இந்த ஒட்டுமொத்த கேளிக்கை வரி செலுத்தும் முறையை விஸ்தரிக்க முடியுமா என்பதை ஆராய்ந்து பார்த்து, எங்களுக்கு அனுமதி தந்தால் அதை நிறைவேற்ற இருக்கிறோம் என்பதை இந்த மன்றத்திற்கு எடுத்துச் சொல்லி, நீண்ட நேரம் எடுத்துக் கொண்டதற்காக பொறுத்தருள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மானியத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை பின்வாங்கிக்கொண்டு இந்த மானியத்தை நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமருகிறேன். வணக்கம்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் பல்வேறு விஷயங்களை எடுத்துக் கூறினார்கள். சந்தோஷம். வனத் துறையிலே நடக்கக் கூடிய அக்கிரமங்களை, பல்வேறு ஊழல்களை நிவர்த்திக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை வரவேற்கிறேன். ஆனால், வனத்துறையிலே எந்த அடிப்படையில் சந்தன மரங்கள் திருடிக்கொண்டு போகப்படுகின்றது என்பதற்கு, லாரி எண், எந்தெந்த லாரிகளில், எந்தெந்த இடங்களில் செய்யப்படுகின்றது. அவர்களையெல்லாம் பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று விவரங்கள் கொடுத்தேன். அதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது என்பதற்கு எனக்கு பதில் கிடையாது என்பது ஒன்று.

இரண்டாவது, வனத் துறை அதிகாரிகள், ரெவின்யூ அதிகாரிகளுக்கு கட்டுப்பட முடிவதில்லை. கோயம்பத்தூரிலே உள்ள கன்சர்வேடர் ஆப் பாரஸ்ட்டை அங்குள்ள கலெக்டர் கட்டுப்படுத்த முடியவில்லை. அதேபோல், கோயமுத்தூர் தாலுகா, அவினாசி தாலுகா போன்றவைகளிலுள்ள பாரஸ்டர்களை, ஆர். டி. ஓ. க்கள் கட்டுப்படுத்த முடிவதில்லை. அதற்கு அவர்கள் தயாராகவும் இல்லை. இப்படி, இந்த நிலை இருப்பது சரிதானா? அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கின்ற அளவிற்கு இதிலே தகுந்த நடவடிக்கைகள் எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. வாக்கெடுப்பு.

[1979 ஏப்ரல் 2

திருவாளர்கள் கு. ரமணி, செ. சிவசாமி, சேலம் மு. ஆறுமுகம் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திருவாளர்கள் என். கிட்டப்பா, பொ. விஜயராகவன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி — "மானியக் கோரிக்கை எண் 25 — சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,86,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 45—காட்டு வளத்துறை.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், எம். அண்ணாமலை, செ. சிவசாமி, சேலம் மு. ஆறுமுகம் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. பொ. விஜயராகவன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி — "மானியக் கோரிக்கை எண் 45 — காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,41,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 47 தகவல், சுற்றுலா, திரைப்படத் தொழில், நுட்பவியல்.

திருவாளர்கள் எம். பழனிவேல், செ. சிவசாமி, சேலம் மு. ஆறுமுகம் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திருவாளர்கள் என். கிட்டப்பா, பொ. விஜயராகவன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

1979 ஏப்ரல் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண் 47—தகவல், சுற்றுலா, துறைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,43,16,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 56—நாட்டுவள மூலதனச் செலவு.

திருவாளர்கள் செ. சிவசாமி, சேலம் மு. ஆறுமுகம் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திரு. பொ. விஜயராகவன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண் 56—நாட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,34,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(8) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

134. 1972 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி உறுப்பினர்கள் தேர்தல் நடத்தும் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 31.1.1979 ஆம் தேதியிடப்பெற்ற 164 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

135. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு சிமிண்டு பகிர்ந்தளித்தல் (உரிமம் வழங்கல்-முறைப்படுத்துதல்) ஆணையைச் செய்வது குறித்து தொழில் துறையின் 29.11.1978 ஆம் தேதியிடப் பெற்ற 1539-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1955 ஆம்

[1979 ஏப்ரல் 2

ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1955) 3 (6) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

*114. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது அறிக்கை (ஆறாவது சட்டமன்றப் பேரவை)

*115. அரசினர் உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது அறிக்கை, 1978-79 (ஆறாவது சட்டமன்றப் பேரவை).

116. 1973-74 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் தமிழ்நாடு அரசின் வணிகத் துறைகள் பற்றிய அறிக்கையின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் ஏழாவது அறிக்கை (ஆறாவது சட்டமன்றப் பேரவை) (தமிழ், ஆங்கிலம்).

117. 1973-74 ஆம் ஆண்டிற்கான வணிகத் துறை அல்லாத துறைகள் பற்றிய இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் எட்டாவது அறிக்கை (ஆறாவது சட்டமன்றப் பேரவை) (தமிழ், ஆங்கிலம்).

**118. கோரிக்கை எண் 32-பிற்பட்டோர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979-80 (தமிழ் ஆங்கிலம்).

**119. கோரிக்கை எண் 32-பிற்பட்டோர் நலத் துறைக்கான அட்டவணைகள், 1979—80 (தமிழ், ஆங்கிலம்).

** 120. 1979-80 ஆம் ஆண்டிற்கான பிற்பட்டோர் நலத் துறையின் செயல்விளை முறைத் திட்டம் (ஆங்கிலம்)

** 121. கோரிக்கை எண். 25-சின்கோனாத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979-80 (தமிழ், ஆங்கிலம்).

** 122. 1979-80 ஆம் ஆண்டில் சின்கோனாத் துறைக்கான சாதனைத் திட்டம் (ஆங்கிலம்)

** 123. 1979-80 ஆம் ஆண்டிற்கான சின்கோனாத் துறையின் வணிக சம்பந்தமான வரவு செலவுத் திட்டம் (ஆங்கிலம்)

** 124. கோரிக்கை எண். 45-காட்டுவளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979-80 (தமிழ், ஆங்கிலம்)

** 125. 1979-80 ஆம் ஆண்டிற்கான காடுகள் பற்றிய சாதனைத் திட்டம் (ஆங்கிலம்)

கோரிக்கை எண்கள் 32, 25, 45, 47, 56-க்கான வெட்டுத் தீர்மானங்களின் பட்டியல், 31-3-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

*31-3-1979 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றன.

**31-3-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

இணைப்பு I

[309-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 603-க்கான விடையைக் காண்க].

(அ) ஆம்.

(ஆ மற்றும் இ):—நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன் தொகைகள்,

இவற்றில் தவணைத்தவறிய நிலுவையில் உள்ள தொகைகள் இவற்றின் விவரம் பின்வருமாறு.

	வாங்கப் பட்ட கடன் தொகை. (ரூபாய் இலட்சத்தில்)
தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம். ..	22·50
இந்தியத் தொழில் நிதி உதவி நிறுவனம். ..	22·50
இந்தியத் தொழில் கடன் முதலீட்டுக் கழகம் ..	44·28
	89·28

(ஈ) ஆம்.

இணைப்பு II

[354-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

பிற்பட்டோர் நலத்துறை—மானியம் எண் 32.

கொள்கை விளக்கக் குறிப்பு 1979-80.

பிற்பட்ட வகுப்பினர் நலனுக்காக 1979-80 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையை நான் இம் மன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன். பிற்பட்ட வகுப்பினர் நலனுக்காக தமிழக அரசு முந்தைய ஆண்டுகளில் நிறைவேற்றியுள்ள பணிகள், 1979-80 ஆம் ஆண்டில் எடுக்க இருக்கும் முன்னேற்றப் பணிகள் பற்றிய விவரங்களைக் கீழே தருகிறேன்.

2. 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு முன்பு வரை பிற்பட்ட வகுப்பினரின் நலனுக்கான திட்டங்கள் தொழிலாளர் நல ஆணையாளரால் அரிசன நலம், மற்றும் பழங்குடியினர் நலம் ஆகியவற்றுடன் ஒருங்கே கவனிக்கப்பட்டு வந்தன. பின்னர் குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்

பட்டோர் நலம், காவல் துறையினரால் கவனிக்கப்பட்டு வந்தது. 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாளில் அரிசன நலத்துறை ஏற்படுத்தப்பட்டு அரிசனங்கள், பழங் குடிமக்கள், குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் ஆகியோரின் நலன்கள் அத்துறையால் கவனிக்கப்பட்டன. பிற்பட்ட வகுப்பினர் மக்கள் தொகையில் பெரும்பகுதியினர் என்பதன் காரணமாக அவர்களுடைய முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தும் வகையில் பிற்பட்டோர் நலத்துறை புதியதாக ஏற்படுத்தப்பட்டு 1969 ஆம் ஆண்டு மே திங்கள் முதல் செயல்பட்டு வருகிறது. இதுவரை அரிசன நலத்துறையால் கவனிக்கப்பட்டு வந்த பிற்பட்டோர் நலம், குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் நலம் தொடர்பான பணிகள் இத்துறைக்கு மாற்றப்பட்டன.

3. இத்துறை, இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த அதிகாரி ஒருவரால் நிர்வகிக்கப்படுகிறது. மாவட்டங்களில் மே 1974 ஆம் ஆண்டு வரை இத்துறையின் வேலைகளை மாவட்ட நல அதிகாரிகள் கவனித்து வந்தனர். 1974 ஆம் ஆண்டு மே திங்கள் 17 ஆம் நாளிலிருந்து துணை ஆட்சியாளர் பதவி நிலையில் மாவட்ட பிற்பட்டோர் நல அதிகாரிகள் நியமிக்கப் பட்டு உள்ளனர். மாவட்ட பிற்பட்டோர் நல அதிகாரிகள், மாவட்ட ஆட்சியாளரின் நேரடிப் பார்வையில் பணி புரிகின்றனர்.

பிற்பட்டோர் நலன்களுக்கான திட்டங்களைப் பற்றி ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்கு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சரின் தலைமையில் "மாநில பிற்பட்டோர் நல ஆலோசனைக் குழு" ஒன்று இயங்கி வருகிறது. இக்குழு 1974—ம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவைத் திருத்தி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இது போன்று மதுரை மாவட்டத்தில் பிரமலைக் கள்ளர் சமுதாய முன்னேற்றத்திற்கு ஆலோசனை கூற மதுரை மாவட்ட ஆட்சியாளரின் தலைமையில் ஒரு தனிக் குழு செயல்பட்டு வருகின்றது.

4. பிற்பட்டோர் முன்னேற்ற நலனுக்கென 1971—72 முதல் தனியாக மானியக் கோரிக்கை ஏற்படுத்தப்பட்டது. 1967—68-ல் பிற்பட்ட வகுப்பினர் நலனுக்கு ரூ. 1,61,49,000 ஆக இருந்த மானியத்தொகை ஆண்டுதோறும் வளர்ந்து 1979-80-ல் ரூ. 7,04,41,000 ஆக எட்டியுள்ளது. இது பிற்பட்டோர் நலனுக்கென அரசு மேற்கொண்டு வரும் தீவிர நடவடிக்கைகளைக் காட்டுகிறது. மேலும் இந்த தனி ஒதுக்கீடு தவிர இம்மாநில அரசு மேற்கொள்ளும் பல்வேறு பொதுத் திட்டங்கள் பிற்பட்ட வகுப்பினர் முன்னேற்றம் கருதியே செயலாக்கப்பட்டு வருகின்றன என்பதை இப்பேரவையில் கூற விரும்புகிறேன். இந்தத் துறையின் முக்கியமான பணிகள் சிலவற்றைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்,

1979 ஏப்ரல் 21

5. படிப்பு உதவித் தொகை:—(i) பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்கள் கல்வி கற்க போதிய வசதியின்மையால் இன்னமும் பிற்பட்ட நிலையிலேயே இருக்கிறார்கள் என்பதை உறுப்பினர்கள் எல்லோரும் அறிவர். அவர்களுடைய முன்னேற்றத்தினைக் கருத்திற் கொண்டு, கல்வி மேம்பாட்டிற்கு வழிவகை செய்வது மிக அவசியம். எனவே பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும், குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் கல்வி வசதிக்காக, படிப்பு உதவித் தொகை மற்றும் உண்டி, உறையுள் வசதிகள் அளித்து ஊக்குவிக்கப்படுகிறது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஒன்பதாம் வகுப்பிலிருந்தும், குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்களுக்கு முதலாம் வகுப்பிலிருந்தும் படிப்பு உதவித்தொகை வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகை பெறுவதற்கு மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 2,500-க்கும் அதிகமாக இருக்கக்கூடாது.

உதவித் தொகை பெற பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் 40 சதவிதம் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். ஆனால் குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலே போதுமானது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் ஒரு இலட்சம் ரூபாயுடன் 1948-49-ல் தொடங்கப்பட்டு 609 மாணவர்களுக்குப் பயனளித்தது.

பின்னர், இத்தொகை 1949-50-ம் ஆண்டில் ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்ந்ததில் 2,908 மாணவர்கள் பயனடைந்தனர். 1960-61-ல் 19,900 மாணவர்களுக்கு ரூ. 41 இலட்சம் செலவழிக்கப்பட்டது.

(ii) கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் படிப்பு உதவித் தொகை வழங்குவதில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியினைக் காட்டும்:

குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர்.

ஆண்டு.	உயர் பள்ளிப் படிப்பு.	கல்லூரிப் படிப்பு.	ரூபாய இலட்சங்களில்.
(1)	(2)	(3)	(4)
	(உதவித் தொகை பெற்ற மாணவர் எண்ணிக்கை)		
1966—67 ..	24,745	1,619	13.71
1967—68 ..	27,967	1,941	14.50
1968—69 ..	32,347	2,122	16.71
1969—70 ..	41,361	2,828	21.16
1970—71 ..	53,769	3,173	25.55
1971—72 ..	60,614	3,805	30.85

(1)		(2)	(3)	(4)
1972—73	..	67,772	4,638	34.29
1973—74	..	65,876	4,338	34.38
1974—75	..	60,661	4,673	35.66
1975—76	..	61,845	3,964	29.64
1976—77	..	57,026	3,985	33.65
1977—78	..	1,10,639*	4,183	29,80

* குறிப்பு:—1977-78-ம் ஆண்டில் பள்ளிப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு புதிய திட்டம் செயல்படுத்தியமையால் பயன் பெற்றோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 1977-78 ஆம் ஆண்டுக்கான தொகை ரூ. 0.98 இலட்சம், பின்னர் 1978-79 ஆம் ஆண்டு நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது. இது புத்தகம் வழங்கப்பட்டமைக்காகவும், தனிக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் திருப்பித் தந்ததற்காகவும் ஆகும்.

பிறபட்ட வகுப்பினர்.

1966—67	..	10,306	21,099	82.90
1967—68	..	10,075	25,260	91·73
1968—69	..	20,375	33,162	113.07
1969—70	..	42,515	48,050	160.89
1970—71	..	74,842	59,407	201.20
1971—72	..	92,694	76,281	290.50
1972—73	..	1,04,486	87,652	324.65
1973—74	..	94,032	80,025	318.86
1974—75	..	88,897	86,494	331.68
1975—76	..	90,620	71,433	317.08
1976-77	..	80,372	78,741	295.00
1977-78	..	1,07,501**	74,469	291.53

** குறிப்பு:—1977-78ஆம் ஆண்டில் பள்ளிப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு புதிய திட்டம் செயல்படுத்தியமையால், பயன் பெற்றோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 1977-78-ம் ஆண்டுக்கான தொகை ரூ. 3.75 இலட்சங்கள் பின்னர் 1978-79-ஆம் ஆண்டு நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது. இது புத்தகம் வழங்கப்பட்டமைக்காகவும், தேர்வுக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் திருப்பி தந்ததற்காகவும் ஆகும்.

1979 எப்ரல் 2]

(iii) மேற்கண்ட விவரங்கள் பிற்பட்டோர் கல்வி வளர்ச்சிக்காக புதிதாக இத்துறை தொடங்கப்பட்ட பிறகு, உதவித் தொகையினால் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதைக் காட்டும். மேலும், கலை, அறிவியல், மருத்துவம், பொறியியல், பட்ட மேற்படிப்பு மற்றும் சட்டம் போன்ற படிப்புகளுக்கும் உதவித் தொகை வழங்கப்படுகின்றது. மேலும், அவர்களுடைய முன்னேற்றத்திற்காக (சார்ட்டர்டு அக்கவுண்டன்ட்) பட்டயக் கணக்கர் பயிற்சி பெறும் மாணவர்கட்கு உதவித் தொகை 1973-74ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. இதன்படி, 1973-74-ல் ரூ. 16,035-ம், 1977-78-ல் ரூ. 29,000 மும் செலவிடப்பட்டது. 1979-80-க்கு ரூ. 40,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

(iv) 1977-78-ம் ஆண்டு முதல் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகையினைப் பணமாக வழங்குவதற்குப் பதிலாக, குறிப்பிட்ட புத்தகங்களை நேரிடையாக வழங்கவும் தனிக்கட்டணங்களை நேரிடையாக கல்வி நிலையங்களுக்கு வழங்கவும் பள்ளி இறுதி நிலை தேர்வு எழுதும் மாணவர்களுக்குரிய தேர்வுக் கட்டணங்களை அரசு தேர்வுகள் இயக்குநருக்கு வழங்கவும் புதிய திட்டம் அமுலாக்கப்பட்டது. அரசால் நேரிடையாக செலுத்தப்படும் இச்செலவுகள் முன்பு வழங்கப்பட்ட உபகாரச் சம்பளத்திற்கு இணையாக இருக்கும்.

(v) பிற்பட்ட வகுப்பு மாணவர் பெற்று வரும் உண்டி மற்றும் உறைவிடச் செலவுகள் 1971-72-லிருந்து கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்பட்டுள்ளது:—

	சென்னையில்.		வெளியூர்களில்.	
	*பி.வ.	**கு.ப.நீ.	பி.வ.	கு.ப.நீ.
(1) கலை, விஞ்ஞானம், சட்டம்.	60	70	50	55
(2) மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை மருத்துவம் ஆகியவை.	60	75	55	70
(3) தொழில் நுட்பக் கல்வி.	50	60	45	50

*பி. வ.—பின் தங்கிய வகுப்பினர்.

** கு.ப.நீ.—குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர்.

[1979 ஏப்ரல் 2

(vi) உதவித் தொகை வழங்குவதற்காக கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

	1977-78 செலவு.	1978-79 மதிப்பீடு.	1978-79 திருத்திய மதிப்பீடு.	1979-80 மதிப்பீடு.
(1)	(2)	(3)	(4)	(5)
	(ரூபாய் ஆயிரத்தில்)			
பிற்பட்டோர் வகுப்பு மாணவர்கள்	29,221	34,010	32,840	33,881
குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்கள்.	2,988	3,569	3,434	3,488
மொத்தம் ..	32,209	37,579	36,274	37,369

(vii) மத்திய அரசு உதவியுடன் குறைந்த வருமானம் உடையோரின் பிள்ளைகளுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் 1964-65-ல் ஆரம்பிக்கப்பட்டது. இதன்படி குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கும் பிற்பட்ட வகுப்பினருக்கும் உதவித் தொகை வழங்கப்பட்டது. இதற்கு மத்திய அரசு 1968-69 வரைதான் நிதி உதவி செய்து வந்தது. ஆயினும் தொடர்ந்து இந்தத் திட்டத்தின்கீழ் 1969-70-ல் ரூ. 14,84,000-ம், இதற்குச் சமமான தொகை 1970-71ஆம் மத்திய அரசின் உதவியின்றியே செலவிடப்பட்டது. 1971-72 ஆம் ஆண்டு முதல் நிதி பற்றாக்குறையின் காரணமாக இந்தத் திட்டம் கைவிடப்பட்டது. ஆனாலும் ஏற்கெனவே இந்தச் சலுகை பெற்றவர்களுக்கு இவர்கள் எடுத்துக் கொண்ட பாட முறையில் தேர்ச்சி பெற்று முடிக்கும் வரை மாநில உதவித் தொகை விதிகளின்படி 1976-77-ம் ஆண்டு வரை புதுப்பித்தல் உதவித் தொகை மட்டும் வழங்கப்பட்டது.

(2) படிப்புக் கட்டணச் சலுகைகள்: சாதி பாகுபாடில்லாமல் புகுமுக வகுப்பு வரை எல்லா மாணவர்களுக்கும் முழுச்சம்பளச் சலுகைகள் வழங்கப்படுகிறது.

புகுமுக வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு கல்வித் துறையின் மூலமும், பிற்பட்டோர் நலத்துறையின் மூலமும் சம்பளச் சலுகைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:—

வருமான பிரிவு.	மிகவும் பிற்பட்ட சாதியினர்.	விமுக்த சாதியினர்.	பிற்பட்ட சாதியினர்.
(1)	(2)	(3)	(4)
ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,500 வரை வருமானம் உள்ளவர்களுக்கு.	முழுச் சம்பளச் சலுகை தமிழ் நாடு கல்வி விதி எண் 92ன் படி.	முழுச் சம்பளச் சலுகை தமிழ் நாடு கல்வி விதி எண் 92ன் படி.	அரைச் சம்பளச் சலுகை தமிழ் நாடு கல்வி விதி எண் 92ன் படி.
ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,501 முதல் ரூ. 2,500 வரை வருமானம் உள்ளவர்களுக்கு.	அரைச் சம்பளச் சலுகை நலத் துறையின் மூலம் படுகிறது.	மூன்று பிரிவினருக்கும் பிற்பட்டோர் உதவித் தொகையுடன் சேர்த்து வழங்கப்	

8. அரசு மாணவர் இல்லங்கள்.—(1) மாணவர்கள் கல்வி பயில வசதியாக இருக்கும் பொருட்டு, அரசினர் உணவு விடுதிகள் திறக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் பல்வேறு வகுப்பு மாணவர்கள் கீழ்க்கண்ட விகிதத்தில் சேர்க்கப்படுகின்றனர்.

	குற்றப் பரம்பரையினர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்களுக்கான விடுதிகள்.	பின்தங்கிய வகுப்பிலுக்கான விடுதிகள்.	அரிசன விடுதிகள்.
(1)	(2)	(3)	(4)
		(விழுக்காடு)	
பிற்பட்ட வகுப்பினர்	10	65	20
குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர்.	60		
அரிசன வகுப்பினர் ..	25	25	75
இதர வகுப்பினர் ..	5	10	5
மொத்தம் ..	100	100	100

(2) பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்காகவும் குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்காகவும் நடத்தப்பெறும் விடுதிகளின் விவரங்கள்:—

ஆண்டு.	பிற்பட்ட வகுப்பினர்.		குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர்.	
	விடுதிகள் எண்ணிக்கை.	மாணவர்கள் எண்ணிக்கை.	விடுதிகள் எண்ணிக்கை.	மாணவர்கள் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)
1966-67 முதல் 1969-70 வரை.	11	979	37	3,619
1970-71 ..	23	2,144	40	4,031

1979 எப்ரல் 21

ஆண்டு.	பிற்பட்ட வகுப்பினர். விடுதிகள் எண்ணிக்கை.	மாணவர் எண்ணிக்கை.	குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர். விடுதிகள் எண்ணிக்கை.	மாணவர் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)
1971-72 ..	81	5,333	46	4,369
1972-73 ..	123	7,608	46	4,39
1973-74 ..	144	9,348	54	5,099
1974-75 ..	177	11,210	54	5,099
1975-76 ..	196	12,060	53*	5,069
1976-77 ..	215	13,305	51*	4,919
1977-78 ..	227	14,065	57	5,219
1978-79 ..	237	14,565	57	5,219

*தேவையான மாணவர்கள் இல்லாததினால், 3 குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கான விடுதிகள் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கான விடுதிகளாக மாற்றப்பட்டன.

(3) மேலே குறித்த 294 பிற்பட்ட வகுப்பு விடுதிகளில் 54 விடுதிகள் கல்லூரி மாணவர்களுக்கானவை.

(4) இந்த 294 விடுதிகளையும் பராமரிப்பதற்காக 1979-80 ஆம் ஆண்டுக்கு ரூ. 1,22,97,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1978-79 ஆம் ஆண்டு முதல் மாணவர்கள் விடுதியில் சேர, பெற்றோர்களின் ஆண்டு வருமான வரம்பு ரூபாய் இரண்டாயிரத்திலிருந்து ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் ரூ. 2,000 முதல் ரூ. 2,500 வரை ஆண்டு வருமானம் உடைய பெற்றோர்களின் குழந்தைகள் பயனடைவர்.

1979-80-ல் 25 பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் விடுதியும் 3 குற்றப்பரம்பரையிலிருந்து நீக்கப்பட்ட மாணவர் விடுதியும் ஆக 28 புதிய விடுதிகள் திறக்கவும் மாணவர்களுக்கு உடைகள் வழங்கவும் ரூ. 8.34 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

[1979 ஏப்ரல் 2

மேற்படி விடுதிகளில் மாணவர்களுக்கு அனுமதிக்கப்படும் உணவுச் செலவுத் தொகை கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது.

		சென்னை. (2)	வெளியூர். (3)
			(ரூபாய்)
1.	கல்லூரி மாணவர் விடுதிகள் ..	80	65
2.	தொழிற் கல்வி மாணவர் விடுதிகள் ..	65	55
3.	இதர விடுதிகள்	45*	45*

குறிப்பு:— (1) மாணவியருக்கு மேற் குறித்த தொகைகளை விட அதிகமாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்றும், மலைப் பிரதேசங்களில் மேலும் ரூபாய் ஒன்றும் அதிகம் அளிக்கப் படுகிறது.

*(2) முன்பு ரூ. 40 ஆக இருந்தது 1—6—1978 முதல் ரூ. 45 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

(5) மாணவர் விடுதிகளுக்கான கட்டிடங்கள்:— மாணவர் விடுதிகளுக்கான கட்டிடங்களைக் கட்டும் பொறுப்பைத் தமிழ்நாடு அரசை வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் ஏற்றுக் கொண்டு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் பிற்பட்ட வகுப்பு மாணவர் களுக்காக 50 விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த 50 விடுதிகளில் 16 விடுதிகள் முடிக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளன. மேலும் 5 விடுதிகள் அரிசன நல விடுதியுடன் கூடிய ஒரே கட்டிடமாக கட்டப்பட்டு செயல்படுகின்றன.

9 (1) பள்ளிகள்:

குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக செயல்பட்டு வரும் 275 பள்ளிகளின் விவரம் மாவட்ட வாரியாக கீழே தரப்பட்டுள்ளது.

இத்துறையினரால் நடப்படும் பள்ளிகளுக்கு அதிக வசதி யுடன் கூடிய கட்டிடங்களைக் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. 1978-79 திருத்திய மதிப்பீட்டில் ரூ. 2,34,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1979-80-ல் கட்டிடங்களுக்காக ரூ. 45,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்டங்கள்.	உயர்நிலைப் பள்ளிகள். எண்ணிக்கை.	மாணவ மாணவியர்.	நடுநிலைப் பள்ளிகள். எண்ணிக்கை.	மாணவ மாணவியர்.	ஆரம்பப் பள்ளிகள் எண்ணிக்கை.	மாணவ மாணவியர்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
வட ஆர்காடு ..	..	..	..	..	4	412
தென்னார்காடு ..	..	..	..	..	1	315
மதுரை (கள்ளர் சீரமைப்பு).	9	2,641	32	11,014	206	29,152
இராமநாதபுரம் ..	..	..	1	390	5	972
திருநெல்வேலி ..	..	..	..	..	10	1,210
சேலம்	..	..	..	..	2	341
கோவை	..	..	1	185	1	121
தர்மபுரி	..	..	..	..	3	302
மொத்தம் ..	9	2,641	34	11,589	232	32,824

9. (2) 1979-80-ல் ஒரு நடுநிலைப் பள்ளியை ரூபாய் 1.80 இலட்சம் செலவில் உயர்நிலைப் பள்ளியாகவும், 4 ஆரம்பப் பள்ளிகளை ரூபாய் 0.84 இலட்சம் செலவில் நடுநிலைப்பள்ளிகளாகவும் மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

10. மதிய உணவு.— குற்றப்பரம்பரையினர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்கள் தம் வறுமையின் காரணமாக, பள்ளிகளில் தொடர்ந்து படிப்பதில்லை. அவர்கள் பள்ளிகளை விட்டுச் செல்லாமல் இருப்பதற்குத் தூண்டுகோலாக இப்பள்ளிகளில், அம் மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கப் படுகிறது. ஒரு மதிய உணவின் விலை 22 காசுகள். திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள அரசினர் அல்லாத தனியார் பள்ளிக்கூடங்களில் குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்கள் பெரும்பகுதியினராக இருக்கின்ற காரணத்தால், அம் மாவட்டங்களில் உள்ள பள்ளிகளில் மதிய உணவு 1975-76 முடிய வழங்கப்பட்டது. இதனால் மாணவர்கள், தொடர்ந்து படிக்க ஊக்கம் ஏற்பட்டுள்ளது. அரசு இதற்கான அதிகச் செலவினை தவிர்க்க அம் மாணவர்களுக்கு "கேர்" நிறுவனத்தின் மூலமாக மதிய உணவு வழங்கும்படி உத்தரவிட்டுள்ளது. இது, அரசுப் பள்ளிகளில் மார்ச் 1975 முதற்கொண்டும், திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள தனியார் பள்ளிகளில் சனவரி 1976 முதற்கொண்டும் நடைமுறையில் உள்ளது.

கல்விச் சுற்றுப்பயணம்.— குற்றப்பரம்பரையினர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் பொது அறிவு, மற்றும் பாட அறிவு வளர்வதற்காக 1979-80 ஆம் வருடத்தில் அவர்களில் ரூபாய் 22,000 செலவில் கல்விச் சுற்றுப்பயணம் அனுப்பிச் செல்ல உத்தேசிக்கப் பட்டுள்ளது.

பகுதி நேரப் போதனை.— பிற்பட்ட வகுப்பினர் மற்றும் குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் மாணவ, மாணவியர் உணவு இல்லங்களில் சேர்ந்து படிக்கும் மாணவ, மாணவியரின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்காகவும், அவர்கள் சமூகத்தில் உள்ள மற்ற பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்குச் சரிசமமான அறிவினைப் பெறவும், அவர்களுக்கு உணவு இல்லங்களில் 1979-80 முதல் பகுதி நேர போதனை ஆசிரியர்களை 80 பிற்பட்டோர் உணவு இல்லங்களில் ரூபாய் 28,000 செலவிலும், மற்றும் 20 குற்றப்பரம்பரையினர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டோர் உணவு இல்லங்களில் ரூபாய் 6,000 செலவிலும் நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

11. உணவு மானியங்கள் — (1) பள்ளிப்படிப்பு.— தனிப் பட்ட நபர்களாலும், சமூக நல நிலையங்களிலும் நடத்தப்படும் தனியார் விடுதிகளில் தங்கி உள்ள பள்ளி மாணவர்களுக்கு 1955-56 வரை அரிசன நலத்துறை உணவு மானியம் வழங்கி வந்தது. 1956-57 முதல் இம்மாதிரி தனியாரின் உணவு விடுதிகளைப்

புதியதாக அங்கீகரிக்க வேண்டாம் என்று அரசு முடிவு செய்து, தேவையான இடங்களில் அரசே விடுதிகளைத் திறந்து வருகின்றது. மற்றும் ஒழுங்காகப் பராமரிக்கப்படாத தனியார் விடுதியை அரசினரே எடுத்து அரசாங்க விடுதிகளாக மாற்றி நடத்தப்படுகின்றன. தற்பொழுது தனியார் உணவு விடுதிகள் 45 உள்ளன, இவைகளில் ஒரு மாணவருக்கு மாதமொன்றுக்கு ரூபாய் 25 வீதம் 10 மாதங்களுக்கு உணவு மானியம் 1978ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30ஆம் நாள் முடிய வழங்கப்பட்டது. 1974–75–க்கு முன்பாக இந்த மானியம் ரூபாய் 20ஆக இருந்தது. 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1ஆம் நாள் முதல் இத்தொகை சென்னை மற்றும் மாவட்ட, வட்ட தலைநகரங்களில் உள்ள விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு ரூபாய் 25–லிருந்து ரூபாய் 35ஆகவும் மற்ற இடங்களில் உள்ள விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு ரூபாய் 25-லிருந்து ரூபாய் 30 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. 1979–80ஆம் ஆண்டுக்கு ரூபாய் 6,12,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உணவு மானியம் பெறும் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமான வரம்பு ரூபாய் 2,000ம்-லிருந்து ரூபாய் 2,500க்கு 1978-79ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

(2) கல்லூரிப்படிப்பு :— கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு இவ்வுணவு மானியம் வழங்கப்படுவதில்லை. இந்த மாணவர்கள் கல்லூரியைச் சார்ந்த விடுதிகளில் தங்கிப் படித்தாலும், கல்லூரியினர் அங்கீகாரம் செய்த விடுதிகளில் தங்கிப் படித்தாலும் கல்வித் துறையினர் அல்லது அரசின நலத்துறை மற்றும் பிற்பட்டோர் நலத்துறையில் அங்கீகாரம் பெற்றுள்ள விடுதிகளில் தங்கிப் படித்தாலும் அவர்களுக்கு படிப்பு உதவித் தொகையுடன் உணவுச் செலவுக்கான தொகை வழங்கப்படுகிறது. இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட விடுதிகளின் விவரம் :—

மாவட்டம்.	விடுதிகளின் எண்ணிக்கை.			
	1972-73.	1973-74.	1974–75.	1975-76.
(1)	(2)	(3)	(4)	(5)
1. சென்னை	6	1	..	..
2. வட ஆற்காடு ..	3	1	..	3
3. திருச்சிராப்பள்ளி ..	20	9	8	6
4. புதுக்கோட்டை ..	..	7	..	..
5. மதுரை	2	..	..	..
6. கோயம்புத்தூர் ..	2	..	..	..
7. தஞ்சாவூர் ..	..	1	..	..
மொத்தம் ..	33	19	8	9

தற்போது புதிதாக எந்த தனியார் விடுதியையும் அங்கீகரிப்பதில்லை என அரசு முடிவெடுத்துள்ளது. இம் மாணவர்களுக்கு பத்தி 6 (v)-ல் குறிப்பிட்டுள்ள விகிதத்தில் உணவுத் தொகை வழங்கப்படுகிறது.

12. புத்தகங்களும் எழுதுபலகைகளும் :—அரசினர் நடத்தும், குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் பள்ளிகளில் படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் புத்தகங்களும் எழுதுபலகைகளும் இலவசமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு இலவச உதவி பெற்ற மாணவர்கள் 1969-70-ல் 7,600. இதனால் பயன்பெறும் மாணவர்கள் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துள்ளது. 4-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. ஆரம்பப் பள்ளிகளில் முதல் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு இலவசமாக புத்தகம் மற்றும் எழுதுபலகைகள் அளிக்கப்படுகின்றன. இதனால் பயன்பெற்றவர்கள் 1977-78ல் 40,300 பேர். 1978-79-ம் ஆண்டில் 43,700 மாணவர்களுக்கு இவ்வுதவி அளிக்கப்படுகிறது. இது 1979-80—க்கு 47,000 மாகக் கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

13(1) சீருடைகள் வழங்குதல் :—குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் பள்ளிகளிலும், உணவு விடுதிகளிலும் உள்ள எல்லா மாணவ, மாணவியருக்கும் ஒவ்வொரு ஆண்டும் இரண்டு ஜோடி சீருடைகள் வழங்கப்படுகின்றன. முதல் ஜோடி பள்ளி ஆரம்பித்த உடன் அல்லது தீபாவளிக்கு முன்பாகவும், இரண்டாவது ஜோடி பொங்கல் சமயத்திலும் வழங்கப்படுகிறது. முதல் முதலாக இவ்வாறு இலவச ஆடைகள் வழங்கும் திட்டம் மதுரை மாவட்டத்தில் 1969-70 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. அப்பொழுது கள்ளர் வகுப்பினர் பள்ளிகளில் படிக்கும் ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு ஒரு ஜோடி ஆடை மட்டும் வழங்கப்பட்டது. இப்போது இருமுறை வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 1972-73ல் ரூபாய் 3,91,000, 1973-74ல் ரூபாய் 8,06,000, 1974-75ல் ரூபாய் 6,58,000, 1975-76-ல் ரூபாய் 10,39,000, 1976-77-ல் ரூபாய் 8,94,900—ம் 1977-78-ல்ரூபாய் 10,47,000ம் செலவிடப்பட்டுள்ளது. 1978-79 திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 11,16,00-ம் 1979—80ல் ரூபாய் 11,21,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 1971-72 முதல் அரசினர் நடத்தும் பிற்பட்ட வகுப்பு மாணவர் உணவு விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் ஆண்டுதோறும் 2 செட் ஆடைகள் அளிக்கப்படுகின்றன. இதற்கு 1973-74-ல் ரூபாய் 1,67,000 1974—75-ல் ரூபாய் 2,16,000, 1975-76-ல் ரூபாய் 2,38,000 1976-77.ல் ரூபாய் 2,98,000, 1977-78—ல் ரூபாய் 3,03,000 செலவிடப்பட்டது. 1979—80-க்கு ரூபாய் 3,94,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1979 ஏப்ரல் 2]

(2) நன்றாகப் படிக்கும் மாணவர்களுக்கு தனிப் பயிற்சி அளித்தல்.

கல்லூரிகளில் படித்து அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும், குற்றப்பரம்பரையினர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் தாங்கள் எடுத்துள்ள பாடத்தில் அதிகத் திறமை பெற 1975–76–ம் ஆண்டு முதல் தனிப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் சென்ற மூன்று ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளது. இதற்கு 1979–80-ம் ஆண்டிற்கு ரூபாய் 25,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் 8-வது வகுப்புத் தேர்விலும், 11–வது வகுப்புத் தேர்விலும் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஆண்டுதோறும் இரண்டு பரிசுகள்-முதற் பரிசு ஒன்றும், இரண்டாவது பரிசு ஒன்றும், வழங்கப்படுகின்றன. இப் பரிசுகள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு. இதற்காக இவ்வாண்டிற்கு ரூபாய் 4,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14. ஆசிரியர்கட்கு வீடுகள்:—குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினருக்காக நடத்தப்படும் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க ஒரு திட்டம் உள்ளது. இதன்படி, ஒவ்வொரு ஆசிரியருக்கும் ரூபாய் 10,000 மதிப்பில் ஒரு வீடு கட்டிக் கொடுக்கப்படும். 1979-80-ம் ஆண்டில் 16 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 1.65 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

15. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் அரசு உயர் பணிகளுக்கான பயிற்சிக் கூடம்:—டிசம்பர் 1971–ல் பிற்பட்ட வகுப்பு மாணவர்களை ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் உயர் அரசு பணிகளுக்கான தேர்வுகள் எழுத பயிற்சி அளிக்கும் வகையில் சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட (1971-72)-ம் ஆண்டில் 12 மாணவர்கள் சேர்ந்தனர். இதில் 8 பேர் தேர்வுக்குச் சென்றனர். 3 பேர் நேர்முகத் தேர்வுக்கு சென்றனர். ஆனால் எவரும் தேர்ச்சி பெறவில்லை. 1972-73-ல் 50 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். 24 பேர் தேர்வு எழுதினர். 6 பேர் நேர்முகத் தேர்வுக்குச் சென்றனர். இதில் ஒருவர் ஐ.ஏ.எஸ்-க்கும் இருவர் மத்திய அரசு பணிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1973-74-ல் 33 பேர் பரிட்சை எழுதினர். 4பேர் நேர்முக தேர்வுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் ஒருவர் ஐ.ஏ.எஸ்-க்கும், ஒருவர் மத்திய அரசு பணிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1974–75-ல் 51 மாணவர்கள் சேர்க்கப்பட்டு 41 பேர் பரிட்சை எழுதினார்கள். இதில் 8 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். கடைசியாக, ஒருவர் ஐ.பி.எஸ்-க்கும், இருவர் மத்திய அரசுப் பணிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1975-76-ல் 60 மாணவர்கள் சேர்க்கப்பட்டு 3 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 1976-77-ல் 40 மாணவர்கள்

சேர்க்கப்பட்டு 32 மாணவர்கள் தேர்வு எழுதினர். அதில் இருவர் மத்திய அரசு பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1977-78—க்கு 42 மாணவர்கள் சேர்க்கப்பட்டு 34 மாணவர்கள் தேர்வு எழுதினர். தேர்வு முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

இது தவிர, இந்நிலையத்தில் பயிற்சி பெற்ற 19 மாணவர்கள் பல்வேறு துறைகளில் கீழ்க்கண்டவாறு பதவி பெற்றனர்:—

1.	துணை ஆட்சியாளர்கள்	3
2.	இணை வணிக வரி அலுவலர்	1
3.	துணை பேராசிரியர்கள்	7
4.	ரிசர்வ் வங்கி, பாரத வங்கி மற்றும் அரசு வங்கிகள் (இளநிலை அலுவலர்)	3
5.	வருமானவரி முதல் வகுப்பு அலுவலர் ..	1
6.	காப்பீட்டுக் கழகம் பயிற்சி அலுவலர்	1
7.	மாவட்ட கல்வி அலுவலர்	1
8.	கல்வெட்டுக் கலை உதவி அலுவலர் (கர்நாடக அரசு).	1
9.	எண்ணெய் மற்றும் இயற்கை வாயு கழகம் ..	1

மேலும் இந்திய யூனியன் தேர்வாணைக் குழு நடத்தும் அகில இந்திய பரீட்சைகளில் ஒன்றான தேசிய பாதுகாப்பு கல்லூரி தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்வதற்காக ஒரு தனிப்பயிற்சி அளிக்கப்படுகின்றது. இதில் 15 பிறபட்ட மாணவர்களுக்கும், 15 அரிசன பழங்குடி மாணவர்களுக்கும் இடம் உண்டு. அம்மாணவர்களுக்கு கைச் செலவுக்காகவும், போக்கு வரத்து செலவுக்காகவும் மாதம் ரூபாய் 40 வழங்கப்படுகிறது. இதில் முந்தைய வருடங்களில் முவர் தேர்ச்சி பெற்றிருந்தவர். 1977-78-ல் இருவர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

16. பொருளாதார வளர்ச்சி :—(1) இத்திட்டத்தின் கீழ் முடி திருத்துவோருக்கும், சலவைத் தொழிலாளர்களுக்கும் அவரவர் தொழில்களைச் செய்துவர தொழிற் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1971-72 வரை வெளி மாவட்டங்களிலும் 1971-72 முதல் சென்னை உள்ளிட்ட எல்லா இடங்களிலும் அமுலாக்கப்படுகிறது. சென்ற ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் பயன் அடைந்தோரின் எண்ணிக்கை:—

ஆண்டு.	பயனடைந்த நபர்கள்.
(1)	(2)
1966-67 ..	1,440
1967-68 ..	1,425
1968-69 ..	1,498

1979 ஏப்ரல் 21

ஆண்டு.		பயனடைந்த நபர்கள்.
1969-70	..	1,542
1970-71	..	1,512
1971-72	..	1,633
1972-73	..	1,654
1973-74	..	4,081
1974-75	..	3,961
1975-76	..	3,506
1976-77	..	3,695
1977-78	..	4,095
1978-79	..	7,249

(2) 1977-78-க்கு ரூபாய் 6,67,000 செலவு செய்யப்பட்டுள்ளது. 1978-79-ம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 11,77,000, 1979-80-ம் ஆண்டிற்கு ரூபாய் 13,00,000-மும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்டவை தவிர, சலவைத் தொழிலாளர்கள், இயங்கும் சலவையகம் நடத்த பாரத ஸ்டேட் பாங்கியிலிருந்து கடன் பெறுவதற்காக ஒவ்வொரு நபருக்கும் ரூ. 165 மானியமாக வழங்கவும், ரூ. 1,050 மதிப்பளவில் சலவையகம் தொடங்குவதற்கு, பாங்கியிலிருந்து கடன் பெற வசதியாக சலவைத் தொழிலாளர்களுக்கு மேற்படி தொகையில் 20 விழுக்காடான ரூ. 210-ஐ மானியமாக வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போயர்களுக்கு இலவச தொழில் கருவிகள் வழங்கும் பொருட்டு 1978-79க்கு ரூ 10,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு செட் தொழில் கருவிகளின் விலை ரூபாய் 100 ஆகும். இதனால், சேலம், தென்னாற்காடு, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள போயர்கள் பயனடைவர். இது நாளடைவில் எல்லா மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படும். 1979-80க்கு ரூ 25,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(3) சலவைத் துறைகள் கட்டுதல் :—சலவைத் தொழிலாளர்கள் தங்கள் தொழிலைத் திறம்படச் செய்வதற்கு சில இடங்களில் சலவைத்துறைகள் தேவையாக உள்ளன. இவைகளை சுகாதார முறைகளில் அமைப்பதற்காக நகர ஊராட்சிகளுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. மொத்த செலவில் பாதித் தொகை கடனாகவும் மீதித் தொகை மானியமாகவும் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 47 இடங்களில் சலவைத் துறைகள் கட்ட நிதி உதவி செய்யப்பட்டுள்ளது.

(4) சென்ற இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட 3 பொது நோக்கு பொறியியல் பணிமனைகள் குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மக்களின்

உயர்வு கருதி தொடர்ந்து நடத்தப்படுகின்றன. இவைகள் இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூரிலும், மதுரை மாவட்டம் செக்கானூரணியிலும், திருநெல்வேலி மாவட்டம் வீர கேரளம்புதூரிலும் அமைந்துள்ளன. இவை தொழில் வணிகத் துறை இயக்குநரின் மேற்பார்வையில் உள்ளது. இவைகளில் பற்ற வைத்தல், சேர்த்தல், ஆகிய துறைகளில் 18 மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் பொது நோக்கு பொறியியல் பணிமனை ஆரம்பிக்கப்பட இருக்கிறது. 1979-80ல் இவைகளை பராமரிக்கும் பொருட்டு ரூ. 4,16,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. பிற்பட்ட வகுப்பு மற்றும் குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினரின் நலத்திற்காக கீழ்க்கண்ட இடங்களில் தொழிற் பயிற்சி கூடங்கள் நடத்தப்படுகின்றன :—

1. தையல் மற்றும் ஆயத்த ஆடைகள் பயிற்சி கூடம்: ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி மாவட்டம்.

2. தையல் பயிற்சிக் கூடம்: செக்கானூரணி, மதுரை மாவட்டம்.

3. பிரம்பு மற்றும் நார்ப் பொருள்கள் செய்யும் பயிற்சி நிலையம்: (1) தக்கலை, (2) குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

மேலும், 1978-79-ம் ஆண்டில் தையல் பயிற்சி அளிப்பதற்காக புதியதாக 5 தையல் பயிற்சிக் கூடங்கள் கீழ்க்கண்ட இடங்களில் ஆரம்பித்து நிலையம் ஒன்றில் 20 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

கிருஷ்ணன் கோயில்—கன்னியாகுமரி மாவட்டம்.

அஜீஸ்நகர் குடியிருப்பு—தென் ஆற்காடு மாவட்டம்.

கம்பம்—மதுரை மாவட்டம்.

கடலாடி—இராமநாதபுரம் மாவட்டம்.

தேவர்குளம்—திருநெல்வேலி மாவட்டம்.

இப்பயிற்சிக் கூடங்களை பராமரிப்பதற்காக 1976-77-ல் ரூ. 4.68 இலட்சமும் 1977-78ல் ரூ. 4.23 இலட்சமும் செலவிடப்பட்டது. 1978-79-ல் திருத்திய மதிப்பீட்டில் ரூ. 7.04 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1979-80-ல் இதற்காக ரூ. 6.77 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17. விவசாயம். —குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் விவசாயம் செய்து முன்னேறுவதற்காக அவர்களுக்குப் பாசக்கிணறுகள் வெட்டுவதற்கு ஒரு கிணற்றிற்கு ரூ. 4,500 வீதம் மானியம் அளிக்கப்படுகிறது. 1977-78-ல்

1979 ஏப்ரல் 2]

ரூ. 1,45,000 செலவு செய்யப்பட்டது. 1978-79-க்கு திருத்திய மதிப்பீட்டில் ரூ. 1,35,000மும், 1979-80 திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,40,000-மும் ஒதுக்கப்பட்டுள்ளது.

18. சுகாதாரம், வீட்டு வசதி மற்றும் இதர திட்டங்கள் : 1956-57-ம் ஆண்டு முதல் குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினருக்காக கடன் மற்றும் மானிய அடிப்படையில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் இருந்து வருகிறது. முன்னர் ஒரு வீடு ரூ. 1,200 மதிப்பில் கட்டப்பட்டது. இதில் கடன் ரூ. 300, மானியம் ரூ. 900. 1975-76-ல் இருந்து வீட்டிற்கான மொத்தத் தொகை ரூ. 2,700 ஆக உயர்த்தப்பட்டது. இதில் ரூ. 2,025 மானியமும், ரூ. 675-க்கு பொருள் ஆகவோ, உழைப்பாகவோ, பணமாகவோ, பயனடைவோர் பங்காகவும் உள்ளது. இத்தொகை ரூ. 4,000 ஆக உயர்த்த அரசு பரிசீலித்து வருகிறது. இத்திட்டத்திற்கு 1978-79க்கு ரூ. 10,00,000-மும் 1979-80க்கு ரூ. 10,00,000-மும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

19. குழந்தைகள் காப்பகம் : அஜீஸ்நகர் குடியிருப்பில் குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினரின் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் சரியாக பராமரிக்கப்படவில்லை என்று தெரிய வந்தது. இக்குழந்தைகளின் நலனைப் பேணி வளர்ப்பதற்காகவும், கருவுறுறுள்ள மகளிர் நலத்தை பேணுவதற்காகவும் அஜீஸ்நகரில் 5 குழந்தைகள் காப்பகங்கள் திறக்கப்பட்டு உள்ளன. இவை சமூக நலத்துறை இயக்குநரின் மேற்பார்வையில் இயங்குகின்றன. இவைகளுக்கான செலவினை பிற்பட்டோர் நலத்துறை ஏற்கிறது. 'கேர்' நிறுவனத்தின் உதவி இவைகளுக்குக் கிடைக்கும். இவைகளில் 350 தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்கப்படுகிறது, ஐந்து பால சேவகிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்திற்காக 1978-79 திருத்திய மதிப்பீட்டில் ரூ. 14,000மும் 1979-80-க்கு ரூ. 18,000மும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறாக பிற்பட்ட வகுப்பு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. எனவே, பிற்பட்டோர் நல மானியக் கோரிக்கைக்கு ஒப்புதல் அளிக்க வேண்டிக்கொள்கிறேன்.

இணைப்பு III

[394ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

கொள்கை விளக்கக் குறிப்பு.

திட்ட மதிப்பீடு 1979-80. சின்கோனாத் துறை

தமிழ்நாடு அரசு

முன்னுரை.

சின்கோனாத் துறை தமிழ்நாடு அரசால் வணிக அடிப்படையில் நடத்தப்படும் ஓர் அமைப்பாகும். இத்துறை, மக்களுக்குத் தேவையான மருந்து மற்றும் தாவர வகைத் தைலங்களுக்குத் தேவையான மூலப் பொருள்களையும், கொய்னா போன்ற செய்பொருள்களையும் தயாரித்து வருகிறது. இந்தத் துறை 118 ஆண்டுகள் ஆன ஒரு பழமையான துறையாகும். இத்துறையின் மூலம் சுமார் 3000 தொழிலாளர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

இந்திய அரசு கொய்னாப் பொருட்களின் ஏற்றுமதியை 1978 ஜூலைத் திங்களில் தடைசெய்ததால், வெளிநாட்டிற்கு கொய்னாப் பொருட்களின் ஏற்றுமதி ஒரே சீராக அமையவில்லை. இச்சிக்கல் குறித்து தமிழக அரசு மத்திய அரசுடன் பேச்சு நடத்திய பின்னர் தடை ஓரளவு தளர்த்தப்பட்டுள்ளது.

1978-79-ஆம் ஆண்டில் 3.25 டன் கொய்னாப் பொருட்களை ஏற்றுமதி செய்ய இத்துறைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நம் நாட்டில் மலேரியா மீண்டும் தோன்றிப் பரவி வருவதால் கொய்னாப் பொருட்களுக்குள்ள உள்நாட்டுத் தேவை அதிகமாகலாம் என்பதோடு, வெளி நாட்டு ஏற்றுமதியும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, வளரும் இத்தேவைகளை நிறைவேற்றிட, ஏற்கனவே சின்கோனா சாகுபடி செய்யப்பட்டு, செடிகள் நலிந்த இடங்களில் மீண்டும் சாகுபடி மேற்கொள்ளப்படுவதுடன் புதிய நிலங்களிலும் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மதுரை மாவட்டம் கண்டமநாயக்கனூர் குன்றுகளில் 1,000 ஏக்கர் நிலத்தில் (400 ஹெக்டேர்) சின்கோனா சாகுபடி செய்யும் புதிய திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. 31-12-1978 வரை நீலகிரியில் 441.10 ஹெக்டேர் நிலத்திலும் ஆனைமலையில் 1,825.2 ஹெக்டேர் நிலத்திலும் ஆகமொத்தம் 2,266.36 ஹெக்டேர் பரப்பில் சின்கோனா பயிடப்பட்டுள்ளது.

1979 ஏப்ரல் 21

2. நடுகைத் திட்டம் :

(அ) 1977-78, 1978-79, 1979-80 ஆக மூன்றாண்டு காலத்திற்கு, கீழ்க் கண்ட சின்கோனா நடுகைத் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது :

	1977-78 கணக்குகள் (எதிர்ப் பார்க்கப் பட்டது).	1978-79. (மதிப் பிடப்பட் டுள்ளது).	1979-80
	(ஹெக்டேர்களில்).		
1. வழக்கமான நடுகைத்திட்டம்.	84.63	113.00	130.00
2. பதியன் முறை நடுகைத்திட்டம்.	54.71	35.84	39.91
	139.34	148.84	169,91

1979-80-ல், மதுரை, மாவட்டம் கண்டமனாயக்கனூர் குன்றுகளில், கூடுதலாக, 40 ஹெக்டேர் பரப்பில் புதிதாக சின் கொனா பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது.

நாட்டில் மருந்து வகைத் தைலங்கள், வாசனைத் தைலங்கள் இவற்றிற்கான தேவைகள் அதிகரித்துக் கொண்டே வருவதை ஈடுகட்டும் நோக்குடன் இத்தகைய பயிர்களின் சாகுபடியினைப் பல்வேறு வகைகளில் விரிவுபடுத்தும் பணியினை இத்துறை மேற்கொண்டுள்ளது. 31-12-1978-ஆம் நாள் முடிய இத் தகைய பயிர்கள் வேளாண்மை செய்யப்பட்டுள்ள நிலப்பரப்பு பின் வருவதாகும் :—

1. நீலகிரிப் பிரிவு ..	759·07	ஹெக்டேர்
2. ஆனைமலைப் பிரிவு	347·70	ஹெக்டேர்
மொத்தம் ..	1,106·77	ஹெக்டேர்

1977-78, 1978-79, 1979-80 ஆகிய மூன்றாண்டுகளுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள மருத்துவ, வாசனைத்தைல பயிர் நடுகைக்கு கீழ்க்கண்டவாறுள்ள நடுதல் திட்டம் மேற்கொள்ளப் பட்டுள்ளது:—

	1977-78 (கணக்குகள்)	1978-79 (எதிர்ப் பார்க்கப் பட்டது).	1979-80 (மதிப் பிடப்பட் டுள்ளது).
	(ஹெக்டேர்களில்).		
ஜெரேனியம்	28·50	29·00	22·00
சிட்ரோனெல்லா ..	..	8·00	8·00
டயாஸ்கோரியா ..	10·00	16·00	20·00
யூகலிப்டஸ் சிட்ரி யோடோரா	6·00	7·00	10·00
யூகலிப்டஸ் குளோபுலஸ்	12·00	4·00	7·00
சோலானம் லாசினி யாட்டம்,	4·00	2·00	2·00
வின்காரோசியா ..	6·00	4·00	14·00
சோலானம் காசியானம்	21·00	2·00	25·00
பச்சோலி	0·50	2·00	2·00
ஒசிமம்கேம்பரா	2·00	2·00	2·00
சின்னமம் சிலானிதம் ..	2·50	..	..
மொத்தம் ..	92·50	76·00	112·00

மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1979-80 ஆம் ஆண்டில் பழனி மலை மேல்தள குன்றுகளில் 40 ஹெக்டேர் பரப்பில் ஜெரேனியம் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது.

3. கொய்னாப் பொருட்களின் உற்பத்தி :

கோவை மாவட்டம் ஆனைமலையில் உள்ள அரசின் சின்கோனாத் தோட்டத்திலுள்ள கொய்னாத் தொழிற்சாலை, இத்துறையின் தோட்டங்களிலிருந்து கிடைக்கும் சின்கோனாப் பட்டையிலிருந்து பல்வேறு வகை கொய்னா பொருள்களைத்

1979 ஏப்ரல் 2]

தொடர்ந்து, தயாரித்து வருகிறது. கடந்த நான்காண்டுகளில், இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட கொயனா பொருள்களின் விபரம் பின்வருமாறு :—

	1975–76	1976–77	1977–78	1978–79 (மதிப்பிடப்பட்டது).
	(கிலோகிராமில்)			
குனைன் சல்பேட் (Quinine Sulphate).	7,308	8,905	8,100	7,500
குனைன் ஹைட்ரோ குளோரைடு (Quinine Hydrochloride)	1,476	5,044*	815	1,000
குனைடின் சல்பேட் (Quinidine Sulphate)	300	250	251	250
சின்கோனா பெப்ரிபியூஜ் (Cinchona Febrifuge).	8,011	8,110	8,100	7,000

*(இந்த ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட குனைன் சல்பேட்டிலிருந்து தயாரித்தது).

1979–80 ஆம் ஆண்டிற்கான கொய்னாப் பொருட்கள் உற்பத்தித் திட்ட இலக்கு பின்வருமாறு :—

	கி.கி.
குனைன் சல்பேட் மற்றும் குனைன் ஹைடிரோ குளோரைடு.(Quinine Sulphate and Quinine Hydrochloride)	8,000
சின்கோனா பெப்ரிபியூஜ் (Cinchona Febrifuge)	8,000
குனைடின் சல்பேட் (Quinidine Sulphate)	300

4. தைல வகைகளின் உற்பத்தி :

நீலகிரி மாவட்டம் நடுவட்டத்தில் உள்ள மருந்து மற்றும் தைலங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை இத்துறையின் தோட்டங்களிலிருந்து பெறப்படும் சுத்தப்படுத்தப்படாத யூகலிப்டஸ், ஜெரேனியம் ஜாவா, சிட்ரோனெல்லா மற்றும் யூகலிப்டஸ் சிட்ரியோடோரா ஆகிய தைலங்களைச் சோதனை செய்து, சுத்தப்படுத்தி, தரம் பிரித்து பணியினைத் தொடர்ந்து செய்து வருகிறது.

12 இலட்சம் மதிப்புள்ள ஆதார தைல வகைகளை 1979-80-ஆம் ஆண்டில் இத்தொழிற்சாலை பக்குவப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

5. விற்பனையும் வருவாயும் :

1977-78-ஆம் ஆண்டில், இத்துறை ரூ. 21·41 இலட்சம் வருமானம் தந்துள்ளது. இந்த வருமானமானது மூலதனத்தின் மீதுள்ள வட்டிக்கு ரூ. 22·45 இலட்சத்தைக் கொடுத்த பின்னர் உள்ள நிகர வருமானமாகும். 1978-79 நடப்பாண்டில் மூலதனத்திற்கான வட்டித் தொகைக்காக ரூ. 35.42 இலட்சம் கொடுத்த பின்னர், இத்துறைக்கு ரூ. 18·10 இலட்சம் வருமானமாகக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாடுகளில் கொய்னா தயாரிப்புப் பொருட்களின் விலை குறைந்ததால் வருமானமும் குறைந்துவிட்டது. கொய்னா தயாரிப்புப் பொருட்கள், மருந்து-தைல வகைகள், மற்ற முக்கிய தைலங்களின் விற்பனை, வருவாய் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

அ. கொய்னாப் பொருட்கள் :

வெளிநாடுகளில் கொய்னாப் பொருட்களின் தேவை அதிகரித்து வருகிறது. ஆனால், இந்திய அரசு கொய்னா தயாரிப்பு பொருட்களின் ஏற்றுமதிக்கு திடீரென தடை விதித்ததின் காரணமாக சமீப மாதங்களில் ஏற்றுமதியாகும் கொய்னாப் பொருட்களின் விலை சிறிது குறைந்து உள்ளது. இதன் விளைவாக எதிர்பார்த்த வருமானத்தில் சுமார் ரூ. 45 இலட்சம் குறைவு ஏற்பட்டது. இதைத் தவிர, அண்மைக் காலத்தில் நம் நாட்டில் மீண்டும் மலேரியாக் காய்ச்சல் பரவத் தொடங்கியுள்ளதால் கொய்னாப் பொருட்களின் தேவை உள்நாட்டிலும் வெகுவாக அதிகரித்து வருகிறது. கொய்னாப் பொருட்களின் விற்பனையின் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் கிடைத்த வருவாய் பின்வருமாறு :—

	1975-76	1976-77	1977-78	1978-79 (எதிர்பார்க்கப்படுகிறது.)
(1)	(2)	(3)	(4)	(5)
	(ரூ. இலட்சத்தில்.)			
உள்நாட்டு விற்பனை	10·16	10·16	37·19	40 00
வெளி நாட்டுக்கான ஏற்றுமதி ..	119·61	110·55	37·33	40·00
மொத்தம் ..	129·77	120·71	74·52	80·00

1979-80-ஆம் ஆண்டில் ரூ. 80 இலட்சம் மதிப்புள்ள பொருட்களை உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் விற்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. 1977–78, 1978–79, 1979-80-ஆம்

1979 ஏப்ரல் 21

ஆண்டுகளில் விற்பனை மூலம் கிட்டும் வருவாய்க் குறைவிற்கு, தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டங்களுக்கு உள்நாட்டு நிலவரப்படி உள்ள விலையில் விற்க நேரிட்டதும் ஏற்றுமதி விலைகள் குறைவும் காரணமாகும். உள்நாட்டு விற்பனைக்காக, கொய்னாத் தயாரிப்புப் பொருட்களின் விலையை ஏறுமுகமாக மாற்றியமைக்க, நமது அரசு, மத்திய அரசுடன் பேச்சு நடத்தி வருகிறது.

அ. மருந்து மற்றும் ஆதார தைலங்கள்.

இத்தைலங்களின் விற்பனையால் கடந்த நான்கு ஆண்டுகளில் கீழ்க் குறிப்பிட்டப்படி வருவாய் கிட்டியுள்ளது :—

	இலட்சங்கள்
1975-76	10·41
1976-77	16·25*
1977-78	12·59
1978-79	12·00

*ஜாவா சிட்ரோனெல்லா, யூகலிப்டஸ் சிட்ரியோடோரா (Java Citronella and Eucalyptus Citriodora) ஆகியவற்றில் முன்னர் தேங்கியிருந்த சரக்கு விற்பனை செய்யப்பட்டது.

1979-80-ஆம் ஆண்டில் இப்பொருட்களின் விற்பனை மதிப்பு ரூ. 13 இலட்சமாக இருக்கும் என மதிப்பிடப்படுகிறது.

5. ஆராய்ச்சி.

மூலிகை மற்றும் நறுமணச் செடிகளைப் பயிரிடுவதில் சிறந்த முறைகளைக் கண்டறியவும், அதிக விளைச்சலையும், வருவாயையும் தரும் வாணிகச் சிறப்புள்ள மருந்துச் செடிகள், வாசனைச் செடிவகைகளை வளர்க்கவும் இத்துறை ஆராய்ச்சிகளை தொடர்ந்து மேற்கொண்டுவருகிறது. சின்கோனா மற்றும் இதர மருந்து வகை நறுமண வகை தைலங்கள் தரும் பயிர்கள் பற்றி விரிவான முறையில் ஆய்வு நடத்திட தாவர இயல் அறிஞர் தலைமையில் ஓர் ஆராய்ச்சிப் பிரிவு 1976—ஆம் ஆண்டு முதல் இயங்கிவருகிறது.

7. திட்டப்பணிகள் :

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பின்வரும் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன (1978-79 முதல் 1982-83 வரை).

1. சின்கோனா முனைப்புச் சாகுபடி.

2. மருந்து மற்றும் நறுமணச் செடிகளை வாணிப முறையில் பெருமளவில் பயிர் செய்தல்.

3. மருந்து மற்றும் நறுமணச்செடிகள் பற்றிய நுணுக்கமான ஆய்வினை மேற்கொண்டு, சாகுபடியினை வளர்ச்சி செய்தல் :

4. இத்துறையின் தொழிலாளர்கள், அதிகாரிகள் மற்றும் பணியாளர் ஆகியோருக்கு குடியிருப்பு, மருத்துவம், கல்வி, போக்குவரத்து மற்றும் ஏனைய வசதிகள் அளித்தல்;

5. இத்தொழிற்சாலையை நவீனப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக, இத்துறையிலுள்ள இரு தொழிற்சாலைகளுக்கும் தேவையான நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வழங்குதல்;

6. சோதனை முறையில் தக்க அளவில் மருந்து மற்றும் நறுமணச் செடிகளை பதப்படுத்தும் பணியை மேற்கொள்ளல்.

1978-79—ஆம் ஆண்டில் அரசு அனுமதி வழங்கப்பட்ட மத்திய உதவித் திட்டங்கள்

1978-83 ஆம் ஆண்டுகளுக்கு ரூ. 279 இலட்சம் மொத்தச் செலவில் இத்துறை கீழ்க்காணும் மத்திய அரசின் நிதி உதவியுடன் கூடிய திட்டங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

1. மேற்கு மலைத்தொடர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1978 முதல் 1982 வரையிலான நான்காண்டுகளில் மூலதன மதிப்பின் கீழ் ரூ. 34·23 இலட்சம் செலவிலும் வருவாய் இனத்தின் கீழ் ரூ. 46·05 இலட்சம் செலவிலும் டயாஸ்கோரியா (Dioscorea) பயிரிடவும் அதிலிருந்து டயோஸ் ஜெனின் பிரித்தெடுப்பதற்கும் உள்ள திட்டம்.

இத்திட்டமானது 1978-79 நிதியாண்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. 1978-79 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 16 ஹெக்டேர் நிலத்தில் டயோஸ்கோரியா பயிரிடப்பட்டுள்ளது.

வால்பாறையில் டயாஸ்ஜெனின் (Diosgenin) எடுப்பதற்காக ஒரு தொழிற்சாலை நிறுவப்பட உள்ளது. 9-1-1979 அன்று இத்தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டு அத்தொழிற்சாலைக்கு 'தமிழ்நாடு' ஸ்டெராய்ட்ஸ், (Tamil Nadu Steriods) எனப் பெயரிடப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை 1979-80-ல் உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 400 தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு கிடைக்கும்.

2. மேற்கு மலைத்தொடர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டம் "ஹைவேவிஸ்" (Highw yvi) தோட்டத்தில் 1978 முதல் 1982 ஆம் ஆண்டு வரையிலான நான்காண்டுகளுக்கு மூலதன மற்றும் வருவாய் இன செலவின்கீழ் மொத்தம் ரூ.146.25 இலட்சத்தில் 400 ஹெக்டேர் நிலத்தில் சின்கோனா பயிரிடுதல்.

1979 ஏப்ரல் 2]

3. மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பழனி மேலதள தூற்றுகளில் ரூ. 52.55 இலட்சம் மதிப்பில் 1978 முதல் 1983 வரையிலான ஐந்தாண்டுகளில் 160 ஹெக்டேர் பரப்பில் ஜெரேனியம் (geranium) பயிரிடுவது, இவை மேற்கொள்ளப்படுகின்றன.

பயிரிடத் தேவையான நிலத்தை இந்த ஆண்டே பெற்று நாற்றுப் பண்ணைகள் அமைக்கவும் பயிர் செய்வதற்கான முன்னேற்பாடு வேலைகளைச் செய்யவும் வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(8)—நிதி ஆதார அமைப்பு :

1978-79 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3 ஆம் நாள் நிலவரப்படி [31—3—1978] சின்கோனாத் துறையின் சொத்து, இருப்பு இவற்றின் மொத்த மதிப்பு ரூ. 4,56,91,048 ஆகும். இதன் விபரம் பின் வருமாறு :—

	ரூபாய்.
நிலையான சொத்துக்கள் :	
சின்கோனாத் தோட்டங்கள்	1,15,93,172
விறகுக்குப் பயன்படும் மர வகைகள், மருந்து மற்றும் வாசனைத் தைலப் பயிர்கள்	39,92,451
கட்டிடங்கள், தளவாடங்கள், இயந்திரங்கள், மோட்டார் வண்டிகள் போன்ற இதர வகைச்சொத்துக்கள்.	1,06,95,437
தற்காலிக இருப்புகள் :	
பண்டங்கள், நிறைவுபெற்ற பொருட்கள் மற்றும் உற்பத்தி வேலைக்கான கையிருப்பு பொருட்கள், சின்கோனா மரப்பட்டை, பல்வகைப் பாக்கிகளுங்கள்	1,94,09,988
மொத்த மதிப்பு ..	4,56,91,048

(9) இத்துறையின் பொதுவான வளர்ச்சித் திட்டம் :

சின்கோனாத் துறையின் அண்மைக்கால சாதனைகளுள் குறிப்பிடத்தக்கவை கீழே குறிக்கப்பட்டுள்ளன. அவை :—

(1)—சின்கோனாப் பட்டையிலிருந்து கொய்னாப் பொருட்களைத் தயாரிக்கும்போது தேங்கிப் போகும் சின்கோனா பெப்ரிக்யூஜ் என்ற துணைப் பொருளிலிருந்து குனைன் சல்பேட் மற்றும் குனைடின் சல்பேட் தயாரித்தல் :

—(2)—சுற்றுப்புறங்களிலுள்ள தேயிலைத் தோட்டங்களில் இருந்து கிடைக்கும் தேயிலைக் கழிவிலிருந்து காஃபின் (caffeine) என்னும் மருந்தினை சோதனை அளவில் தயாரித்தல் ;

—(3)—குடும்ப நலத்திட்டத்தில் பயன்படுத்தப்படும் கருத்தடை மாத்திரைகளில் அடங்கிய கார்ட்டிசான், ஹார்மோன் போன்றவற்றைத் தயாரித்திட மூலப்பொருளான டையோஸ் ஜெனின் என்ற பொருளை இத்துறையில் பயிரிடப்படும் டயாஸ் கோரியாக் கிழங்கிலிருந்து சோதனை அளவில் தயாரிப்பது ;

—(4)—கொசுக்களை விரட்டும் ''சினோமாஸ்'' என்னும் களிம்பும் ''சின்ஸ்ப்ரே'' என்ற தெளிப்பானையும் பாமர மக்களின் வாங்கும் சக்திக்கேற்ப குறைந்த விலையில் தயாரித்து விற்பது ;

—(5)—''சின்பிரஷ்'' என்ற நோய் தடுப்பு தெளிப்பானும், ''சினோரமா'' என்ற பயிர்களின் வாசனைத் திரவியத்தையும் தயாரித்து விற்பனை செய்தல் ஆகியனவாகும்.

10-இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் மறுவாழ்வுத் திட்டம் :

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோரைக் குடியமர்த்திட ஏதுவாக, ஆனைமலையிலுள்ள அரசினர் சின்கோனாத் தோட்டங்களில் உள்ள வசதிகளை அதிகரிக்கும் திட்டம் ஒன்று 1973 ஆம் ஆண்டு அரசினரால் அனுமதிக்கப்பட்டது.

இத்திட்டத்தின்படி, 125 நாடு திரும்பியோர் குடும்பத்தில் இருந்து 250 நபர்களை வேலைக்கமர்த்தும் பணி நிறைவேற்றப்பட்டது. பத்து வீடுகள் கொண்ட ஒரு தொழிலாளர் குடியிருப்பும், 7 வீடுகள் கொண்ட மற்றொரு குடியிருப்பும் கட்டப்பட்டன. நான்கு பழைய குடியிருப்புக்களும் 34 வீடுகளும் செம்மைபடுத்தப்பட்டன.

11—வரவு செலவுத் திட்டம் :

[அ]-மானியக் கோரிக்கை எண். 25 [சின்கோனா] :

வரவு-செலவுத்திட்டத்தில் ரூ. 118.92 இலட்சம் 1978-79க்கு ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் திருத்திய மதிப்பீட்டின்படி ரூ. 156.17 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு உயர்த்தப்பட்டுள்ளது. தற்காலிகத் தொழிலாளர் உள்பட, இத்துறையில் 3,000 தொழிலாளர்கட்கு நாள் ஊதியம் ரூ. 5.20 என்றிருந்ததை ரூ 6.50 என்று 1—9—1978 முதல் கூலி உயர்வு அளித்த வகையில் ஏற்பட்ட அதிகச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்காகவும், அதிகப்படியான கொய்னாப் பட்டை மற்றும் பிற பொருள்களை சுருக்கு செய்ய ஏற்படும் செலவுகளை ஈடு செய்யவும், மருந்து

1979 ஏப்ரல் 21

மற்றும் ஆதாரத் தைல உற்பத்தியைப் பெருக்குவதற்கும், இதர வளர்ச்சிப் பணிகளுக்கும் இந்தக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1979-80 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு :

1979-80 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 186.18 இலட்சம். 1978-79 வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டைக் காட்டிலும் 1979-80 வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் ஏற்பட்ட இந்த அதிகப்படியான நிதித் தேவை தொழிலாளர்களின் கூலி உயர்விற்காகவும் பிற வளர்ச்சிப் பணிகளுக்காகவும் கோரப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டிலும் புதிய நிலங்களில் அதிகப்படியான சின்கோனா பயிரிடுவதுடன், ஏற்கனவே பயிரிடப்பட்ட நிலங்களை தீவிர பயிர் வளர்ப்பு முறைகளுக்கு உட்படுத்திடும் பணியும் மேற்கொள்ளப்படும்.

[ஆ]-கோரிக்கை எண். 51.

தொழிலாளர்கள், துறை அலுவலர்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு மேற்கொண்டு அதிக அளவில் வசதிகளை செய்யவும், தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திர சாதனங்களை வாங்கவும், 1978-79 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீட்டில் ரூ. 13·60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1979-80 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடு.

கட்டிடங்கள் கட்டுதல், சாலைகள் அமைத்தல், தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திரச் சாதனங்கள் வாங்குதல் ஆகிய இனங்களுக்கு 1979-80 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 22·07 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நடுவட்டத்திலுள்ள மருந்து மற்றும் தைலத் தொழிற்சாலையில் தேயிலைக் கழிவிலிருந்து கார்பின் உற்பத்தி செய்யும் பணி 1979-80-ல் வாணிப முறையில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கொய்னாத் தொழிற்சாலையில் 1979-80 ஆம் ஆண்டில், குறைந்த செலவில், கொய்னாப் பொருட்களை "உள்ளுறை இயக்க பிழிவுமுறை" யில் ("க்ளோஸ்டு சர்குயூட் எக்ஸ்ட்ராக்ஷன் சிஸ்டம்") உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மானியக் கோரிக்கை எண்கள் 25,51 ஆகிய தலைப்புகளின் கீழ் 1978-79-க்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, திருத்த மதிப்பீடு மற்றும் 1979-80 வரவு-செலவுத் திட்டம் மதிப்பீடு ஆகியவற்றின் விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(இ) மத்திய அரசு நிதி பொறுப்புத் திட்டங்கள் :

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் :

-இத்திட்டத்திற்காக 1978-79-ல் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் ரூ.17.93 இலட்சமும், 1979-80 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 46·48 இலட்சத்திற்கு வகை செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீடு, மத்திய அரசின் நிதி உதவியுடன் கீழ்க் காணும் திட்டங்களை செயல்படுத்துவதற்காகும் :

(1) மேற்கு மலைத்தொடர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் டயாஸ்கோரியா பயிரிடுதல்; பின் அதிலிருந்து டயாஸ்ஜெனின் பிரித்தெடுத்தல் ;

(2) மேற்கு மலைத்தொடர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டம் "ஹெலேவிஸ்" தோட்டத்தில் சின்கோனா பயிரிடுதல் ;

(3) மேற்கு மலைத்தொடர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பழனி மேல்தள குன்றுகளில் ஜெரேனியம் பயிரிடுதல் ;

12. தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டங்கள் :

1979-80 ஆம் ஆண்டில் இரண்டாம் பிரிவு திட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்கு 90 வீடுகளும் மூன்று அலுவலர் குடியிருப்புகளும் கட்டுவதற்கு ரூ. 9.79 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள குடியிருப்புகள் 1940 ஆம் ஆண்டிலே கட்டப்பட்டு பழுதடைந்துவிட்டன. தொழிலாளர் நலச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள தரத்திற்கேற்றவையாக இவ்வீடுகள் இல்லை. ஆகவே, இந்தப் பழைய வீடுகளுக்குப் பதிலாக, தேவையான வசதிகளுடன் கூடிய புதிய தொழிலாளர் குடியிருப்புகளைப் படிப்படியாக செயல்படும் திட்ட முறையில் கட்டித்தரக் கருதப்பட்டுள்ளது. மின்விளக்கு, கழிப்பறை வசதிகளுடன் இப்புதிய குடியிருப்புகள் கட்டப்படும்.

தேய்மான பாதுகாப்பு நிதியிலிருந்து இரண்டரை இலட்சம் ரூபாயை எடுத்து, பழைய தொழிலாளர் குடியிருப்புகளுக்கு பழுது பார்த்தல், சீரமைப்பு செய்தல், கூடுதலாக கட்டுமானம் செய்தல் இவற்றின் மூலம் குறிப்பிட்டுள்ள தரத்திற்கு இந்த குடியிருப்புகளை மேம்படுத்திட 1978-79 திருத்த மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

13. முற்றுரை :

தொழிலாளர்களையே அதிக அளவில் உற்பத்திப் பணியில் ஈடுபடுத்தி இயங்கும் துறை சின்கோனா துறை. ஆகவே, நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்குமிடையே நல்லுறவு நிலவ

1979 ஏப்ரல் 21

சட்டத்தின்கீழ் எல்லா வசதிகளையும் வழங்கி, இத்துறை தொழிலாளர்கள் நிர்வாகத்தினர் ஆகியோருக்கிடையே மிக இணக்கமான உறவை தொடர்ந்து நிலைபெறச் செய்கிறது. தொழிலாளர்களின் நாள் ஊதிய அளவை 1978-79-லிருந்து, ரூ. 5.20-லிருந்து ரூ. 6.50 ஆக உயர்த்தியதோடு, ஆண், பெண், தொழிலாளருக்கு சம ஊதியமும் இத்துறையில் வழங்கப் படுகிறது. இத்துறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டப் பணிகளினால் திட்டம் செயல்படும் பகுதியிலுள்ள மக்களுக்கும், துறையில் பணியாற்றும் தொழிலாளர்களைச் சார்ந்து வாழும் அவர்தம் குடும்பத்தினருக்கும் அதிக அளவில் புதிய வேலை வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இத்துறையில் பணிகளை விரைந்து நிறைவேற்றுவதற்காக நிர்வாகக்குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. இந்த நிர்வாகக் குழு, அரசாங்க ரப்பர் தோட்டங்கள், தொழிற்சாலைகளுக்காக குமரி மாவட்டம், நாகர்கோவிலில் ஏற்கனவே இருந்துவரும் குழுவைப்போன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

இணைப்பு.

320. தொழில்கள்—மானியக்கோரிக்கை எண் 25 (கின்கோனா).

விவரங்கள்.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1978-79.	திருத்த வரவு-செலவுத் மதிப்பீடு 1979-80.	திட்ட மதிப்பீடு 1979-80.
	(ரூபாய் இலட்சங்களில்.)		
நெறிப்படுத்தல் ..	7.52	7.65	8.03
மலைத்தோட்டங்கள் (நீலகிரி மற்றும் ஆனைமலை).	46.14	53.92	57.62
தொழிற்சாலைகள். (நடுவட்டம் மருந்து மற்றும் ஆதார தைலத்தொழிற்சாலை. ஆனைமலை கொய்னாத் தொழிற்சாலை.)	11.30	12.09	12.83
விற்பனை	1.18	1.24	1.28
திட்டப்பணிகள் (ஆய்வு மற்றும் திட்டம்).	28.78	45.85	68.72
வட்டி	24.00	35.42	38.00
	118.92	156.17	186.48

அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் :

		(ரூ. இலட்சங்களில்.)	
மேற்கு மலைத்தொடர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் டயஸ்கோரியா பயிரிடுதல்.	..	6.48	9.97
மேற்கு மலைத்தொடர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சின்கோனா பயிரிடுதல்.	..	5.95	14.00
மேற்கு மலைத்தொடர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஜெரேனியம் பயிரிடுதல்.	..	3.61	4.82
	..	16.04	28.79

526. முதலீட்டுச் செலவு.

மானியக் கோரிக்கை எண் 51 (சின்கோனா)

	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1978-79.	திருத்த மதிப்பீடு 1978-79.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1979-80.
	(ரூபாய் இலட்சத்தில்.)		
கட்டிடங்கள் ..	0.01	11.60	11.07
கட்டிடங்கள் பகுதி II திட்டங்கள்.	8.00	..	..
கருவிகளும் தளவாடங்களும்.	2.00	2.00	11.00
	10.01	13.60	22.07
மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள். கட்டிடங்கள் ..	..	17.93	46.48
	..	17.93	46.48

1979 ஏப்ரல் 21

இணைப்பு IV

[594-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க]

வனத்துறை மான்யக் கோரிக்கை.

கொள்கை விளக்கக் குறிப்பு.

காடுகள் இன்றியமையாத இயற்கை வளங்களைக் கொண்டவை. நாட்டின் செல்வ வளத்திலும், மக்களின் நல் வாழ்விலும் அவை பெரும் பங்கு பெறுகின்றன. மக்களுக்கு இன்றியமையாப் பொருள்களான தடி மரங்கள், விறகு, தழை, எரு, பிசின், பட்டைகள், (தோல் பதனிடும்) எண்ணெய் வகைகள், உண்ணத்தக்க பழங்கள், பருப்புகள் மற்றும் விலை உயர்ந்த சந்தனம், தேக்கு போன்ற பல செல்வங்களையும் காடுகள் வழங்குகின்றன. காகிதம், அட்டை, மர இழைப்பட்டு, மரத்தூள், பலகை, தோல் பதனிடும் பொருள், நறுமணப் பொருள்கள் ஆகியவற்றை ஆக்கும் தொழில்களுக்கும் பிற தொழில்களுக்கும் பயன்படும் மூலப்பொருள்களையும் காடுகளே வழங்குகின்றன. இந்த வெளிப்படையான பயன்கள் மட்டுமின்றி, மழையைக் கொண்டு வருவதிலும், மண் வள ஈரக்காப்பிலும், தட்பவெப்ப மிகுதியைத் தணிப்பதிலும், சுற்றுப்புறச் சூழல் தூய்மையைக் கெடுக்கும் வாய்ப்பை மட்டுப்படுத்துவதிலும், காடுகளின் பயன்கள் குறிப்பிடத்தக்கனவாகும். மனித வாழ்வுக்குப் பயன்பட்டு, கருத்தையும் கண்ணையும் கவரும் வனவிலங்குகள் வாழ்விடமும் காடுகள் தாம். எனவே, காடுகளைக் காத்தலும், மேம்படுத்துதலும் மக்களின் வாழ்வில் தலைமையான இடத்தைப் பெறுகின்றன.

வனத்துறையின் காடு வளர்ப்பு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் கிராமப்புறப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு விறகுகளை வழங்குவதுடன் தொடர்ந்து வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதையும் குறிக்கோள்களாகக் கொண்டுள்ளன. மேலும், காட்டிலும் காட்டைச் சுற்றி வாழும் பழங்குடி இன மற்றும் மலை வாழ் மக்களுக்கு இடைவிடாமல் வேலைகளை அளிக்கவும் குறிக்கோளாகக் கொண்டுள்ளன.

காட்டின் பரப்பு.— நம் மாநிலத்தில் வனத்துறையின் கீழுள்ள காட்டின் பரபபு 22,15,200 ஹெக்டேராகும். இதில் 17,30,900 ஹெக்டேர் பரப்பு ஒதுக்குக் காடாகவும் (Reserved Forest) 4,40,400 ஹெக்டேர் ஒதுக்கு நிலமாகவும் உள்ளன. எஞ்சிய 43,900 ஹெக்டேர் வகைப்படுத்தப்படாத காடுகள் ஆகும். இந்த 22,15,200 ஹெக்டேரில் 79,700 ஹெக்டேர் பரப்பு தமிழ் நாடு வனத்தோட்டக் கழகத்தின் கட்டுப்பாட்டிலும், 1,500 பரப்பு தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் கட்டுப்பாட்டிலும் உள்ளன. ஒரு நாட்டின் மொத்த நிலப் பரப்பில் மூன்றில் ஒரு பகுதி வனப்பகுதியாக இருக்க வேண்டும் என்பது தேசியக் கொள்கையாகும். ஆனால், நமது மாநிலத்தில்

17 சதவிகிதம்தான் வனப்பகுதியாக உள்ளது என்பதையும் அறியலாம். கிராமப் பண்ணைக்காடுகள் (Village Forests) மற்றும் வனவிரிவாக்கத் திட்டத்தின் (Extension Forestry) கீழும், வறட்சித் தணிப்பு திட்டத்தின் கீழும் (Drought Relief Programme) காடுகளுக்கு வெளியே ஊராட்சி நிலங்களிலும் அரசு புறம்போக்கு நிலங்களிலும் காடுகள் பெருமளவில் வளர்க்கப் பட்டுள்ளன. காடுகளின் பரப்பை அதிகரிக்க ஓரளவுக்கு இவை உதவும். காடு சாராத நோக்கங்களுக்கு வனத்துறையைச் சேர்ந்த நிலங்களை வழங்கலாகாது என அரசு முடிவு செய்துள்ளது.

ஏலக்காய் குத்தகை.— ஏலக்காய் பயிரிடுவதற்காக காட்டு நிலங்கள் தனியார்களுக்கு நீண்ட காலமாகக் குத்தகைக்கு விடப் பட்டு வந்துள்ளன. காட்டு நிலங்கள் தனியார்களுக்கு மொத்த மாகச் சேருவதைத் தடுக்க, அவர்களுக்குக் குத்தகைக்கு விடப் பட்ட அளவான 50 ஏக்கர் என்ற உயரளவு, 1976 சனவரி முதல் 25 ஏக்கராகக் குறைக்கப்பட்டது. அண்மையில், ஏலக்காய் வளர்ப்பதற்காகத் தனியார்களுக்கு காட்டு நிலங்களை குத்த கைக்கு விடும் கொள்கையை அரசு மறுபரிசீலனை செய்தது. அதன்படி, குத்தகைக்காலம் முடிந்த பிறகு, மேற்படி தோட்டங் களை அரசு எடுத்துக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டு துறை மூலம் அத்தோட்டங்களைப் பராமரிக்கலாம் என முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதன்படி, குத்தகை காலம் முடி வடைந்த பிறகு குத்தகையை மேற்கொண்டு புதுப்பிக்கக் கூடாது என்று அரசு உத்தரவிட்டுள்ளது. நடப்பு ஆண்டில் முடிவடையும் ஏலக்காய் குத்தகைக் காலமும், வரும் ஆண்டில் முடிவடையும் குத்தகைக்காலமும் முடிவடைந்ததாகக் கருதப் படும். மேற்கொண்டு இந்த நிலங்கள் மீது குத்தகை புதுப் பித்தலும் இராது. இவ்விதம் குத்தகை முடிவுற்ற எல்லா நிலங்களையும் வனத்துறை தன் பொறுப்பில் ஏற்று, ஏலக்காய் தோட்டங்களைப் பராமரித்து பயிரிட்டு வரும். ஆனால், குத்தகைகள் புதுப்பித்தலை எதிர்பாராதவிதமாக நிறுத்தி விட்டால் ஏற்படும் இடையூறுகளைத் தவிர்க்கவும், குத்தகைக் காரர்கள் தங்கள் நிலங்களில் உள்ள மகசூலைக் குறிப்பிட்ட இடைக்காலத்தில் எடுத்துக்கொள்ளும் பொருட்டும், மேலும் ஒரு வருடத்திற்கு அவர்களிடமே நிலத்தை விட்டு வைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. ஆனால், இது குத்தகை நீடிப்பு ஆகாது.

வரவும் செலவும்.— காடுகளிலிருந்து 1977-78ஆம் ஆண்டில் ரூ.1,051.59 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது. இதில் ரூ. 434.79 இலட்சம் வருவாயை சந்தன மரங்கள் தந்து, வனத் துறையின் வருவாயில் பெரும் பங்குபெற்றுள்ளன. மரமும் விறகும் 204.42 இலட்ச ரூபாயை வருவாயாகத் தந்துள்ளன. 1978-79-ல் காடுகளிலிருந்து ரூ. 868.49 இலட்சமும், 1979-80-ல் ரூ. 925.18 இலட்சமும் வருவாயாகக் கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1979 ஏப்ரல் 2]

'காடுகள்' என்ற தலைப்பின்கீழ் 1978-79-ல் எதிர்பார்க்கப்பட்டுள்ள செலவு ரூ. 1,111.47 இலட்சம் ஆகும். 1979-80-ல் திட்டமிடப்பட்டுள்ள செலவு ரூ. 1,089.02 இலட்சம். இதில், வறட்சியால் பாதிக்கப்படும் பகுதிகளுக்கான திட்டங்களுக்காக 1978-79 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் மீதுள்ள செலவுக்கு ரூ. 52.51 இலட்சமும், 1979-80-க்குரிய செலவாக ரூ. 50 இலட்சமும் அடங்கும். செலவில் பெரும்பகுதி காடுகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில் செயல்படும் திட்டங்களுக்கான மூலதன முதலீடாகும். மரம், விறகு மரங்கள், தொழில் துறைகளுக்குத் தேவையான மரம், மற்றும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் தன்மை வாய்ந்த காட்டுப் பொருட்களுக்கான, வளர்ந்துகொண்டே வரும் தேவைகளை ஈடு செய்யும் நோக்குடன் வனத்தோட்டங்களை அமைக்கும் பணி பெருமளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திட்டங்களைச் செயல்படுத்தல்:

பல்வேறு வளர்ச்சிப் பணிக்கான திட்டங்களின்கீழ் 1978-79-ஆம் ஆண்டிற்கான செலவு ரூ. 552.09 இலட்சம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில், 338.01 இலட்சம், மாநிலத் திட்டங்களின்கீழ், தொழில் மற்றும் பொருளாதாரச் சிறப்பு வாய்ந்த தோட்டங்களை ஏற்படுத்தவும், வன-இயல் ஆய்வு, வனவேலைத் திட்டம், மண் வளப் பாதுகாப்பு திட்டங்களைச் செயல்படுத்துவதின் மீதான செலவாகும். மத்திய அரசு உதவித்திட்டங்களான மேற்கு மலைத் தொடர்ப் பகுதி வளர்ச்சித் திட்டம், குன்றுப் பகுதி வளர்ச்சித் திட்டம் மற்றும் வனவிலங்கு பாதுகாப்புத் திட்டங்களின் மீது 1978-79-க்கான செலவு ரூ. 139.72 இலட்சங்களாக இருக்கும்.

மத்திய அரசு உதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள ரப்பர் தோட்டங்கள், கிராம்புத்தோட்டங்கள், தேயிலைத்தோட்டங்கள் மற்றும் மரக்கூழ்த் தோட்டங்கள் அமைக்கும் திட்டங்களின் மீதான 1978-79 க்கான செலவு ரூ. 75.36 இலட்சங்களாக இருக்கும்.

மாநில வனத்திட்டங்களுக்காக 1979-80-ல் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 361.95 இலட்சம் ஆகும். மாநில மண் வளப்பாதுகாப்புத் திட்டங்களுக்கு ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 23.26 இலட்சம் ஆகும். மத்திய அரசின் திட்டங்களுக்காக 1979-80-ல் ரூ. 201.17 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. காடு வளர்ப்பது என்பது முதலீட்டிற்கும், விளைபயனுக்கும் இடையே நீண்டகால இடைவெளி கொண்ட நீண்ட காலத்திட்டம் என்றாலும், முந்தைய ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ள பல திட்டங்கள் பலன் தரத்தொடங்கி, மாநிலத்தின் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க பங்கு ஆற்றுகின்றன.

காடு சார்ந்த தொழில்களுக்கு மூலப்பொருள்கள் வழங்கல்:

நம் மாநிலத்தில் உள்ள காடுபடு மூலப்பொருள்களை நம்பி உருவாகியுள்ள தொழிற்சாலைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவில் நம்முடைய காடுகளில் மிக விலை மதிப்புள்ள மூலப்பொருள்களைப்பெற்றுள்ளோம். கீழ்க்கண்ட மரவகைகள் அத்தகைய தொழிற்சாலைகளுக்கு மிகவும் தகுதி வாய்ந்தவை.

(1) கற்பூர மரங்கள் (Bluegum)

(2) தைல மரங்கள் (Eucalyptus Grandis)

(3) தைல மரங்கள் (Eucalyptus Hybrid)

(4) பட்டை உரித்த வாட்டில் மரங்கள் மற்றும் வாட்டில் பட்டைகள்.

(5) கருவேல மரங்கள்.

(6) மூங்கில்.

(7) ஈத்தா என்ற நாணல் (Ettareeds)

கீழ்க்காணும் அட்டவணையில் இருந்து காடு சார்ந்த தொழிற்சாலைகளுக்கு 1978-79 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட முக்கிய மூலப் பொருள்களின் அளவினைத் தெரிந்து கொள்ளலாம். அரசின் தற்போதைய கொள்கைப்படி, ஒதுக்கீடுகள் வருடாந்திரமாகவும். அளவுகள் டன்னேஜ் கணக்கிலும் உள்ளன.

கம்பெனியின் பெயர்.	பொருள்.	மொத்த அளவு. (டன்ஸ்).	நிலப்பரப்பு (ஹெக்டேரில்).
(1)	(2)	(3)	(4)
1 சேஷசாயி பேப்பர் டை கம்பெனி.	யூகலிப்டஸ் ஹைபிரட்	50,000	
	மூங்கில்	50,000	
2 சவுத் இந்தியா விஸ்கோஸ் டை கம்பெனி.	கற்பூர மரங்கள்	50,000	
	யூகலிப்டஸ் கிராண்டிஸ்	20,000	
3 டான் இந்தியா வாட்டில் எக்ஸ்ட்ராக்ட் கம்பெனி.	பட்டை உரித்த வாட்டில் மரம்		1,400 ஹெக்டேர். பரப்பில் கிடைக்கும் மரங்கள்.

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் மரக்கூழ் மரங்கள் மற்றும் பிரம்பு இலைகள் தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளுக்குக் கிடைக்க வகைசெய்யும் நோக்கில் 23-8-1978-ல் அரசாங்கம்

1979 ஏப்ரல் 27

ஒரு ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி, தமிழ்நாட்டிலிருந்து வெளி மாநிலங்களுக்கு இலவங்களை அனுப்பத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சந்தனமரத் தொழில்கள் நிறுவுதல்:

சந்தன மரம் இயற்கையாகப் பெருமளவில், சேலம், வடஆற்காடு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் மலைப்பகுதிகளிலும், நீலகிரி, தர்மபுரி, தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் குறைந்த அளவிலும் வளர்கின்றது. சந்தன மரங்கள் ஆண்டிற்கு இருமுறை, வனத்துறையினரால் வட ஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூரிலும், கோவை மாவட்டத்தில் சத்தியமங்கலத்திலும் ஏலம் விடப்பட்டு வந்தன. இந்தாண்டு, 1978-ம் ஆண்டு டிசம்பரில் முதன் முறையாக சேலத்தில் உள்ள அஸ்தம்பட்டியிலும் சந்தன மர ஏலம் நடத்தப்பட்டது. கீழ்க்கண்ட அட்டவணையில் 1978-ம் ஆண்டு ஜூலை, டிசம்பர் ஆகிய இரு மாதங்களில் நடத்தப்பட்ட ஏல விவரத்தினைக் காணலாம்.

காலம்.	ஏலத்திற் விற்பனையின் வருமானம்.	கிலோ அனு அளவு.	மதிக்கப்பட்ட அளவு.
(1)	(2)	(3)	(4)
	(டன்னில்)	(டன்னில்)	ரூ.
ஜூலை 1978 ..	750	514.000	2,35,13,650.00
டிசம்பர் 1978 ..	700	430.750	1,42,96,295.00

உலகச்சந்தையில், சந்தன எண்ணெயின் விலை குறைந்துவிட்டதாலும் மத்திய அரசின் வர்த்தகத் துறையினர் சமீப காலத்தில் வெளி நாடுகளுக்கு சந்தன மர மற்றும் தூள் ஏற்றுமதி மீது தடை விதித்து விட்டதாலும், இவ்வாண்டு டிசம்பரில் சந்தன மர ஏலம் விற்பனை குறைந்து விட்டது. இது மாநில அரசின் வருவாயை பெருமளவில் பாதிக்கிறது என அஞ்சப்படுவதால் தடை உத்தரவை நீக்கும்படி தமிழ்நாடு அரசாங்கம் மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு வன இலாகா மூலம் கிடைக்கும் சந்தன மரங்களைக் கொண்டு தகுந்த இடங்களில் 5 அல்லது 6 சிறிய சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலைகளை அமைக்கும்படி "டான்சி" நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

சந்தன மரப்பாதுகாப்பும் காட்டு வளமும்:

கணிசமான விலை கிடைப்பதால் அதிக அளவில் சந்தன மரங்களும், மற்றும் விலை மதிப்பு மிக்க ஏனைய சில மரங்களும் சமூக விரோதிகளைக் கவர்கின்றன. எனவே, இதன் மூலம்

ஏற்படும் கடத்தலைத் தடுக்கவும், வன வளத்தைக் காத்து, வருவாயைப் பெருக்கவும் அரசாங்கம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது:—

(1) வனத்துறை, காவல்துறை, வருவாய்த்துறை ஆகிய மூன்று துறைகளுக்குமிடையே நெருக்கமான ஒத்துழைப்பை ஏற்படுத்துவதின் மூலம் குற்றங்களைக் கண்டுபிடித்து வன வளத்தைப் பாதுகாத்தல்; அரசின் வருமானத்தைப் பெருக்குதல்;

(2) ரூ. 10,000த்திலிருந்து ரூ. 50,000 வரையிலுள்ள சந்தன மரக் கடத்தல் குற்றங்களை அந்தந்த இடங்களில் உள்ள காவல் துறையினரிடம் ஒப்படைத்தல்; ரூ. 50,000-க்கு மேற்பட்ட குற்றங்களைக் குற்றப்புலனாய்வுப் பிரிவுத் துறையிடம் ஒப்படைத்தல்;

(3) வனத்துறை ஊழியர்களுக்குப் பாதுகாவல் துறையினரிடம் உள்ள கம்பியில்லாத் தந்திக் கருவியை நெருக்கடியான நேரங்களில் உபயோகிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சட்ட நடவடிக்கைகள் எடுத்தல்:

காடுகள் பற்றிய சட்டத்தைத் திருத்துவதின் மூலம் சந்தனம் மற்றும், விலை மதிப்புமிக்க மரங்களைக் கடத்தும் குற்றத்திற்கு கடுமையான குற்றத் தடுப்புத் தண்டனைகளை விதித்திட நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சமூகக் காடு வளர்ப்புத் திட்டம்:

சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தினைச் செயல் படுத்தும் பணியில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது. இத்திட்டம் 1960-ல் துவக்கப்பட்டது. இதுவரை சுமார் 91,239 ஹெக்டேர் நிலங்களில் காட்டு மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. 1978-79-ல் மேலும் சுமார் 14,275 ஹெக்டேர் பரப்பில், காட்டு மரங்களும், 250 கிலோ மீட்டரில் சாலையோர மரங்களும் வளர்க்கப்படும். தரிசு நிலம், ஏரிக்கரை மற்றும் தரிசு மலைப் பகுதிகளில் காடுகளை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஊராட்சிகளுக்குச் சொந்தமான நிலங்களில் பலன் தரும் காட்டு மரங்கள் வளர்க்கப்படுவதால், அதன் மூலம் வரும் வருவாயில் 50 விழுக்காடு ஊராட்சி மன்றங்களுக்கே தரப்படுகிறது: இது நிலங்களை ஊராட்சிகள் வனத் துறையிடம் ஒப்படைப்பதற்கு ஒரு ஊக்குவிப்பாகும். கருவேல மரம், தைல மரம், ஓடை, பரம்பை மற்றும் முந்திரி போன்றவை இத்திட்டத்தின்படி வளர்க்கப்படுகின்றன. இத்தோட்டங்கள் கிராமப்புற மக்களின் விறகு, கட்டிட மரம், பசுந்தழை உரம் போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்கின்றன. இத்தோட்டங்கள் மண்ணின் இயற்கை வளம் மற்றும் ஈரப்பசை முதலியவற்றைப் பேணிக் காப்பதோடு, சுற்றுப்புறச் சுகாதார சூழ்நிலையினைப் பேணுவதற்கும் பெரிதும் உதவுகின்றன. மத்திய அரசு, இந்த சமூகக்

1979 எப்ரல் 27

காடுவளர்ப்புத் திட்டத்தினை, மத்திய உதவித்திட்டமாக ஏற்று, நிதியுதவி தந்து வருகிறது. 1978-79-ல் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக கூடுதலாக இரண்டு தனிக் கோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1979-80-ல் இக்கோட்டங்கள் சுமார் 18,760 ஹெக்டேரில் காடுவளர்க்கும் பணியினை மேற்கொள்ளும். மேலும் 365 கிலோ மீட்டரில் சாலையோர மரங்களை வளர்ப்பதையும் மேற்கொள்ளும்.

வறட்சித் தணிப்புத் திட்டங்கள்:

துயர் தணிப்புப் பணியாக, வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களில் சமூக நலக் காடுகள் வளர்க்கும் திட்டத்தின் மூலம் காட்டு மரங்கள் வளர்த்தல் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டது. நீர் வறட்சியைத் தவிர்க்க மக்களுக்கு நிலையான ஏற்பாடாக மரம் வளர்த்தலும், வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துயர் நீக்கும் (ஊடு) நிவாரணப் பணியாக வேலை வழங்கலும் இதன் நோக்கங்களாகும். இத்திட்டத்தின் கீழ் 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 3.76 இலட்சம் செலவிடப்பட்டது.

வறட்சியால் பாதிக்கப்படும் பகுதிகளுக்கான வறட்சி நிவாரணத் திட்டம்:

இது ஒரு மத்திய அரசுத் திட்டமாகும். வறட்சியால் பாதிக்கப்படும் இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் இது செயல்படுத்தப்படுகிறது. காடு வளர்த்தலும், புல் வளர்த்தலும், இதன் முக்கிய அம்சங்களாகும். 1978-79-க்கான செலவு ரூ. 53.01 இலட்சம். இதன் மீதான செலவாகும். இதன்கீழ் 5,205 ஹெக்டேர் பரப்பில் தோட்டங்கள் வளர்க்கப்படும்.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம்:

இத்திட்டத்தின்கீழ் எங்கெல்லாம் வனத்துறை நிலங்களில் வசதிகள் உள்ளனவோ அங்கெல்லாம் வனத்துறை வனச்செடிகள் வளர்க்கும்.

வனச் செடிகள் வளர்ப்பதற்கான முழுச் செலவும் தொகுதிக்கு 10,000 ரூபாய்க்கு மேற்படா வண்ணம் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையால் ஏற்கப்படும். இங்ஙனம் வனத்துறையால் வளர்க்கப்பட்ட நாற்றங்கால்கள் விவசாயிகளுக்கு முழு மான்ய அடிப்படையில் வழங்கப்படும்.

மர வளர்ப்பு இயக்கம்:

மத்திய அரசு, மற்றும் மத்திய வன ஆலோசனைக் குழு இவற்றின் வேண்டுதலுக்கிணங்க, 1976-77-ம் ஆண்டில் இம் மாநிலத்தில் மரம் நடு விழா பெருமளவில் கொண்டாடப்பட்டது. ஆளுநரைத் தலைவராகவும், வனத்துறை அமைச்சரைத் துணைத் தலைவராகவும் கொண்டு மாநிலக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி, கல்வி நிலையங்

சுளிது நிலங்கள், தனியார் நிலங்கள் முதலியவற்றின் மரம் நடுதல் இலக்கப்படுத்தப்பட்டது. மரச் செடிகளுக்கான நாற்றங்கால் ஏற்படுத்தி கன்றுகள் வழங்கும் பணிகள் வனத்துறை, வேளாண்மைத் துறைகளால் மேற்கொள்ளப்பட்டன. 1976-77-ம் ஆண்டில் 92 இலட்சம் செடிகளும் 1977-78-ல் 154.38 இலட்சம் செடிகளும் நடப்பெற்றன, 1978-79 ஆம் ஆண்டிற்கு மரம் நடுதற்கான குறிக்கோள் இலக்கு 163.83 இலட்சமாகும்.

நகர்ப்புறங்களில் உள்ள மரங்களைப் பேணும் நோக்குடன் நகர்ப்புறங்களில் மேலும் புதிய மரங்களை நடும்படி செய்வதற்குரிய ஒரு தனிச் சட்டம் ஒன்றை இயற்றும் எண்ணம் அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.

கூடலூர் ஜென்மம் நிலங்கள்:

இந்திய அரசியல் அமைப்பினைத் திருத்தம் செய்து அதன் ஒன்பதாவது அட்டவணையில் சேர்த்ததன் மூலமாக 1969-ம் வருடத்திய கூடலூர் ஜென்மம் ஜமீன் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரி மாற்றம்) சட்டம் 27—11—1974 முதல் நடைமுறைக்கு வந்தது. இந்தத் திருத்தத்தினால் இந்தச் சட்டம் நீதிமன்றப் பரிசீலனையிலிருந்து சட்டப்படி பாதுகாப்புப் பெறுகிறது.

சுமார் 80,000 ஏக்கர் நிலங்களைக் கூடலூர் ஜென்மம் ஜமீன் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரி மாற்றம்) சட்டத்தின்மூலம் அரசாங்கம் மேற்கொள்கிறது. இதில் 38,780 ஏக்கர் பரப்பு நிலம், உயர் நீதிமன்றத்தின் தடை உத்தரவின்கீழ் இருக்கிறது. மீதியுள்ள 41,220 ஏக்கர் நிலங்களில் நில அளவு வேலை நடைபெற்று வருகின்றது. இந்த நிலங்களை மேற்கொள்ளும் பணியின் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்யவும், பல்வேறு துறைகளுக்கு நிலங்களை ஒதுக்கீடு செய்யவும், உதவிட ஒரு ஒருங்கிணைப்புக் குழுவினை அரசு நியமித்துள்ளது. இதுவரை, 11,959.78 ஏக்கர் பரப்பு நிலம் வனத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 3,993.72 ஏக்கர் பரப்பு நிலம், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், ஜென்மம் நிலங்களை வனத் துறைக்கு ஒதுக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மலைவாழ் மக்கள் மேம்பாடு:

இம்மாநிலத்தில் மலைப் பகுதிகளில் வாழும் பழங்குடியினர் தொகை 3.63 இலட்சமாகும். அவர்களுடைய பொருளாதார வளர்ச்சிக்கு வனத் துறை பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அவர்கள், வேளாண்மை புரிய குத்தகைக்கு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. வனத் துறையின் தோட்டங்களின் இடையே பயிரிடும் 'கும்ரி' சாகுபடி முறையை மேற்கொள்ளவும் அவர்கள்

னத்துவிக்கப்படுகின்றனர். இந்த முறையில் வேளாண்மை செய்யப்படும் பயிர் வகைகளோடு வனத் தோட்டங்களும் வளர்க்கப்படுகின்றன. அவர்களுடைய கால்நடைகள் இலவசமாக மேய அனுமதிக்கப்படுகின்றன. அவர்கள் பயிர் செய்யவும், தங்களது வீட்டு உபயோகங்களுக்குத் தேவையான பொருள்களைக் காடுகளிலிருந்து இலவசமாக எடுத்துச் செல்லவும் அனுமதிக்கப்படுகின்றனர். சிலர் வனத் துறையில் பணியாளர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பழங்குடி மக்கள் குழந்தைகளுக்காகக் கோவை, வடஆற்காடு மாவட்டங்களில் வனத் துறை பள்ளிக்கூடங்களை நடத்துகின்றது ; 12 நுவக்கப் பள்ளிகளும், ஒரு உயர்நுவக்கப்பள்ளியும், ஒரு உயர் நிலைப்பள்ளியும் உள்ளன. பள்ளிச் சிறுவர்களுக்கு நண்பகல் உணவும், ஆடைகளும், பாட நூல்களும், எழுது பலகைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. சில பள்ளிகளில் தங்கும் விடுதிகளும் உள்ளன. பழங்குடியினர் நன்மைக்காக 19 தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விறகுக் கூப்புகளும், சிறுபொருள் சேகரிப்பு பகுதிகளும், குறைந்த தொகையில் இச்சங்கங்களுக்குக் குத்தகைக்கு விடப்படுகின்றன. அவர்களுக்கு மருத்துவ வசதி, வீட்டு வசதி முதலியவற்றையும் இத்துறை வழங்குகிறது. பழங்குடியினர் வளர்ச்சித் திட்டங்களுக்கென 1978-79 ஆம் ஆண்டில் ரூ. 15.20 இலட்சம் செலவிடப்படும். 1979-80-ல் இதற்கென ரூ. 16.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தென்னார்க்காடு, சேலம் மாவட்டங்களிலுள்ள கல்ராயன் குன்றுகளிலுள்ள பழங்குடி மக்களின் பொருளாதார நிலையினை உயர்த்தும் நோக்கோடு, கடுக்காய், கருவேப்பிலை, புளி போன்ற காடுபடு சிறு பொருட்களைச் சேகரிக்கும் உரிமையைக் குறைந்த குத்தகைத் தொகைக்கு இப்பழங்குடியினர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அரசு வழங்கியுள்ளது. இனி, விற்பனை மற்றும் இதர செலவுகள் 1-7-1978-ல் இருந்து 30-6-1979 வரையுள்ள விற்பனை அடக்கச் செலவு இவற்றைக் கணக்கிட்டு இனி குத்தகைத் தொகை நிர்ணயிக்கப்படும்.

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம்.

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ள 37,000 ஹெக்டேர் பரப்புத் தோட்டங்களை அக்கழகம் தொடர்ந்து பராமரித்து வருகிறது.

இக்கழகம் தென்னார்க்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் 30,000 ஹெக்டேர் நிலப் பரப்பில் கலைமரத் தோட்டங்களை ஏற்படுத்த பெரும் திட்டமொன்றினைத் தயாரித்துள்ளது. இத்திட்டம், வேளாண்மை நிதி உதவி மேம்பாட்டு கழகத்திடமிருந்து ரூ. 251 இலட்சமும், அரசின் நிதி உதவி ரூ. 77 இலட்சமும் கொண்டு செயல்

படுத்தப்படும். அரசும், வேளாண்மை நிதி உதவி மேம்பாட்டு கழகம், நான்கு தேசிய வங்கிகளின் கூட்டமைப்பும், தோட்டக் கழகமும் சேர்ந்து சமீபத்தில் இதுபற்றி ஒப்பந்தம் ஒன்று செய்துள்ளன.

வனத் துறையிடமிருந்து மதுரையிலுள்ள அரக்குத் தொழிற்சாலையினை இக்கழகம் மேற்கொண்டுள்ளது. இத்தொழிற்சாலையின் முக்கிய தயாரிப்புகள் ''பிரெஞ்சு பாலிஷ்'' ''பிக்சர் வார்னிஷ்'' முதலியனவாகும்.

ரப்பர் தோட்டங்களும் தொழிற்சாலையும்.

அரசாங்க ரப்பர் தோட்டங்கள் மற்றும் ரப்பர் தொழில் சாலைத் தொடர்பான நடைமுறைப் பணிகளை விரைவு செய்ய, தக்க அமைப்பொன்று காணும் கருத்துடன், போதிய அதிகாரங்களுடைய ஆளுகைக்குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. இக்குழு, அவ்வப்போது கூடி, அரசாங்க ரப்பர் தோட்டங்களில் நடைபெறும் வேலைகளின் முன்னேற்றம் பற்றி ஆய்வு செய்வதோடு, ரப்பர் தோட்டங்களில் செயலாக்கப்பட வேண்டிய திட்டங்களுக்கும் ஒப்பளிக்கிறது. இது வரை வளர்க்கப்பட்ட ரப்பர் தோட்டங்களின் பரப்பு 4,385.85 ஹெக்டேர் ஆகும். இதில், 1,473 ஹெக்டேர் பரப்பிலிருந்து, தற்பொழுது ரப்பர் பால் எடுக்கப்படுகிறது.

ரூபாய் 35 இலட்சம் செலவில் ''கிரம்ப்'' இரப்பர் தொழிற்சாலை ஒன்றினை நிறுவிட அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இதனால் அரசாங்கத்திற்கு சுமார் ரூபாய் 200 இலட்சம் நிகர வருமானமும், கணிசமான வேலை வாய்ப்பு வசதிகளும் கிடைக்கும். ரூ. 21 இலட்சம் செலவில் ரப்பர் ஷீட் தொழிற்சாலை அமைக்க சமீபத்தில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்குப் பலவித வசதிகளைச் செய்துள்ளது. இதுவரை 531 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 330 வீடுகள் இந்த வருடம் கட்டப்பட்டு வருகின்றன. 140 வீடுகள் அடுத்த ஆண்டில் கட்டப்பட விருக்கின்றன. மருத்துவம், கல்வி மற்றும் போக்குவரத்து வசதிகளும் தொழிலாளர்களுக்குச் செய்யப்பட்டுள்ளது.

1979 ஏப்ரல் 21

திட்ட செயலாக்கமும் 1979-80-க்கான திட்ட நிரலும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் வனத்துறையால் நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் விரிவான விளக்கங்களும் 1979-80 ஆம் ஆண்டுக்கான செயற்குறிப்புகளும் கீழே தரப்பட்டுள்ளன;—

வனவேலைத் திட்டங்கள்.

வனவேலைத் திட்டமே (Working Plan) காடுகளின் மையநிர்வாகத்தின் அடிப்படை எனலாம். இத்திட்டம், வனவேலைத் திட்டமிடும் பணி அறமைப்பிற்கு வலிவு சேர்க்கவும், அது நவீனமாக்கப்படுவதற்குத் தேவையான கருவிகளை வழங்கவும் போதிய வகை செய்கிறது. 1978-79 ஆம் ஆண்டில் ரூ. 0.39 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

1979-80 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ. 0.39 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வன இயல் ஆய்வும் கல்வியும்.

காடு வளர்ப்புக் கலை (Silviculture) மரபியல் ஆய்வு (Genties) மண்ணியலாய்வு (Soil Science) கோமியியல் ஆய்வு (Forest Pathology) ஆகிய துறைகளில் ஆய்வு மேற்கொள்ளத்தக்க வகையில் ஆய்வுத் துறைக்கு வலிவு கூட்டுதலே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1978-79 ஆம் ஆண்டில் ரூ. 8.79 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மரபியல் ஆய்வு (Forest Genetics) உருவளவு (Forest Mensuration) துறைகளில் ஆய்வுப்பணி விரிவுபடுத்தப்படும்.

1979-80 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ. 4.65 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

முந்திரித்தோட்டங்கள்.

வாய்ப்பான இடங்களில் முந்திரி மரங்களை வளர்த்தலும் வளர்க்கப்பட்டுள்ள முந்திரி தோட்டங்களில் உரமிடுதல், மருந்து தெளித்தல், முதலிய தீவிர பண்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுவதின் மூலம் விளைச்சலைக் கூட்டுதலும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

1978-79 ஆம் ஆண்டில் ரூ. 11.85 இலட்சம் செலவில் திருச்சி, மதுரை கோட்டங்களில் 600 ஹெக்டேரில் முந்திரி வளர்க்கப்பட்டுள்ளன. பழைய தோட்டங்களில் பண்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1979-80 ஆம் ஆண்டில் ரூ. 11.50 இலட்சம் செலவில் 300 ஹெக்டேரில் முந்திரித் தோப்புகள் வளர்க்கப்படும்.

கூழ்மரத் தோட்டங்கள்

மரங்களை மூலப்பொருளாகக் கொண்டு இயங்கும் தொழில்களின் தேவையை ஈடு செய்ய, விரைந்து வளரும் தைல மர வகைகளையும், மூங்கில் போன்றவற்றையும் வளர்க்கும் பணியை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1978-79 ஆம் ஆண்டில் ரூ. 26.76 இலட்சம் செலவிட்டு 2,200 ஹெக்டேர் பரப்பில் மேற்குறிப்பிட்ட மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன, 1979-80-ல் ரூ. 26.31 இலட்சம் செலவில் 2,180 ஹெக்டேரில் மேலும் இந்த மரங்கள் வளர்க்கப்படும்.

பண்ணைக்காடுகள்

சிற்றூர்களில், அரசாங்க புறம்போக்கு நிலங்களிலும் தரிசாகக் கிடக்கும் நிலங்களிலும் பொருத்தமாகவுள்ள இடங்களில் காடு வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1978-79-ல் 9,000 ஹெக்டேர் பரப்பில் ரூ. 18.30 இலட்சம் செலவில் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. 1979-80 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ. 44.70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 18,040 ஹெக்டேர் பரப்பில் கிராமக் காடுகள் வளர்க்கப்படும்.

தொழில் வணிகத் துறைகளுக்கு வேண்டிய மரங்கள் வளர்த்தல்

தேக்கு இதர கடின மரங்கள்:

தேக்குமரம் மற்றும் அது போன்ற கடின வகை மரங்களைத் தக்க இடங்களில் வளர்த்து இத்தகைய மரங்களின் ஆதார வளத்தை அதிகப்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

1978-79 ஆம் ஆண்டில் ரூ. 6.21 இலட்சம் செலவில் 560 ஹெக்டேர் பரப்பில் மரங்கள் வளர்க்கப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 4.67 இலட்சம் செலவில் இத்திட்டத்தினை மேலும் விரிவுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 405 ஹெக்டேர் பரப்பில் தேக்கு மற்றும் கடின வகை மரத் தோப்புகள் வளர்க்கப்படும்.

தீக்குச்சி மரங்கள்

தீப்பெட்டித் தொழிலுக்கு வேண்டிய குச்சிகளையும், பெட்டிகளையும் தயாரிக்கத் தேவையான மரவகைகளை மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கம்.

1978-79 ஆம் ஆண்டில் வாகை, இலவு போன்ற மர வகைகள் ரூ. 0.22 இலட்சம் செலவில் 50 ஹெக்டேர் பரப்பில் வளர்க்கப்பட்டுள்ளன. மேலும் இந்த வகை மரங்களைப் பயிரிடுவதற்கான தகுதியுள்ள இடங்களைத் தேர்ந்தெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1979 ஏப்ரல் 21

"வாட்டில்" தோட்டங்கள்

தோல் பதனிடும் தொழில், மற்றும் மரக்கூழ் தொழில் ஆகியவற்றிற்கு வாட்டில் மரமும் பட்டையும் இன்றியமையாத மூலப் பொருள்களாகும். நீலகிரியிலும், பழனியின் மேல் மட்டக் காடுகளிலும் வாட்டில் மரம் வளர்க்க இத்திட்டம் வகை செய்கிறது.

1978-79 ஆம் ஆண்டில் 9.23 இலட்சம் ரூபாய் செலவில் 1,500 ஹெக்டேர் பரப்பில் வாட்டில் மரங்கள் வளர்க்கப்படுகின்றன.

1979-80 ஆம் ஆண்டில் 1,250 ஹெக்டேர் பரப்பில், மேலும் இம்மரங்களை வளர்க்க ரூ. 8.11 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆற்றங்கரை, கால்வாய்கரை, ஏரிக்கரையோரக் காடுகள்.

மண் அரிப்பைத் தடுக்கவும், கடின மரங்களின் உற்பத்தியில் உள்ள பற்றாக் குறையினை ஈடு செய்யவும், தேக்கு போன்ற பொருளாதார முக்கியம் கொண்ட மரங்களை ஆற்றங்கரை, கால்வாய்க்கரை, ஏரிக்கரை நெடுக வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1978-79 ஆம் ஆண்டில் 13.36 இலட்சம் ரூபாய் செலவில் 1,550 ஹெக்டேர் பரப்பில் இத்தகு மரத்தோட்டங்கள் அமைக்கப் பட்டுள்ளது.

1979-80 ஆம் ஆண்டில் 720 ஹெக்டேர் பரப்பில் இத்தகைய மரங்களை வளர்க்க ரூ. 1.48 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

விறகு மரக்காடுகள்.

மக்களின் அன்றாட எரிபொருள் (விறகு) தேவையை ஈடு கட்ட விறகு மர வகைகளை வளர்க்க இத்திட்டம் வகை செய்கிறது.

1978-79 ஆம் ஆண்டில் சவுக்கு மர வகைகள், நீலகிரி தைல மர வகைகள், இதர பிற வகை மரங்களை 41.94 இலட்சம் ரூபாய் செலவில் 3,900 ஹெக்டேர் பரப்பில் வளர்க்கப்பட்டு உள்ளது.

1979-80 ஆம் ஆண்டில் 600 ஹெக்டேர் பரப்பில் வளர்க்க ரூ. 58.23 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சந்தனத்தோட்டங்கள்.

வனத்துறையின் வருவாயில் 40 சதவீதத்திற்கும் மேல் சந்தன மர விற்பனை மூலமே கிடைக்கிறது. சந்தன மர வளத்தை பெருக்கிட வாய்ப்பான இடங்களில், செயற்கை முறையில் சந்தன மரம் வளர்க்கப்படுகிறது.

1978-79 ஆம் ஆண்டில் 10.32 இலட்சம் ரூபாய் செலவில் 169 ஹெக்டேர் பரப்பில் செயற்கை முறையில் சந்தன மரம் வளர்ப்பும் மற்றும் இயற்கை சந்தனக் காடுகளில் பண்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1979-80 ஆம் ஆண்டில் 170 ஹெக்டேர் பரப்பில் சந்தன மரம் வளர்ப்பும் மற்றும் 665 ஹெக்டேரில் பண்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்படுவதற்கு, ரூ. 19.03 இலட்சம் ஒதுக்கப்பட்டு உள்ளது.

வன விரிவாக்கத் திட்டம்.

1978-79 ஆம் ஆண்டில் 32.84 இலட்சம் ரூபாய் செலவில் 3,700 ஹெக்டேர் பரப்பில் மரம் வளர்க்கும் பணிகள் செய்யப்பட்டன. மேலும், சாலை ஓரங்களில் மரம் நடுதலும், பொது மக்களுக்குக் கிட்டும் வகையில் மரக்கன்றுகளை வளர்த்து வழங்குதலும் இத்திட்டத்தில் அடங்கும். 1979-80 ஆம் ஆண்டில் 365 கி. மீ. நீளத்திற்குச் சாலை ஓரங்களில் மரங்களை வளர்க்கவும், 10 ஹெக்டேர் பரப்பில் சாலை ஓரங்களில் பூங்காக்கள் அமைக்கவும் பொது மக்களுக்கு விற்பனைக்காக 10 இலட்சம் செடிக் கன்றுகளை வளர்க்கவும், ரூ. 36.36 இலட்சம் ஒதுக்கப்பட்டு உள்ளது.

இருப்புப்பாதைத் தோட்டங்கள்.

இருப்புப் பாதையை ஒட்டி வெற்றிடமாகவுள்ள, இரயில்வேத் துறைக்குரிய நிலங்களில், மரங்கள் நடும் பணியினை மேற்கொள்ளும் செயற் குறிப்பு ஒன்றும் பரிசீலனையில் உள்ளது.

தடிமரம் அகற்றுதலும், வனப் பயன்பாடும்,

1978-79 ஆம் ஆண்டில் ரூ. 1.95 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சாலைகள் அமைத்தல், ஊர்திகள், பணிமனைப் பராமரிப்பு, கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் தொழிலாளர்களுக்குக் கம்பளி உடைகள் வழங்குதல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1979-80 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த மேலும் ரூ. 2.66 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

காடுபடு சிறு பொருள்கள் :

புளி, குங்கிலியம், கற்பூரத்தைல மரம், கடுக்காய் போன்ற பொருளாதார வாணிபச் சிறப்பு மிக்க காடுபடு பொருள்களை நல்கும் மரங்களை வளர்ப்பதன் மூலம், காடுபடு சிறு பொருள்களின் இருந்து பெரும் வருவாயினைப் பெருக்கிட பெரும் வாய்ப்புகள் உள்ளன; இத்தகைய காடுபடு பொருள்களின் உற்பத்தியை பெருக்குவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

1979 ஏப்ரல் 21

1978-79 ஆம் ஆண்டில் ரூ. 21.99 இலட்சம் செலவில் 950 ஹெக்டேர் பரப்பில் இந்தவகை மரங்கள் வளர்க்கப்பட்டன.

1979-80 ஆம் ஆண்டில் 1,700 ஹெக்டேர் பரப்பில் மேலும் இந்தவகை மரங்களை வளர்க்க ரூ. 15.08 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சாலைப் போக்குவரத்துத் திட்டம்.

வெட்டப்பட்ட மரங்களை விரைந்து எடுத்துச் செல்லத் தக்க வகையில் ஏற்கனவே உள்ள சாலைகளை மேம்படுத்துவதும், புதிய சாலைகளை அமைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். காடுகளில் மேற்கொள்ளப்படும் காடு வளர்ப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நல்ல போக்குவரத்து அமைப்பு மிகவும் இன்றியமையாதது ஆகும்.

1978-79 ஆம் ஆண்டில் காட்டுப் பகுதிகளில் 19 கிலோமீட்டர் தூரத்திற்குப் புதிய சாலைகளை வட ஆற்காடு, கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களில் அமைக்க ரூ. 14 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 1979-80 ம் ஆண்டில் புதிய சாலைகளை கோயம்புத்தூர், நீலகிரி, வட ஆற்காடு மாவட்டங்களில் 7 கிலோமீட்டர் தூரத்திற்கு அமைக்க ரூ. 7 இலட்சமும் முந்திய ஆண்டில் முடிக்கப்படாத வேலைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு முடிக்க ரூ. 7 இலட்சமும் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

காட்டிடங்கள் கட்டும் திட்டம்.

காட்டின் உட்பகுதிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட இத்திட்டம் வகை செய்கிறது.

1978-79-ம் ஆண்டில் காட்டு இலாகா சிப்பந்திகளுக்கு கோயம்புத்தூர், திருச்சி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தருமபுரி, மதுரை ஆகிய மாவட்டங்களில் 10 (பத்து) குடியிருப்புக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூ. 6 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 1979-80-ம் ஆண்டில் காட்டு இலாகா சிப்பந்திகளுக்கு 13 புதிய குடியிருப்புக் கட்டிடங்களை நீலகிரி, கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, வட ஆற்காடு, செங்கல்பட்டு, மதுரை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களிலும், திருநெல்வேலி கோட்டத்தில் பாபநாசம் என்ற இடத்தில் ஒரு சோதனைச் சாவடியும் கட்ட ரூ. 4.00 இலட்சமும், முந்திய ஆண்டில் முடிக்கப்படாத வேலைகளை முடிக்க ரூ. 2 இலட்சமும் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தவிர, காடுகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், வனத்துறையாளர்களுக்கும் கம்பளி வழங்கல், மருத்துவ உதவி முதலிய வசதிகளைச் செய்தல் போன்றவைகளுக்கும் ஒரு திட்டம் உண்டு. இத்திட்டத்திற்கான 1978-79 ஆம் ஆண்டுச் செலவு ரூ. 5.34 இலட்சம் வரை ஆகும்.

1979-80-ல் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ. 6.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. குடிநீர் வழங்குதல், மருத்துவ வசதிகள், கம்பளி உடை வழங்குதல் மற்றும் மழைக்கால ஆடைகள் வழங்குதல் முதலியவை தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

இயற்கை பாதுகாப்பு.

வன உயிரினங்களைப் பாதுகாப்பதிலும், வளர்ப்பதிலும் வன விலங்குப் புகலிடங்கள் முக்கியத் தொண்டாற்றுகின்றன. இப்புகலிடங்கள் சுற்றுலாப் பயணிகளையும் மிகவும் கவர்வனவாகும்.

1978-79 ஆம் ஆண்டில் ரூ. 22.02 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. சாலைகள் பராமரிப்புக் கட்டிடங்கள் கட்டுதல், சரணாலயத்தில் தீ தடுப்புபணிகள் மேற்கொள்ளுதல், முதலைப் பண்ணை பராமரிப்பு மற்றும் மிருகக் காட்சி சாலை பராமரித்தல், பார்வை கோபுரம் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1979-80-ல் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ. 22.75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சிங்கவால் குரங்கிற்காக களக்காட்டில் சரணாலயம் அமைத்தல்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள களக்காடு சரணாலயத்தில் சிங்கவால் குரங்குகளைப் பாதுகாப்பதும் அவைகளின் தரத்தை உயர்த்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டம்.

1978-79-ல் இத்திட்டத்திற்கென ரூ. 3.75 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

1979-80-ல் இத்திட்டத்திற்கென அடையாளத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

கோடியக்கரை வனவிலங்கு சரணாலயத்தை விரிவுபடுத்துதல்.

அழிந்து வரும் "இந்தியன் ஆண்டி லோப்" என்று அழைக்கப் படும் வெளிமான் (Black Buck) இனத்தைப் பாதுகாக்க தஞ்சாவூர் ஜில்லாவில் கோடியக்கரையில் சரணாலயம் அமைக்கப்பட்டுள்ளது. வெளிமான்களின் நிலை மேம்பாடுறவும் இச்சரணாலயத்தை விரிவு படுத்துதலே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் மத்திய அரசின் ஆதரவு பெற்ற திட்டம்.

1977-78-ல் இத்திட்டத்தின் கீழ் ரூ.0.23 இலட்சம் செலவிடப் பட்டது.

1979 ஏப்ரல் 2]

1978-79-ல் இத்திட்டத்திற்கேன ரூ. 3.44 இலட்சம் செலவிடப்படும்.

1979-80-ல் இத்திட்டத்தை முடிக்க ரூ. 0.30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

முதுமலை சரணாலயத்தை விரிவுபடுத்துதல்.

மத்திய அரசாங்கம் 4.19 இலட்சம் செலவில் முதுமலை வன விலங்கு சரணாலயத்தை விரிவுபடுத்தும் திட்டத்தை அங்கீகரித்து உள்ளது. இத்திட்டத்தைச் செயலாக்க கூடிவரும் செலவினங்களை மாநில அரசு பொறுப்பேற்கும்.

1978-79-ல் ரூ. 4.10 இலட்சத்தில் இத்திட்டம் நிறைவேற்றப் படும்.

1979-80ல் இத்திட்டத்தினை முடிப்பதற்காக ஒரு அடையாளத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

வண்டலூரில் வனவிலங்குப் பூங்கா அமைத்தல்.

இந்திய இரயில்வேத் துறையின் வேண்டுகோளுக்கிணங்க சென்னை நகரிலுள்ள மத்திய இரயில் நிலையத்தை விரிவு படுத்துவதற்காகத் தற்போது மிருகக்காட்சிசாலை அமைத்துள்ள இடத்தை இரயில்வேத் துறைக்குக் கொடுத்திட இருப்பதால் சென்னையிலிருந்து 30கி.மீ. தொலைவில் 350 ஏக்கர் நிலப் பரப்பில் வண்டலூரில் ஒரு வனவிலங்குப் பூங்கா நிறுவவும், தற்போது மிருகக்காட்சி சாலையில் உள்ள மிருகங்களை வண்டலூருக்கு கொண்டு செல்லவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ரூ. 300 இலட்சம் செலவுள்ள இத்திட்டத்தின்கீழ் திட்டத்தின் முதற் பகுதிப் பணிக்கு ரூ. 105 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பூங்கா வனத்துறையின் நிர்வாகத்தில் இருக்கும்.

முதலைகளை நீர்த் தேக்கத்தில் விடுவித்தல்.

காவிரி ஆற்றில் உள்ள முதலைகள் அழிந்துவிடும் ஆபத்தான கட்டத்தில் உள்ளன. முதலைகளை பாதுகாப்பதற்கான அமராவதி, சாத்தனூர் ஆகிய இடங்களில் உள்ள முதலைக் குஞ்சு பொரிக்கும் நிலையங்களில் முதலை முட்டைகளை சேகரித்துக் குஞ்சுகள் பொரித்திட வகை செய்யப்பட்டுள்ளது. இந்த குஞ்சு முதலைகளை நமது மாநிலத்திலுள்ள நீர்த்தேக்கங்களில் விடுவதற்காக விட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்குரிய ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து அதன்படி ஒவ்வொரு வருடமும் 200 சின்னஞ்சிறு முதலைகளை நீர்த்தேக்கங்களில் விடப்படும். முதற்கட்டமாக கிருஷ்ணகிரி, பாபநாசம், கோதையாறு ஆகிய நீர்த் தேக்கங்களில் விடப்படும். இதனால் வியாபார நோக்கத்துடன் பிடிக்கப்படும் மீன்களுக்கு ஏதாவது பாதிக்கப்படும் விளைவு ஏற்பட்டால் அதை கண்காணித்து அதை சரி செய்யத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் அழிந்து வரும் முதலை

யினத்தை வளர்த்து அவற்றை இயற்கையான சூழ்நிலையில் விடுவதற்கும் ஒரு திட்டமுண்டு. இது ஒரு மத்திய அரசு ஆதரவுத் திட்டமாகும். இத்திட்டத்தின்படி முதலைகள் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள சாத்தனூர் அணைக்கட்டில் வளர்க்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் 1977-78 வரையில் ரூ. 1.93 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

1978-79-ல் இத்திட்டத்திற்கென ரூ. 2.17 இலட்சம் செலவிடப்படும்.

1979-80-ம் ஆண்டிற்குள் இத்திட்டத்தினை முடிக்க ஒரு அடையாளத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

வன விளம்பரம்.

நாட்டு நலன் காக்கும் பணியில் காடுகளும் விலங்குகளும் ஆற்றும் பங்கு குறித்தும் இவற்றை காப்பதின் இன்றியமையாமை குறித்தும் மக்களுக்கு அறிவுறுத்தும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுகிறது. 1978-79-ல் ரூ. 1.60 இலட்சம் இத்திட்டத்தினைச் செயல்படுத்திட செலவிடப்பட்டது.

1979-80ல் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ. 1.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. திரைப்படங்கள், சிறு புத்தக வெளியீடுகள், விளம்பரப் பலகை அமைத்தல் போன்றவைகளின் மூலம் விளம்பரப் பணி மேற்கொள்ளப்படும்.

காடுகளைச் சேர்த்தல்.

ஏறத்தாழ 3,000 சதுர கி.மீ. பரப்புள்ள முன்னால் ஜமீன் காடுகளை வனத்துறை எடுத்துகொண்டுள்ளது. இவற்றை சிறந்த முறையில் பாதுகாக்க இக்காடுகளை நில அளவை செய்து, முறையான எல்லை வரையறுத்துத் தமிழ்நாடு காடுகள் சட்டத்தின் கீழ் ஒதுக்குக் காடுகளாக அமைத்திட வேண்டும். முன்னால் ஜமீன் காடுகளை ஒதுக்குக் காடுகளாக அமைக்கும் பணி இத்திட்டத்தின் முதல் நோக்கமாகும்.

1978-79-ல் நிலத்தை அளந்து எல்லை வரையறுக்க ரூ. 1.77 இலட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

1979-80-ல் இத்திட்டத்தினைச் செயல்படுத்த 1.30 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

காடு பாதுகாப்பு.

தீ விபத்திலிருந்தும் ஏனைய இடையூறுகளிலிருந்தும் காடுகளைப் பாதுகாப்பதற்கான வழிவகைகளை வகுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1979 ஏப்ரல் 27

தீ விபத்துக் காலங்களில் கண்காணிப்பாளர்கள் அமர்த்தி பணி பரியவும் தீத்தடுப்பு வேலை செய்யும் பணிகளுக்காக 1978-79-ல் ரூ. 2.47 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

1979-80 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ. 3.94 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வன வள ஆய்வு:

காடுகளிலுள்ள இயற்கை ஆதாரங்களை மிகத் திறமையாகவும் சிறந்த வகையிலும் திட்டமிட்டு பயன்படுத்தும் குறிக்கோளுக்கேற்ப வனத்தின் இயற்கை ஆதாரங்களைக் கணித்து தொகுத்து ஆய்ந்து மதிப்பிடுதலே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதற்கேற்ப. 1978-79-ல் ரூ. 2.61 இலட்சம் செலவில் இது சார்பான ஆய்வுப் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. இரண்டு கோட்டங்கள் இப்பணியை ஏற்று செயல்பட்டு வருகின்றன. கோவை, தர்மபுரி மாவட்டங்களில் இந்த ஆய்வு வேலை நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தின் செயற்பாட்டிற்காக 1979-80ஆம் ஆண்டில் ரூ. 0.30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

திட்டம், புள்ளி விவரப் பிரிவு :

வனங்கள் குறித்த புள்ளி விவரங்களைத் திரட்டிடவும் விளை பொருள்கள் அளவு தொடர்பான தகவல்களைத் தொகுத்தலும், சந்தை நிலவரங்களை ஆராயும் தற்போதைய, வருங்கால தேவைகளை மதிப்பிடவும், ஒரு பிரிவினை அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கம்.

1978-79-ல் ரூ. 0.37 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டது.

மண்வளப் பாதுகாப்பு :

1. வைகை ஆற்றில் நீர்க்கோள் பகுதி:

மண் அரிப்பினைத் தடுத்து வைகை நீர்த் தேக்கத்தில் மண் மேடிடுவதைத் தடுக்கும் நோக்கத்தில் வைகையாற்று நீர்க்கோள் பகுதிகளில் பல்வேறு மண் வளப் பாதுகாப்புப் பணிகளை மேற் கொண்டு செயல்படுத்துவது இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

1978-79-ல் ரூ. 6.05 இலட்சம் செலவில் 1,000 ஹெக்டேர் பரப்பில் மர வளர்ப்பும், பழைய தோட்டங்களில் பராமரிப்பும் மண் அரிப்பைத் தடுக்கும் அணைகள் கட்டுதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1979-80-ல் மேலும் 1,000 ஹெக்டேர் பரப்பில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ. 6.10 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

2. "ஸ்டான்லி". நீர்த்தேக்கம் :

மண் அரிப்பு ஏற்பட்டு நீர்த்தேக்கத்தில் வண்டல் படிவதைத் தடுப்பதற்காக மேட்டூர். ஸ்டான்லி நீர்த்தேக்கத்தில் நீர்க்கோள் பகுதியில் பல வகையான மண் வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1978-79-ல் 1,500 ஹெக்டேர் பரப்பில் மர வளர்ப்புப் பணியும் நில வளைவு கற் சுவர்கள் மண் அரிப்பு தடுப்பு அணைகள் பணியாளர்களுக்கு இல்லங்கள் கட்டுதல் ஆகியன ரூ. 14.66 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1979-80-ல் 3,000 ஹெக்டேர் பரப்பில் இப்பணியை மேற்கொள்ள ரூ. 17.16 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டம்:

இது ஒரு மத்திய அரசு திட்டமாகும். மேற்கு மலைத் தொடரில் உள்ள இயற்கை வளத்தை, அப்பகுதியின் பொது வளத்திற்கு ஏற்ப பயன்படுத்தலும் வளர்த்தலும் இதன் நோக்கங்கள். 1975-76ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் இரண்டு பணிகளை இத்துறை மேற்கொண்டது. அவை: (அ) நீலகிரியில் தேயிலைத் தோட்டங்கள் வளர்த்தல். (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராம்பு வளர்த்தல். இவற்றுடன் 1976-77-ல் மேலும் இரண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அவை (அ) மதுரை மாவட்ட பழனி மேல் மட்ட குன்றுகளில் மரக்கூழ் மரங்கள் வளர்த்தல்: (ஆ) குமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டங்கள் வளர்த்தல். இவை பற்றிய விவரங்கள் பின்வருமாறு:—

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராம்பு வளர்த்தல்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் 30.73 இலட்சம் ரூபாய் செலவில் 100 ஹெக்டேர் பரப்பில் கிராம்பு வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1978-79-ல் 5.66 இலட்சம் ரூபாய் செலவில் 35 ஹெக்டேர் பரப்பில் கிராம்பு வளர்க்கப்பட்டது. கட்டிடங்கள் மற்றும் சாலை அமைக்கும் வேலைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1979-80 ஆம் ஆண்டில் 3·94 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் 33 ஹெக்டேர் பரப்பில் இத்திட்டத்தைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. கட்டிடங்கள் மற்றும் சாலைகள் அமைக்கும் வேலைகளும் ஏற்று நடத்தப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் வளர்த்தல்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ. 114.76 இலட்சம் செலவில் 800 ஹெக்டேர் பரப்பில் ரப்பர் தோட்டங்கள் போடுதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1979 ஏப்ரல் 21

1978-79 ஆம் ஆண்டில் ரூ. 66.48 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

1979-80-ல் மேலும் 400 ஹெக்டேர் பரப்பில் ரப்பர் தோட்டங்கள் போடவும், பழைய தோட்டங்களின் பராமரிப்பு, தொழிற்சாலையமைத்தல், தொழிலாளர் குடியிருப்பு மற்றும் அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல், இயந்திரங்கள் வாங்குதல், பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்குத் தேவையான பொருட்கள் வாங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ள ரூ. 64.06 இலட்சம் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் (மரக்கூழ்) மரங்கள் வளர்த்தல்:

மதுரை மாவட்ட மேல் பழனியில் 34 இலட்சம் ரூபாய் செலவில் 1,500 ஹெக்டேர் பரப்பில் தொழில் துறைக்குத் தேவையான மூலப் பொருள்களை வழங்கும் தைல மர வகைகள், ஊசிஇலை (coniferous) மரங்கள் முதலியவற்றை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1978-79-ல் 8.46 இலட்சம் ரூபாய் செலவில் 60 ஹெக்டேர் பரப்பில் மரங்கள் வளர்க்கப்பட்டன.

1979-80-ல் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ. 10.34 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1,000 ஹெக்டேர் கூடுதல் பரப்பில் மரங்கள் வளர்க்கப்படும். பழைய தோட்டங்கள் பராமரிக்கப்படும்.

நீலகிரியில் தேயிலை வளர்த்தல்:

நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டத்தில் 89 இலட்சம் ரூபாய் செலவில் 300 ஹெக்டேர் பரப்பில் தேயிலை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.

1978-79-ல் 19.56 இலட்சம் ரூபாய் செலவில் 90 ஹெக்டேர் பரப்பில் தேயிலை வளர்க்கப்பட்டு கட்டிடங்கள் கட்டுதல், சாலை போடுதல் முதலிய பணிகளும் நிறைவேற்றப்பெற்றன.

1979-80-ல் இத்திட்டத்தினை மேற்கொண்டு செயல்படுத்த ரூ. 21.13 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேயிலைத் தோட்டங்களை மேலும் 160 ஹெக்டேர் பரப்பில் உண்டாக்குவதுடன் பழைய தோட்டங்களின் பராமரிப்புப் பணிகள், சாலைகள், கட்டிடப் பணிகள் ஆகியவையும் மேற்கொள்ளப்படும்.

இது தவிர, தேயிலைத் தோட்டக் கழகம் தனக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ள 1,500 ஹெக்டேர் பரப்பில் தேயிலை வளர்ப்பதைத் தொடர்ந்து பராமரித்து வருகின்றது. ரூ.90 இலட்சம் செலவில் ஒரு நவீன தேயிலைத் தொழிற்சாலை சேரங்கோட்டில் நிறுவப்பட்டுள்ளது.

கூனூரில் மற்றும் ஒரு தேயிலைத் தொழிற்சாலையினை ரூ. 49 இலட்சம் செலவில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 600 ஹெக்டேர் பரப்பில் ரூ. 235 இலட்சம் செலவில் ஜென்மம் காடுகளில் தேயிலைத் தோட்டம் எழுப்ப வேளாண்மை உதவி மேம்பாட்டு கழகத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் இலங்கையிலிருந்து திரும்பும் 750 அகதிக் குடும்பங்களைக் குடியமர்த்த வகை செய்யப்படும்.

மேலும் 1,250 இலங்கை அகதிக் குடும்பங்களுக்கு மறு வாழ்வு அளிக்கும் நோக்கில், 1,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் தேயிலைத் தோட்டம் நிறுவும் மற்றொரு திட்டமும் பரிசீலனையில் உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் "ஸீ பீல்டு" (Sea field) எஸ்டேட்டில் தேயிலைத் தோட்டம் எழுப்பும் ஒரு விரிவான பணித் திட்டம் தயாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணிக்காக ஒரு துணை வனப்பாதுகாவலர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம் :

மத்திய அரசு ஆதரவு பெற்ற இத்திட்டத்தின்கீழ் ஐந்தாவது திட்ட காலத்தில் நீலகிரி மாவட்டத்தில் 31.33 இலட்சம் ரூபாய் செலவிட்டு காடுகளை வளர்க்க திட்டமிடப் பட்டுள்ளது.

1978-79 ஆம் ஆண்டில் 26.10 இலட்சம் செலவில் 600 ஹெக்டேர் பரப்பில் பயன்தரும் தைல மரங்கள், ஊசி இலை மரங்களை வளர்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1979-80ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 22.07 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1,000 ஹெக்டேர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மத்திய அரசு ஆதரவுத் திட்டங்கள்.

1. கலப்பின மரங்கள் வளர்த்தல் ;

இது மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டம். இத்திட்டத்தின் கீழ் செலவிடப்படும் தொகை மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் 75:25 விகிதாச்சாரப்படி பங்கிடப்படுகிறது.

1978-79-ல் ரூ. 18.85 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

1979-80-ல் இத்திட்டத்தினைச் செயல்படுத்த 44.74 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 6,000 ஹெக்டேர் பரப்பில் தோட்டங்கள் வளர்க்கப்படும்.

1979 ஏப்ரல் 2]

2. தரம் தாழ்ந்த காடுகளை வளப்படுத்துதல்:

இதுவும் மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டம். இத்திட்டத்திற்கு ஆகும் செலவுத் தொகையை மத்திய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதப்படி பகிர்ந்து கொள்கின்றன.

1978-79-ல் ரூ. 30.27 இலட்சம் செலவிட்டு 1,400 ஹெக்டேர் பரப்பில் மரம் வளர்க்கவும், 1,500 ஹெக்டேர் பரப்பில் முன்னேற்பாடு வேலைகள் மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளது. மக்களின் விறகு முதலிய தேவைகளை ஈடு செய்வதற்காக வனத்துறையின் தரம் தாழ்ந்த காடுகளைப் பொருளாதார சிறப்புற்ற தோட்டங்களாக மாற்ற இத்திட்டம் வகை செய்கிறது.

1979-80-ல் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ. 30.17 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 2,400 ஹெக்டேர் பரப்பில் தோட்டங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

3. முந்திரிகளின் பதியப் பெருக்கம்:

இது ஒரு மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டமாகும். ஒட்டுதல், பதியம் வைத்தல் போன்ற முறைகளைக் கையாண்டு முந்திரியின் விளைச்சலைப் பெருக்குதலே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1978-79 ஆம் ஆண்டில் பதியப்பெருக்கம் முறையில் முந்திரிகளின் வளர்ச்சியைப் பெருக்க இந்திய அரசு ரூ. 48,000 இத்திட்டத்திற்கென ஒதுக்கியது.

1978-79 ஆம் ஆண்டில் செங்கல்பட்டு பகுதியில் 200 ஹெக்டேர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

1979-80-ல் திருச்சிராப்பள்ளி பகுதியில் ரூ. 0·50 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

தமிழகத்தின் கிழக்குக் கடற்கரை ஓரங்களில் 'தடுப்பு வட்டங்கள்'

கடற்கரை ஓரமாகக் காற்றுத் தடுப்புத் தோட்டங்களை எழுப்பி புயற்காற்றினால் ஏற்படும் இன்னல்களைத் தடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1978-79ஆம் ஆண்டிலிருந்து 6 வருடங்களில் 15,000 ஹெக்டேர் பரப்பில் செங்கற்பட்டு, தென்னாற்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களின் வருவாய் மற்றும் வனத்துறைகளுக்குச் சொந்தமான கடற்கரை ஓர நிலங்களில் மரங்களை வளர்ப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டத்திற்கு ரூ. 302.08 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

1978-79 ஆம் ஆண்டில் 25.62 இலட்சம் செலவில் 1,500 ஹெக்டேர் நிலப்பரப்பில் மரங்களை வளர்க்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

[1979 ஏப்ரல் 2

1979-80-ல் ரூ. 25.96 இலட்சம் செலவில் 2,700 ஹெக்டேர் நிலப்பரப்பில் மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

முதற்படியாக செங்கற்பட்டு மற்றும் தென்னார்க்காடு மாவட்டங்களில், கடலோர நிலங்களில் மரங்களை நட, செங்கற்பட்டைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு கோட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

வனத்துறை நிர்வாகத்தைச் செம்மைப்படுத்துதல்.

உலவும் கண்காணிப்புப் படைகளையும் (Mobile Patrol Party) திருத்தியமைக்க அரசு முடிவு செய்துள்ளது. தற்பொழுதுள்ள ஏழு உலவும் கண்காணிப்புப்படை ஒவ்வொன்றும் அப்பகுதியின் வனக்காப்பாளரின்கீழ் இயங்குகிறது. நமது வனச்செல்வத்தை உறுதியுடன் பாதுகாப்பதற்கு இந்த அமைப்பை வலுவடையச் செய்து ஒழுங்குபடுத்தி வனப் பாதுகாப்புப் படை (Forest Protection Squad) எனப் பெயரிட அரசு முடிவெடுத்துள்ளது. இப்படைகள் ஒருங்கிணைந்து செயல்பட சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு மேல்நிலை அதிகாரியின் நேரடி அதிகாரத்தில் கொண்டு வரப்படும். இதன்மூலம் தலைமை வனப்பாதுகாவலர் பதவிக்கும் மற்ற வனப் பாதுகாவலர் பதவிக்கும் இடையில் ஒரு புதிய பதவியும் ஏற்படுத்த வகைசெய்யப்படுகிறது. இவ்வதிகாரி துணை வனத் துறைத் தலைவர் என அழைக்கப் படுவார்.

இதுவரை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தோடு சேர்க்கப்பட்டிருந்த தலைமை வன விலங்கு பாதுகாவலரின் அலுவலகம் மற்ற பகுதிகளிலுள்ள வனக்காப்பாளர் அலுவலகங்களைப் போல் தனி அலுவலகம் என அறிவித்தும், அவருடைய தலைமையகத்தைச் சென்னையிலிருந்து கோயம்புத்தூருக்கு மாற்றியும் அரசு ஆணையிட்டுள்ளது. இதன் காரணம் மிக அதிகமான வன விலங்கு சரணாலயங்களான முதுமலை, ஆனைமலை, முண்டந்துறை, களக்காடு போன்றவை சென்னையைக் காட்டிலும் கோயம்புத்தூருக்கு மிக அருகாமையில் இருப்பதுதான். நடப்பாண்டிலேயே இந்த அலுவலகத்தை சென்னையிலிருந்து கோயம்புத்தூருக்கு மாற்றத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

வனத் துறையின் ஒழுங்கீனங்களைத் தவிர்க்கவும், வனக் குற்றங்கள் அதிகமாக நிகழ்வதைத் தடுக்கவும் அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதன் பயனாக சென்ற வருடம் கண்டுபிடிக்கப்பட்ட வனக் குற்றங்களின் எண்ணிக்கை சுமார் 31,352 ஆகும். அக்குற்றங்கள் சம்பந்தப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு சுமார் ரூ. 35,18,791. காடுகளைப் பாதுகாப்பதில் தங்கள் கடமையிலிருந்து தவறிய 165 வனத் துறை அலுவலர்கள் மீதும், இரண்டு உயர் அதிகாரிகள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த அதிகப்படியான வனக

குற்றங்களையும், ஒழுங்கு நடவடிக்கைகளையும் கருத்தில் கொண்டு வனத் துறையின் நிர்வாகத்தைச் சீர்திருத்த, அரசு சமீபகாலத்தில் எடுத்த நடவடிக்கைகளில் வனத்துறைத் தலைவர் பதவிக்கு ஒரு முதுநிலை இந்திய நிர்வாகப் பணி அதிகாரியை (Senior I.A.S. Officer) நியமித்ததும் ஒன்று.

1979 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28-ம் நாள் வரை இரண்டு வனத்துறைத் தலைவர் பதவிகளையும், துறை நுட்ப வல்லுநர்கள் வகித்து வந்தனர். இதுவரை வனத்துறைத் தலைவர் (பொது) பதவியை வகித்து வந்தவர், 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி 28-ம் தேதி ஓய்வு பெற்றார். இத்துறையின் நிர்வாகம் நல்ல திறமையோடு செயலாற்றவும், பயனுள்ள தலைமை கட்டுப்பாடு இவைகளைப் பெறவும் 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ம் நாள் முதல் அரசு இந்திய நிர்வாகப் பணி மேல் முதுநிலைப் பிரிவில் வனத்துறைத் தலைவர் பதவியை ஏற்படுத்தி அதில் ஒரு முதிய (Senior) இந்திய நிர்வாகப் பணி அதிகாரியை நியமித்துள்ளது. இந்திய வனப்பணிப் பிரிவிலுள்ள நிரந்தரமான வனத்துறைத் தலைவர் பதவியை மூத்த இந்திய வனப்பணி அலுவலர் ஒருவர் தொடர்ந்து வகிக்கிறார். இவர் வனத்துறைத் தலைவர் (வளர்ச்சி) என்று அழைக்கப்படுகிறார்.

முடிவுரை:

வனத் துறை பெரும்பாலும் வேலை வாய்ப்பளிக்கும் துறையாகும். எனவே, அதில் முதலீடு செய்யப்படும் நிதி அனைத்தும், கிராமப்புறத்திலும், மலைப் பகுதிகளிலும் வாழும் மக்களுக்கு பெரிதும் வேலை வாய்ப்பளித்து உதவுகிறது. நமது எதிர்காலக் கொள்கை பழங்குடியினர் போன்ற சமூகத்தில் நலிந்துள்ள பிரிவினர்க்கு தொடர்ந்து வேலை வாய்ப்பினை வழங்குவதோடு நமது மாநிலத்தில் தொழில்கள் மேலும் பெருக காடுபடு மூலப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கிடச் செய்வதும் நமது முக்கியமான குறிக்கோளாகும். விலை மதிப்பு மிகுந்த மரங்கள் திருட்டுத்தனமாக வெட்டப்படுவதினின்றும் பாதுகாக்க அரசு உரிய கவனம் செலுத்தி அதற்குத் தக்க சட்டத்திருத்தங்களையும் இச்சட்ட மன்றக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வரவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இணைப்பு V.

[394-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

தொகுதிக்கை எண் 47.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை, அரசுக்கும் பொது மக்கள் மற்றும் பத்திரிகை உலகுக்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்தும் ஒரு பொதுத் தொடர்பு அமைப்பாக இயங்கி

வருகிறது. அரசின் கொள்கைகள், திட்டங்கள், செயல்கள், சாதனைகள் ஆகியவை. பத்திரிகைகளுக்கான செய்திக் குறிப்புகள், திரைப் படங்கள், பொருட்காட்சிகள், நாடகம்—கலை நிகழ்ச்சிகள் மற்றும் நூல் வெளியீடுகளாக இத்துறையின் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. பொது மக்களின் குறைகளை, தேவைகளை அரசுக்கும், அரசின் நிர்வாகத் துறைகளுக்கும் எடுத்து விளக்கும் பணியும் இத் துறையினால் மேற்கொள்ளப்படுகிறது.

அரசின் பல்வேறு துறைகளும். அரசின் கீழுள்ள பல்வேறு கழகங்கள், வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவைகளும் தருகின்ற விளம்பரங்கள் அனைத்தும் ஒரளவு ஒருமுகப்படுத்தப் பெற்று இந்தத் துறையின் வாயிலாக பத்திரிகைகளுக்கு வழங்கப்படுகின்றன. இத்துடன் செய்தி—மக்கள் தொடர்புத் துறை. பல விளம்பரங்களைத் தானே தயாரித்தும் வெளியிடு கிறது. இந்த விளம்பரங்களை பொதுவாக அரசின் கொள்கை களை, திட்டங்களைப் பொது மக்களுக்கு விளக்கும் முறையில் அமைகின்றன.

விழாக்கள்:

நாட்டு மக்களுக்கு, வரலாற்று நிகழ்ச்சிகளையும் மக்களுக்காகப் பாடுபட்ட தேசத் தலைவர்களின் பெருமை களையும் எடுத்து விளக்குவதற்காக விழாக்களையும். பெருந் தலைவர்களின் பிறந்த நாள் விழா, நினைவு நாள் நிகழ்ச்சி களையும் இத்துறை நடத்துகிறது. 1978 ஆம் ஆண்டில், திருவள்ளுவர், கவிஞர் பாரதிதாசன், காயிதே மில்லத், காமராஜ், வ. உ. சி., பாரதியார், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், அண்ணல் காந்தியடிகள், முத்துராமலிங்கத் தேவர், நேருஜி, மூதறிஞர் ராஜாஜி, நேதாஜி ஆகிய தலைவர் களின் பிறந்த நாள் விழாக்கள், விடுதலை நாள், குடியரசு நாள், ஐ. நா. சபை நாள், மற்றும் மனித உரிமைகள் நாள் ஆகியவை கொண்டாடப்பட்டன.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழா.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவானது 1978 செப்டம்பர் திங்களிலிருந்து தொடங்கி சிறப்பாகக் கொண் டாடப்படுகிறது. நூற்றாண்டு விழாவின் தொடக்க விழா வானது 1978 செப்டம்பர் 17, 18, ஆகிய இரு நாட்களிலும் தந்தை பெரியார் பிறந்த நகரான ஈரோட்டில் கொண்டாடப் பட்டது. 1978 அக்டோபரிலிருந்து 1979 ஆகஸ்ட் வரை, ஒவ்வொரு மாவட்டத்திலும் நூற்றாண்டு விழாவை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டதற்கேற்ப, இவ்விழாக்கள் ஈரோட்டை தொடர்ந்து மதுரை, திருநெல்வேலி, வடஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்டுவிட்டன. இதன் நிறைவு விழா 17-9-1979 அன்று சென்னையில் நடத்தப்

படவிருக்கிறது. அரசால் அமைக்கப்பட்ட தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக் குழு பல பரிந்துரைகளைத் தந்துள்ளது. அவற்றுள், சென்னையில் தந்தை பெரியார் நினைவாக ஒரு பெரிய அரங்கம் அமைப்பது, விஞ்ஞான அறிவையும், விஞ்ஞான ரீதியான சிந்தனையையும் மக்களிடையே பரப்புவதற்காக விஞ்ஞானக் கூடம் கட்டுவது, சமூக இயல் ஆராய்ச்சி நிலையம் நிறுவுது ஆகியவையும் அடங்கும், இவை அரசின் பரிசீலனையில் உள்ளன. பெரியார் நீண்டகாலமாகக் கையாண்டு வந்த எழுத்துச் சீர்திருத்தம் பற்றி இக்குழு கூறிய பரிந்துரைகள் ஆராயப்பட்டு இந்த எழுத்துச் சீர்திருத்தம் பற்றி தமிழ் அறிஞர்கள் பலர் நீண்டகாலமாக வெளியிட்டு வந்த கருத்துகளின் அடிப்படையில் அரசின் ஆணைகளும் வெளியிடப்பட்டுள்ளன. பெரியாரின் வாழ்க்கையை விளக்கும் நாடகங்களும் பல்வேறு இடங்களில் நடத்தப்படுகின்றன. பெரியாரின் வாழ்க்கையையும் அவரது அறிவுரைகளையும் விளக்கிடும் ஒலி-ஒளி நிகழ்ச்சி நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. சாதியைக் குறிப்பிடும் முறையில் தெருப் பெயர்கள் அமையக் கூடாது என ஆணையிடப்பட்டுள்ளது. சாதி பேதத்தை ஒழிக்க கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கட்கு சட்டபூர்வமான சலுகைகள் எழங்க அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

பெரியார் தனது வாழ்நாளில் போராட்டங்களை நடத்தி சிறையில் இருந்த விவரங்களை நினைவுக் கூர்களாக, அந்தந்த சிறைச்சாலைகளில் பதிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பெரியார் அவர்களின் வரலாறு, அவர்களுடைய பகுத்தறிவுக் கருத்துக்கள் அடங்கிய நூல்களும் வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மூதறிஞர் இராஜாஜி நூற்றாண்டு விழா.

மூதறிஞர் இராஜாஜியின் நூற்றாண்டு விழாவினை அரசு மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. தொரப்பள்ளியில் உள்ள இராஜாஜியின் நினைவில்லம் செம்மைப்படுத்தப்பட்டதோடு, அதற்குச் செல்லும் சாலைகள், சீர்திருத்தி செப்பனிடப்பட்டன. இராஜாஜியின் வாழ்க்கையையும், அவரது அறிவுரைகளையும் விளக்கும் நிலையான கண்காட்சி, தொரப்பள்ளியிலும் அமைக்கப்பட்டுள்ளன. நூற்றாண்டு விழாவை யொட்டி இராஜாஜியின் உருவச் சிலை சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது. அத்துடன் சென்னையில் 'வடக்குக் கடற்கரைச் சாலைக்கு' 'இராஜாஜி சாலை' என்றும் பெயரிடப்பட்டுள்ளது. இராஜாஜியின் நினைவாக ஒரு நூலகமும், படிப்பகமும் அமைப்பதற்காக கிண்டியில் இரண்டு மாடிக் கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

காமராஜ் நினைவு இல்லம், சென்னை.

சென்னையில் திருமலைப்பிள்ளை சாலையில் காமராஜ் வாழ்ந்த இல்லத்தை அரசு வாங்கி அதனை காமராஜ் நினைவு இல்லமாக மாற்றியுள்ளது. அவரது வாழ்க்கையைச் சித்தரிக்கும் நிரந்தரக் கண்காட்சியும் இந்த நினைவு இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

பொருட்காட்சிகள்.

நமது மாநிலத்திலும், பிற மாநிலங்களிலும் நடைபெறுகிற பொருட்காட்சிகளில் அரசின் சார்பாக இத்துறை பங்கு பெற்று, அரசின் பல்வேறு துறைகளின் செயற்பாடுகளையும சாதனைகளையும் விளக்கும் பணியினை ஆற்றி வருகிறது. இம்மாநிலத்தில் பொருட்காட்சிகள் நடத்துவது, மற்றும் அப்பொருட்காட்சிகளில் அரசுத் துறைகள் பங்கு கொள்வது பற்றிய அரசின் கொள்கைகளை இத்துறை கவனிக்கிறது. அரசுக்கும், உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் சொந்தமான பொதுவிடங்களில் தனி நபர்களோ அல்லது தனி நிறுவனங்களோ பொருட்காட்சி நடத்த அனுமதி தளிப்பதில்லையென்று அரசு முடிவெடுத்துள்ளது. எனினும், அரசின் முன் அனுமதி பெற்று பொது இடங்களில் உள்ளாட்சி நிறுவனங்களும் அங்கீகாரம் பெற்ற தொழிற் வர்த்தக, கல்வி நிறுவனங்களும் பொருட்காட்சிகளை நடத்த அனுமதிக்கப்படுகின்றன. அரசின் சார்பில் 1978 ஆம் ஆண்டில் சேலம் நகரில் வருடாந்திர பொருட்காட்சியை இத்துறை நடத்தியது.

செய்தி நிலையங்கள்.

சென்னை, மதுரை, தஞ்சை ஆகிய இடங்களிலுள்ள இத்துறையின் செய்தி நிலையங்கள் பல்வேறு பொருள்கள் குறித்தும், மற்றும் அரசின் கொள்கைகள், சாதனைகள் பற்றியும் செய்திகளையும் விளக்கங்களையும் பொது மக்களுக்கு வழங்குகின்றன. படிப்பகங்களையும் நடத்தி வருகின்றன.

சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கம், காந்தி இல்லம், இராஜாஜி மண்டபம், சீரணி அரங்கம், திருவள்ளுவர் கோட்டம், வேலூரில் உள்ள அண்ணா கலையரங்கம் ஆகியவை இத்துறையின் நிர்வாகத்தில் உள்ளன. இதுவரை நினைவில்லங்களின் பராமரிப்பு பல்வேறு துறைகளின் கீழ் இருந்து வந்தது. தற்பொழுது பொதுப்பணித்துறையின் கீழ் இருந்து சென்னை அறிஞர் அண்ணா சதுக்கம், கிண்டி காமராஜர் நினைவாலயம், கிண்டி இராஜாஜி நினைவாலயம், கன்னியாகுமரி காந்தி

1979 ஏப்ரல் 21

கல்வித்துறையின்கீழ் இருந்த பாரதியார் நினைவு இல்லம், எட்டயபுரம், ஆகியவை செய்தி—மக்கள் தொடர்புத் துறையின் கீழ் மாற்றப்பட்டுள்ளன.

தமிழரசு

'' தமிழரசு '' இதழ் (தமிழ்—ஆங்கிலம்) இத்துறையினரால் வெளியிடப்படும் இதழாகும். இந்து அறநிலையத்துறையால் வெளியிடப்பட்டு வருகிற '' திருக்கோயில் '' என்னும் இதழைத் தவிர, அரசாங்கத்தில் மற்ற பத்திரிகைகளையெல்லாம் இணைத்து ' தமிழரசு ' 1970—ஆம் ஆண்டு ஜூலையில் துவக்கப்பட்டது. திங்கள் இருமுறை வெளிவரும் தமிழரசின் தமிழ் இதழில், 50,000 பிரதிகளும் மாதம் ஒரு முறை வெளி வரும் ஆங்கில இதழில் 3,000 பிரதிகளும் வெளியிடப்படு கின்றன. இவை இத்துறையின் கீழுள்ள '' தமிழரசு '' அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகத்தில் மத்திய அரசின் வெளியீடான ' திட்டம் ', அறநிலையத்துறையின் '' திருக்கோயில் '' ஆகியவை அச்சிடப்படுகின்றன. தொழிலாளர் நலத்துறை வெளியீடான '' உழைப்பவர் உலகம் '' என்னும் ஏடும் இங்கு அச்சிடப்படவிருக்கிறது. மேலும் அரசுக்குத் தேவையான சுவரொட்டிகள், சிறு கையேடுகள், துண்டு வெளி யீடுகள், அழைப்பிதழ்கள் முதலியனவும் இந்த அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

திரைப்படங்களுக்கு உதவித்தொகை

இம் மாநிலத்தில் திரைப்படத் தொழிலை எதிர்நோக்கியுள்ள பல இடர்ப்பாடுகளில், கூடுதலான தயாரிப்புச் செலவு, படங் களின் தரக்குறைவு இவை இரண்டும் அடங்கும். தேசிய அளவில் மக்களின் நன்மையை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்களை உள்ளடக்கி தரமான திரைப்படங்கள் உருவாவதை ஊக்குவிப்பதற்காக, ஒவ்வொரு ஆண்டும், ஐந்து படங்களுக்கு ஒவ்வொரு லட்ச ரூபாய் வீதம் அரசு உதவித் தொகை வழங்கு கிறது. படங்களைத் தேர்ந்தெடுப்பதில் அரசுக்கு ஒரு குழு ஆலோசனைக் கூறுகிறது.

சிறந்த திரைப்படங்கள்—கலைஞர்களுக்குப் பரிசுகள்

உயர்ந்த கலை உணர்வு, சிறந்த தொழில் நுணுக்கம் அமைந்த பாராட்டுக்குரிய சிறந்த படங்களைத் தயாரிப்பதை ஊக்குவிப்பதற்காக, வருடாந்தர பரிசுகள் வழங்கும் திட்டம் மீண்டும் 1978-79 நிதி ஆண்டிலிருந்து செயற்படுத்தப்படு கிறது. இத்திட்டத்தின்கீழ், சிறந்த படங்கள், செய்திப் படங்கள், குழந்தைகளுக்கான படங்கள், நடிக—நடிகையர், தொழில் நுட்பக் கலைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரொக்கப் பரிசு, மற்றும் விருதுகள் வழங்கப்பட உருக்கின்றன. இதற் கென அமைக்கப்பட்டுள்ள ஒரு குழு இத்தேர்வினை செய்கிறது.

[1979 ஏப்ரல் 2

தமிழில் குழந்தைகள் படத் தயாரிப்பை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும் 1979 ஆம் ஆண்டானது குழந்தைகள் ஆண்டாகக் கொண்டாடப்படுவதை முன்னிட்டும், தமிழில் மூன்று குழந்தைகள் படங்களை தயாரிக்கவும், நான்கு பிற மொழிப் படங்களை தமிழில் மொழி மாற்றம் செய்து தரவும், இந்தியக் குழந்தைகள் திரைப்படக் கழகத்திற்கு ரூ. 4 இலட்சம் உதவி நிதியாக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது. திறமையும், பொருளாதாரத் தட்டுப்பாடும் உள்ள தயாரிப்பாளருக்கு நிதி உதவி செயவதற்காக அரசுக்குச் சொந்தமான திரைப்பட வஸர்ச்சிக் கழகம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது. தயாரிப்பாளர்கள் தமிழில் தரமான படங்களைத் தயாரிக்க உதவுவது இக்கழகத்தின் நோக்கம்.

அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களிலும், பொது இடங்களிலும் தனியார் படப்பிடிப்பு நடத்த அந்தந்த இடங்களை நிர்வகித்து வந்த பல்வேறு துறையினரை அணுகி, பல்வேறு இடங்களில் அனுமதி பெற்றுத்தான் படம் எடுக்கும் முறை இருந்து வந்தது. இம் முறையினால் திரைப்படத் தொழில துறையினர் பட்டுவந்த இன்னல்களை மனதிற்கொண்டு இம் முறை மாற்றப்பட வேண்டியது என அரசு நிர்ணயித்தது. 1978 ஜூலைத் திங்களிலிருந்து இத்தகைய அனுமதி வழங்கும் முறையை மாற்றி, ஒரே துறையின் மூலம் அனுமதி வழங்கலாம் என்ற முடிவின்படி செய்தி–மக்கள் தொடர்புத்துறை இயக்குநரிடம் அனுமதி பெற்றுக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் படப்பிடிப்புக்கான அனுமதி வழங்கும் முறை திரைப்படத் தொழிலுக்கும், பெரிதும் உதவியாக அமைந்துள்ளது.

திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி

திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி 1948 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு கணிசமாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது. திரைப்படத் தயாரிப்பு சம்பந்தப்பட்ட எல்லாப் பிரிவுகளிலும் பயிற்சி கொடுத்து தேர்வு நடத்தி, வெற்றி பெற்றோர்க்குச் சான்றிதழ் வழங்குவதுடன் திரைப்படத்திற்குள்ள ஆற்றலை மக்களுக்கு உணர்த்துதல், திரைப்படத் தொழில் பற்றிய ஆய்வு நிகழ்த்துதல் ஆகியவை இக்கல்லூரியின் குறிக்கோள்களாகும். அரசு அலுவலர்களையும், திரைப்படத் தொழில் தொடர்புடைய அரசுச் சார்பற்ற தொழில் நுட்ப வல்லுநர்களையும் கொண்ட பழுலோசனைக் குழு ஒன்று இக்கல்லூரிக்குத் தேவையான விருலாசனைகளை வழங்கி வருகிறது. படப்பிடிப்பு, ஒலிப்பதிவு படச்சுருள் கழுவுதல், படம் இயக்குதல், திரைக்கதை வசனம் எழுதுதல் படத் தொகுப்பு, நடிப்பு ஆகியவற்றில் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

[1979 ஏப்ரல் 2]

தொலைக் காட்சி சம்பந்தப்பட்ட துறைகளில் பயிற்சி யளிப்பதற்கான திட்டமொன்றும் ஆய்வில் உள்ளது. தற் போதைய நவீன உத்திகளை மாணவர்களுக்குப் புகட்டிட நவீன கருவிகள் இங்கு நிறுவப்பட வேண்டியுள்ளன. இக் கல்லூரி வழங்கும் படப் பிடிப்பு, ஒலிப்பதிவு, படம் கழுவுதல் ஆகியவற்றுக்கான சான்றிதழ் பயிற்சி (டிப்ளமா) பம்பை மத்திய அரசு அண்மையில் அங்கீகரித்துள்ளது. எனவே, இந்தக் கல்லூரியில் பயின்று வெளிவரும் மாணவர்களுக்கு பிற மாநிலங்களிலும் உள்ள அரசு நிறுவனங்கள், தொலைக் காட்சி நிலையங்கள் ஆகியவற்றில் வேலை கிடைப்பதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது. 1977–78 வரை 492 மாணவர்கள் டிப்ளமா பட்டம் பெற்றுள்ளனர்.

இக்கல்லூரியிலுள்ள படப்பிடிப்புக் கருவிகளும், படபிடிப்புத் தளமும், படம் தயாரிப்பவர்களுக்கு வாடகைக்கு கொடுக்கப் படுகிறது, இதனால் அரசுக்கு வருவாய் கிடைப்பதுடன், புகழ் பெற்ற படத் தொழில் வல்லுநர்களின் செயல் திறன்களை நேரில் கண்டு அறியவும், அவர்களுடன் படப்பிடிபபில் பங்கு கொள்ளவும் இக்கல்லூரியில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு நல்ல வாய்ப்பும் கிடைக்கிறது. படத் தயாரிப்பாளருக்குத் தேவைப்படும் இப்படப்பிடிப்புத் தளத்தில் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதற்கு ஏற்ற வகையில் வசதிகளைப் பெருக்கிட பல்வேறு பணிகள் மெற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மாநிலத்தில் நடைபெறும் அரசின் ஆக்கப் பணிகளை, மக்கள் பங்கேற்கும் பொது நிகழ்ச்சி களை தேர்ந்தெடுத்து, படமாக்கி, செய்திப்படங்களாக மத்திய அரசின் திரைப்படப் பிரிவின் மூலம் வெளியிடுகிறது.

இத்துடன் அரசின் பல்வேறு துறைகளின் பணிகளை, மக்களுக்குத் தேவையான செய்திகளை கருத்து விளக்கப் படங்களாக (டாகுமெண்டரி) எடுத்து இத்திரைப்படப் பிரிவு வெளியிடுகிறது. இப்படங்களும் (35 மீல்லி மீட்டர் அளவில்) திரையரங்கங்களுக்கு மத்திய அரசின் திரைப்படப் பிரிவின் மூலம் வெளியிடப்படுகின்றன. 16 மில்லி மீட்டர் அளவில் அரசின் செய்தி, விளம்பரப் பிரிவுகளுக்கும் அனுப்பப்பட்டு பொது மக்களுக்குக் காட்டப்படுகின்றன.

முக்கிய அரசு விழாக்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றைப் புகைப்படம் எடுப்பதற்காக எல்லா வசதிகளுடனும் கூடிய புகைப்படப் பிரிவு ஒன்று இத்துறையில் இருக்கிறது. இப்பிரிவு, எடுக்கும் புகைப் படங்களைப் பத்திரிகைகளுக்கும் பல்வேறு நிறுவனங்களுக்கும் வழங்குகிறது.

தமிழ்நாடு திரையரங்குக் கழகம், சென்னை

1972 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு திரையரங்குக் கழகம், பொறுப்பு வரையறுக்கப்பட்ட, முற்றிலும் அரசின் நிறுவனமாகும். தமிழநாட்டில், செமி பர்மனண்ட் திரையரங்கங்களைக் கட்டவும், நிலையான திரையரங்கங்களாக அவற்றை மாற்றி அமைத்திடவும், அத்தகைய திரையரங்கங்களுக்குத் தேவையான கருவிகள் முதலியவற்றை வாங்க உதவிடும் வகையில் நிதியுதவியளிப்பதே இக்கழகத்தின் தலையாய நோக்கமாகும். இந்த கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ 25 லட்சம். 1979 ஆம் ஆண்டு தமிழக அரசு பங்குமூலதனத்துக்காக மேற்கொண்டு ரூ. 10 இலட்சமும், நீண்ட காலத் தவணைக் கடனாக ரூ. 10 இலட்சமும், வழங்கியுள்ளது. கடனாக மேலும் ரூ. 25 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது.

இன்றைய நிலையில், சட்டப்படி செல்லக்கூடிய ஒப்பளிப்புகள் 77 ஆகும். இவற்றில் 65 நபர்கள் திரையரங்கங்களைக் கட்டி முடித்து படங்களை திரையிட்டு வருகின்றனர். திரையரங்கம் ஒன்றுக்கு கடன் உதவியின் உச்ச வரம்பு ரூ 1.20 இலட்சமாகும். தமிழ்நாடு திரையரங்குக் கழகம் இதுவரையில் ரூ. 88.43 இலட்சம் கடன் தொகையாக அனுமதித்துள்ளது. அத்தொகையில் ரூ. 80. 27 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

கிராமப் புறங்களில் திரையரங்கங்களைக் கட்டும் பணியை ஊக்குவிப்பதில் திரையரங்குக் கழகம் வெற்றி கண்டுள்ளது. படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்கள் கூட்டுறவு முறையில் திரை அரங்கு அமைக்க விரும்பினால் முன்னுரிமை அளிக்கலாம் என்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்தினை ஒட்டி இக்கழகம் கடனுதவி வழங்குவதில், புதிய சிந்தனையோடு செயல்பட திட்டமிட்டுள்ளது.

மேலும், இயலுமானால், கழகமே, சொந்தப் பொறுப்பில் செமி பர்மனண்ட் திரை அரங்குகளைக் கட்டலாமா? என்ற கருத்து ஒன்றும் கழகத்தின் யரிசிலனையில் உள்ளது.

தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1955 மற்றும் தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குபடுத்துதல்) விதிகள், 1957

நிர்வாகம்

தமிழ் திரைப்படத்துறை, ஆங்கிலம், இந்தி, மலையாளம், தெலுங்கு மற்றும் கன்னடப் படங்களின் கடுமையான போட்டியால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை நலிந்து போன நிலையில் இருந்ததால் அதற்கு வலிகூட்டி வளர்க்க இவ்வாக்கு துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்படுத்த

யுள்ளது. இதன் காரணமாக தமிழ்த் திரைப்பட உலகம் புத்துணர்ச்சியும் புது வேகமும் பெற்று வளர்ச்சியடைந்துள்ளது. இதனால் தமிழ்த் திரைப்படங்களுக்குப் போதிய நல்ல திரையரங்குகள் கிடைக்க வழி செய்யும் நோக்குடன் எப்போதும் பிறமொழிப் படங்களையே திரையிட்டுவரும் திரையரங்குகளில், கட்டாயமாக ஆண்டுக்கு 12 வாரங்கள் தமிழ்ப் படங்களை திரையிட்டாக வேண்டுமென்று விதிகள் திருத்தப்பட்டுள்ளன.

தற்போது தமிழ்த், திரைப்படங்களின் வெளியீட்டு எண்ணிக்கைக்கு ஈடு கொடுக்கப் போதிய அளவு திரையரங்குகள் இல்லாத நிலையைப் போக்க, குறைந்த முதலீட்டில் திறந்த வெளித்திரையரங்குகளும், டூரிங் திரையரங்கங்களும், செமி பர்மனண்ட் திரையரங்குகளும் அமைக்க சட்டப்படி அனுமதி வழங்குவதில் உள்ள சிக்கல்களைத் தவிர்த்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாநகரக் காவல்துறை ஆணையர் ஆகியோர் இது போன்ற அனுமதி மனுக்களின் மீது துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். திரையரங்குகளுக்கு கட்டிட உறுதிச் சான்றிதழ் மற்றும் மின் சான்றிதழ் ஆகியவைகளை வழங்குவதில் உள்ள கால தாமதங்களையும் சிரமங்களையும் தவிர்க்க நடவடிக்கை எடுப்பதுடன் நடைமுறை உணர்வுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று சம்பந்தப்பட்ட இலாகாக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

டூரிங் திரையரங்குகளின் உரிமைக காலத்தை 2½ ஆண்டிலிருந்து 3 ஆண்டுகளாகவும், செமி பர்மனண்ட் திரையரங்குகளை நிரந்தர திரையரங்குகளாக மாற்றுவதற்கான கால அளவை 5 ஆண்டிலிருந்து 7 ஆண்டாகவும் கால நீடிப்பு வழங்கியுள்ளதுடன், கிராமப்புறங்களிலுள்ள செமிபர்மனண்ட் திரையரங்குகளுக்கு நிலையாக இயங்க அனுமதி வழங்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் கிராமப் புறங்களில் அமைந்துள்ள டூரிங் திரையரங்குகளில் சில நிபந்தனைகளுக்குட்பட்டு, சில நாட்களில் பகல் காட்சிகள் நடத்த அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், குளிர்சாதன வசதியுடைய திரையரங்குகள் மின்சார வெட்டு உள்ள காலங்களில் குளிர்சாதன வசதி செய்யாவிடில் அவை சாதாரண திரையரங்குகளைப் போலவே குறைந்த அனுமதிக் கட்டணங்களைத்தான் வசூலிக்க வேண்டுமென்றும் அரசு உத்திரவு பிறப்பித்துள்ளது. இப்படிப்பட்ட முடிவுகளினால் திரையரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதன் மூலம் அரசுக்கு வருவாயும், ஏழை எளிய மக்களுக்கு பொழுதுபோக்கு வசதியும் பெருகியுள்ளது.

திரையரங்குகளின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில் 1957 ஆம் ஆண்டில் தமிழ்நாடு திரைப்பட (ஒழுங்கு) விதிகள் நடைமுறைத் தேவைக்குத் தக்கவாறு திருத்தப்படுவதுடன் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு திரைப்பட அரங்குகள் சுத்தமாகவும் விதிகளில் கண்டவாறு வசதிகளைக்

கொண்டதாகவும் இருக்க வேண்டுமென அடிக்கடி சோதனைகள் நடத்தப்பட்டு எச்சரிக்கப்பட்டுள்ளன. சென்னை போன்ற நகரங்களில் சில பகுதிகளில் திரையரங்குகள் குவிவதைத் தடுக்கவும், பரவலாகப் பொதுமக்கள் தாங்கள் வாழும் பகுதிகளுக்கு அருகிலேயே திரைப்படங்களைக் காணும் வசதிகளை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில், விஸ்தரிப்புப் பகுதிகளில் வசதிமிக்க சிறிய திரை அரங்குகள் அமைப்பதை அங்கீகரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

தமிழ்த் திரைப்படத் தணிக்கை முறையில் சென்னையிலுள்ள தணிக்கைக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் திரைப்படத்துறையற்றி போதிய அறிவும் அனுபவமும் இல்லாதவர்களாக அமையக் கூடாது என்பதைச் சுட்டிக்காட்டி, மாநில அரசைக் கலந்தாலோசித்து அக்குழுவை மாற்றியமைக்க வேண்டும் என மத்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது. தமிழ்த் திரைப்படங்களில் வெறுக்கத்தக்க பண்பாடற்ற ஆபாசக் காட்சிகள் இடம் பெற அனுமதிக்கக்கூடாது என்ற வகையில் இவ்வரசின் கருத்து மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் பிற நகரங்களில் ஆபாசத் திரைப்படச் சுவரொட்டிகள் ஒட்டுவதைத் தடைசெய்யவும் திரைப்படச் சுவரொட்டிகளைத் தணிக்கை செய்யவும் சட்டமியற்றும் கருத்து அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

சுற்றுலாத்துறை கொள்கை விளக்கக் குறிப்பு :

பழந்தமிழரின் பண்பாட்டுப் பெருமைகளை விளக்கும் வழிபாட்டுத் தலங்களும், உயர்ந்து நிமிர்ந்த மலைச் சிகரங்களின் இடையே எழிலோடு விளங்கும் உடல் நலம் பேணும் மலைத் தலங்களும், நெஞ்சைக் கவரும் கடற்கரைப் பகுதிகளும், பிற இடங்களும் நம் தமிழ்நாட்டின் சிறப்பான சுற்றுலாச் செல்வங்களாகும். "இங்கு இல்லாதன வேறு எங்கும் இல்லை" என்று சொல்லும் வண்ணம், இயற்கை நலங்களனைத்தையும் ஒருங்கே பெற்று, சுற்றுலாப் பயணிகளுக்குப் பயன் தரும் நாடாக தமிழகம் விளங்குகிறது. நீண்ட சாலை வசதிகளும், நாளும் வளர்ந்து வரும் போக்குவரத்து வாய்ப்புக்களும் தமிழகத்தின் சுற்றுலா வளர்ச்சிக்கு வழி வகுக்கின்றன.

தலைமைச் செயலகத்தின், பொதுத் துறையுடன் சுற்றுலாத் துறையின் இயக்ககமும் இணைந்து செயல்பட்டு வருகிறது. மதுரை, உதகை, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, சேலம், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் சுற்றுலா அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த அலுவலகங்கள், பயணிகளுக்கு சுற்றுலாத் தகவல்களை அளித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்குவதுடன் சுற்றுலா மேம்பாட்டிற்கான விளம்பரப் பணி, வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொண்டு

இயங்கி வருகின்றன. மதுரை, திருச்சிராப்பள்ளி, இராமேஸ்வரம், கோயம்புத்தூர் தொடர் வண்டி நிலையங்களிலும், கொடைக்கானலிலும் சுற்றுலாத் தகவல் நிலையங்கள் செயற்படுகின்றன. சென்னை மத்திய தொடர் வண்டி நிலையத்திலும், திருநெல்வேலி தொடர் வண்டி நிலையத்திலும், மீனம்பாக்கம் விமான நிலையத்திலும் சுற்றுலாத் தகவல் நிலையங்கள் விரைவில் தொடங்கப்படவிருக்கின்றன. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்யத்தக்க வகையில், புது டெல்லியிலும் ஒரு சுற்றுலாத் தகவல் நிலையம் தொடங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிதம்பரம், பூம்புகார் போன்ற சுற்றுலாப் பயணிகளை கவரும் இடங்களோடு பிச்சாவாரத்தையும் ஒரு சிறந்த சுற்றுலா மையமாகவும், விடுமுறை ஓய்வகமாகவும் அமைக்கும் திட்டமும் ஏற்கப் பெற்றிருப்பதால் சிதம்பரத்தில் ஒரு சுற்றுலா அலுவலர், பணியாளர்கள் கொண்ட சுற்றுலா அலுவலகம் ஒன்றை நடப்பு ஆண்டில் அமைப்பதென அரசு முடிவு எடுத்துள்ளது.

இளைஞர் விடுதி (Youth Hostel) :

குறைந்த செலவில் இளைஞர்கட்குத் தங்குமிட வசதி செய்ய 1975 ஜூலை முதல் ஒரு இளைஞர் விடுதி, அதன் உள் நிர்வாகக் குழுவின் கருத்துப்படி மத்திய அரசின் கருத்திற் கிசைய இலாப நட்டமற்ற அடிப்படையில் நடத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குப் பங்கு மூலதன உதவி :

1971 ஆம் ஆண்டிலிருந்து இயங்கிவரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம், வணிகக் கலப்புக் கொண்ட வளர்ச்சிப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூபாய்இரண்டு கோடியாகும். இதில், இதுவரை, ரூபாய் 179.25 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது. 1979-80 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 15 இலட்சம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு 1978-79 ஆம் ஆண்டில் ரூபாய் 24.25 இலட்சம் அரசால் கடனாக வழங்கப்பட்டுள்ளது. 1979-80 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 15 இலட்சம் கடனாக அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா மாளிகைகள்:

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உதகையில் படகுக் குழாம் ஒன்றை நடத்தி வருவதுடன் பின்வரும் இடங்களில் சுற்றுலா விடுதிகளையும் நடத்தி வருகிறது :—

1. உதகை
2. திருச்சிராப்பள்ளி.
3. மதுரை.
4. கன்னியாகுமரி.
5. திருச்செந்தூர்.
6. கொடைக்கானல்.

7. ஏர்க்காடு.
8. ஒகேனக்கல்.
9. இராமேசுவரம்.
10. சிதம்பரம்.
11. கன்னியாகுமரி-கேப்விடுதி.
12. மாமல்லபுரம்-கடற்கரை வளாகம்.
13. தஞ்சாவூர்-இராசா ஓய்வு விடுதி.

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பின்வரும் இடங்களிலும் சுற்றுலா விடுதிகளை விரைவில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

1. கோயம்புத்தூர்
2. குற்றாலம்.
3. பிச்சாவரம்.
4. முதுமலை.

சாலையோர விடுதிகள் :

இம் மாநிலத்தின் தேசிய நெடுஞ்சாலைகளில் நூறு கிலோ மீட்டருக்கு ஒரு சாலையோரத் தங்கும் விடுதி வீதம் (Motels) ஏற்படுத்துவது இத்துறையின் குறிக்கோளாகும். இதன் முதற் படியாக, வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள இராணிப்பேட்டையில், சென்னை-பெங்களூர் நெடுஞ்சாலையில் "மரகதம் சாலையோரத் தங்கும் விடுதி" ரூபாய் 7.85 இலட்சம் செலவில் கட்டப்பட்டு 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24 ஆம் நாள் முதல் திறக்கப்பட்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் சென்னை-திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலையில் உளுந்தூர்ப்பேட்டையில் பிறிதொரு சாலையோர விடுதி கட்டப்பட்டு, கூட்டிடப் பணி முடிவுறும் நிலையில் உள்ளது. விரைவில் இது செயல்படத் தொடங்கும்.

போக்குவரத்துப் பிரிவு :

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் போக்குவரத்துப் பிரிவு (Transport Wing) 2 சொகுசு (Luxury Coaches)ப் பேருந்துகளுடன் 1972 ஏப்ரல் மாதம் முதல் செயல்படத் தொடங்கியது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் சுமார் ரூ. 22 இலட்சம் மதிப்புள்ள பத்து சொகுசுப் பேருந்துகள் பயணிகளுக்கென இப்போது இயங்கி வருகின்றன. இப்பேருந்துகள் குறிப்பிட்ட சுற்றுலாப் பயணங்களுக்கும் (Conducted Tours) ஒப்பந்தப் பயணங்களுக்கும் (Package Tours) பயன் படுத்தப்பட்டு வருகின்றன. தனியார் சுற்றுப் பயணங்களுக்கும் பொது மக்களின் தேவைகளுக்கும் துணை புரியும் வகையில் இப்பேருந்துகள் வாடகைக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

பூம்புகாரும் கட்டபொம்மன் நினைவுக் கோட்டையும் :

பூம்புகாரையும் பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள கட்டபொம்மன் நினைவுக் கோட்டையையும் சுற்றுலாத் துறை தனது பொறுப்பில் ஏற்று நடத்தி வருகின்றது. மாநிலம்

1979 ஏப்ரல் 2]

தழுவிய ஏராளமான சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கான முயற்சிகள் இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1979-80 ஆம் ஆண்டில் ரூ. 3 இலட்சம் செலவில் பூம்புகார் வளாகத்திற்குட்பட்ட (Poompuhar Complex) சாலைகளைச் செப்பனிட்டு மேம்படுத்தவும், சுற்றுலாப் பயணிகளுக்குப் பயன்படும் வகையில் மேல் நிலைக் குடிநீர்த் தொட்டி அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவை தவிர, சுற்றுலாப் பயணிகள் தங்குமிட வசதிக்காகப் பூம்புகாரில் கட்டப்பட்டுள்ள "சங்கு" "சிப்பி", வடிவக் குடில்கள், குறைகள் நிவர்த்திக்கப்பட்டு, விரைவில் திறக்கப்பட்டுச் செயல்பட உள்ளன. சுற்றுலாப் பயணிகளை மேலும் கவரும் வகையில் கட்டபொம்மன் நினைவுக் கோட்டையை வசதிகளோடு மேலும் அழகுபடுத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இராமேசுவரம் மேம்பாடு :

இந்தியப் பெருநாட்டின் வழிபாட்டுத் தலங்களுள் முதன்மை பெற்று விளங்கும் இராமேசுவரம், சுற்றுலாப் பயணிகளைப் பெருமளவிற்கு ஈர்த்து வருகின்றது. ஆகவே, இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கும், சமயப் பயணிகளுக்கும் தக்க வசதி செய்யும் வகையில் சுமார் ரூ. 3 இலட்சம் செலவில் ஓய்வறைகளையும், கடற்கரையில் உடை மாற்று அறைகளையும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் இராமேசுவரத்தை இந்தியாவின் மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாக்கும் விரிவான திட்டம் ஒன்றும் அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.

உதகமண்டலம் :

உதகமண்டல ஏரிப் பகுதியில் அழகிற்கு மேலும் மெருகூட்டும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னையில் உள்ள சிறந்த கட்டிடக்கலை நிறுவனம் ஒன்றால் இந்த ஏரியை அழகுபடுத்துவதற்கான பெருந் திட்டம் (Master Plan) தயாரிக்கப்பட்டு ரூ. 16 இலட்சம் செலவில் ஏரிப் பகுதியை மேம்படுத்தும் பணியினை அரசு மேற்கொண்டுள்ளது. இதில் ஏரியை அழகுபடுத்தும் பணிக்காக இதுவரை ரூ. 14.55 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நீலகிரி மாவட்டத்தில் ரூ. 2 இலட்சம் செலவில் இரண்டு தொலை நோக்கி இல்லங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உதகமண்டலத்திற்கு அருகில் உள்ள தொட்டபெட்டா சிகரத்திலும், குன்னூர் அருகிலுள்ள "டால்பின்ஸ் நோஸ்" (Dolphins Nose) என்னும் இடத்திலும் இவைகள் அமைக்கப்படும். தொட்டபெட்டா தொலை நோக்கி வழியாக மைசூர் பீட பூமியையும், உயர்ந்து விளங்கும் நீலகிரி மலை சிகரத்தையும்

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் முக்குருத்தி சிகரத்தையும், மேல் பவானியின் கலிவார்ந்த தோற்றத்தையும், குன்னூர், வெலிங்டன் நகர்களின் அழகிய காட்சிகளையும் சுற்றுலாப் பயணிகள் கண்டு மகிழலாம். "டால்பின்ஸ் நோஸ்" (Dolphins Nose) தொலை நோக்கி வழியாக எழில் மிகுந்த குந்தா அணையையும் காதரினா (Chatherina Falls) அருவியையும் கோயம்புத்தூர், சமவெளியையும் கண்டு களிக்கலாம். குறைந்த வருவாய்ப் பிரிவு பயணிகளுக்கும், திக்கனச் செலவுப் பயணிகளுக்கும் உபயோகப்படும் வகையில் நீலகிரி மாவட்டக் கூட்டுறவுப் பொருள் வழங்கு விற்பனைக் கழகத்திடமிருந்து, உதகமண்டலத்திலுள்ள "ரீஜன்ட் மாளிகை" (Regent Palace) ரூ. 6.45 இலட்சத்திற்கு வாங்கி, அதை ரூ. 3.55 இலட்சம் செலவில் 200 படுக்கைகளுடன் கூடிய துயிலக விடுதியாக மாற்றி (Dormitory) அமைப்பதற்கும் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

ஏர்க்காடு :

ஏர்க்காடு ஏரியையும் சுற்றுப் புறத்தையும் அழகுற மேம்படுத்தி சுற்றுலாப் பயணிகளை மேலும் ஈர்க்கும் வகையில் திட்ட மதிப்பீட்டுடன் கூடிய அறிக்கை ஒன்று தயாரிக்க கட்டிடக் கலை நிறுவனம் ஒன்று அமர்த்தப்பட்டது. இந்நிறுவனம் தோராயமாக ரூ. 36.35 இலட்சம் செலவு மதிப்பீட்டில் படிப்படியாக அமுல் படுத்தத்தக்க வகையில் பல்வேறு திட்டங்களைத் தொகுத்து அரசுக்கு அளித்துள்ளது. ஏர்க்காடு ஏரிக்கு எழில் கூட்டும் பணிகளுக்கு இதுவரை ரூ. 3.72 இலட்சத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இது தவிர ஏரியில் சுற்றுலாப் பயணிகளுக்குப் படகுப் பயண வசதிகளை உருவாக்கவும் தீவுப் பகுதிக்கு மேலும் எழில் கூட்டும் பணிகளை மேற்கொள்ளவும் 1979-80ல் ரூபாய் மூன்று இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏர்க்காட்டிலுள்ள "சீமாட்டி இருக்கை" (Lady's Seat) என்னும் இடத்தில் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் ஒரு தொலை நோக்கி இல்லம் கட்டுவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்தொலை நோக்கியின் வழியாக, வண்ண விளக்கொளியில் மின்னி மிளிரும் சேலம் நகரின் தோற்றத்தைக் கண்டு மகிழலாம்.

கொடைக்கானல் :

கொடைக்கானல் ஏரியையும் மேம்படுத்தி, அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில், அழகுபடுத்தச் செலவு மதிப்பீட்டுடன் திட்ட அறிக்கை ஒன்று தயாரித்துத் தந்திட மற்றொரு கட்டிடக் கலை நிறுவனம் அமர்த்தப்பட்டது. அந்நிறுவனம் தோராயமாக ரூ. 25,64,100 செலவு மதிப்பீட்டில் பல்வேறு கட்டங்களில் செயலாக்கத்தக்க பல வகையான திட்டங்களை செலவு மதிப்பீட்டு விவர அறிக்கையுடன் தந்துள

1979 எப்ரல் 21

ளது. ஏரியை அழகு படுத்தும் பணியின் முதற் கட்டமாக, 1977-78 ஆம் ஆண்டில் சிறிய பணிகளுக்காக ரூ. 58,100 வழங்கப்பட்டது. இரண்டாவது கட்டமாக, கொடைக்கானலில் ரூ. 2.03 இலட்சம் செலவில் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு சிற்றுண்டிச் சாலை கட்டுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கொடைக்கானலில் "கோக்கர்ஸ் வாக்" (Cook's Walk) என்னும் இடத்திலும் "குறிஞ்சி ஆண்டவர் கோயில்" அருகிலும் இரண்டு தொலை நோக்கி இல்லங்கள் ரூ. 1,60,000 செலவில் அமைக்கப்பட்டுள்ளன. கொடைக்கானல் செல்லும் சுற்றுலாப் பயணிகள், இத்தொலை நோக்கிகளின் மூலம் வடக்கில் பழனி ஆண்டவர் கோயிலின் அழகுத் தோற்றத்தையும், தெற்கில் வைகை அணையின் வனப்பான காட்சியையும் கண்டு மகிழலாம்.

இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்குமிட வசதியை அதிகரிக்கும் வகையில் சிறு தொழில் கழகத்திற்கு சொந்தமான சுமார் 1.54 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் தற்போது பழுதடைந்த நிலையிலுள்ள கட்டிடத்தை வாங்கி அங்கு 96 படுக்கைகள் கொண்ட துயில்கூட விடுதி ஒன்றை (Dormitory) அமைப்பதற்காக நடப்பாண்டில் ரூ. 7.03 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாமல்லபுரம் :

குடவறைக் கோவில்கள், பாசறைச் சிற்பங்கள், நீண்ட பெருங் கடற்கரை, ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகளுக்கேற்ற சூழ்நிலை முதலிய நலங்களால் உலகத்தின் உன்னத சுற்றுலாத் தலமாக மாமல்லபுரம் திகழ்கின்றது.

மத்திய அரசின் பரிந்துரைக்கேற்ப மாமல்லபுர வளர்ச்சிக்கான செலவு மதிப்பீடுகளுடன் உரிய திட்டங்களைத் தயாரித்திட கட்டிடக்கலை நிறுவனம் ஒன்று அமர்த்தப்பட்டது. அந்நிறுவனம் தயாரித்து வழங்கிய திட்ட அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதுதவிர இப்பகுதியின் இயற்கையான சூழ்நிலையையும் இயற்கை அழகையும் உள்ளவாறு பேணிப் பாதுகாக்கும் நோக்கத்தில், ரூ. 1,28,185 செலவில் 33.95 ஏக்கர் நிலத்தை அரசு கையகப்படுத்தியுள்ளது. மாமல்லபுரத்திற்கு வருகின்ற குறைந்த வருவாய்ப் பிரிவு சுற்றுலாப் பயணிகளுக்குப் பயன்படும் வகையில், அடிப்படை வசதிகளைக் கொண்ட ஓய்வுக் கூடம் (Rest Shed) ஒன்று கட்ட 1978-79 ஆம் ஆண்டில் ரூ. 1,81,814 வழங்கப்பட்டுள்ளது. 1979-80 ஆம் ஆண்டில் மாமல்லபுரத்தில் "தானே சமைத்து உண்டு மகிழும்" (Self catering Holiday) வகைப்பட்ட சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் ரூ. 3.50 இலட்சம் செலவில் முகாமிடங்களையும் (Camping site) உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

[1979 ஏப்ரல் 2

மேலும் மத்திய சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்வதற்குத் தமிழ்நாட்டில் இரு இடங்களைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க மாமல்லபுரத்தையும், கன்னியாகுமரியையும் இவ்வரசு பரிந்துரை செய்துள்ளது.

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் வளர்ச்சித்திட்ட வல்லுநர் குழுவின் பரிந்துரையின் படி மாமல்லபுரத்தை அனைத்துலக சிறப்பு வாய்ந்த சிறந்த கடற்கரை மையமாக மேம்படுத்துவதற்கு, இங்குள்ள சிற்பங்களை காப்பது, சுற்றுலாப் பணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்வது, பொழுது போக்கும் வாய்ப்புகள், மனமகிழ் சாதனங்கள் ஆகியவற்றை வழங்குவது முதலியன முக்கியப்பணிகளாக அமைகின்றன. மத்திய அரசு, முதல் கட்டமாக ரூ.150 இலட்சம் மேம்பாட்டு பணிகளுக்கு வழங்கவேண்டும் என்று ஆறாவது ஐந்தாண்டு வரைவுத் திட்டத்தில் இவ்வரசு பரிந்துரைத்துள்ளது. மத்திய அரசு நிறைவேற்ற வேண்டி இவ்வரசு குறிப்பிட்டுள்ள திட்டங்கள் பின்வருமாறு :—

	(ரூபாய் இலட்சத்தில்.)
1 ஒளி, ஒலி காட்சி அமைத்தல்	40
2 புதிய சாலைகள் அமைத்தல், தற்போதுள்ள சாலைகளை மாற்றி அமைத்துச் சீர் செய்தல், நிலம் கையகப்படுத்துதல் ..	25
3 சுற்றுப்புற நிலைப்பகுதியைச் சீர்செய்து அழகு செய்தல், பூங்காக்கள் அமைத்தல், பொழுது போக்கு மன மகிழ் வசதிகள் உருவாக்குதல்	30
4 தற்காலிகத் தங்குமிடங்கள் அமைத்தல் ..	10
5 பேருந்து நிலையம், கடைத் தொகுதி மற்றும் சுற்றுலா வசதிகள் ஆகியவற்றை உருவாக்குதல்	15
6 ஓய்வுக் கூடங்கள் அமைத்தல், குடிநீர் வசதி மற்றும் மருத்துவ வசதிகள் உருவாக்குதல்	30
மொத்தம் ..	150

1979 ஏப்ரல் 2]

கன்னியாகுமரி :

இந்திய துணைக்கண்டத்தின் தென்கோடி முனையாக கன்னியாகுமரி திகழ்கிறது. மூன்று கடல்கள் முத்தமிடும் குமரி முனையில்தான் ஒரே நேரத்தில் கதிரவன் மறைவதையும், பால் நிலவு எழுவதையும் காணும் அரிய வாய்ப்பு அமைந்துள்ளது. அனைத்து மாநிலங்களிலிருந்தும் குமரியம்மன் ஆலய வழிபாட்டிற்கு வந்து செல்கின்றனர். நீலத் இரைக் கடல் ஓரத்தில் நின்று நித்தம் தவம் செய்யும் குமரி என்று பாராட்டப்படும் எல்லையும் இதுதான்.

கடல் பாறையின் மேல் கலையழகு மிளிர அமைக்கப் பட்டுள்ள விவேகானந்தர் நினைவகமும் சுற்றுலாப் பயணிகளைப் பெருமளவிற்கு ஈர்த்து வருகின்றது. சுமார் பத்தாயிரம் அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளும், ஐந்து இலட்சம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும் கன்னியாகுமரிக்கு ஆண்டுதோறும் வருகை தருகின்றனர். கன்னியாகுமரியைச் சிறந்த சுற்றுலா மையமாக மேம்படுத்த வேண்டும் என்று ஆறாவது ஐந்தாண்டு வரைவுத் திட்டத்தில் 75 இலட்சம் ரூபாய் செலவில் கீழ்க் குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்றிட மத்திய அரசுக்கு இவ்வரசு பரிந்துரைத்துள்ளது.

		(ரூபாய் இலட்சத்தில்.)
1	படித்துறை, உடைமாற்றும் அறைகள் நீராடி கழிப்பிட அறைகள் சீரமைக்க ..	15
2	சாலை அமைத்தல், நிலப்பகுதியினை சீரமைத்தல்	15
3	கடற்கரையினை மேம்படுத்துதல்	15
4	சுற்றுலாப் பயணிகளுக்காகப் படகுகள் விடுதல்.	10
5	தொலை நோக்கி அமைத்தல்	5
6	குடிநீர் மருத்துவ வசதிகள் ஏற்படுத்துதல் ..	15
	மொத்தம் ..	75

குற்றாலம் :

விடுமுறைப் பயணிகளுக்கும், உடல் நலம் தாடிவரும் பயணிகளுக்கும் மகிழ்வூட்டும் ஒப்பிலாச் சுற்றுலாத் தலம் என்று புகழப்படுவது குற்றாலம். ஆண்டுதோறும் பெருகிவரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையால் தங்குமிட நெருக்கடி இங்கு வளர்ந்து கொண்டே வருகிறது. எனவே, குறைந்த வருவாய்ப் பிரிவு சுற்றுலாப் பயணிகளுக்கும், சிக்கனச் சுற்றுலாப்

பயணிகளுக்கும், பயன்படும் வகையில் ரூ. 7.97 இலட்சம் செலவில் 100 படுக்கை வசதிகளைக் கொண்ட துயிலகவிடுதி (Dormitory) ஒன்று கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

விராலிமலை, ஆவுடையார் கோவில் :

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள விராலிமலையும், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஆவுடையார் கோவிலும், சிறப்புமிக்க வழிபாட்டுத் தலங்களாகும். குறிப்பாக ஆவுடையார் கோவில் தமிழ் இலக்கிய போற்றுதலும், அற்புதமான சிற்பக் கலையும் இணைந்த நினைவுச் சின்னமாகும், இவ்விடங்களுக்கு வரும் பயணிகளுடைய வசதிக்காக விராலிமலையில் ஓய்வறையும், குடிநீர் வசதியும், ஆவுடையார் கோவிலில் ஒரு சுற்றுலா மாளிகையும் அமைக்க கருதப்பட்டுள்ளன. இப்பணிக்கென 1978–79 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத் துறைக்கு ரூ. 1.50 இலட்சம் நிதி ஒதுக்கம் தரப்பட்டுள்ளது. இந்து சமய அறநிலையத் துறை இம்மாவட்டத்துடன் இந்த இரு இடங்களுக்கான திட்டங்களையும் செயற்படுத்தும்.

பிச்சாவரம் :

தொன்மை வாய்ந்த வழிபாட்டுத் தலங்களுள் ஒன்றான சிதம்பரத்திற்குக் கிழக்கே 13 கிலோ மீட்டர் தொலைவில் பிச்சாவரம் உள்ளது. இயற்கையின் எழில் குலுங்கும் சோழ மண்டல கரையில், சுமார் 3,000 ஏக்கர் பரப்பில் அடர்ந்து வளர்ந்த புதுவிதமான மரக்கூட்டங்களுக்கிடையே சிறு சிறு தீவுகளாய் அமைந்துள்ளது. படகு விடுவதற்கும், மீன் பிடிப்பதற்கும் பொழுதுபோக்கு விளையாட்டுகளுக்கும், விளையாட்டுப் போட்டிகளுக்கும், பந்தயங்களுக்கும் ஏற்ற ஒரு சிறந்த இடமாகவும் இது அமைந்துள்ளது. காஷ்மீரிலுள்ள ஸ்ரீநகர் ஏரியில் உள்ளதுபோல படகு வீடுகளையும் இங்கு அமைக்கலாம்.

1978-79 ஆம் ஆண்டு பிச்சாவரத்திலுள்ள காட்டு நிலத்தில் உணவுக்கூட வசதியுடன் ஓய்வு விடுதி ஒன்றையும், மாளிகைத் கட்டில் இரண்டு குடில்களையும், படகுத்துறை ஒன்றையும் ரூ. 4.50 இலட்சம் செலவில் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதைப்போலவே, 1979–80 ஆம் ஆண்டில் ரூபாய் மூன்று இலட்சம் செலவில் பிச்சாவரத்தில் நீர்ப்பரப்பில் சுற்றுலாப் பயணிகளின் பொழுதுபோக்கு வசதிக்காக படகுப் பயண வசதி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மண்டபம் :

இந்தியாவின் தொன்மை மிக்க வழிபாட்டுத் தலங்களுள் ஒன்றான இராமேசுவரத்தின் அருகில் உள்ளது மண்டபம் சுற்றுலாப் பயணிகளும், வழிப்பாட்டுப் பயணிகளுமாக இங்கு

வரும் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு பெருகிக் கொண்டே இருக்கிறது. இராமேசுவரத்தின் அருகில், "உயிரினவியல் வல்லுநர்களின் ஆய்வுச் சுரங்கமெனச்" சிறப்பிக்கப்படும் "குருசடைத் தீவு" உள்ளது. கடல் வாழ் உயிரினவியல் வல்லுநர்களும் உயிரினவியல் கல்வியில் ஆர்வம் உள்ள அனைத்து நாட்டு மாணவர்களும், ஆராய்ச்சியாளர்களும் மண்டபத்திலிருந்து இத்தீவிற்கு படகு மூலம் சென்று திரும்புகின்றனர். ஆகவே, சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கென மண்டபத்தில் ரூ. 2.3 இலட்சம் செலவில் குளியலறைகள், கழிவறைகள் இணைந்த ஓய்வுக் கூடம், சமையல் கூடங்கள் படகுத் துறை முதலியன அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஏலகிரிமலை :

ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் சிறப்புமிக்க இடம் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஏலகிரி மலை. சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்குமிட வசதிகள் இங்கு ஏதுவும் இதுவரை இல்லை. ஆகவே, சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக 1978–79 ஆம் ஆண்டில் ரூ. 1.05 இலட்சம் செலவில் நான்கு தன்னிறைவு அமைப்புகள் கொண்ட அறைகளுடன் கூடிய கூடம் ஒன்று கட்டப்பட்டு நிறைவுறும் நிலையில் உள்ளது.

ஒகேனக்கல் :

இயற்கை எழில் மிக்க, சுற்றுலாக் கவர்ச்சி மிகுந்த இடங்களுள் தருமபுரி மாவட்டத்திலுள்ள ஒகேனக்கல் அருவியும் ஒன்றாகும். இந்த அருவி பிணிதீர்க்கும் தன்மை வாய்ந்தது. எனப் போற்றப்படுகிறது. இங்கு வரும் நடுத்தர சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற தங்குமிட வசதிகள் தற்போது இல்லை. எனவே, நடுத்தர சுற்றுலாப் பயணிகளுக்கு வசதி செய்யும் பொருட்டு ஒகேனக்கல்லில் 1979–80 ஆம் ஆண்டில் ரூபாய் மூன்று இலட்சம் செலவில் தங்குமிடம் இணைந்த கூடம் ஒன்று கட்டுவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

விளம்பரம் :

சுற்றுலாப் பயணிகளைக் கவரவும் ஊக்குவிக்கவும் ஏற்ற வண்ணம் இம்மாநிலத்தின் சுற்றுலாச் சிறப்புக்களை பொருட்காட்சிகள், திரைப்படங்கள், சுற்றுலா கையேடுகள் வாயிலாகப் பலரும் அறியும் வண்ணம் சுற்றுலாத் துறை செய்து வருகிறது.

தமிழகச் சுற்றுலா மையங்களின் சிறப்புக்களையும் சுற்றுலாப் பயணிகளுக்கென வழங்கப்பட்டுள்ள வசதி வாய்ப்புகளையும் விளக்கி நமது மாநில மக்கள், வெளிமாநிலத்தவர், வெளி

நாட்டவர் ஆகிய அனைவரும் உணர்ந்திடும் வகையில் சுற்றுலாச் சார்புடைய வெளிவிடங்களிலும் நாளேடுகளிலும் பிற ஏடுகளிலும் தொடர்ந்து விளம்பரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பொருட்காட்சிகள் :

நம் மாநிலத்திலுள்ள பல்வேறு சுற்றுலாத் தலங்களின் தனிச் சிறப்புகளை விளக்கிக் காட்டி சுற்றுலாப் பயணிகளைப் பெருமளவில் ஈர்க்கின்ற வகையில் தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆண்டுதோறும், சென்னை நகரில் ஜனவரி–பிப்ரவரி திங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வருகின்ற சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் சுற்றுலாத் துறையும் பங்கேற்று வருகின்றது. 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் பெங்களூரில் நடைபெற்ற இந்தியப் பயண முகவர்கள் மாநாட்டில் இத்துறை பங்கேற்று, தமிழகச் சுற்றுலாச் செல்வங்களை வெளிக்காட்டும் காட்சி அரங்கம் ஒன்றை அமைத்தது. அப்பொருட்காட்சியில் அமைக்கப்பட்ட அனைத்து அரங்கங்களிலும் சிறந்ததென்று இவ்வரங்கம் தேர்வு பெற்று வசந்த் கோடக் சுழற் கோப்பை-யை வென்று வந்துள்ளது.

1978 ஆம் ஆண்டு ஏப்ரல், மே திங்கள்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், மதுரையில் நடத்திய "சித்திரைச் சுற்றுலாப் பொருட்காட்சியிலும்" ஆகஸ்ட்–செப்டம்பர் திங்கள்களில், செய்தி மக்கட் தொடர்புத் துறையின் சார்பில் சேலத்தில் நடந்த அரசுப் பொருட்காட்சியிலும் இத்துறை பங்கேற்று 'ஒலி–ஒளிக்' காட்சியரங்கம் அமைத்திருந்தது. மதுரை, சேலம் ஆகிய இடங்களிலும் இவ்வொலி, ஒளிக் காட்சியரங்கம் மக்களின் கவனத்தையும், கருத்தையும் ஈர்ப்பதாய் அமைந்து மக்களின் பாராட்டையும் பெற்றுள்ளது.

திரைப்படங்கள் :

உதகமண்டலம், கொடைக்கானல், ஏர்க்காடு, குற்றாலம், ஒகேனக்கல், மாமல்லபுரம் முதலிய சுற்றுலாச் சிறப்பிடங்களை உள்ளடக்கி "தமிழ் நாட்டின் விடுமுறை ஓய்விடங்கள்" என்ற வண்ண படமொன்றைத் தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் வாயிலாக தயாரிக்க சுற்றுலாத் துறை தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

நிழற்படம் :

சுற்றுலாத் துறையின் நிழற்படப் பிரிவில், சுற்றுலாச் சிறப்பிடங்கள் பற்றிய நிழற்படங்கள், வண்ணப் படங்கள் ஆகியவற்றின் தொகுப்புகள் உள்ளன. தமிழ் நாட்டினைப்

1979 ஏப்ரல் 2]

பற்றிய கட்டுரை. செய்தித் திரட்டுகளுடன் இணைத்து வெளியிட இந்த நிழற்படங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. சுற்றுலாத் துறை வெளியிட்டு வரும் சுற்றுலாக் கையேடுகளிலும், இந்த நிழற்படங்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறப்பு விருந்தினர்களுக்கும், பயண எழுத்தாளர்களுக்கும், பயண முகவர்களுக்கும் தமிழ்நாட்டுவதற்கெனப் படத் தகடுகள் (Slides) தொகுப்பும் இத்துறையில் உள்ளது.

சுற்றுலாக் கையேடு :

ஒவ்வொரு ஆண்டும் சுற்றுலாக் கையேடுகள், வண்ண அஞ்சல் அட்டைகள், சுவரொட்டிகள் முதலியன தயாரிக்கப்பட்டு இந்தியாவிலும் வெளிநாடுகளிலுமுள்ள இந்திய சுற்றுலா அலுவலகங்களுக்கும், ஏர் இந்தியா அலுவலகங்களுக்கும், பயண முகவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

1978–79 ஆம் ஆண்டில் இத்துறை தமிழ்நாட்டைப் பற்றிய வண்ண சிறப்பு வெளியீடுகள், வண்ண மலிவு வெளியீடுகள், எட்டு வகையான சுவரொட்டிகள் ஆகியவற்றைத் தயாரித்துள்ளது. தமிழ்நாட்டைப் பற்றிய பிற சிறப்பு வெளியீடுகளுடன் சிறப்புமிக்க வண்ணச் சிறப்பு வெளியீட்டையும் இணைத்து இந்திய நாடுகள் சுற்றுலா அலுவலகங்கள், வெளிமாநிலச் சுற்றுலா இயக்குநர் அலுவலகங்கள், அயல் நாடுகளிலுள்ள ஏர் இந்தியா அலுவலகங்கள், மற்றும் பயண முகவர்கள் ஆகியோர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

விருந்தோம்பல் :

பயண எழுத்தாளர்கள், பயண முகவர்கள் ஆகியோரை வரவேற்று விருந்தோம்புவது சுற்றுலா மேம்பாட்டிற்கு ஏற்றம் தரும் பணியாதலின் இத்திட்டம் சிறப்பாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிற்கு வருகின்ற வெளிநாட்டுப் பயண முகவர்களையும், பயண எழுத்தாளர்களையும் நம்முடைய மாநிலப் பயண முகவர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரையும் தமிழகச் சுற்றுப் பயணத்திற்கு சுற்றுலாத் துறை அழைச்செல்கிறது. இத்தகைய விருந்தோம்பல்களினால் தங்கள் நாட்டுச் செய்தித்தாள்கள், பிற ஊடகங்கள் ஆகியவற்றில் தமிழகத்தைப் பற்றியும் தமிழ்நாட்டுச் சுற்றுலா வளங்களின் தனிச் சிறப்புக்களைப் பற்றியும் விரிவாக எழுதிப் பலரும் அறிந்து நம் நாட்டிற்கு வர அவர்கள் வழிவகை செய்கின்றனர்.

இந்திய அரசின் பரிந்துரை பெற்று அமெரிக்கப் பயண எழுத்தாளர்கள் கழகத்தைச் சார்ந்த புகழ்மிக்க பயண எழுத்தாளர்கள், நிழற்படக் கலைஞர்கள், திரைப்படத் தயாரிப்பாளர்கள், செய்தித்தாள் நிருபர்கள் ஆகிய அறுபது பேர்களடங்கிய குழுவினர் 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் புதுடெல்லியில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டபின் தமிழகம் வந்திருந்தனர். தமிழ்நாடு சுற்றுலாத் துறை அவர்களை வரவேற்று மகிழ்ந்தது. தமிழகத்தின் விருந்தோம்பல் பண்பையும் அன்பளிப்புகளையும் அவர்கள் பெரிதும் பாராட்டிச் சென்றனர்.

கண்ணுக்கும் கருத்துக்கும் சுவர்ச்சிறூட்டுவதோடு நாட்டின் கருவூலத்திற்குப் பொருள் வருவாயினையும் சேர்க்கின்ற சுற்றுலாத்துறையில், மேலும் பல திட்டங்களை இணைத்துச் சுற்றுலாத் துறையை விரிவுபடுத்த அரசு கருதுகிறது. எல்லாத் தரப்பினரும் குறிப்பாக எளிய நிலையினரும் ஓய்வை நன்கு நுகரவும் நெஞ்சுக்கு நிம்மதி பெறவும், உணர்வுகளால் உயர்வடையும் தாயகத்தின் வரலாற்றுப் பெருமைகளையும், கலைக்கூறுகளையும் அறிந்து மகிழவும் சுற்றுலாத்துறை அனைத்து வகையிலும் அயராது செயல்பட்டு வருகிறது.